அதிர்ஷ்ட தேவதை

பி.வி.ஆர்

வானதி
பதிப்பகம்

MithraVintha

அதிர்ஷ்ட தேவதை

1

1986—டிசம்பர் 5—வெள்ளி

'சாண்டில்யா பிரதர்ஸ்' என்ற நிறுவனத்தின் ஆரம்ப உரிமையாளர் கிருஷ்ண சாண்டில்யாவின் பேரன் ரமேஷ் சாண்டில்யா இன்று காலை பம்பாய்க்கு ஓடியிருக்கிறான். நாளை மறுநாள் ஞாயிறன்று அவனுடைய 'மோகினி' மகாலட்சுமியில் ஓடுகிறது. ஏற்கெனவே நான்கு பந்தயங்களில் தொடர்ந்து, மற்ற குதிரைகளைப் பின்னுக்குத் தள்ளியிருந்த 'மோகினி' இந்த ஞாயிறன்றும் தனக்குத் தங்கக் கோப்பையையும் ஒரு லட்சம் ரூபாய் பரிசுப் பணத்தையும் அள்ளிக்கொடுக்கப் போகிறது என்று ரமேஷ் நம்பியிருக்கிறான்.

நிறுவனத்தில் மானேஜர், உதவி மானேஜர் என்ற பதவிகள் எதுவும் கிடையாது. தனக்கு அந்தரங்கக் காரியதரிசிபோல நடந்துகொள்ளக்கூடியவன், கே.எஸ்.வி. ரமணி ஒருவன்தான் என்று எண்ணிய ரமேஷ், அவனைத் தலைமை குமாஸ்தாவாக வைத்துக்கொண்டு, அவன்மூலம் மற்ற குமாஸ்தாக்களிடமிருந்தும், ஏனைய சிப்பந்திகளிடமிருந்தும் வேலை வாங்கினான். சம்பள விஷயத்தில் ரமேஷ் சற்றுத் தாராளமாக இருந்ததால், ஒட்டிக்கொண்டவர்கள் விலகவில்லை.

MithraVintha

முதலாளி ஊரில் இல்லையென்றால் ஆபீஸ் ஆபீசாக இராது. ஒரு மனமகிழ் மன்றமாக மாறிவிடும். இந்த மன்றத்திலிருந்து விடுபட்டுத் தனித்து நிற்கிறவன் 'நெய் ரோஸ்ட்' ரிச்சாதான். அவன் தனக்குத்தானே பேசிக் கொள்ளுவான், சிரித்துக்கொள்ளுவான். ஆனால் ஒரு நாள் கூட அழுதது கிடையாது. ஆகஸ்ட் பத்தாம் தேதி அன்று தனது இருபத்தெட்டாவது பிறந்த நாளை மௌன சோகத்துடன் கொண்டாடிய டைப்பிஸ்ட் சுகந்தி, அவ்வளவாக ஆபீஸ் அக்கப்போரில் கலந்துகொள்ள மாட்டாள். ஓர் ஆண் துணை இன்னும் அமையவில்லையே என்ற தாபத்தில் அவள் தன்னுள்ளேயே முடங்கிப் போவாள். ரமணி மீது அவளுடைய மனம் புயலாய் அடித்துக்கொண்டிருந்தது. ஆனால் அவன் ஓரக்கண்ணால்கூட அவளுக்குக் கிருபை காட்டவில்லை. காரணம் அவனுடைய இரு கண்களும் எம். மணிமாலாமீதே நிலைத்துப் போயிருந்தன. எம். மணிமாலா தன் பெயரை, எம். எம். மாலா என்று அடக்கி வைத்திருந்தாள். ரமணி அழைக்கும் பெயர் மாலு. அவளைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் எம். எம். ரப்பர் மெத்தை நெஞ்சில் விரியும். மாலுவும் ஒரு குமாஸ்தா.

இந்த மூன்று குமாஸ்தாக்கள் மற்றும் டைப்பிஸ்ட் சுகந்தியைத் தவிர இரண்டு சிப்பந்திகளும் ஒரு வாட்ச்மேனும் உண்டு. அவர்களில் வெங்கடாசலம், என்கிற வெங்கிக்கு வயது அறுபதாகப் போகிறது. ரமேஷுக்கு ரேஸ் விஷயங்களில் குழப்பம் ஏற்படும்போதெல்லாம் உபதேசம் செய்கிறவன் வெங்கிதான். அவனுடைய உபதேசம் பீஷ்மர் துரோணர்களையெல்லாம் வீழ்த்தவில்லை என்றாலும் பல அசுவங்களின் மூலம் பணத்தை வாரிக் கொடுத்திருக்கிறது. இதனால் வெங்கியும் பணம் ஏதும் கட்டாமலேயே பலன் அடைந்திருக்கிறான். வாட்ச்மேன் மயில்சாமியை மாலை ஆறு மணிக்கு மேல்தான் பார்க்க முடியும். இதன் காரணமாக அவனால் மனமகிழ் மன்றத்தில் கலந்துகொள்ள முடியாது.

கடையோக—

ரங்கன். ஒருவன் அவனுடைய விரலை விட்டால், 'நறுக்'கென்று கடிக்க வேண்டாமோ? ஊஹூம். ரங்கன் விரலை நாக்கால் இதுவாகத் தடவிக் கொடுக்கக்கூட மாட்டான். பாம்பு, தேள், வெறிபிடித்த நாய் இவற்றை எல்லாம் கண்டு பயப்படாத அவன் மற்ற மனிதர்களைக் கண்டு பயந்தான். இந்தப் பயம் அவன் அம்மாவின் வயிற்றில் இருக்கும்போதே பிறந்த பயம் என்று ரமணி கருதினான். ரமணியின் ஆத்மார்த்த சிநேகிதன் ரங்கன் என்றால், ரங்கனுக்கு ரமணி ஒரு விசுவரூபம்போல. ரமணி நண்பன், ரமணி வழிகாட்டி. ரமணி ஒருவன்தான் அவனுடைய நல்வாழ்க்கையில் அக்கறை கொண்டுள்ளவன். ரமணிதான் அவனை என்றும் ஏமாற்றாமல் இருப்பான்.

இப்படி ஒரு நம்பிக்கை ரங்கனுடைய உள்ளத்தில் ஆலமரத்து வேராக நிலைத்துப்போயிற்று. அவனைக் கண்டு ஆபீசே ஏளனம் செய்யும். ஆனால் ரமணி ஒருவன்தான் பரிவு காட்டுவான். சம அந்தஸ்து கொடுப்பான்.

மனமகிழ் மன்றத்தில் ரங்கன் தனக்கு இடப்படும் பணிகளை நிறைவேற்றுவதோடு நிறுத்திக்கொள்ளுவான்.

"ஹாய், ரமணி!"—மாலு தன் கைப்பையை மேஜையின்மீது அலட்சியமாகப் போட்டுவிட்டு அவனை நோக்கி வந்தாள். ஓர் அப்சரஸ் தரையில் கால் பாவாமல் மிதந்து வருவதான காட்சி ரமணியின் மனத்தில் எழுந்தது. என்று தான் அவளும் அவனும் மணமேடையில் அமர்வார்கள், முதல் இரவில் சந்திப்பார்கள், தேன்நிலவில் கைகோத்து ஓடுவார்கள்?

தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு ரமணி—

"வா மாலு, வா! ஓ, இன்னிக்கு வெள்ளி. அதான் கூந்தலைப் பாயா விரிச்சு முனையிலே ஒரு சின்ன முடிச்சாப் போட்டிருக்கே, இல்லே!" என்றான்.

MithraVintha

மாலு அருகே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான். ஹாலின் ஒரு மூலையில் டைப்பிங் மெஷினையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கும் சுகந்தி யையோ, இன்னொரு மூலையில், மேஜைமீது இரு விரல் களால் தாளம் போட்டுத் தனக்குத்தானே பாடிக்கொண் டிருக்கும் 'நெய் ரோஸ்ட்' இச்சாவையோ, அவன் லட்சியம் செய்யவில்லை.

"ரமணி!"

"என்ன மாலு?"

"ரெண்டு நல்ல நியூஸ்!"

"பெரிய நல்ல நியூஸை முதல்ல சொல்லு!"

"நேத்து ராத்திரி நீங்க என் சொப்பனத்திலே வந்தீங்க!"

"இதென்ன பெரிய நியூஸ், மாலு? நான் தினசரி வந்தாகணுமே!"

"நேத்து ஸ்பெஷலா வந்தீங்க, ரமணி! இதுவரையில் செய்யாததை நீங்க செய்தீங்க!"

"என்ன சொல்றே, மாலு?"

"வெக்கமாயிருக்கு!"

"நாம ரெண்டுபேரும் வெட்கப்படற வயசிலா இருக் கோம்? எனக்கு முப்பது. உனக்கு இருபத்தஞ்சு."

"நீங்க என்னை ஒரு தடவைகூடத் தொட்டதில்லே!"

"அதனால் என்ன, நீ தொட்டுப்பாரு!"

"சொப்பனத்திலே நீங்க தொட்டதோட நிறுத்திக்கலே ரமணி!"

"பின்னே?"

"என்னைக் கட்டி... கட்டிப் பிடிச்சு முத்தம் கொடுத்து, அப்புறம்..."

"ஓ ரொம்ப சுவாரசியமா இருக்கே மாலு... சொல்லு...சொப்பனத்திலே வந்தது நான்தானா...இல்லே, வேறே யாராவது...? உம், கோபிச்சுக்காதே...என்னை அப்படிப் பார்க்காதே...எனக்கு என்னமோ செய்யறது. கம் ஆன் மாலு, அப்புறம் நான் என்ன செய்தேன்?"

"சொல்றேன்."

"வணக்கம், ரமணி சார்... வணக்கம் மாலு அம்மா..."

ரங்கன் பிளாஸ்க்குடன் வந்தான்.

"காப்பி நன்னா ஸ்ட்ராங்கா இருக்கா ரங்கா?"

"வேறே எப்படி சார் வாங்குவேன்! இருங்க தம்ளர் எடுத்தாரேன்."

"ரெண்டாக் கொண்டுவா."

அவன் நகர்ந்ததும், "சிவபூஜையில் கரடி வந்துதான் பார்த்திருக்கேன்..." என்று மாலு இழுத்தாள்.

"கரடி வந்து பார்த்திருக்கியா? நான் கேள்விதான் பட்டிருக்கேன்!"

"இப்ப குரங்கே வந்தது."

"ரங்கனைக் குரங்குன்னு சொல்லாதே மாலு. பாவம்! அவன் அப்பாவி. ஆபீஸ்லே நாம இன்னிக்கு விசேஷமா இப்படிப் பேசறோம்னு அவனுக்கு எப்படித் தெரியும்?"

"அவன்கிட்டே சொல்லி வையுங்க ரமணி!"

"என்னன்னு?"

"நாம ரெண்டுபேர் இப்படிக் கிட்டக் கிட்ட உட்கார்ந்து பேசிக்கிட்டிருக்கிறப்ப அவன் இடையிலே வரப்படாதுன்னு."

"ரங்கன் ஒரு பரமசாது, மாலு."

"தெரியும். நான் சாதுக்களை நம்பறதில்லை."

MithraVintha

"அதோ, அவனே வர்றான். பேசாம இரு."

ரங்கன் இரு தம்ளர்களில் காப்பியை ஊற்றிய பிறகு, தன்னுடைய ஷர்ட் பாக்கெட்டிலிருந்து மூன்று காகிதங்களை எடுத்து ரமணியிடம் நீட்டினான். கூடவே ஒரு டயரியையும் மேஜைமேல் வைத்தான்.

"என் ரங்கா இப்படிப் பணத்தை லாட்டரிச் சீட்டிலே கொட்டி அழறே? இந்த அஞ்சு வருஷத்திலே நீ இதுக்காக எவ்வளவு செலவழிச்சிருக்கே, தெரியுமா? கிட்டத்தட்ட அஞ்சாயிரம்! ஒரு அம்பது ரூபாயாவது பரிசாத் திரும்பி வந்திருக்கா?"

காப்பியை, பேசும்போது, நடுநடுவே உறிஞ்சி உறிஞ்சி குடித்த ரமணி ரங்கனைப் பரிதாபமாகப் பார்த்தான்.

ரங்கன் தலைகுனியாமல் மௌனமாக நின்றான்.

"இரு டயரியில் நம்பர்களைக் குறிச்சுத் தர்றேன்!"

"டிக்கெட்டு பத்திரம், ரமணி சார்."

"கவலைப்படாதே... நீ வாங்கி இருக்கிற டிக்கெட் டெல்லாம் பத்திரமா வீட்டிலே என் அலமாரியிலே இருக்கு."

"நல்லது ரமணி, சார்!"

"நட்ட நடுராத்திரியிலே நீ எழுப்பிக் கேட்டாலும் கிடைக்கும்."

"உங்களைத் தெரியும் ரமணி சார்..."

"ஹங், அப்புறம் இன்னொண்ணு. உன் பாங்க் அக்கௌண்ட்லே இப்ப மூவாயிரத்து சொச்சம் இருக்கு. ரெண்டு வருஷம் முன்னாடி ஐயாயிரம் ரூபாய் டெபாசிட்டாப் போட்டிருந்தியே, அது பத்தாம் தேதி, அதான் அடுத்த புதன்கிழமை ஆறாயிரத்துச் சொச்சமாக் கிடைக்கப் போறது! இன்னும் ரெண்டாயிரம் போட்டு எட்டாயிரத்தை பாங்க்லேயே டெபாசிட் பண்றியா?"

"டெபாசிட்லே இப்ப இருக்கிற பணமே இருக்கட்டும் ரமணி சார்! நீங்க இப்ப சொன்ன மூவாயிரத்துச் சொச்சம் எனக்குத் தேவைப்படும்போல இருக்கு."

"அவ்வளவுக்கும் லாட்டரிச்சீட்டு வாங்கப் போறியா?"

"கேலி செய்யாதிங்க, ரமணி சார்."

"அப்ப எதுக்குத் தேவைப்படும்னு சொல்லு."

"உங்களுக்குப் பிடிக்காத சமாசாரமுங்க."

"ஓ, கல்யாண விஷயமா?" கேள்வி கேட்ட ரமணி, அப்போதுதான் உணர்ந்தான், மாலு ஏற்கெனவே எழுந்து போய்விட்டாள் என்று.

வாயால் பதில் சொல்லாமல் ரங்கன் தலையாட்டினான்.

ரமணி அவனை ஏறிட்டுப் பார்த்தான்.

ஐந்து அடி உயரமான குள்ள உருவம். வற்றலான, சதைப்பற்றே இல்லாத உடல். உடலமைப்புக்குச் சம்பந்தமில்லாத மண்டை. இன்னும் கொஞ்சமாவது சிறிதாக இருந்திருக்கலாம். முன் மண்டையில் ஏற்கெனவே பிறந்திருந்த பாலைவனம் இன்னும் அகலமாகி ஓர் ஆற்றுப்படுகை போலிருந்தது. இருபுறமும் இருந்த ரோமக் கொத்தை எண்ணெய் தடவிச் சீவியிருந்தான். நல்லவேளையாக, கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்ற ஆசைத் துடிப்பில் உள்ளவன் மீசை வைத்துக் கொள்ளவில்லை. அது வேறு இருந்தால் அகோரமாகக் காட்சி அளித்திருப்பான்.

"என்ன ரமணி சார், பேசமாட்டேங்கறீங்க?" அவன் குரலில் அழுகையின் கண்ணீர் ஓடியது.

"நான் யதார்த்தமாப் பேசினால் உனக்குப் பிடிக்கிறதில்லே ரங்கா! நீ வாழ்க்கையிலே சந்தோஷப்படக்கூடாதுன்னு நான் நினைக்கிறதா நீ தப்புக் கணக்குப் போடறே... நீ மனசுக்குள்ளே ஒரு முடிவு எடுத்துட்டே... அந்த முடிவு நல்ல முடிவுன்னு நான் சொல்லணும்னு நீ ஆசைப்படறே...

MithraVintha

ஆனா என்ன செய்யறது ரங்கா! நீயும் நானும் இந்த நாலு வருஷமா ரொம்ப நெருங்கிப் பழகிட்டோம்! நீ என்னை மலையா நம்பி, உன் பணம், உடைமை, லாட்டரிச் சீட்டு எல்லாத்தையும் ஒப்படைக்கிறே... நான் வஞ்சகம் செய்ய மாட்டேன்னு! அப்படி ஒரு நம்பிக்கை. உன் நம்பிக்கை வீண்போகாதபடி நானும் ஆண்டவன் அருளாலே நடந்து வந்துண்டேன். ஆனால் உண்மையான, ஆத்மார்த்தமான சிநேகிதன்னா, அவன் கொடுக்கிற புத்திமதியையும் ஏத்துக் கணும். ஆனால் கல்யாண விஷயத்திலே மட்டும் உன் மனசு என் மனசோடு உடன்படமாட்டேங்குது!''

''ரமணி சார், நான் உங்களை மனுஷனாகவே மதிக் கலே—தெய்வமாக நினைக்கிறேன்.''

''ஆனா தெய்வத்தோட பேச்சையும் கேட்கமாட்டேங் கிறியே ரங்கா!''

''ஒரு பொண்ணோட வாழணும்ங்கிற ஆசை எல்லா ருக்கும் இயற்கையா வற்ற ஆசைதானே ரமணி சார்?''

''இல்லேன்னு சொல்லலே. ஆனா உன் நிலையை நீயே நினைச்சுப் பாரு. சோனியா இருக்கே. மனசுலே மட்டும் தெம்பு இருந்தாப் போதுமா ரங்கா? உடம்பிலேயும் இருக் கணும். நிறையச் செலவாகுதேன்னு நீ சாப்பாட்டுச் செலவையே குறைச்சிருக்கே. நீ ஒரு ஓட்டல்லே அஞ்சு ரூபா கொடுத்து முழுசாச் சாப்பாடு சாப்பிட்டு நான் பார்த்தது இல்லே. தினசரி ரெண்டு ருபாய்க்கு ரெண்டு பொட்டலம் மோர்ச் சாதம் சாப்பிட்டால் உடம்பு எப்படித் தேறும்? ராத்திரி நாலு இட்லி தின்னுட்டுத் தண்ணியைக் குடிச்சுட்டுப் படுக்கறே. உடம்பு என்னத்துக்கு ஆகும்? முட்டை, இறைச்சி, பால், காய்கறி இதெல்லாம் ஏன் சாப் பிடக்கூடாது? சாப்பிடமாட்டே! ஏன் பணம் செலவாகும். பணத்தைச் சேர்த்துச் சேர்த்து என்ன சாதிக்கப்போறே ரங்கா?''

''எல்லாம் ஒத்துக்கறேன் ரமணி சார்! கல்யாணமா யிட்டா என் பெண்டாட்டி சோறு ஆக்கிப் போடுவா. நிறைய பணியாரமெல்லாம் பண்ணுவா. என் உடம்பு கொழுகொழுன்னு ஆயிடும்.''

''நீ உன் மனசிலே போட்டோ பிடிச்சு எனக்குக் காட்டற பொண்ணு உனக்குக் கிடைக்கணுமே ரங்கா! அப்படிப்பட்டவ எங்கே இருக்கா?''

''கிடைப்பா ரமணி சார்!''

''உன் அஞ்சு அடி உசரத்துக்கு ஏத்தபடி அவ அமை யணும். நீ ஒரு சாது. நல்லவன். ரெண்டு வார்த்தை அடிச்சுப் பேசத் தெரியாது. உனக்கு வர்றவ ராட்சசியா இருந்தால் உன்னைப் பந்தாடிடுவா!''

ரங்கன் பதில் சொல்லவில்லை. ரமணி சொல்லுவதெல் லாம் உண்மைதான். அவனுக்குச் சாதாரணமாகவே பெண் களைக் கண்டால் பயம்தான். அவன் இப்போது தன் மனத் துக்குள் மணமேடை கட்டி, அதில் உட்கார வைத்திருக்கும் தனம் என்னும் தனபாக்கியம் நல்ல பெண் மாதிரி தென் படுகிறாள். ஒருவேளை ராட்சசியாக மாறிவிடுவாளோ? இதுபற்றி அவன் தெரிந்துகொள்ள வேண்டும். ரமணிக்குப் பிடிக்காதது எதையும் அவன் இதுவரையில் செய்ததில்லை. முதன்முறையாக அவனை மீறிச் செயல்புரியப் போகிறான். நாளைக்கு ரமணி அவனைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்க மாட்டான்தான். ஆனால் 'அன்னிக்கே சொன்னேனே, ரங்கா, என் பேச்சைக் கேட்டியா?' என்று பரிவும் கனிவு மாகக் கேட்பானே? அப்போது என்ன பதிலை ரங்கனால் கூறமுடியும்?

ரங்கன் மௌனமாய் வெளியேற, ரமணி ஒரிரு வினாடி கள் அவனுடைய தளர்ந்த நடையையே பார்த்தவண்ணம் உட்கார்ந்தான். இப்படிப்பட்ட ஒரு நல்ல, சாதுவான ஜீவன் இந்த உலகத்துக்கு அவசியம்தானா என்ற கேள்வி எழுந்தது.

MithraVintha

நிமிரென்று மாலு தன்னருகே நிற்பதை ரமணி உணர்ந்தான்.

"உட்கார், மாலு."

"உட்கார்றது இருக்கட்டும். இப்ப எனக்கு ஒன்று தெரிஞ்சாகணும்" என்றாள் மாலு.

"தினசரி கேட்கிற கேள்விதானே மாலு. ரங்கன் ஆபீசுக்குள்ளே ரொம்ப வேண்டியவன். நீ என் வாழ்க்கைக்கே ரொம்ப வேண்டியவள். சரி, இப்ப சொல்லு. அது என்ன இரண்டாவது நியூஸ்? நான் கேட்க ரெடி!"

"நான் சொல்ல ரெடி இல்லே."

"ஓகே. நான் காத்திருக்கேன். நான் கொக்குமாதிரி. பொறுமையாகக் காத்திருப்பேன்!"

இவனிடம் தன் ஜம்பம் என்றுமே சாய்ந்ததில்லை என்று மாலுவுக்குத் தெரியும்.

"கேளுங்க ரமணி... ரெண்டாவது நியூஸ் நம்ப காதலையே பாதிக்கிறது. ஏன், நாம காதலுக்கே ஒரு முடிவு கட்ட வேண்டிய நிலை பிறந்துட்டமாதிரி எனக்குத் தோன்றது."

மாலு சிரிக்காமல், முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு பேசினாள்.

எதற்குமே அசையாத ரமணிகூட ஒரு சில வினாடிகள் ஆடிப்போனான்.

2

மாலு சிரித்தாள்.

"என்ன ரமணி, ஷாக் அடிச்சாப்ல உட்கார்ந்துட்டீங்க?"

"ஷாக் அடிச்சிருந்தா உட்கார்ந்தா இருப்பேன் மாலு? கீழே விழுந்திருப்பேனே?"

"ரெண்டாவது நியூஸைச் சொல்லட்டுமா?"

"உன் இஷ்டம்."

"ஒருவழியா என் அக்கா கலியாணம் முடிவாயிடுச்சு. எனக்கு ரெயில்வே கேட்டைத் திறந்துவிட்டாச்சு!"

"ரொம்ப சந்தோஷம். நானே வந்து உன் அக்காவைப் பார்த்து வாழ்த்துச் சொல்றேன்."

"எல்லாம் கலியாணத்தன்னிக்குச் சொன்னாப் போதும்... என் அம்மாவுக்கு ஓர் ஆசை."

"என்ன?"

"ரெண்டு பெண்களோட கலியாணமும் ஒரே நாள்லே ஒரே மணமேடையிலே நடக்கணும்னு."

"ஒரே பிள்ளைக்கேவா?"

"ரமணி, விளையாடாதிங்க! நாம ரெண்டுவருஷமா இருபத்து நாலு மாசமா காதலிச்சுட்டு வர்றோம்."

"நீ நினைக்கிறமாதிரி நம்ப கலியாணம் அவ்வளவு எளிதா முடிஞ்சுடும்னு எனக்குப் படலே!"

"ஏன் ரமணி?"

"என் வீட்டுக்கு வந்திருக்கே இல்லே?"

MithraVintha

"ஒரே ஒரு தடவை!"

"அன்னிக்கு ஈஸி சேர்லே ஒருவர் உட்கார்ந்திருந்தாரே அவர்தான் தாத்தா...போன நூற்றாண்டிலே பொறந்தவர். 1898...முழுசா இன்னொரு நூற்றாண்டையும் முடிச்சுட்டு அடுத்த நூற்றாண்டிலே போய்ச் சேரலாம்ங்கற கங்கணத்தோட இருக்கார்."

"நம்ப கலியாணத்துக்கும் உங்க தாத்தாவுக்கும் என்ன சம்பந்தம் ரமணி?"

"இருக்கு. நிறைய இருக்கு மாலு! எங்க வீடு பெரிய வீடுதான். தாத்தாவுக்கு முப்பது வயசு இருக்கறப்ப மயிலாப்பூர்லே கிரவுண்டு ஐநூறு அறுநூறுன்னு இருந்தது. பாட்டியோட மஞ்சக்காணி நிலத்தை வித்து நிலத்தை வாங்கி வீடும் கட்டினார். மராமத்து இலாகாவிலே ஓவர்சீரா இருந்தாரா, கட்டறது எளிதா இருந்தது. அஞ்சு கிரெளண்ட். அதிலே மூவாயிரம் சதுர அடிக்கு வீடு."

"இதெல்லாம் எதுக்குச் சொல்றீங்க, ரமணி?"

"கொஞ்சம் பொறுமையாக் கேளு, மாலு... பாட்டி போய் வருஷம் பத்தாறது. அறுபத்தஞ்சு வயசுப் பெரியப்பா, பெரியம்மா, நாப்பத்தஞ்சு வயசுப்பிள்ளை, அவரோட மூணு பிள்ளைகள். அப்புறம் என்னோட அப்பா, அம்மா, அண்ணா, இன்னும் சித்தப்பா, அவரோட ரெண்டு பிள்ளைகள் எல்லாரும் இந்த மூவாயிரம் சதுர அடியிலே ஒடுங்கி இருக்கோம். கலியாணமாகாத ரெண்டு பெண்கள் வேறே உண்டு. இருக்கிறது ஒரு ஹால். கீழே மூணு ரூம். மாடியிலே மூணு ரூம். கீழே ஒரு ரூம்லே தாத்தா. அதுக்குள்ளே யாரும் அனாவசியமா பிரவேசிக்கவே படாது.

"எல்லாப் பிள்ளைகளும் அவங்க மனைவிமாரும், பேரன்களும் அவங்க பெண்டாட்டிகளும், அவருக்கு சிச்ருஷை செய்தே ஆகணும்னு தாத்தா தீவிரமா இருக்கார். அவர் மனசுப்படி நடக்கலேன்னா வெளியே போயிடலாம்னு உறுதி

யாகவும் சொல்றார். ஆனா யாருக்கும் வெளியே போகத் தைரியம் பிடிக்கலே. தாத்தாவைத் தவிர, நாங்க பதினேழுபேர் இருக்கோம். அப்பா, பெரியப்பா, சித்தப்பா மூணுபேரும் அப்பா எப்ப உயில் எழுதுவார், எப்ப மண்டையைப் போடுவார்ன்னு காத்திருக்காங்க! தினசரி வாசல்லே நின்னு யமன் வர்றானான்னு பார்த்திட்டிருக்காங்க!"

"ஏன்?"

"அக்கம் பக்கத்திலே ரெண்டு மூணு வீடு வித்துப் போச்சு. எங்க வீட்டை விடச் சின்ன வீடு. எல்லாம் பன்னிரெண்டு லட்சம், பதினைஞ்சு லட்சம்னு போச்சு. மூணு அடுக்கு, நாலு அடுக்குக் கட்டடமாகக் கட்டியிருக்காங்க. எங்க வீடு குறைஞ்சது இருபது இருபத்திரண்டு லட்சத்துக்காவது போகும்."

"அதாவது தலா குறைஞ்சது ஏழு லட்சமாவது கிடைக்கும்னு மூணு பிள்ளைகளும் நம்பறாங்க."

"ஆமாம், ஆனா இதிலே ஒரு சிக்கல்."

"என்ன?"

"அம்மாவோட மஞ்சக்காணியை வித்ததுக்கு இப்ப ஆதாரம் தேட முடியாது. தாத்தா சொந்த சம்பாத்திலேர்ந்து கட்டினார்ங்கறதுக்கு ஆதாரம் இருக்கு. அதனாலே அவர் இஷ்டம்போல வீட்டை யார் பேருக்கு வேணும்னாலும் எழுதி வைக்கலாம்."

"அப்படீன்னா?"

"எனக்கு மூணு அத்தைகள். மூணுபேரும் தாத்தாவுக்கு என்னென்ன பிடிக்குமோ அதையெல்லாம் பண்ணி எடுத்துட்டு வருவா. அவருடைய கால்களை பிடிச்சு விடுவா. பாட்டியோட மலரும் நினைவுகளை அள்ளி தெளிப்பா... தாத்தா மூணு பெண்களையும் உயில்லே மறக்காம எழுதுவார்னு எல்லார்க்கும் பயம்!"

MithraVintha

"இது உங்க வீட்டு விவகாரம், ரமணி. எனக்கு இதிலே அக்கறை இல்லே. எனக்கு வேண்டியது நீங்கதான். நீங்க மட்டும்தான்."

நீ என்னைப் புரிஞ்சுக்கலே, மாலு."

"என்ன அது?"

"நமக்குக் கலியாணம் ஆனா நமக்குன்னு ஒரு ரூம் வேண்டாமா? அதுகூட இப்ப இல்லே."

"கலியாணமானப்புறம் நான் பத்தொன்பதாவது பேர் வழியாகக் குடிவந்து அங்கே குப்பை கொட்டுவேன்னு எதிர் பார்க்கிறீங்களா, ரமணி?"

"நான் என் வீட்டையும் அப்பா அம்மாவையும் உதறி எறிஞ்சுட்டு நீ கை காட்டற திசையில் ஓடி வந்துடுவேன்னு நீ எதிர்பார்க்கிறியா மாலு?"

"தனிக்குடித்தனத்திலே என்ன தப்பு?"

"நான் என் மனசிலே ஒரு பெரிய திட்டம் தீட்டி வைச்சிருக்கேன். அது வெற்றியா முடியணும்னா, நான் தாத்தா வீட்லேயே இருந்தாகணும்."

"என்ன திட்டம்?"

"சித்தப்பா ஒரு ரெண்டுங்கெட்டான். தாடியோட எந்தக் காவி போனாலும் பின்னாலே போயிடும். அதைத் திருப்பி இழுத்துட்டு வர்றதுக்குள்ளே சித்திக்கு உசிர் போய் உசிர் திரும்பி வந்துடும். வயசு அறுபது ஆச்சு. இன்னும் விவேகம் வரலே. பெரியப்பாவுக்கு வயது அறுபத்தஞ்சு. ஒரு அட்டாக் வந்தாச்சு. இன்னொரு அட்டாக் வந்தா, தாத்தா வுக்கு முன்னாடி போயிடுவார். அவரோட ரெண்டு பிள்ளை கள்ளே ஒருத்தன் ஸ்டேட்ஸ்லேஇருக்கான். இன்னொருத்தன் வீட்லே இருக்கான். ஆனா ஒட்டாம. அப்புறம் என் அப்பா. அவர் நான் வரைஞ்ச கோட்டைத் தாண்டமாட்டார்."

"உங்க திட்டம்தான் என்ன?"

"பிதாமகர்— அதுதான் தாத்தா ஒரு நாள் கண்ணை மூடித்தான் ஆகணும். அப்புறம்? யாருக்கும் வீடு வேண்டாம்! பணம்தான் வேணும்! அதை நான் எப்படியாவது ஏற்பாடு செய்து அவங்களைக் கழட்டி எறிஞ்சுடுவேன் இந்த வீட்டை இடிச்சுத் தள்ளுவேன். அப்புறம் என்ன? அங்க கிரௌண்ட் நிலத்திலே குறைஞ்சது முப்பது ஃப்ளாட் கட்டலாம். மயிலாப்பூர்லே நிலத்தோட விலை ஏறிட்டே போறது. இந்த இடத்திலே சதுர அடி முந்நூறு ரூபாய்னாலும் க்யூவிலே மனுஷா வந்து நிப்பா!"

"நம்ப காதல் முடிஞ்சுட்டுதுன்னு வைச்சுக்கலாமா, ரமணி?"

"ஏன் இப்படிப் பேசறே மாலு?"

"காதலுக்கு இளமைதான் இருக்கலாம். மூப்பும் கிழட்டுத்தனமும் வர்ற அளவுக்குத் தொடரக்கூடாது ரமணி. என் அக்கா கலியாணம் முடிஞ்சு ஆறு மாசத்துக் குள்ளே நீங்க என் கழுத்திலே தாலியைக் கட்டியாகணும். உங்க வீட்லே நமக்குத் தனியா ஒரு பெட்ரூம் இல்லேன்னா, கிடைக்கிற இடத்தை பெட்ரூமா மாத்திப்போம்! அதுக்கு அப்புறம், நீங்க உங்க திட்டத்தை எப்படி வேணும்னாலும் தீட்டிக்குங்க, நிறைவேத்திக்குங்க!"

"யோசிக்கிறேன், யோசிக்கிறேன்! ஒருவழி கிடைக்காமலா போயிடும்?" என்றான் ரமணி.

மாலு கோபமாய்த் தன் இருக்கைக்குச் சென்றாள்.

ரங்கன் சோர்ந்துபோனான்.

ரமணி அவனைக் கடிந்து பேசவில்லை! ரங்கன்மீது எரிச்சல் கொள்ளவில்லை.

தன்னுடைய கண்ணோட்டத்தில் ரங்கனுடைய வாழ்க்கையை அலசிப் பார்த்து, அதன் யதார்த்தத்தில் புத்திமதி சொல்லுகிறான். என்ன செய்ய?

MithraVintha

பழைய நாட்கள் கண்முன் நின்றன.

வானத்தில் பறந்துகொண்டிருக்கும் இரு பறவைகள் திடீரென்று சந்தித்துக்கொள்ளுவதுபோல அவனும் ரமணியும் நான்கு ஆண்டுகளுக்கு முன் சந்தித்துக்கொண்டார்கள். ஆனால் பறவைகளைப்போல அவர்கள் உடனடியாகப் பிரிந்துவிடவில்லை. ஏதோ ஒரு சக்தி ஒருவரையொருவர் சேர்த்து ஒட்டவைத்தது.

"ஏம்பா நீ யாரு...எங்கேயிருந்து வர்றே?"

"கும்பகோணம். அங்கேயிருந்து வர்றேன்."

"பட்டணத்திலே பிழைப்புத் தேடவா?" என்று கேட்டான் ரமணி.

"ஆமாம் ஐயா... அண்ணனும் அண்ணியும் துரத்திட்டாங்க!"

"ஏன் ஏதானும் திருடிட்டியா?"

"ஐயய்யோ...திருட்டா? நானா? ஐயா நீங்க என்னைத் தப்பாப் புரிஞ்சுட்டிருக்கீங்க...நான் அண்ணனுக்கு ஒரு சுமையாம். எனக்கு தம்பி ஒருத்தன் இருக்கான். அவன் தான் அண்ணியுடைய அஞ்சு சவரன் சங்கிலியைத் திருடிட்டு ஓடிட்டான்! நான் அப்படியில்லீங்க!"

"பிழைப்புத் தேடிட்டு வந்திருக்கியே, உன்னாலே எந்த வேலை செய்யமுடியும்? வாயாலே ஊதினாக் காத்துலே பறந்து கும்பகோணத்திலேயே போய் விழுவே போலிருக்கு! உனக்கு யார் என்ன வேலை கொடுப்பாங்க?"

ரங்கனால் அழத்தான் முடிந்தது.

"உன்னைப்பார்த்தா சாதுவாப் படறது. பாவமாகவும் இருக்கு...ஆமாம், எதுவரையில் படிச்சிருக்கே?"

"எட்டாங்கிளாஸ் பெயிலுங்க."

"சாப்பிட்டியா?"

"உம்."

"என்ன?"

"ரெண்டு பன், ஒரு டீ."

"கையிலே காசு இருக்கா?"

"ஒரு ரூபாயும் சில்லறையும்."

"ஒண்ணு செய்."

"என்னங்க?"

"இப்ப என் வீட்டுக்கு வா! அங்கே என் தாத்தா இருக்கார். அவருக்கு வயசு தொண்ணூறுக்கு மேலாறது. அவர் அறையைச் சுத்தம் பண்ணி, அவருக்கு வேண்டியதைச் செய். அவரோட வேட்டி துணிகளைத் தினசரி தோய்ச்சு வை."

"சரிங்க."

"எங்க வீட்லே நிறையபேர் இருக்காங்க. ஆளுக்கு ஒரு வேலை சொல்லுவாங்க."

"செய்யறேன்."

"ஆனா யாரும் சம்பளம் கொடுக்கமாட்டாங்க."

"ஐயா!"

"பயப்படாதே! ரெண்டு வேளை சாப்பாடு, காப்பி, பலகாரம் எல்லாம் கிடைக்கும். அது சரி உனக்கு என்ன பழக்கமெல்லாம் உண்டு?"

"என்ன சொல்றீங்க ஐயா?"

"பீடி சிகரெட்? பட்டை, கள்ளு."

"கிடையாதுங்க."

"ஏம்பா ஒரு கெட்ட பழக்கமும் இல்லேன்னா எப்படி ஜாலியா வாழ்வே? நீ பொறந்ததே தப்பு!"

அ.—2

MithraVintha

ரங்கன் பதில் சொல்லவில்லை.

"ஆமாம் அது என்ன உன் பாக்கட்லே மஞ்சளாத் தெரியுது."

"லாட்டரி டிக்கட்டுங்க. ஒரு ரூபா டிக்கெட்."

"ஓ இந்த டிக்கட்டை வைச்சுட்டு லட்சாதிபதியா ஆயி டலாம்னு சொப்பனமா? அது சரி இது பழக்கமா?"

"ரெண்டு மூணு வருஷமா வாங்கிட்டு வரேனுங்க."

"பணம்?"

"மேட்டுத் தெருவிலே ஒரு ஓட்டல்லே மேஜையைத் தொடச்சுட்டிருந்தேன். மாசம் பத்து ரூபா சம்பளம். சாப் பாடும் போடுவாங்க. அப்ப ஏற்பட்ட பழக்கம்."

"எனக்குத் தெரியும். மனுஷன்னு பொறந்தா ஒரு கெட்ட பழக்கமாவது இருந்தாகணும்னு. சரி வா என்கூட!"

ரமணியின் வீட்டில் மூன்று மாதங்கள். ஆளுக்கு ஆள் அவனை உலுக்கி எடுத்தார்கள்.

ஒரு நாள்—

ரமணி, "நாளைக்கு என்கூட ஆபீசுக்கு வா" என்றான்.

ரங்கன் போனான்.

ரமேஷ் சாண்டில்யா, ரமணியின் வேண்டுகோளை உட னடியாக ஏற்றுக்கொண்டான். ப்யூன் வேலை. நூறுரூபாய் சம்பளம்.

அன்றுமுதல் ரமணிதான் ரங்கனுடைய தெய்வம். ஆதர்ச புருஷன் வழிகாட்டி.

இப்போது ரங்கனால் ரமணியின் சொல்லை மீறி நடக் கவும் முடியவில்லை. அதேசமயம் தன் ஆசையை அடக்கிக் கொள்ளவும் முடியவில்லை. சமீப காலமாக, வாச்மேன்

மயில்சாமி மிகவும் நெருங்கிப் பழகுகிறான். பெற்ற பிள்ளை மீது இருக்கக்கூடிய பாசத்தையும் பரிவையும் காட்டுகிறான். ஏற்கெனவே மூன்று நான்கு தடவைகள் அவனுடைய வீட் டுக்கு ரங்கன் போயாகிவிட்டது. தனத்தைப் பார்த்தாகி விட்டது. அவளுடைய இளமை அவனைப் படாதபாடு படுத்தியது. அவளுடைய கண்கள் சிரித்துப் பேசுவதுபோன்ற பிரமையை ஏற்படுத்தியது. ஒரு தாயில்லாப் பெண்ணுக்கு வாழ்வு அளிக்க வேண்டியது அவனுடைய கடமை என்று மயில்சாமி அவனிடம் மன்றாடியிருக்கிறான். தனத்தைப் பார்த்தாலே பாவமாக இருக்கிறது. குடித்துக் குடித்துத் தன்னையே சீரழித்துக்கொண்டு வரும் மயில்சாமி திடீ ரென்று கண்ணை மூடிவிட்டால்? அப்புறம் தனபாக்கி யத்தின் கதி என்னாகும்? ஊரிலே இருக்கிற அயோக்கியர் களும் ரௌடிகளும் ஓநாய்களாக அவளைச் சீரழித்துவிடு வார்களே!

திடீரென்று ரங்கனுடைய மனத்தில் ஒரு உறுதி பிறந்தது. ஆனால் மறுகணமே ரமணி உறுதியைக் குலைப் பது போலப் பட்டது.

"ரங்கா!"

ஏறிட்டுப் பார்த்தான்.

"ரமணி சார்! நீங்களா?"

"என்ன அசை போட்டுட்டிருக்கே?"

"ஒண்ணுமில்லே ரமணி சார்!"

"அப்ப உனக்கு புத்தி சுவாதீனம் இல்லேன்னு அர்த்தம்!"

"ரமணி சார்!"

"எனக்கு எல்லாம் தெரியும் ரங்கா! மயில்சாமி நல்ல வன் இல்லே! அவன் பொண் தனமும் உனக்கு ஏத்தவ இல்லே! அவளை இந்த நிமிஷத்திலேந்து மறந்துடு. நீ கலியாணம் பண்ணிக்கவே வேண்டாம்!"

MithraVintha

"ரமணி சார், ஏன் சார் இப்படி ஒரு தண்டனையை எனக்குக் கொடுக்கறீங்க?"

"அழுகையை நிறுத்து. பிளாஸ்க்கை எடுத்துட்டுப் போ. ஸ்ட்ராங்கா ரெண்டு கப் காப்பி!"

ரங்கன் மௌனமாய் நகர்ந்தான்.

3

ரங்கனுக்கு ரமணி ஒளி, திசை காட்டும் நட்சத்திரம். வழிகாட்டி. அவனுடைய வார்த்தைகள் வேதம். ஆபீஸ் முழுவதுமே ரமணியை எதிர்த்து நின்றாலும், ரங்கன் ரமணியின் கட்சி. ரங்கனை ஒரு மனிதனாக மாற்றியவனே ரமணி அல்லவா? சென்னையில் திசை தெரியாமல் அலமந்து கிடந்தபோது, அவனுக்கு ஆதரவு காட்டித் தன் வீட்டில் சில மாதங்கள் அடைக்கலம் கொடுத்து, அதன்பிறகு இந்த ஆபீசில் ஒரு வேலையும் வாங்கிக் கொடுத்து வாழ வைக் கிறவன் ரமணிதானே?

இதுவரையில் ரமணி ஒரு கோட்டைக் கிழிக்கவும் ரங்கன் வாய்ப்புக் கொடுத்தது இல்லை. ஆனால் கல்யாணம் என்னும் மாயமான் அவனை இழுக்க முயற்சி செய்கிற போது, அதை ஓடிப் பிடிக்க அவன் துடிக்கிறபோது, ரமணி அழுத்தமாக ஒரு கோட்டைக் கிழிக்கிறான். ரங்கன் அதைத் தாண்டக்கூடாது என்று கட்டளையிடுகிறான். ஏன்?

அவன் ஏன் ஒரு பெண்ணை முறைப்படித் திருமணம் செய்துகொண்டு, அப்பா, தாத்தா, தாத்தாவின் அப்பா, தாத்தாக்களைப்போல, தாம்பத்தியம் எனும் உலகில் பிரவேசிக்கக்கூடாது? இதில் ரமணிக்கு என்ன நஷ்டம்?

யாரை அவன் தெய்வமாகப் பாவித்து வழிபட்டுக் கொண்டிருக்கிறானோ அவனே இப்போது அவனுடைய தாம்பத்திய ஆசைக்கு முட்டுக்கட்டை போடுகிறான்! அவன் குள்ளம்தான், சோனிதான். ஒருதடவை ஜுரத்தில் விழுந்த போது ரமணிதான் ஒரு டாக்டரிடம் அழைத்துக்கொண்டு போனான். அப்போது ரத்தசோகையால் உடல் பலவீன மாக இருக்கிறது என்று டாக்டர் கருத்துத் தெரிவித்து, ரங்கன் நிறைய காய்கறிகளும், பழங்களும், முட்டையும் சாப்பிட வேண்டும் என்றார். ஜுரம் தணிந்தபின் ரங்கன் டாக்டரையே மறந்துபோனான். ரமணி தன் கைக்காசி லிருந்து வாங்கிக்கொடுத்த சாத்துக்குடிப் பழத்தை ஏழெட்டு நாட்கள் சாப்பிட்டான். அவன் ஒடிசலாக இருக்கிறானாம். சாதுவாம். பெண்டாட்டி ராட்சசியாக அமைந்துவிட்டால் வாழ்க்கை ரணகளமாகிவிடுமாம். இப்படியெல்லாம் ஏன் ரமணி சொல்லி அவனைத் தளர வைக்க முயற்சி செய்ய வேண்டும்?

ஆபீஸ் கடிகாரம் ஆறு அடித்தது. எல்லோரும் போயாகி விட்டது. கம்பெனி அதிபர் விசேஷச் சலுகையாக, ரங்கன் ஆபீஸிலேயே தங்கிக்கொள்ள அனுமதித்திருக்கிறார். தங்குவதற்குத் தனி இடம் தேடினால் குறைந்தது ஒரு சிறிய குடிசைக்கு ஐம்பது ரூபாயாவது அழ வேண்டும். அந்தப் பணம் இப்போது மிச்சம்.

ரமணி ஏன் இப்படிப் புத்தி சொல்லுகிறான்? தனக்குக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்ற ஆசை இருக்கிறது என்று தெரிந்தும் ரமணி, 'மயில்சாமி நல்லவன் இல்லை. அவள் பெண் தனம் உனக்கு ஏற்றவள் இல்லை... நீ கல்யாணம் பண்ணிக்கவே வேண்டாம்' என்றெல்லாம் கூறுவானேன்?

முதன் முறையாக ரமணி மீது கோபம் வந்தது. ஆயிரம் உதவிகள் செய்திருக்கிற காரணத்தினால் ஓர் அநீதியை நண்பன் இழைப்பதாகத் தோன்றியது.

MithraVintha

திடீரென்று ஆள் அரவம் கேட்டது.

“என்ன தம்பி, செலையாக் குந்திக்கிட்டுக் கண்ணீர் வுடறே?”

வாட்ச்மேன் மயில்சாமி அங்குமிங்கும் கறைகளால் அலங்கரிக்கப்பட்ட காக்கி உடுப்பில் எதிரே நின்றான்.

ரங்கன் பதில் சொல்லவில்லை. மனத்தின் நெறுங்கல் வேகமாக மாறியது.

“எனக்கு யார் அழுதாலும் புடிக்காது, தம்பி! என்ன விசயம்? யார் என்ன சொன்னாங்க? என் கையிலே வுடு. பெசைஞ்சு எடுத்துடறேன்.”

“ஒண்ணுமில்லே மயில்சாமி.”

“பின்னே என்னாத்துக்குப் பொம்பளை கணக்கா அழுவறே?”

“ஒரு சந்தேகம் மயிலு.”

“என்னா அது சந்தேகம்?”

“நான் குச்சியாவா இருக்கேன்? என் ஒடம்பிலே தெம்பு இல்லியா?”

“அதுக்கு என்னா இப்ப?”

“என்னை மாதிரி ஆளுங்க கல்யாணம் கட்டிக்கக் கூடாதா?”

“எந்த மடப்பய சொன்னான்?”

“யார் சொன்னா என்ன மயிலு? நீ பதில் சொல்லு.”

“பதினெட்டு வயசிலே நான் எப்படி இருந்தேன் தெரியுமா? பயத்தங்காக்கணக்கா! பசங்களெல்லாம் எலும்பை எண்ணிப் பார்ப்பாங்க...இப்ப எப்படி இருக்கேன் பாரு! வஸ்தாது மாதிரி இல்லே?”

“நீ என்ன சொல்றே மயிலு?”

“நீ ஜோரா, படா ஜோராக் கல்யாணம் கட்டிக்கலாம் தம்பி! அது கூடாதுன்னு இந்த அப்பன்காரனுக்குப் பட்டிருந்தா, என் பொன்னையே உனக்குக் கட்டி வைக்க ஆசைப்படுவேனா?”

“அப்ப கல்யாணம் செஞ்சுக்கலாம்னு சொல்றியா, மயிலு?”

“என் பொன்னை உனக்குப் பிடிச்சிருக்கு இல்லே?”

“தனத்தைப் பிடிக்கப்போச்சுன்னு மூதலாட்டியா பார்த்தப்பவே சொல்லிட்டேனே மயிலு!”

“அப்ப சல்தியா அவளைக் கட்டிக்க! அடுத்த வருசமே அவ ஒன் புள்ளையை—என் பேரப் பையனைக் குடுப்பா!”

“உண்மையாலுமா மயிலு?”

“பொண்டாட்டி புருசனா ரெண்டு மாசம் வாழ்ந்தாலே போதும் தம்பி, கொளு கொளுன்னு ஆவுறதுக்கு!”

“அப்ப என் உடம்பிலே சதை ஏறும்னு சொல்றியா?”

“இதிலே இன்னா சந்தேகம் உனக்கு? இந்தப் பயத்தங்கா பூசனிக்கா மாதிரி ஆச்சு! நீயும் ஆயிடுவே...சரி, எதுக்குச் சும்மாச் சும்மா இந்தப் பேச்சு? இந்த ஞாயித்துக் கிளமை, நம்ம வூட்டுக்குச் சோறு துன்ன நீ வரப்போறேன்னு தனம் கையிலே சொல்லிட்டேன். பலான பணியாரமெல்லாம் செய்யப்போறதாச் சொல்லிச்சு. உனக்கு ஒரு விசயம் தெரியுமா தம்பி?”

“என்ன மயிலு?”

“அதுக்கு உன்னைப் பிடிச்சுப்போச்சு.”

ரங்கன் ரமணியை அக்கணம் அடியோடு மறந்து போனான்.

“கல்யாணத்தை எங்கே வைச்சுக்கலாம் மயிலு?”

MithraVintha

‘‘என் ஊட்டுலேயே வைச்சுக்கிட்டா எகப்பட்ட சனம் வரும். நான் இன்னா சொல்றேன்னா!’’

‘‘சொல்லு, மயிலு!’’

‘‘உன் ஊட்டு ஆளுங்க யாரெல்லாம் வருவாங்க தம்பி?’’

‘‘யாரும் இல்லே.’’

‘‘ஏன் அண்ணங்காரன் தம்பிக்காரன் அல்லாரும் இருக்காங்களே! ஒரு அக்காகூட இருக்குது இல்லே?’’

‘‘அவங்க யாரும் எட்டிக்கூடப் பார்க்கமாட்டாங்க!’’

‘‘அப்ப ரொம்ப சுலுவாப் போச்சு!’’ என்ற மயில்சாமி, ‘‘எனக்கும் ஒரு அஞ்சாறு பேர்தான் இருக்காங்க!’’ என்றான்.

‘‘ரமணி சார் வரணும். மாலு அம்மா அப்புறம் இச்சா எல்லோரும் வரணும்!’’

‘‘இவங்களெல்லாம் வேணாம் தம்பி! அவுங்களுக்குன்னு கல்யாணத்தைப் பெரிசா நடத்தணும். ஏன் அனாவசியச் செலவு செய்யறே? இதைக் காதும் காதும் வைச்சாப்பல நடத்திப்புடுவோம்.’’

‘‘மயிலு... மயிலு... நீ இப்ப என்ன சொன்னே?’’

‘‘அவங்கள்லாம் வேணாம்னேன்! ஏன் தப்பா?’’

‘‘அது இல்லே...செலவுபத்திப் பேசினியே அது?’’

‘‘ஏன் இன்னாத் தப்பு? எங்க ஊர் வளக்கம், புள்ளை ஊட்டார்தான் கல்யாணச் செலவு செய்யணும். பொடவை, தாலி எல்லாம் புள்ளை செலவு. தனம் காதிலே ஜிமிக்கி போட்டுட்டிருக்கு...அவ அம்மாவோட ஒரு சோடி வளையல் இருக்கு...அதையும் கொடுத்துடறேன்.’’

ஒரு சில நிமிடங்கள் ரங்கன் சோர்ந்துபோனான். தனத்துக்கு இருநூறு ரூபாயில் ஒரு புடைவையும், தங்க முலாம் பூசிய நகைகள் கொஞ்சமும் வாங்கத்தான் அவன் திட்டம் போட்டிருந்தான். இப்போது மயில்சாமி ஒரு குண்டை அல்லவா போடுகிறான்?

‘‘நீ இன்னா யோசிக்கிறே தம்பி! இஷ்டம் இல்லாட்டி சொல்லிடு. கண்ணப்பன்னு நம்ப தெருப் பையன் ஒருத்தன் என் பொண்மேலே வலை வீசிக்கிட்டிருக்கான். பஸ் கம்பெனியிலே, ஐந்நூறு ரூபா வாங்கறான். ஆனா உன்னைத் தனத்துக்குப் பிடிச்சுப் போச்சு! உனக்கு இப்ப இஷ்டம் இல்லாட்டி சொல்லிடு. அந்தப் புள்ளைக்கு என் பொண்ணைக் கட்டி வைச்சுடறேன்!’’

மயில் சொல்லிவிட்டு, பீடியை வாயில் வைத்துக்கொண்டான். கை பாண்ட் பாக்கெட்டுக்குள் தீப்பெட்டியைத் தேடிக்கொண்டிருந்தது.

ரங்கனுக்கு வியர்த்தது.

தனம் இன்னொருத்தனுக்கா?

பல நாட்களாக ஒவ்வோர் இரவும் தனம் அவன் சொப்பனத்தில் வருகிறாள். சிரிக்கிறாள். அவன் அருகே உட்காருகிறாள், படுக்கிறாள். அப்படிப்பட்ட தனம் இன்னொருவன் கைக்குப் போவதா?

‘‘இஷ்டம் இல்லேன்னு நான் எப்ப சொன்னேன் மயிலு? செலவுதான் அதிகமாயிடுமோன்னு பயமாயிருக்கு.’’

‘‘செலவே இல்லாம எப்படித் தம்பி உன்னால ஒரு பெண் கழுத்திலே தாலி கட்ட முடியும்? செலவைக் குறைக்கணும், அவ்வளவுதானே? கந்தசாமி கோவில் பக்கத்திலேயே இருக்கு. நடத்தே பூடலாம். அங்கே கட்டிடு தாலியை!’’

வேறு வழி தோன்றாமல் ரங்கன் தலையாட்டினான்.

MithraVintha

1986—டிசம்பர் 7—ஞாயிறு

பிடாரி அம்மன் கோவில் தெருவிலிருந்து இளை விட்ட ஒரு சிறு சந்தில் கட்டிப் போட்ட எருமைகளுக்குத்தான் இடம் இருந்தது. சாணியும், எருமையின் கழிவுநீரும் சின்னாபின்னமாக்கப்பட்ட வைக்கோல் பிரிகளும் சந்தை அலங்காரம் செய்தன. தன் கிராமத்துக் கால்களுக்குச் செருப்பு அனாவசியம் என்று பட்டணத்துக்கு வந்த அன்று எடுத்த முடிவை, ரங்கன் இன்னும் மாற்றிக்கொள்ளவில்லை. ரமணி பர்மா பஜாரில் மலிவு விலையில் சிங்கப்பூர் செருப்பு வாங்கிக் கொடுத்திருந்தான். அதை ரங்கன் ஆபீசுக்குள் மட்டுமே உபயோகித்தான். இப்போது செருப்பு இல்லாமல் இந்தச் சந்துக்குள் நடந்து வரும்போது தன்னைத்தானே பாராட்டிக்கொண்டான். செருப்பு இந்த அசுத்தத்தில் வீணாகியிருக்கும். கால்களை அலம்பிச் சுத்தம் செய்து விடலாம். செருப்பு அப்படியா?

ஓடு வேய்ந்த ஒரு சிறு வீட்டின் முன் பக்கத்து அறையில் தனம் அவனுக்காகக் காத்திருந்தாள்.

''வாய்யா...நீ பத்தரை மணிக்குத்தான் வருவேன்னு அப்பா சொன்னாரு. இப்ப மணி ஒம்பதே முக்கால்தானே ஆவுது?''

வலது கையில் கட்டியிருந்த கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே தனம் பேசினாள்.

''என்னமோ வரணும் போலத் தோணிச்சு. அதான் வந்தேன். மயில்சாமி இல்லியா?''

''இருக்கிறது ஒரு ரூம்பு. இதிலே நான் ஒருத்திதான் இருக்கேன். அப்பா இல்லியான்னு கேட்கிறியே?''

''ஒரு பேச்சுக்குக் கேட்டேன் தனம்!''

''உனக்கு என்னைப் பிடிச்சுப்போச்சுன்னு அப்பா சொன்னாரு.''

ரங்கன் பதில் சொல்லவில்லை.

''எனக்கும் ஒன்னைப் புடிச்சுப் போச்சய்யா...நெசத்தைச் சொன்னா, உன் வளுக்கைத் தலை, குச்சி உடம்பு, கட்டை வெரல் உசரம் இதையெல்லாம் பார்த்து எந்தப் பொண்ணுக்கும் ஒன்னைப் புடிக்காது. ஆனா எனக்குப் புடிச்சுப்போச்சு! ஏன் சொல்லு பார்ப்போம்!''

''தெரியலே தனம்!''

''நீ சாது ஐயா...நல்ல ஆம்புளை. அப்பா சொன்னாரு. நீ காக்காசு அனாவசியமாச் செலவு செய்யமாட்டேன்னு.''

தனம் அவனைத் தாண்டி வந்து, கதவைச் சாத்தினாள்.

''அப்பா வர்றதுக்கு இன்னும் ஒரு மணி நேரமாகும்...'' என்று சொன்னவள், அவன் அருகே வந்தாள்.

''குந்துய்யா.''

உட்கார்ந்தான்.

அவள் அவன் அருகே அமர்ந்தாள்.

''நீ நல்ல புள்ளை!''

சொன்னவள் அவனுடைய கன்னத்தை வருடினாள்.

ரங்கனுடைய உடல் பரபரத்தது. கூடவே ஒரு பயம் கவ்விக்கொண்டது. இவள் என்ன செய்யப்போகிறாள்?

''வேண்டாம்'' என்று நடுக்கத்துடன் தலையாட்டினான்.

ரங்கன் தன் கையை மேலும் அவளிடமிருந்து விலக்கிக் கொள்ள, தனம் அவனுடைய இரு கைகளையும் பற்றி இழுத்து முகத்தின்மீது வைத்துக்கொண்டாள்.

''எனக்கு ஆசையா இருக்குதய்யா!''

தட்டுத் தடுமாறி, ரங்கன் ''நமக்கு இன்னும் கல்யாணம் ஆகலே!'' என்றான்.

MithraVintha

"போம்யா நீ... இவ்வளவு நல்லவனாவும் இருக்கக் கூடாது!"

சொல்லிவிட்டுத் தனம் எழுந்தாள்.

சிரித்தாள்.

பற்களின் வெண்மை சூரிய ஒளியாக அவன் கண்ணைக் கூச வைத்தது.

அன்று ஆபீசுக்குத் திரும்புகையில் ரங்கனுடைய நடையில் அவன் உணர்ந்து அறியாத மிடுக்கு இருந்தது. வழியில் தென்பட்ட எல்லாப் பெண்களுமே தனமாகக் காட்சியளித்தார்கள்.

என்ன அழகான கறுப்பு!

என்ன வாளிப்பான உடல்!

இப்போதே அவன்மீதுதான் எவ்வளவு ஆசை!

தான் பிறந்த பிறவிக்கு ஓர் அர்த்தம் பிறந்துவிட்டதாக ரங்கனுக்குத் தோன்றியது.

1986—டிசம்பர் 8—திங்கள்

ரங்கன் தலைதாழ்த்தி மிகவும் பணிவாக ரமணியின் முன் நின்றான்.

"என்ன ரங்கா, என்னாச்சு?"

உடனே ரங்கன் பதில் சொல்லவில்லை. மௌனம் சாதித்தான்.

"சொல்லு. பயப்படாம சொல்லு! நான் கோபிச்சுக்க மாட்டேன்!"

"பணம்."

"உன் பணம். அதைப்பத்திப் பேச ஏன் இப்படி உடம்பை வளைச்சுக் குழையறே?"

"ஆயிரம் ரூபா!"

"எத்தனையானா எனக்கு என்ன? இந்தா பாஸ் புக்! நீயே போய் பாங்க்லேர்ந்து எடுத்துக்க! ரமணி வலதுபுற டிராயரைத் திறந்து பாஸ் புத்தகத்தை எடுத்து மேஜை மேல் போட்டான்.

"ரமணி சார் என்பேர்லே கோபமா இருக்கீங்க!"

"நான் யாரு உன்மேலே கோபிச்சுக்கிறதுக்கு?"

"நீங்கதான் எனக்கு எல்லாம், ரமணி சார்!"

"என் காதுலே பூ சுத்தாதே! நான்தான் எல்லாம்னா என் பேச்சுக்கு நீ மதிப்பும் மரியாதையும் கொடுத்திருக்கணும்! சரி சரி, பாஸ்புக்கை எடுத்துக்கிட்டுப் போ! இனி மேல் அதை நீயே வைச்சுக்க..."

"ரமணி சார்!"

"என்னிக்குக் கல்யாணம்?"

"வர்ற வெள்ளிக்கிழமை!"

"எங்கே?"

"கந்தசாமி கோவில்லே!"

"நான் உண்டா?"

"நீங்க மட்டும்தான் உண்டு. மாலு அம்மாகூடக் கிடையாது."

"ஆழம் தெரியாமக் குட்டையிலே காலை வைக்கிறே! மயில்சாமி ஒரு முதலை. அவன் பொண்ணு அவனையே முழுங்கற பெரிய முதலை...இப்ப நான் சொல்றப்ப வேப்பாக் கசக்கும்! நாளைக்கு அனுபவிக்கிறப்ப இன்னிக்கு நான் சொல்றதெல்லாம் நினைவுக்கு வரும்...போ...பணத்தை எடுத்து மயில்சாமி தலையிலே கொட்டு."

கண்ணீர் மல்க ரங்கன் வங்கிப் புத்தகத்தை எடுத்துக் கொண்டான்.

MithraVintha

அவன் நகரும்போது—

"ரங்கா!"

"என்ன ரமணி சார்."

"பாஸ்புக்கை இப்படிக் கொடு!"

"ஏன் சார்?"

"மொதல்லே கொடு."

ரங்கன் நீட்ட, 'லபக்'கென்று பறித்துக்கொண்டான்.

"ரமணி சார்... மறுபடியும் பிடிவாதமா என் கலியாணத்தை எதிர்க்கறீங்களே? இது உங்களுக்கே நல்லாயிருக்கா?"

"மத்தியானம் மூணு மணிக்கு என்னை வந்து பாரு!"

"அப்ப பாங்கு மூடியிருக்குமே!"

"சொன்னதைக் கேளு... போ!"

கோபமும், அழுகையுமாய் ரங்கன் ஹாலின் மூலையைத் தஞ்சம் அடைந்தான்.

டைப் அடிப்பதை நிறுத்திவிட்டு, "என்ன ரங்கா, என்னாச்சு? மாலுவைக் கொஞ்சறதை உட்டுட்டு ரமணி உன்கிட்ட சாடினானே, எதுக்கு?" என்று சுகந்தி கேட்டாள்.

தன் நிலையை யாரிடமாவது சொல்லி அழ வேண்டும் போலத் தோன்றியது, ரங்கனுக்கு.

சுகந்தி இடைத்தாள். ஆனால் கல்யாணத்தைப்பற்றிப் பேசவில்லை. அது ரகசியம்.

4

மயில்சாமி திருப்தியுடன் பீடியை நீண்டதூரத்துக்கு இழுத்து, ஆர அமரப் புகையைக் கக்கினான். அவன் இருந்த நிலையில் பீடிப் புகை ஜவ்வாதாகக் கமழ்ந்தது. இனி அவனுக்குத் தனபாக்கியத்திடமிருந்து விடுதலை. எலிப் பொறியிலிருந்து அவன் தப்பிவிட்டான். அந்த இடத்துக்கு ரங்கன் வந்து உட்கார்ந்து, மயில்சாமி இது நாள்வரை அனுபவித்ததையெல்லாம் அனுபவிக்கப்போகிறான். இனி மேல் மயில்சாமியின் பணம் பறிபோகாது. அவனுடைய திஜார்ப்பையிலும் தொப்பிக்குள்ளும் ஒளித்துவைத்த பணம் தனத்தின் கைக்குப் போகாமல் பத்திரமாக இருக்கும். அவன் மேலும் நூறு மில்லி இருநூறு மில்லி குடிக்கலாம். இஷ்டம்போல் மிளகாய் பஜ்ஜி கடிக்கலாம்.

அன்று அவன் வழக்கத்துக்கு ஒருமணி நேரம் முன்பாகவே ஆபீசுக்கு வந்து, சுகந்திக்கு எதிரே நின்றான். நாளைய மருமகன் ரங்கன் சோர்வாய் ஒரு மூலையில் தலை தாழ்த்தி உட்கார்ந்திருப்பது அவனுடைய கண்ணில் படவில்லை.

"என்னப்பா மயில்சாமி நாலே முக்காலுக்கே வந்துட்டே?" என்று சுகந்தி கேட்டாள்.

"உன்னாலே ஒரு காரியம் ஆவுணம், சுகந்தி அம்மா!"

"எவ்வளவுதரம் சொல்றது அம்மா பாட்டினெல்லாம் என்னைக் கூப்பிடப்படாதுன்னு? என்ன வேணும்?" அவன் அவளை அழைக்கும் விதத்திலேயே தன் வயது அதிகமாகி விடுவதாகச் சுகந்திக்குப் பட்டது.

MithraVintha

''மன்னிச்சுக்க. கோவந்தே...''

சுகந்திக்குக் கோபம் வந்தது. அவள் என்ன மயில்சாமி கொஞ்சக்கூடிய குழந்தையா? பொறுத்துக்கொண்டான்.

''என்ன வேணும்? அதைச் சொல்லு.''

''ஒரு அப்ளிகேசன்.''

''எதுக்கு?''

''அட்வான்சு!''

''எதுக்கு?''

''பொண்ணு கலியாணத்துக்கு. ஆயிரம் ரூபா.''

''அடப்பாவி!''

''ஏன் மிஸ்ஸு.''

''உன் பொண்ணுக்குத்தான் கல்யாணம் ஆயிடுத்தே? ஏற்கெனவே அட்வான்சு வாங்கியிருக்கியே?''

''அதையெல்லாம் கண்டுக்காதே, மிஸ்ஸு.''

''ரமணி கண்டிப்பா பொரிசு செய்யமாட்டான்.''

''அப்ப இன்னா செய்யறது?''

''வேறே ஏதானும் காரணம் சொல்லு.''

''இன்னா சொல்றது?''

''பெண்ணுக்கு வளைகாப்பு, சீமந்தம்னு சொல்லு.''

''ஐய்யோ ஆத்தாடீ! அது வேணாம். வீடு ரிப்பேர் பண்ணன்னு எழுது'' என்றான் அவன்.

''முதலாளி கொடுப்பார்ன்னு எனக்குத் தோணலை.''

''நீ எழுதும்மா...டைப் அடிம்மா.''

''சரி போ...நாளைக்குக் காலையிலே வந்து முதலாளியைப் பாரு. ரமணி பக்கம் போகாதே!''

''சரி மிஸ்ஸு.''

''மயிலு!''

''என்ன மிஸ்ஸு?''

''ரங்கனுக்குக் கல்யாணமாம். அவனும் சொல்லலே... நீயும் சொல்லலே.''

''இன்னத்தை அம்மா சொல்றது? அவனும் ஒரே புடியா நிக்கறான். என் பொண்ணும் ஒரே அடியா நிக்குது!''

''இது அடுக்குமா, மயிலு?''

''நான் இன்னா மிஸ்ஸு செய்வேன்? என் பொண்ணு... பொண்ணா அவ? பேயி... வேணாம்ன்னேன்... சரிதான் போயாங்குது.''

''ரங்கன் மாட்டிக்கிட்டான்.'' என்றாள் சுகந்தி. பிறகு, ''என்னிக்கு?'' என்று கேட்டாள்.

''நீ யார் கையிலும் சொல்ல வேணாம்!''

''சரி.''

''இந்த வெள்ளிக்கிழமை.''

''நாலு நாள்தான் முழுசா இருக்கு. ஏன் இன்னும் நோட்டீசு வைக்கலே?''

''நோட்டீசெல்லாம் கெடையாது, சுகந்தி மிஸ்ஸு. நீ கூட வரத்தாவலே.''

''கடன் அப்ளிகேஷனுக்கு மட்டும் நான் வேணும், இல்லே?''

மயில்சாமி சிரித்தான்.

மூன்று மணிக்கு ரமணி ரங்கனை அழைத்தான். அவன் மௌனமாய் நின்றான்.

MithraVintha

"வா என்கூட!"

எங்கே என்று ரங்கன் கேட்கவில்லை.

ரமணியைப் பின்தொடர்ந்தான்.

இருவரும் தெருவுக்கு வந்தார்கள். அவர்களுடைய காரியாலயக் கட்டடத்துக்குப் பக்கத்துக் கட்டடம் ஏற்கெனவே முழுதும் இடிக்கப்பட்டுவிட்டது. புதிதாக நவீன மவுசில் ஒன்று வரப்போகிறது. அதற்கான அஸ்திவார வேலை இன்னும் ஆரம்பமாகவில்லை. வெட்ட வெளியாகக் கிடந்தது. அங்கே ரமணி சென்றான். நிழலில் நின்றான்.

"ரங்கா!"

"சொல்லுங்க ரமணி சார்!"

"நான் உனக்கு ரொம்ப வேண்டியவன். உன் நல்லது, பொல்லாதது எல்லாத்திலும் அக்கறை காட்டறவன். நீ என்னன்னிக்கும் குறைவில்லாம வாழணும்னு ஆசைப் படறவன்...உனக்கு என்ன உதவி எப்பத் தேவைப்பட் டாலும் செய்யத் தயாரா இருக்கிறவன்... என்ன இதை யெல்லாம் நீ நம்பறியா?"

"சத்தியமா நம்பறேன் ரமணி சார்!"

"அப்ப மயில்சாமி பெண் தனத்தை மறந்துடு."

"ஏன் சார்?"

"அவகிட்டே நல்ல குணம் எதுவும் கிடையாது. அப்ப னோட தினமும் மல்லுக்கு நிக்கறவ. ஊர் சுத்தறதுதான் அவ வேலை."

"எனக்கு அவளைப் பிடிச்சிருக்கு."

"அதான் இப்படித் துடிக்கிறே!"

"அவளுக்கும் என்னைப் பிடிச்சிருக்கு..."

"பணத்தை நீட்டற எந்த ஆம்புளையையும் தனத் துக்குப் பிடிக்கும். கண்ட கண்டவனோட சிரிச்சுக் கும்மாள மடிக்கிற கழுதை அவள்."

"அவளை நான் கட்டிக்கக் கூடாதுன்னுதானே, ரமணி சார் அவளைப்பத்தி இப்படியெல்லாம் பேசறீங்க? நீங்க சொல்ற மாதிரியே அவ இருந்திருக்கலாம்...ஆனா இப்ப அவ என்னைப் பார்த்ததும் மாறிப்போயிருக்கா..."

"ஆமாம், நீ பெரிய மன்மதன்! மடையா, அவ உன்னைக் கட்டிக்கப் போறதில்லே... உன் பணத்தைக் கட்டிக்கப் போறா! உன் மாசச் சம்பளத்தை மட்டும் திம்பான்னு நெனைக்காதே! நீ சேர்த்து வைச்சிருக்கிற அத்தனை பணத் தையும் முழுங்கி ஏப்பம் விடுவா! நான் சொன்னதைக் கேளு. உனக்குக் கல்யாணம் பண்ணிண்டுதான் ஆகணும்னு இருந்தா, நான் ஒரு நல்ல பெண்ணாத் தேடறேன். தனம் வேண்டாம்."

முதல் முறையாக ரங்கனுக்குக் கோபம் வந்தது. ஆனால் பலவீனமான கோபம். உள்ளூரப் பொருமித் தீர்த்தான்.

"நான் சொன்னது எதுவும் உன் காதில் ஏறியிருக் காதே?" என்றான் ரமணி.

"ரமணி சார், நீங்க தெய்வம் மாதிரி... எம்பேர்லே சாபம் போடாம என்னை வாழ்த்துங்க."

"நான் சொல்லவேண்டியதைச் சொல்லிட்டேன்."

"இந்த ஒரு விஷயத்திலே உங்க பேச்சுக்கு எதிரா நடக்கிறேன்னு என்னை உங்க மனசிலேந்து ஒதுக்கிடாதீங்க, ரமணி சார்!"

"உனக்கு இப்ப பணம் தேவைப்படுது இல்லே?"

ரங்கன் மௌனமாய் அவனைப் பார்த்தான்.

MithraVintha

"எவ்வளவு?"

"ஆயிரம்."

"ஆபீஸிலேந்து கடனா வாங்கித் தரேன். மாசா மாசம் அம்பது அம்பதாக் கழிச்சுக்குவாங்க!"

"அப்ப..."

"எதுக்கு இப்பவே உன் பாங்க் பணத்திலே கை வைக்கறே... இருக்கவே இருக்கு, தனம் வந்ததும்... அவ பார்த்துப்பா" என்ற ரமணி, "வா ஆபீசுக்குப் போகலாம். ஒரு அப்ளிகேஷன் எழுதித் தரேன். அதிலே கையெழுத்தை மட்டும் போடு போதும்..." என்றான்.

"சரி ரமணி சார்!"

"இந்தக் கையெழுத்துக்கு அப்புறம் உன் தலையெழுத்து எப்படி மாறப்போறதோ!"

ரமணியின் வார்த்தைகளை ரங்கனால் சகித்துக்கொள்ள முடியவில்லை. இருப்பினும் வலு இழந்து போயிருந்த அவன் மௌனமாய் அவனுடன் நடந்தான்.

1986—டிசம்பர் 12—வெள்ளி

கந்தசாமி கோவிலில் பத்தே நிமிடங்களில் திருமணம் நடந்தது. பெண்ணும் பிள்ளையும் மாலை மாற்றிக்கொண்டார்கள். ரங்கன் மஞ்சள் கயிற்றை எடுத்தான். ரமணி அருகே சென்றான். சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். அவனுடைய கண்கள் கனத்தன.

தனபாக்கியம், முகத்தையே அடிக்கும் ஊதா நிறப் புடவையில், பொறுமை இழந்தவளாய் ரங்கனைப் பார்த்தாள். ரமணி யார் என்று தந்தை மயில்சாமி மூலமாக ஏற்கெனவே தெரியும். ஆனால் ரங்கன் ஏன் ரமணியிடம் இவ்வளவு பக்தி செலுத்த வேண்டும்?

"போய்த் தாலியைக் கட்டு...இனிமே இதை என்னால் நிறுத்த முடியாது!" என்றான் ரமணி.

ரங்கன், 'கல்யாணமானவன்' என்ற நிலைக்கு உயர்ந்தான்!

அன்று இரவு எட்டுமணிக்கு மயில்சாமி, தன் பெண்ணையும் மருமகனையும் ஓட்டலுக்கு அழைத்துச் சென்றான்.

"மருமவப் புள்ளே, இது என் செலவு. வயிறு முட்டத் துன்னு!" என்றான்.

ரங்கன் முயன்றான். சிறிது சாப்பிடுவதற்குள் வயிறு நிரம்பிவிட்டதாகப்பட்டது. மயில்சாமி யாரையும் லட்சியம் செய்யாமல் சாதத்தால் மேட்டூர் கட்டி, சாம்பார் ரசத்தை காவிரியாக்கினான்.

தனத்தால் எதுவுமே சாப்பிட முடியவில்லை. ரங்கனுக்குக் கவலையாக இருந்தது. அன்று மத்தியானமும் அவள் சாப்பாட்டில் பற்று இல்லாமல் இருந்தாள். இப்போதும் சாப்பிடாமல் இருக்கிறாள். ஏன்?

"தனம்!" என்று ரங்கன் ஆரம்பித்தான்.

"என்னா?"

"பசிக்கலையா?"

"பசிச்சா துன்னிருக்க மாட்டேன்? வா, நாம வூட்டுக்குப் போலாம்."

"அப்பா?"

"அது இன்னிக்கெல்லாம் துன்னுக்கிட்டே இருக்கும். நீ வா போகலாம்."

இருவரும் வீட்டை நோக்கிப் புறப்பட்டார்கள்.

மயில்சாமி கண்டுகொள்ளவில்லை.

Mithra Vintha

வீட்டை அடைந்ததுமே தனத்துக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. சுவரைப் பிடித்துக்கொண்டு, கண்கள் செருக நின்றாள். வயிற்றில் ஏற்பட்ட பிரளயம் வாய் வழியாகக் கொட்டியது.

"தனம்...தனம்...என்னாச்சு... ஒடம்பு சரியில்லையா... சொல்லு தனம்! டாக்டரைக் கூட்டியாரட்டுமா?"

அவள் 'வேண்டாம்' என்று தலையாட்டிவிட்டு நீண்ட நேரம் மௌனம் சாதித்தாள். பிறகு—

"நீ இப்ப என் புருசன் இல்லே?"

"ஆமாம். என்ன சந்தேகம் தனம்?"

"இதையெல்லாம் தண்ணி ஊத்தித் தள்ளி தொடைச்சுடறியா?"

"நீ மொதல்லே அங்கே ஓரமா உட்காரு தனம்."

"சல்தியா தொடச்சாதான் நாம படுக்கலாம்!"

"இதோ!"

தலையணையில் தலை விழுந்ததும் தனம் தூங்கிவிட்டாள். பல தடவை விரல் நடுக்கத்துடன் அவளுடைய முகத்தையும், இடையையும் ரங்கன் நெருடினான். அவள் உடம்பு அசையவுமில்லை.

அவனுடைய முதல் இரவு இப்படியா முடியவேண்டும்?

மறுநாள் காலை எட்டு மணிக்கு மயில்சாமி வந்தான்.

"தம்பி!"

"என்ன மயிலு?" ரங்கனுக்கு 'மாமா' என்று அழைக்க வரவில்லை.

"நீயும் என் பொண்ணும் இங்கே இருங்க. நான் போறேன்!"

"எங்கே போறே?" என்றாள் தனம்.

"இனிமே நான் ஆபீசுலேயே தங்கிக்கலாம்னு இருக்கேன்."

"துட்டு குடுத்துட்டுப் போ!"

"இதோ உன்னைக் கட்டிக்கிட்ட புருசன் இருக்கான்... இனிமே அவன்கிட்ட வாங்கிக்க!"

சொன்ன மயில்சாமி, ஒரு சிறு பெட்டியை எடுத்தான்.

"அது எம் பொட்டி. தொடாதே" என்றாள் தனம்.

"நீ புச்சா ஒண்ணு வாங்கிக்க! தம்பி, எம் பொண்ணுக்கு நல்ல பொட்டியா வாங்கிக் கொடு" என்று கூறிய மயில்சாமி, தனக்கு இருந்த ஓரிரு துணிகளைப் பெட்டியில் அள்ளிப் போட்டுக் கொண்டான்.

"போன மாசத்து கொடக்கூலியே பாக்கி!"—தனம்.

"மருமவப்புள்ளை குடுப்பான்!" என்ற மயில்சாமி, "வர்றேன் தம்பி! எம் பொண்ணை நல்லாப் பார்த்துக்க... நான் அப்பப்ப வந்து அவளைப் பார்த்துக்கறேன்!"

அவன் போனதும், "போனமாசம் அறுபது ரூபா, இந்த மாசம் அறுபதுரூபா கொடக்கூலி கொடுக்கணும்" என்றாள் தனம்.

"கொடுத்துடலாம்."

"ஊட்லே தும்மாத்தூண்டு அரிசி இல்லே... ஒரு புட்டி கிஸ்னாயில் இல்லே... அல்லாம் வாங்கியாகணும்..."

"வாங்கலாம்."

"பணம் எவ்வளவு வைச்சுட்டிருக்கே?"

ரங்கன் கணக்குப் போட்டுப் பார்த்தான். ஆபீசில் கடனாக வாங்கிய ஆயிரத்தில் முப்பது ரூபாய் பாக்கியிருந்தது. வேட்டி, புடைவை, தங்கமுலாம் பூசிய பித்தளை நகைகள், மாலை மற்றும் கோவில் செலவுகள் எல்லாமாகப் பணம் கரைந்துவிட்டது.

Mithra Vintha

"இப்பச் செலவுக்கு எவ்வளவு வேணும், தனம்?"

"ஐந்நூறு கொண்டா?"

"ஐந்நூறா?"

"என் வாயைப் பொளக்கிறே? ரெண்டுவேளை நான் போய்ப் போடத்தாலே!"

"மாசா மாசம் ஐந்நூறு ஆகுமா, தனம்?"

"இன்னா சம்பளம் வாங்கறே நீ?"

"நாலாயிரத்தம்பது கொடுக்கறாங்க."

"நெறையப் பணம் சேர்த்து வைச்சிருக்கேன்னு அப்பா சொல்லிச்சே!"

"கொஞ்சம் இருக்கு!"

"இப்ப நான் உன் பொஞ்சாதி! என் கையிலே நீ அல்லாம் சொல்லணும்."

"மூவாயிரம் ரூபா இருக்கு" என்ற ரங்கன், 'பிக்சட் டெபாசிட்' பற்றிக் கூறவில்லை.

"அப்ப ஒரு ஆயிரம் எடுத்துவா. எனக்குப் பொடவை, ரவிக்கை, பாடி, பாவாடை வாங்கணும்."

"ஆயிரமா?"

"ஆமாம், ஆயிரம்தான். பொண்டாட்டி கேட்டா புருசன் வாங்கித் தருவான்? ஒனக்காத் தோண வாணாம்?"

நேற்று இரவு முக்கி முனகிய தனமா இப்போது இப்படி முரட்டுத்தனமாகப் பேசுகிறாள்? போன ஞாயிற்றுக்கிழமை அவனுடைய உடலை வருடிவிட்ட தனமா இப்போது கன்னத்தில் அடிப்பதுபோல் சாடுகிறாள்."

"ஆபீஸ்லேர்த்து திரும்பி வர்றப்ப கொண்டு வர்றேன்!",

"எப்ப பணம் எடுப்பே?"

"பன்னிரண்டு மணிக்கு."

"நான் அங்கேயே வந்து வாங்கிக்கறேன்."

"ஏன் தனம்?"

"எனக்கு இன்னிக்கே பொடவை எடுத்தாகணும்."

ரங்கனுக்கு எதிர்த்துப் பேசத் தைரியம் முளைக்க வில்லை. அவளுடைய போக்கிலேயே சில நாட்கள் சென்றால், ஒருவேளை அவனுடைய வார்த்தைக்குத் தனம் கட்டுப்படுவாள் என்ற நப்பாசை உண்டாகியது.

ஆயிரம் ரூபாயை அவள் கறந்து வாங்கிக்கொண்டாலும், தனம் வஞ்சனை செய்யாமல் வீட்டுக்கு வேண்டியவற்றை யெல்லாம் வாங்கிப்போட்டாள். அவனுக்கு நல்ல சாப்பாடும் கிடைத்தது.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு அவன் அவளிடம் கேட்டான்.

"உனக்கு வயிறு கொஞ்சம் பெரிசா இருக்கு இல்லே?"

"ஆமாம்."

"உன் அழகு இன்னும் அதிகமாத் தெரியணும்னா உன் வயிறு குறையணும். சாப்பாட்டைக் குறைச்சுப் பாரு."

"வயிறு தானாக் குறைஞ்சுடும்."

"அப்படியா?"

"ஆமாம். நீயே அசந்துபூடுவே!"

"விளக்கை அணைச்சுடட்டுமா?"

"இன்னுமா அணைக்கலே?"

இருட்டில் அவளை அவன் அணைத்துக் கொண்டபோது, "யோவ், நீ நோஞ்சானா இருக்கேய்யா...ரெண்டுமாசத் திலே நீ கொழுகொழுன்னு ஆகணும்!"

MithraVintha

"நீ போடற சோத்திலே வஸ்தாது கணக்கா ஆயிட மாட்டேன்?'

அவன் அவளை இறுகப் பற்றிக்கொண்டான்.

"எனக்குத் தூக்கம் வருது!"

அவன் தன் கைகளைத் தளர்த்தினான்.

அவன் மெல்லிய குறட்டையுடன் தூங்கிக்கொண்டிருந்த போது, ரங்கன் விழித்திருந்தான்.

ரமணி கண்ணெதிரே தோன்றினான்.

இவனைக் கல்யாணம் செய்துகொள்ளக்கூடாது என்று ரமணி ஏன் உபதேசித்தான்?

கேள்வியே ஒரு பெரும் சுமையாக மார்பைத் தாக்கியது.

5

1987—ஜனவரி 19—திங்கள்

மாலு ரமணி அருகே வந்து நின்றாள். அவன் ஒரு ஃபைலில் மூழ்கிக் கிடந்தான். மிகவும் முக்கியமான விஷயமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் ரமணி நிச்சயமாக மாலு வந்து நிற்பதை உணர்ந்திருப்பான்.

அவள் மௌனமாக நின்றாள். காதல் விஷயத்தில் அவள் எத்தனை நாட்கள் பொறுமையாக இருந்து வந்திருக்கிறாள்!

ரமணி ஃபைலில் ஏதோ எழுதிவிட்டு, எழுதியதை ஒரு தடவை படித்துவிட்டு, 'வெங்கி!' என்று குரல் கொடுத்தான்.

அதிபருடைய அறைவாயிலில் வெற்றிலையைக் குதப்பிக் கொண்டிருந்த வெங்கி மெதுவாக எழுந்து, மெதுவாக நடந்து வந்தான். குதிரை விஷயத்தில் மட்டும்தான் அவனுக்கு விரைவும் வேகமும் பிடிக்கும்.

"இன்னா சார்!"

"இந்த ஃபைலை முதலாளி மேஜைமேலே அவர் கண்ணில் படும்படியா வை."

வெங்கி அலட்சியமாக ஃபைலை எடுத்துக் கக்கத்தில் செருகிக்கொண்டான்.

"ரமணி சார், விசயம் தெரியுமா?"

"என்ன?"

"முந்தாநாள் பம்பாய் ரேசிலே முதலாளி ஜாக்பாட் அடிச்சார். லட்சத்துப் பத்தாயிரத்து முந்நூத்து எழுபது ரூபா. ஐயாதான் ரெண்டு குதிரைங்களைக் கொடுத்தாரு! ஆனா நான்! ரெண்டு குதிரைங்களைத் தெரிஞ்சு வைச்சும் ஜாக்பாட் அடிக்கலே! எப்படி இருக்கு உலகம் பார்த்தியா?"

"உலகத்தை நான் அப்புறமா சாவகாசமாப் பார்த்துக்கறேன். இப்ப உள்ளே போய் இந்த ஃபைலை வை!" என்றான் ரமணி.

"அடடா மாலு அம்மா நிக்கறாங்க. அதான் நீ என்னை விரட்டறே!"

மாலு உட்கார்ந்துகொண்டாள்.

"நீ வந்ததை நான் உண்மையா உணரலே மாலு. ஸாரி!"

"நீங்க ஒரு விஷயத்திலே இறங்கிட்டா முழு மூச்சா அதிலே லயிச்சுப் போயிடுவீங்கன்னு எனக்குத் தெரியும் ரமணி! ஆனா உங்க முழுமூச்சு ஒரு விஷயத்திலே மட்டும் அடிக்கமாட்டேங்குது!"

MithraVintha

''புரியறது மாலு. நான் என்ன செய்ய? உடனடியாக் கல்யாணம் பண்ணிக்கிட்டு, உன்னோடு வாழ்க்கையை ஆரம் பிக்கணும்னு எனக்குக் கொள்ளை ஆசைதான். ஆனா வேளை வரமாட்டேங்கறதே!''

''வேளை தானாக வராது ரமணி! நாமதான் கொக்கி போட்டு இழுத்துக்கொண்டு வரணும். கேவலம் இந்த ரங்கனுக்குக்கூடக் கல்யாணம் ஆயிட்டுது.''

''அவன் ஒரு முட்டாள். நான் படிச்சுப்படிச்சுச் சொன் னேன். மடையன் கேட்கலே. பிடிவாதமா சகதியில்தான் விழுவேன்னு விழுந்தான். இப்ப அவதிப்படறான்.''

''நீங்களும் நானும் நிச்சயமா சந்தனக் குழம்பிலேதான் விழுவோம் ரமணி! என் அக்காவுக்கு அடுத்த மாசம் பன்னிரண்டாம் தேதி கல்யாணம். அம்மாவோட ஆசை நிறைவேறப் போறது.''

''ஓ, ஓ, அதுவா? உனக்கும் உன் அக்காவுக்கும் ஒரே நாள்லே கல்யாணம் நடக்கணும்னா ரெண்டே வழிதான் இருக்கு.''

''என்னவாம்?''

''நான் என்னிக்கு உன் கழுத்திலே தாலி கட்டறேனோ அந்தநாள் வரையில் உன் அக்கா காத்திருக்கணும்.''

''இது போகாத ஊருக்கு நீங்க காட்டற வழி. இன்னொண்ணு என்ன?''

''அக்காவுக்கு என்னிக்கு மாரேஜோ அன்னிக்கி அவகூட சேர்ந்து நீயும் மணமேடையிலே உட்காரணும். ஆனா இதிலே ஒரு சின்னச் சிக்கல்.''

''என்ன அது?''

''உன் பக்கத்தில் நான் இருக்கமாட்டேன்! வேறு யாராவது ஒரு பிள்ளையை உன் அப்பாவோ, அல்லது நீயோ பார்த்து முடிக்கணும்.''

''உங்ககிட்டே பேச வந்தேன் பாருங்க, என் புத்தியை...''

''என்ன நீ, அசடுமாதிரிப் பேசறே மாலு? நம்ப காதல் உண்மையானதுதான். ஆனால் அதுக்கு தெய்வீக மாலை யைச் சூட்டாதே... பிராக்டிகலா நினைச்சுப் பாரு. என் தாத்தா அஞ்சாறு நாளா இருமறார். இந்த இருமல் நல்ல இருமல் இல்லைன்னு டாக்டர் சொல்றார். மூச்சு விடறப்ப கன்னாபின்னான்னு ராகங்கள் வர்றது. இன்னும் இரண்டு மூணு நாள்லே சுவாசக்குழாயில் இருக்கிற கபமெல்லாம் வெளியே வரலேன்னா, தாத்தாவோட கடைசி அத்தியா யத்தை எழுதத் தொடங்கிடலாம். அதுக்கு அப்புறம் ப்ரச் னையே இல்லே!''

''ஏன் ரமணி, பழுத்த பழம் காம்பு ஒடிஞ்சு விழப் போறதுன்னு கலகலப்பாச் சொல்றீங்க. அவர் கண் மூடற துக்கு முன்னாடி நாம தம்பதியாப் போய் நமஸ்காரம் செய் தால் அவருடைய ஆசீர்வாதம் கிடைக்குமே?''

''ஆசீர்வாதம் வைச்சுக்கிட்டு என்ன செய்யறது மாலு? இது திரேதாயுகம் இல்லே ஆசீர்வாதமும் சாபமும் பலிக் கிறதுக்கு! நாம கலியுகத்திலே இருக்கோம். நியாயமும் தர்மமும் விலை போகாத யுகம்! பொய், பித்தலாட்டம், லஞ்சம், வஞ்சனை தாண்டவமாடறது. கண்ட கண்டவ னெல்லாம் தன்னை ஒரு அவதார புருஷனா வெளிச்சம் போட்டுக்கிட்டு, இருட்டிலே எல்லா அக்கிரமங்களும் செய்யறான்.''

''உங்க உபன்னியாசம் எனக்குத் தேவை இல்லை. நான் வர்றேன். ஆனா ஒண்ணு, இனிமே என் கழுத்திலே தாலி கட்டுங்கன்னு நான் மண்டி போட்டுக் கெஞ்சமாட் டேன். நான் ரெடின்னு நீங்க வரணும்.''

''அதுவரையில் உன்னால் காத்திட்டிருக்க முடியும மாலு?''

MithraVintha

"முடியும். ஒருத்தனுக்கு மனைவின்னா அந்த ஒருத்தன் நீங்கதான்!"

ரமணி சிரித்தான்.

"என்ன சிரிக்கிறீங்க?"

"எனக்கு ஒரு சினிமா டயலாக் நினைவுக்கு வந்தது. என்ன தெரியுமா?"

"எனக்குத் தெரிய வேண்டாம். சினிமாக் காதல் அளவுக்கு நான் இன்னும் தாழ்ந்து போகலே."

"அது எனக்குத் தெரியாதா மாலு? இருந்தாலும் சொல்றேன். மணந்தால் மகாதேவி, இல்லையேல் மரண தேவி! எப்படி?"

மாலு பதில் சொல்லாமல் தன் இருக்கையை நோக்கி நடந்தாள்.

தனம் நேற்றும் சோறு ஆக்கவில்லை. இன்றும் அடுப்புப் பக்கம் போகவில்லை. ரங்கனால் அவளை எதிர்க்கவும் முடியவில்லை. அவளுடைய வசைமொழிகளை அவன் தன்னுடைய வாழ்க்கை அகராதியில் படித்ததே கிடையாது. சென்னைத் தெருச் சண்டைகளில் கீழ்த்தரமான வசைச் சொற்களை அவன் கேட்டதுண்டு. வேடிக்கை பார்க்காமல் அவன் நகர்ந்துவிடுவான்.

அன்று திங்கட்கிழமை அவன் ஆபீசுக்குப் புறப்படுகையில், 'யோவ் நில்லுய்யா!' என்று சொல்லி தனம் எதிரே வந்தாள்.

"என்ன தனம்?"

"நான் முந்தாநாள் ஒரு பொம்பளை டாக்டர்கிட்டே போனேன் இல்லே?"

"ஆமாம் போனே."

"எனக்கு என்ன கோளாறுன்னு உனக்குத் தெரியுமா?"

"தெரியாது."

"என்னடா இவ அடிக்கடி வாந்தி எடுக்கிறாளே, சரியாச் சோறு தின்றதில்லையே... அடிக்கு அடி ஒடம்பு தானாமப் படுக்கிறாளே இன்னா விசயம்னு நீ என் கையிலே கேட்டிருக்கியா?"

"இப்ப சொல்லு தனம், உனக்கு என்ன உடம்பு? எதுக்கு டாக்டர் அம்மாகிட்டப் போனே?"

"ஹாங்... இப்பக் கேளு. ஏன்யா நீ அல்லாம் ஒரு புருசனா?"

சீறிப் பாய்ந்த தனம் திடீரென்று அழ ஆரம்பித்தாள். கேவிக் கேவி அழுதாள்.

ரங்கனிடம் இரக்க உணர்ச்சி பெருகவில்லை என்றாலும் அழுகையை அடக்கவேண்டும் என்று தோன்றியது.

"அழாதே தனம்! டாக்டர் அம்மா என்ன சொன்னாங்க?"

தனம் கேவலை கீழ் ஸ்தாயிக்குக் கொண்டு போனாள்.

"இன்னும் ஏழெட்டு நாளுக்குள்ளே ஆபரேசன் செஞ்சாகணுமாம். இல்லாட்டி... இல்லாட்டி... நான் செத்துப் பூடுவேனாம்! ஏன்யா நான் ஒன் பொஞ்சாதி இல்லே! ஒனக்கு நான் ஒரு கொயந்தை பெத்துத் தரவேணாம்? நான் செத்துப்பூடணும்னு நீ நெனைக்கிறியா?"

"இல்லே தனம், சத்தியமா இல்லே. என்ன ஆபரேஷன்னு டாக்டர் அம்மா சொன்னாங்க?"

"என் வவுத்திலே ஒரு சின்னக் கட்டி வளருதாம். அ... பெரிசானா வவுறே வெடிச்சுடுமாம்."

MithraVintha

''ஐயய்யோ...நீ சாகக்கூடாது தனம்...நான் இன்னிக்கே உன் அப்பாவைப் பார்த்து விசயத்தைச் சொல்லிடறேன்!''

''அந்தத் தப்புகெட்ட மனுசன் கையிலே எதுக்குய்யா சொல்லணும்? அது ஒரு செல்லாக்காசு குடுக்காது. காதும் காதும் வெச்சாப்பல ஆபரேசனை முடிச்சுப்போம்.''

''ரொம்பச் செலவாகுமா தனம்?''

''டாக்டர் அம்மா நல்ல அம்மா. முந்தாநாள் என் கைபிலே துட்டுகூடக் கேட்கலே. மத்த டாக்டர்னா ரெண்டாயிரம் ஆவும்பாங்க. அவங்க நல்லவங்க. ஆயிரம் ரூவா போதும்னாங்க. முந்தின நாள் ராத்திரி போவணுமாம். மத்தா நாள் சாயங்காலம் வூட்டுக்கு அனுப்பிச்சுடுவாங்களாம்.''

''ஆயிரமா?''

''அதுக்கு மேலே நூறு இருநூறு ஆவலாம். மருந்துச் செலவு, ஆட்டோ செலவு இதெல்லாம் இருக்குதில்லே? யோவ், நீ இன்னா செய்யறே. ஒரு ஆயிரத்து இருநூறு ரூபா கொண்டா.''

ரங்கன் மௌனமாக நகர்ந்தான்.

''யோவ், பணம் இல்லாட்டி ஆபரேசன் இல்லே! ஆபரேசன் இல்லாட்டி ஒன் பொஞ்சாதி உசிர் இல்லே. இத்த மறந்துடாதே...''

ரங்கன் பதில் கூறாமல் வெளியேறினான்.

ரங்கன், குழைந்து குழைந்து தன்னை நோக்கி வருவதைக் கண்ட ரமணி தனக்குள் சிரித்துக்கொண்டான். தனம் அவனை என்ன பாடுபடுத்தி வருகிறாள் என்பதை ரங்கன் வாய் வார்த்தையாகச் சொல்லாமலே அவன் அறிவான்.

ரங்கனாகப் பேச்சை ஆரம்பிக்கட்டும் என்று ரமணி ஏதோ ஒரு ஃபைலை எடுத்துப் பிரித்தான்.

'ரமணி சார்!' ரங்கனுடைய குரலில் சோகம் இல்லை. கெஞ்சல் ஒலித்தது.

'என்ன ரங்கா என்ன வேணும்?'

'பணம்.'

'தெனைச்சேன்.'

'ஆயிரத்து இருநூறு.'

'போன மாசம் வரை பத்துப்பைசா இருபது பைசான்னு கணக்குப் பார்த்துச் செலவழிச்சவன் இப்ப ஆயிரம் ஆயிரமா எடுத்து வீசறே!'

'ரொம்ப முக்கியமான செலவு ரமணி சார்!'

'உன் பெண்டாட்டிக்குத்தானே?'

ரங்கன் தலையாட்டினான்.

''இதப்பாரு. போனமாசம் கல்யாணம் ஆன உடனே வீட்டு வாடகை, மளிகை சாமான், அப்புறம் தனத்துக்குத் துணி மணின்னு ஆயிரம் எடுத்தே...அப்புறம் தனம் காதுக்கு ஜிமிக்கி வேணும்னா, காலுக்குக் கொலுசு வேணும்னான்னு எழுநூறு எடுத்தே...இப்ப ஆயிரத்து இருநூறு! எதுக்கு? உன் கணக்கிலே மூவாயிரத்துச் சொச்சம்தான் இருக்கு.''

'அவளுக்கு ஆபரேஷன் செய்யணும்.'

'ஆபரேஷனா? தனத்துக்கா?'

'ஆமாம்.'

'எங்கே மூளையிலா?'

ரமணியின் நையாண்டியைப் பொருட்படுத்தாமல், 'வயித்திலே ஏதோ கட்டி வளர்ந்திருக்காம். அதை எடுத்துடணுமாம்.' என்றான் ரங்கன்.

'அவ சொன்னாளா?'

'டாக்டர் அம்மா சொன்னாங்களாம்...'

MithraVintha

'ஆபரேசன் செய்யாமப்போனா என்ன ஆகுமாம் ரங்கா? அதையும் தனம் சொல்லியிருப்பாளே?'

'சொன்னா. கட்டி வளர்ந்துட்டே போகுமாம். பெரிசாகும். அப்புறம் வயிறு வெடிச்சுச் செத்துப்போயிடுவாளாம்!'

ரமணி வாய்விட்டுச் சிரித்தான்.

'நீ வடிகட்டின முட்டாள் ரங்கா! உன்னை அவ நன்னா ஏமாத்திட்டு வர்றா.'

'இல்லீங்க ரமணி சார்... கொஞ்சநாளாவே அவ அடிக்கடி வாந்தி எடுக்கறா...சரியாச் சாப்பிடறதில்லே... சுருண்டு சுருண்டு படுக்கறா. எனக்குப் பயமா இருக்கு.'

'என்ன பயம்? பெண்டாட்டி அம்பேல் ஆயிடுவாளோன்னா?'

'உங்களுக்கு எல்லாம் விளையாட்டா இருக்கு ரமணி சார்!'

'ஏண்டா ரங்கா! தெரியாமத்தான் கேக்கறேன். இந்த பஜாரி தனம் செத்துப்போனா உனக்கு என்ன நஷ்டம்? வேறே ஒருத்தி வருவா...'

'இப்படி எல்லாம் பேசாதிங்க, ரமணி சார்! பாஸ் புக்கைக் குடுங்க பணம் எடுத்து வர்றேன்.'

'தர்றேன்.'

'தனத்தைக் கட்டிக்கிட்டேன். இனிமே அவளுக்குச் செய்யவேண்டிய கடமை எனக்கு இருக்கு இல்லியா?'

'ஓ இருக்கு! நிறைய இருக்கு. உன் கடமையை நல்லாச் செய்... பாங்க்லே இருக்கிற பணமெல்லாம் கரைஞ்சப்புறம் எப்படி தனத்தோட முதலை வாய் தொறக்

கறப்பவெல்லாம் நீ வாரி வாரிப் போட்டு உன் கடமையைத் தீர்க்கப்போறேன்னு நான் பார்க்கிறேன்... எனக்கென்ன உன் பணம், உன் பெண்டாட்டி...'

ரமணி மேஜை டிராயரைத் திறந்து பாஸ் புத்தகத்தை எடுத்து வீசி எறிந்தான். அது மேஜையின் விளிம்பில் பட்டுக் கீழே விழுந்தது.

ரங்கன் குனிந்து எடுத்தபின், ரமணியைப் பார்த்தான்.

'உங்க கோபத்திலே நியாயம் இல்லே ரமணி சார்! நிஜமாலுமே தனத்துக்கு உடம்பு சரியில்லே...முந்தாநாள் அவ டாக்டர்கிட்டே போனா...'

'யாரு அந்த டாக்டர்?'

'பேரு...பேரு...ஹங்...அம்புஜம்.'

'எங்கே இருக்காங்க?

'பிராட்வேயில கடைசியிலே சோத்துக்கைப் பக்கமா.'

'சரி போ...ஆமாம் என்னிக்கு ஆபரேஷன்?'

'இனிமேத்தான் தெரியும்.'

'வேறே என்ன உதவி வேணும்னாலும் கேளு. செய்யறேன். உன் கணக்கிலே பணம் தீர்ந்துபோனாலும் கவலைப் படாதே. நான் இருக்கேன்.'

'நீங்க மகமாயிமாதிரி. கோவிச்சுப்பீங்க. மகமாயி மாதிரி கருணையும் காட்டுவீங்க ரமணி சார்...'

ரமணி அன்று மாலையே பிராட்வேயில் கோடிவரை நடந்தான். வலதுபுறத்தில் ஒரு மூன்று மாடி வீட்டில், முதல் மாடியில் அம்புஜம் தன் சிகிச்சை நிலையத்தை அமைத்துக்கொண்டிருந்தாள்.

ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்துவிட்டதாக ஜனவரி இருபத்தேழாம் தேதி ரங்கன் மகிழ்ச்சியுடன் தெரிவித்தபோது, ரமணி எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தான்.

MithraVintha

அன்று மாலை இரவு எட்டுமணி அளவில் டாக்டர் அம்புஜத்தை அவன் சந்தித்தான். இருவரும் சரளமாகப் பேசிக்கொள்ளும் அளவுக்கு ரமணி தன்னை அறிமுகப் படுத்திக்கொள்ளவே, உண்மை வெளிவந்தது.

தன்னுடைய ஊகம் சரியாகிவிட்டது என்று ரமணி தன் முதுகில் தானே தட்டிக் கொள்ளவில்லை.

இந்த தனத்திடமிருந்து ரங்கனை எப்படிப் பிரிப்பது என்ற யோசனையில் மூழ்கிப்போனான்.

6

தனத்தைப் பார்த்த உடனேயே ரங்கன் இடிந்து போனான். அவனுடைய மனைவி தனமா இவள்? இரண்டே நாளில் அவள் எப்படி இளைத்துப் போய்விட்டாள்? ஏன் முகம் இப்படி வெளுத்துப் போய்விட்டது! வயிற்றுக் கட்டியை வெளியே எடுக்கும்போது உடம்பின் ரத்தமெல் லாமே வெளியேறிவிட்டதா?

சைக்கிள் ரிக்ஷா நின்றது. தனம் மெதுவாக இறங்கி னாள். அவள் மிகவும் சோர்ந்து போயிருக்கிறாள் என்பதை எளிதில் உணர்ந்த ரங்கன், அவளுக்கு உதவி செய்ய நெருங் கினான். அவள் ரங்கன் நீட்டிய கையை உதாசீனம் செய்து விட்டு 'அந்த ஆள் கையிலே அஞ்சு ரூபா குடுய்யா' என்று கூறி வீட்டினுள் சென்றாள்.

ரங்கன் வீட்டினுள் பிரவேசித்த போது தனம் படுத்திருந் தாள்.

'தனம்...'

....

'தனம்! என்ன செய்யறது இப்ப?'

'ஒண்ணும் செய்யலே... நீ தொண தொணக்காம இரு.'

'டீ வாங்கியாரட்டுமா?'

'ரெண்டு நாளுக்கு டீ காப்பி எதுவும் குடிக்கக்கூடா துன்னு டாக்டர் சொல்லிச்சு.'

'அப்ப?'

'ஆர்லிக்ஸ் குடிக்கச் சொல்லிச்சு.'

'வாங்கியாரேன்.'

'சொல்லிட்டு நிக்காதே!'

இரண்டு நாட்கள் ரங்கன் ஆபீசுக்குச் செல்லவில்லை. மூன்றாம் நாள் 'நான் இன்னிக்கு ஆபீஸ் போலாம்னு இருக்கேன் தனம்...' என்றான்.

'யார் வேணாம்னு சொன்னாங்க?'

'ரெண்டு நாள்ளே ஒன் ஒடம்பு நல்லாத் தேறிட்டது.'

'அதுக்கு இன்னா செய்யணும்ங்கறே?'

'ரொம்ப வலிச்சுதா?'

'யோவ்! இன்னா கேள்விய்யா கேக்கிறே...செத்துப் பொழைச்சு வந்திருக்கேன்யா...'

'எங்கே கத்தி வைச்சாங்க அந்த டாக்டரம்மா? இங்கேயா?' ரங்கன் அவளுடைய வயிற்றைத் தொடப் போனான்.

'கையை எடுய்யா...'

'என்ன தனம் இது! நான் ஒன் புருசன் இல்லே...'

'யார் இல்லேன்னா? அதான் கழுத்திலே தாலி கட்டி யிருக்கியே...இதுக்குள்ளே இன்னா அவசரம் ஒனக்கு... நீ ஆபீசுக்குப் போ...'

MithraVintha

அருகே உட்கார்ந்திருந்தவன் எழுந்தான்.

'யோவ்!'

'என்ன தனம்?'

'இன்னும் ரெண்டு மாசத்துக்கு நீ எங்கிட்ட நெருங்கக் கூடாதுன்னு டாக்டர் அம்மா சொல்லிச்சு. அதனாலே...'

'அதனாலே?'

'நீ வேணும்னா ஆபீஸ்லேயே தங்கிக்க.'

'ஒன்னை யாரு கவனிச்சுப்பா தனம்?'

'ஏன்யா கலியாணத்துக்கு முன்னாடி நீயா கவனிச்சுட்டிருந்தே?'

'அப்ப ஒன் அப்பா இருந்தாரு.'

'இன்னாய்யா பினாத்தறே? அது எங்கேய்யா இங்கே இருந்திச்சு? மில்லி அடிச்சுட்டு ஆபீஸ்லே அல்ல தூங்கிச்சு?'

என்ன பதில் சொல்லுவது என்று ரங்கனுக்குப் புரியவில்லை. அவன் மௌனமாய் நகர்ந்தான்.

'யோவ்!'

திரும்பிப் பார்த்தான்.

'என் அப்பன் கையிலே இதைப்பத்திச் சொல்லாதே...'

'சொல்லக்கூடாதா?'

'சொல்ல வேணாம்... அது ஒருமாதிரி... மறுபடியும் வூட்டுக்கே வந்துடும்.'

'சரி. சொல்லலே.'

'சாயங்காலம் வருவே இல்லே?'

'நீதான் வரவேணாம்னியே...'

'யார்யா அப்படிச் சொன்னாங்க? ரெண்டு மாசம் நீ பொறுத்துக்கணும் அவ்வளவுதான்.'

'சரி.'

'ஆபீஸ்லேர்ந்து வரும்போது ஒரு ஐநூறு ருபா பணம் எடுத்தா!'

'பணமா...இப்ப பாங்க்ல பணம் நூறோ இருநூறோ தான் இருக்கும்.'

'அப்ப கடன் வாங்கு.'

'யார்ட்டே வாங்கறது தனம்?'

'அதான் ஒரு அய்யரு நம்ப கலியாணத்துக்கு வந்து என்னைப் பார்த்து பல்லைக் கடிச்சதே... அது கையிலே கேளு.'

'அவர் பேரு ரமணி தனம்!'

'என்ன எளவானா எனக்கு இன்னா?'

'அவர் ரொம்ப நல்லவரு தனம். அவருதான் என்னை ஒரு ஆளா மாத்தினவரு... அவரு இல்லாட்டி நான் என்னிக்கோ...'

'சரித்தான் நிறுத்துய்யா! பொலம்பாதே... எனக்குப் பணம் வோணும்... ஹங் ஹாங் சொல்லிட்டேன். ஆமாம்.'

ரங்கன் பதில் சொல்லாமல் வெளியேறினான்.

தனத்தை, அவன் தன் மனைவியாக நினைத்துப் பார்க்க அவனால் முடியவில்லை. ரமணி கூறிய அறிவுரைகள் இப்போது காலதாமதமாக மண்டையில் அடித்தன.

அவன் ஆபீசை அடைந்தான். நரகத்திலிருந்து சொர்க்கத்துக்கு வந்துவிட்டதான பிரமை ஏனோ அவனுள் பிறந்தது.

தன்னை நோக்கிப் புன்முறுவலுடன் வரும் மாலுவைக் கண்டபோது ரமணிக்கு, அவள் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. இரண்டாவது நல்ல செய்தியை

MithraVintha

அவள் கூறிய நாளிலிருந்து அசையாத நம்பிக்கை கொண் டிருக்கிறான். விரைவில் அவளை மணம் செய்துகொண்டு வாழ்க்கையை ஆரம்பிக்கத் துடிக்கிறான். ஆனால் அவன் தயாரில்லையோ? அவனுடைய தாத்தா இன்னும் மண்டை யைப் போடவில்லையோ? அவர் தாமதம் செய்யச் செய்ய நிலத்தின் விலை ஏறிக்கொண்டே போகும். மூன்று பிள்ளை களுக்கும் மூன்று பெண்களுக்கும் அவருடைய சொத்து பிரிக்கப்படும். வீட்டுக்கும் நிலத்துக்கும் ஒரு விலையை ரமணி நிர்ணயித்து, பணமாக அள்ளிவிட்டால், அதன் பிறகு ஒரு பிரச்னையும் இராது. ஆனால் பணத்துக்கு அவன் எங்கே போவான்? நிறுவன அதிபர் ரமேஷ் சாண்டில்யா விடம் லட்சம் லட்சமாகக் கொட்டிக் கிடக்கிறது. ஒரு வியாபார பிரேரணையாக அவன் ரமேஷிடம் பேசினால் பணம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. யோசிக்க வேண்டிய விஷயம். ஆனால் இப்போதே சிந்தித்துச் சிந்தித்து மண்டை யைப் புண்ணாக்கிக் கொள்ளுவதில் என்ன புண்ணியம்? தாத்தாவுக்கு அவன் நெய்ப்பந்தம் பிடித்த பிறகுதானே அவன் எதையும் சாதித்துக்கொள்ள முடியும்? எப்போது நெய் வாங்குவான் எப்போது பந்தம் பிடிப்பான்?

'என்ன ஐயா ரொம்ப ஆழமா எதையோ நினைச்சுட் டிருக்கார் போலிருக்கு!'

'வா மாலு. உட்கார்.'

'என்ன ரமணி! எதுபத்தி யோசனை செஞ்சுட் டிருந்தீங்க?'

'நம்ப கலியாணம் பத்தி...'

'நிஜமாவா ரமணி?'

'இதிலேகூடவா நான் பொய் சொல்லணும் மாலு?'

'அப்ப என் அக்கா கலியாணத்தன்னிக்கே...'

'நோ நோ... அது முடியாது மாலு. ரெண்டு பெண் களோட கலியாணமும் ஒரே நாளில் நடக்கணும்னு உன் அம்மா ஆசைப்படறதுக்காக என்னால் அவசரப்பட முடி யாது. கொஞ்சம் வெயிட் பண்ணு...'

'கொஞ்சம்னா?'

'நேத்து ராத்திரிகூட தாத்தா ரொம்ப இருமினார்...'

'புரியறது ரமணி.'

'காப்பி சாப்பிடறியா... அதோ ரங்கன் வர்றான். வாங்கிட்டு வரச்சொல்லப் போறேன்.'

'ஆமாம் ஏன் ரெண்டு நாளா ரங்கன் வரலை? கலியாணமானதும் ஹனிமூன் போகலே... இப்பப் போயிட்டு வந்தானா?'

ரங்கன் எதிரே வந்து நின்றான்.

மாலு அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

'ஏம்மா சிரிக்கிறீங்க?' என்று ரங்கன் கேட்டான்.

'ஏன் சிரிக்கப்படாதா ரங்கா? அது சரி உன் மனைவி எப்படி இருக்கா? உன் வாய்க்குப் பிடிச்சதை ஆக்கிப் போடறாளா?'

'ரமணி சார், காப்பி வாங்கியாரட்டுமா?'

'ரெண்டு கப்... ஸ்ட்ராங்.'

அவன் வெளியேறியதும், 'மாலு இனிமே ரங்கன் கிட்ட அவன் பெண்டாட்டியைப்பத்தி எதுவுமே கேட் காதே!' என்றான் ரமணி.

'ஏனாம்?'

'அவன் சோகமா இருக்கான்.'

'ஏனாம்?'

'மனைவி அமைவதெல்லாம்...'

MithraVintha

'தெரியும். கடவுள் கொடுத்த வரம். ரங்கன் ஏன் சந்தோஷமா இல்லை?'

'சமயம் வர்றப்ப சொல்றேன்.'

காப்பி வந்தது.

ரமணியும் மாதுவும் குடித்தபின், 'மாது ரெண்டு முக்கியமான லெட்டர் வந்திருக்கு. அது சம்பந்தமான ஃபைல்களை எடுத்து வை. நான் ஒரு பத்து நிமிஷத்திலே வந்துடறேன்' என்று சொல்லி ரமணி எழுந்தான்.

'எங்கே போறீங்க?'

அவன் பதில் கூறாமல் ஹாலைவிட்டு வெளியேறினான். ரங்கன் உட்கார்ந்திருக்கும் இடத்தைக் கடக்கையில் 'ரங்கா வெளியே வா!' என்றான்.

இருவரும் ஆபீஸ் கட்டடத்துக்கு அடுத்தாற்போலுள்ள வெட்ட வெளியில் சந்தித்துக் கொண்டார்கள்.

'தனம் எப்படி இருக்கா?'

'ஆபரேஷன் முடிஞ்சு வீட்டுக்கு வந்தாச்சு.'

'தெரியும். இப்ப எப்படி இருக்கா?'

'தெம்பா இருக்கா. ஐநூறு ருபா பணம் வேணும்னா.'

'எதுக்கு?'

'சொல்லலே.'

'கொடுக்கப்போறியா?'

'என் கணக்கிலே எவ்வளவு மிச்சம் இருக்குன்னுகூட எனக்குத் தெரியாது ரமணி சார்.'

'அந்தக் கவலை உனக்கு எதுக்கு ரங்கா? கொடுக்கப் போறியா?'

'வீண் செலவு செய்யறா ரமணி சார். அடாவடித் தனமாப் பேசறா... என்னை மதிக்கமாட்டேங்கறா...'

'ஏன் தெரியுமா ரங்கா?'

'தெரியாது சார்... ஒருவேளை நான் குள்ளமா வழுக்கைத் தலையோட இருக்கிறது அவளுக்குப் பிடிக்கலையோ என்னமோ! ஆனா அப்படியும் படலே. பிடிக்காம இருந்தா என்னை ஏன் அவ கலியாணம் பண்ணிட்டிருக்கணும்?'

'நான் சொன்னப்ப உன் மண்டையிலே ஏறலே... பிடிவாதமா அவ கழுத்திலே தாலியைக் கட்டினே. அவ உன் பணத்துக்காகத்தான்டா கட்டிக்கிட்டா.'

'இப்ப பணமும் இல்லே.'

'யார் சொன்னா? உன் ஃபிக்சட் டெபாசிட்லே ஆறாயிரம் இருக்கு!'

'அதிலேர்ந்து கொஞ்சம் எடுக்க முடியுமா ரமணி சார்?'

'ஓ முடியும். கடனா வாங்கிக்கலாம்... என்ன சொல்றே? பணம் வாங்கித் தரட்டுமா! அவகிட்ட கொண்டு போய்க் கொடுக்கறியா?'

ரங்கன் யோசித்தான். உண்மையாகவே வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டிச் சேர்த்து வைத்த பணம். இது இருப்பது இதுவரையில் தனத்துக்குத் தெரியாது.

'ரங்கா.'

'என்ன ரமணி சார்?'

'உன் பெண்டாட்டி பணம் கேட்கறதை நிறுத்த மாட்டா. ஆனா உன்னாலே நிறுத்தாம கொடுத்துட்டே இருக்க முடியுமா? நல்லா யோசிச்சுப் பாரு!'

'ஒரே குழப்பமா இருக்கு ரமணி சார்!'

'அப்ப நான் சொல்றதைக் கேளு.'

'சொல்லுங்க.'

MithraVintha

'பணம் கொடுக்கிறதை நிறுத்து. வீட்டு வாடகை, மளிகை சாமான் இதுகளுக்கெல்லாம் நீயே மாசா மாசம் கொடு. அவ கைச்செலவுக்கு பத்தோ இருபதோ கொடு. நீ கண்டிப்பா இருந்தா நாளடைவிலே உன்னை அவ புரிஞ்சுப்பா!'

'அப்புறம்?'

'உன்னைவிட்டே போயிடுவா!'

'சார்... ரமணி சார் என்ன சொல்றீங்க?'

'யார்ட்டே பணம் கறக்கலாம்னு அவ பறப்பான்னு சொல்ல வரேன்.'

'சார்... ரமணி சார்... என் பெண்டாட்டி தனத்தைப் பத்தி இப்படிக் கேவலமாப் பேசறீங்களே இது உங்களுக்கே அடுக்குமா?'

'அடுக்கும் ரங்கா, நல்லாவே அடுக்கும். சரி இப்ப நீ ஆபீசுக்குப் போ! நான் ஒரு வேலையா ஒருத்தரைப் பார்க்கணும். நீ போ!'

சொல்லிவிட்டு ரமணி நகர்ந்தான். ரங்கனுக்கு வாய் விட்டு அழவேண்டும் போல இருந்தது. கால்கள் பின்ன அவன் ஆபீசை நோக்கி மெதுவாக நடந்தான்.

அவனைக் கண்டதும் சுகந்தியின் வாய் சும்மா இருக்கவில்லை.

'என்ன ரங்கா! அழுதியா?' என்று கேட்டாள்.

அவன் பதில் கூறவில்லை.

'எங்கிட்ட கூடச் சொல்லக்கூடாதா ரங்கா?'

'நான் மனசு நொந்துபோயிருக்கேன் சுகந்தி அம்மா.'

'அதான் உன் மொகமே சொல்றதே? என்ன பிரச்னை? ால்லு. என்னால் முடிஞ்சா தீர்த்து வைக்கிறேன்.'

'தீரப்போற பிரச்னை இல்லே சுகந்தி அம்மா.'

'அப்படின்னா?'

'ரமணி சாருக்கு எம்பேர்ல கோவம். நான் செய்யறதெல்லாம் தப்புன்னு மண்டையிலே அடிக்கிறாரு.'

'ஏன் என்ன சொன்னார்? அவர்தானே உனக்கு எல்லாம்? உனக்குக் கஷ்டம்னா அவர் பொலபொலன்னு கண்ணீர் கொட்டுவாரே!'

'அது உண்மைதான். ஆனா என் பெண்டாட்டியைப் பத்திப் பேசினாலே அவருக்குப் பத்திக்கிட்டு வர்றது.'

'ஏன் என்னாச்சு?'

'என் பணமெல்லாம் கரைஞ்சுபோச்சு சுகந்தி அம்மா! இப்ப ஐநூறு ருபா கொண்டான்னு அவ சொல்றா.'

'எதுக்கு ஐநூறு ருபா?'

'தெரியலே... நாலு நாள் முன்னாடிதான் ஆபரேஷனுக்குன்னு ஆயிரத்து இருநூறு ருபா கொடுத்தேன்.'

'ஆபரேஷன். என்ன ஆபரேஷன்?'

'வவுத்திலே கட்டியாம்.'

'வயித்திலே கட்டியா?'

'ஆமாம்மா.'

'இந்த வயசிலயா?'

'ஆமாம். கலியாணமாகி முழுசா முப்பது நாள் ஆவுலே. அதுக்குள்ளே ஆபரேஷன்.'

'வயித்துவலின்னு துடிச்சிருப்பாளே?'

'வலியிலே துடிச்சாளோ என்னமோ தெரியலே... ஆனா அடிக்கடி வாந்தி எடுத்தா...சோத்து ருசிகூட இல்லாமல் போச்சு.'

'ஓ! அதான் ஆபரேஷனா?'

MithraVintha

'ஆமாம்மா.'

'இனிமே நீ கவலையே பட வேண்டாம் ரங்கன்... அவளுக்கு வாந்தி நின்னுபோயிருக்கும். நீயே பாரேன் கொஞ்சநாள்லே சோத்தையும் குழம்பையும் ஒரு பிடி பிடிப்பா!'

'அவ வயத்திலே கட்டி வந்தா, அது அவ தப்பா சுசந்தி அம்மா?'

'யார் சொன்னா?'

'ரமணி சார் சொல்லலே... ஆனா அவர் பேச்சிலே அப்படிப் படுது.'

'நீ கவலைப்படாதே ரங்கா! நீ இப்ப சொன்ன வலித்துக்கட்டி என்னன்னு எனக்குப் புரிஞ்சுபோச்சு. இது பொம்பளைங்க சமாச்சாரம்...நீ கவலையை விடு.'

அவனுடைய புண்பட்ட நெஞ்சுக்குத் தேன் தடவுவது போல இருந்தன சுசந்தியின் வார்த்தைகள். மனசும் ஒருவாறு தேறிற்று.

ஆனால் அன்று வீட்டை நோக்கிச் செல்லும்போது திடீரென்று பயம் கவ்விக் கொண்டது. ஐநூறு ரூபாய் பணத்துடன் அவன் செல்லவில்லையே?

தனம் சும்மா இருப்பாளா?

சீறி விழுவாளோ?

குதறி எடுப்பாளோ?

அவனுடைய அதிர்ஷ்டம் அவன் வீட்டை அடைந்த போது தனம் அங்கே இல்லை. தற்காலிகமாக அவன் மனம் சமாதானம் அடைந்தது.

7

தனம் ஓரிரு வினாடிகள் ஆடிப்போனாள். ரமணி அவளுடைய வீட்டு வாயிலில் வந்து நிற்பான் என்று கனவில் கூட நினைத்துப் பார்த்ததில்லை. ரங்கன் ஆபீசில் இருக்கும் போது இவன் என்ன காரணமாய் இங்கே வர வேண்டும்?

அவளுடைய நெஞ்சு குற்ற உணர்வில் படபடப்பது போல படபடத்தாலும், இயல்பான முரட்டுத்தனத்தில் 'வாங்கய்யா, உள்ளே வாங்க!' என்றாள்.

ரமணியின் புன்முறுவல் லேசான சிரிப்பாக மாறி ஒலித்தது.

'பிராட்வேயில் ஒரு கம்பெனிக்குப் போகவேண்டியிருந்தது. நான் பார்க்கவேண்டிய ஆள் வர இன்னும் அரை மணிநேரத்துக்கு மேலே ஆகும்னாங்க. திடீர்னு உன் ஞாபகம் வந்தது. அதான் வந்தேன்.'

தனம் ஒரு பாயைப் போட்டாள்.

'நீங்க ஒக்கார நாற்காலி... ஏன் ஒரு முக்காலிகூட இல்லீங்க.'

'பரவாயில்லே... ஹங், உன் ஆபரேஷன் நல்லபடியா முடிஞ்சுதுன்னு ரங்கன் சொன்னான். ஆண்டவனுக்கு நன்றி சொன்னேன். நான் வேறு என்ன செய்யமுடியும்?'

'நீங்க இன்னும் உட்காரலீங்க.'

'விடமாட்டே போலிருக்கு!' ரமணி உட்கார்ந்தான்.

'ஒரு நிமிஷம் இருந்தீங்கன்னா, ஓடிப்போய் சோடா கலர் ஏதானும் வாங்கிட்டு வந்திருவேன்' என்றாள் தனம். இவனைப் பகைத்துக்கொள்ளக்கூடாது என்பதை அவள் அறிவாள்.

MithraVintha

'ஓடறதா? நீயா? ஒரு மாசத்துக்கு நீ வேலையே செய்யக்கூடாதே? இதை உன் டாக்டர் சொல்லலியா?'

'மொதல் மொதலா நம்ப வூட்டுக்கு வந்திருக்கீங்க... எதுவுமே சாப்பிடாமப் போனா எப்படி?'

'யார் சொன்னா, நான் முதல் தடவையா வர்றேன்னு? மயில்சாமியைப் பார்க்க ரெண்டு மூணு தடவை வந்திருக்கேனே? ஆனா அப்பவெல்லாம் நீ வீட்லே இருக்கலே.'

'அப்பா சொன்னதே இல்லே.'

'சரி. அதை விடு தனம். ரங்கன் எப்படி இருக்கான்? உன்னைத்தான் கட்டிப்பேன்னு ஒத்தக்கால்லே நின்னான். உன் உடம்பிலே நன்னா சதை பிடிக்கட்டும். அப்புறம் பார்க்கலாம்னு புத்தி சொன்னேன். அவன் கேட்கலே. நீ ஆக்கிப்போடற சோத்திலே வஸ்தாது மாதிரி ஆயிடுவேன்னு மார் தட்டினான். ஆனா பாவம் நீ! ஒரு மாசத்துக்கு அவன் தான் உனக்குச் சோறாக்கிப் போடணும்.'

'அவரு ரொம்ப நல்லவரு, ஐயா!'

'எங்கிட்டேயே சொல்றியா?'

ரமணி சிரித்தான்.

'நான்னா உசிர்' என்றாள் தனம்.

'தெரியும். இத்தனைநாளா அவன் உசிர் பணத்து மேலே இருந்தது. இப்ப அது உன்கிட்ட வந்துடுத்து.'

'அவர் பணத்தை நீங்கதான் பத்திரப்படுத்தி வைச்சிருக்கீங்களாம். அப்பா கலியாணத்துக்கு முன்னாடியே சொல்லிச்சு.'

'ஆமாம். மொதல் மொதலா சம்பளம் வாங்கினதும் அதை என் கையிலேதான் கொடுத்தான். அவன்பேர்ல பாங்க்ல கட்டச் சொன்னான். இந்த நாலு வருஷத்திலே ஒரு தடவைகூட எடுத்ததில்லே. கலியாணம் நிச்சயமானப் புறம்தான்...'

அவன் முடிக்கவில்லை.

'இப்ப எவ்வளவு இருக்கு, ஐயா?'

'மொதல்ல ஒரு ஆயிரம். அப்புறம் ஒரு ஆயிரம். போனவாரம் ஆயிரத்து இருநூறு. பாக்கி ஐந்நூறோ அறுநூறோ இருக்கும். ஏன் கேட்கறே?'

'இல்லே கேட்டேன்.'

'இன்னிக்குக்கூட ஒரு ஐந்நூறு வேணும்னு வந்தான். நான் எதுக்குன்னு கேட்டேன். நீ கொண்டுவரச் சொன்னேன்னான்.'

'குடுத்தீங்களா?'

'இல்லே.'

தனத்தின் முகம் சுருங்கியது. ஆனால் கோபமும் கண்ணில் பிரதிபலித்தது.

'ஏன் குடுக்கலே?'

'என்ன சிலவு ஐந்நூறுக்குன்னு தெரிஞ்சுக்கத்தான். அவன் சொல்லலே.'

'அவரு பணம்... அவரு கேட்டாக் கொடுக்கவேண்டியது தானே?'

'இன்னிக்கு ஐந்நூறு கேட்டவன் நாலு நாளுக்கு அப்புறம் இன்னும் ஆயிரம் ரெண்டாயிரம்னு வந்து நின்னா?'

'பாக்கி ஐந்நூறோ அறுநூறோன்னு சொன்னீங்களே... எப்படி ஆயிரம் ரெண்டாயிரம்னு கேட்க முடியும்?'

'முடியுமே? இந்தப் பணம் அவனுடைய சேவிங்ஸ் அகௌண்ட்ல இருக்கிற பணம். இது தவிர ஆறாயிரம் ரூபா மூணு வருஷத்துக்கு எடுக்க முடியாதபடி பிக்சட் டெபாசிட்ல போட்டு வைச்சிருக்கான்.'

MithraVintha

'பாவி சொல்லவே இல்லியே?'

'அவன் சொல்லாமப்போனா என்னம்மா? நான்தான் சொல்லிட்டேனே!'

'இத்தனை நாளா அவருக்கு நீங்க ஆதரவா இருந்நீங்க. இப்ப நான் அவரோட ஒய்ப்பு. இனிமே நான் அவர் விவகாரங்களைக் கவனிச்சுக்கறேன். அதனாலே...'

'அதனாலே?'

'ஆறாயிரம் ரூபா கணக்குப் புத்தகத்தையும் என் கையிலே குடுத்துடுங்க.'

'அது புஸ்தகம் இல்லே. பாங்க் ரசீது!'

'அது என்னவா இருந்தா என்ன, என் கையிலே குடுத்துடுங்க.'

'அதான் முறை. ஆனா அவன்பேர்ல எனக்கு ரொம்ப அக்கறை இருக்கு.'

'என்ன சொல்றீங்க?'

'இந்தக் கம்பெனியிலே வேலை கொடுத்தவனே நான் தான் தனம்.'

'அதுக்காக?'

'ரசீது என் கையிலேயே இருக்கட்டும்.'

'குடுக்க மாட்டீங்களா?'

'நீ ஊதாரித்தனமா செலவு செய்யாத பெண்ணா இருந்தா, கலியாணம் முடிஞ்ச கையோட நானே வந்து கொடுத்திருப்பேன்.'

'யோவ்! மரியாதை கெட்டுப்பூடும். நீ யார்யா நான் ஊதாரின்னு சொல்றதுக்கு.'

ரமணி சிரித்தான்.

'உனக்கு ஆபரேஷன் பண்ணினாங்களே டாக்டர் அம்புஜம், அவங்க எனக்கு உறவுக்காரி.'

'யோவ்!'

'இது உனக்கு முதல் ஆபரேஷன் இல்லே...'

'யோவ், யோவ்! உன்னை...'

'நீ முன்னேயும் சரி, இப்பவும் சரி, அவகிட்ட சொன்னதெல்லாம் ரிஜிஸ்டர்ல பதிவாயிருக்கு. உன் கையெழுத்தும் இருக்கு.''

'யோவ்! நீ பயம் காட்றியா?'

ரமணி சிரித்தான்.

'நான் சலசலப்புக்குப் பயப்படாதவன் தனம். இனிமே நீ என் சிநேகிதன் ரங்கனை அழ வைச்சே, நானும் ரெண்டிக்கு ரெண்டியாயிடுவேன். இதை நினைவிலே வைச்சுக்க.'

'இன்னாய்யா செஞ்சுப்பூடுவே?'

வீராப்பாய்க் கேட்டாளே தவிர, தனத்தின் குரலில் நடுக்கம் தொனித்தது.

'நீ அவன்கூட ஒழுங்காக் குடித்தனம் செய்ஞ்சா, மாசா மாசம் உன் வீட்ல அடுப்பு எரிய பணம் வரும். ரங்கன் கிட்ட மோதினே, அது எங்கிட்ட மோதினமாதிரி. அடுத்த வாட்டி ஆபரேஷன் பண்ணிக்க உன் கையிலே சல்லிக்காசு இருக்காது...நான் வரேன்.'

'ஐயா!'

'என்ன?'

'அவர் கையிலே என்ன ஆபரேஷன்னு சொல்லிடாதே ஆயா... மனம் வெடிச்சுப்போய் கொளம் குட்டையிலே விழுந்துடும்.'

'நீ ஒழுங்கா இருந்தா சத்தியமாச் சொல்லமாட்டேன். அது சரி, உனக்கு எதுக்கு ஐந்நூறு ரூபா?'

தனம் பதில் கூறவில்லை. திடீரென ஒரு பொய்யும் உதயமாகவில்லை.

MithraVintha

'இந்தா...நூறு ரூபா... டானிக் ஏவிக் வாங்கிச் சாப்பிட்டு, ஒடம்பைத் தேத்திக்க...ரங்கனையும் கவனிச்சுக்க.'

அவன் பதில் பேசாமல் பணத்தை வாங்கிக் கொண்டான்.

இரவு எட்டு மணிக்குக் கதவு தட்டப்படும் ஓசை கேட்க, ரங்கன் பீதியுடன் எழுந்து கதவைத் திறந்தான். தனம் அவனைக் கிழிக்கப்போகிறாள் என்ற எண்ணம் பயமாக மோதி, கையை நடுங்க வைத்தது.

'யோவ்! என்னாய்யா அப்படிப் பார்க்கிறே...அல்லாம் ஓட்டல்லேந்து வாங்கியாந்தேன். என்னாலதான் ஒனக்கு சோறாக்கிப் போட முடியலே... நீ என்னதான் தும்பே? இதைப் பிடி...'

அவள் கொடுத்த பையை ரங்கன் வாங்கிக்கொண்டான். தன் கண்களையும் காதுகளையும்கூட அவனால் நம்ப முடியவில்லை. அவன் மனைவி தனமா இது?

'பிரியாணி, பரோட்டா, குர்மா அல்லாம் வாங்கியாந்திருக்கேன்.'

'உனக்கு?'

'அஞ்சாறு நாளுக்கு நான் ரொட்டியும் ஆர்லிக்ஸ்-ம் தான் சாப்பிடவாம்னு டாக்டர் அம்மா சொல்லியிருக்காங்க. அதான் ரொட்டி மட்டும் வாங்கியாந்தேன். குந்துய்யா, போடறேன்.'

அவன் உட்கார்ந்தான்.

'தனம்.'

'இன்னாய்யா?'

'என்னாலே, நீ கேட்ட ஐந்நூறு ரூபாய் பணம் கொண்டுவர முடியலே.'

'பணம் கெடக்குதய்யா, நீ துன்னு.'

'இதுக்கெல்லாம் ஏது பணம் தனம்?'

'ஏன்யா நீ எவ்வளவு என் கையிலே குடுத்திருக்கே? நான் அல்லாத்தையுமா செலவளிச்சேன். நூறு ரூபா இருந்திச்சு. ஹங், நீ ஆசையா புதன்கிழமை புதன்கிழமை பேப்பர் வாங்குவியே அதுவும் வாங்கியாந்தேன்.'

'பேப்பரை மொதல்ல பாக்கறேன், தனம்.'

'முடியாது. பரோட்டா ஜோடா இருக்கு. நீயும் நானும் சேர்ந்து சாப்பிடலாம்.'

ரங்கனால் அவளுடைய பேச்சைத் தட்ட முடியவில்லை. ஹரியானா, ராஜஸ்தான் லாட்டரி முடிவுகள் இன்றைய தினசரியில் வெளியாகியிருக்கும். அவனுக்கு எங்கே பரிசு விழுந்திருக்கப் போகிறது? சாப்பிட்டபிறகு பார்த்துக் கொண்டால் போகிறது. அதைவிடப் பெரிய அதிர்ஷ்டமாய், தனம் இதுவரையில் காட்டியிராத அன்பைப் பொழிகிறாள்! அவளுக்கு மட்டும் ஆபரேஷன் நடந்திராவிட்டால், இன்று இரவு எவ்வளவு ஆனந்தமாக இருந்திருக்கும்?

ஒரு பரோட்டாவைச் சாப்பிடுவதற்குள் வயிறு கனத்தது.

'தனம்!'

'என்னய்யா?'

'பிரியாணி கெட்டுப்போகாதில்லே? நாளைக்குச் சாப்பிடறேன்.'

'ஏன்யா?'

'இதைத் துன்னு தண்ணி குடிச்சதிலே, வயிறு 'கம்'னு ஆயிடுச்சு.'

'உன் இஷ்டம்' தனம் ரொட்டியை ஹார்லிக்ஸில் முக்கி எடுத்துச் சாப்பிடலானாள்.

MithraVintha

அன்றைய மாலை தினசரியைப் பிரித்துப் பார்ப்பதற்கு முன், ரங்கன் தன்னுடைய பெட்டியைத் திறந்து டயரியை எடுத்தான்.

'இன்னாய்யா பாக்கறே?'

'ஒண்ணுமில்லே தனம். லாட்டரிச்சீட்டு நம்பரையெல்லாம் இதிலேதான் ரமணி குறிச்சுக் குடுப்பார்.'

'நீ லாட்டரிச் சீட்டு வாங்கியிருக்கியா?'

'அஞ்சு வருஷமா வாங்கறேன்.'

'பிரைஸ் அடிச்சிருக்கியா?'

'ஒருவாட்டி கூட ஒரு அம்பது ருபா பரிசுகூட விழுந்ததில்லே.'

'நமக்கெல்லாம் வினாதுய்யா. அதுக்குத் தனி ராசி வேணும்.'

'அஞ்சு வருசம் முன்னாடி கும்பகோணத்திலே ஒரு ஜோசியன் சொன்னான் நான் பணக்காரன் ஆவேன்னு.'

'யோவ்! நீ என்ன ஆளுய்யா. பத்துப் பைசா கொடுத்தா, அந்த ஆளு கிளிக்கு நெல்லையோ பொரியையோ குடுப்பான். அது பத்துப் பன்னண்டு சீட்லே ஒரு சீட்டை இழுக்கும். அதை இவன் ராகத்தோட படிப்பான். ஒரு எளவும் புரியாது.

'எனக்குப் புரிய வைச்சான். கொஞ்சம் இரு தனம்... இல், ராஜஸ்தான் லாட்டரி...நம்பர் AB 2987654 இரு, பேப்பரைப் பாக்கறேன்...ராஜஸ்தான் லாட்டரி...தனம்... தனம்... இதப்பாரு...பாரு, தனம்... இருபத்தஞ்சு லட்சம் ருபா விளுந்திருக்கு...மொதப் பிரைஸ் அடிச்சுட்டேன், தனம்!'

'யோவ் சரியாப் பாருய்யா.'

'நீயே பாரு... இதோ பேப்பர்ல வந்த நம்பர். AB 2987654... இங்க பாரு, டயரியிலே ரமணி சார் குறிச்சுக் குடுத்த நம்பர்!'

'ஆமாம் ரெண்டும் ஒரே நம்பரா இருக்கு. இப்ப டிக்கட்டை எடு. அதையும் பார்த்துடலாம்.'

'டிக்கட் ரமணி சார் கையில இல்ல இருக்கு.'

'அந்த ஆள் கையிலயா?'

'ஆமாம் தனம். நான் வாங்கற எல்லா டிக்கட்டையும் அவர்தான் பத்திரமா வைச்சப்பாரு.'

'அடப்பாவி!'

'ஏன் தனம்?'

'அந்த ஆளு உன்னை ஏமாத்திட்டா?'

'என்ன பேச்சுப் பேசறே தனம்? அவர் எனக்குக் கடவுள் மாதிரி.'

'கடவுள்கூடப் பணம்னா ஏமாத்திடும்யா. அது சரி, இருபத்தஞ்சு லட்சம்னா எவ்வளவு?'

'எனக்கே தெரியலே தனம். ரமணி சார் சொன்னாத் தான் புரியும். நாளைக்கு ஆபீஸ் போனதும் அவரைவிட்டே லாட்டரிச் சீட்டைப் பணமாக்கிடலாம்.'

'யோவ்! இன்னாய்யா நீ, வெவரங்கெட்ட ஆளா இருக்கே...இப்பவே அந்த ஆள் வூட்டுக்கு ஓடுய்யா. டிக்கட்டை வாங்கியாய்யா!'

'வேணாம் தனம். அவர் ஏமாத்தமாட்டாரு. நல்லவரு.'

'யோவ் பேப்பரைப் பாருய்யா. அஞ்சு லட்சம், ஒரு லட்சம், அம்பதாயிரம் பத்தாயிரம் ஆயிரம்னெல்லாம் போட்டிருக்கு. அல்லாத்தையும்விட இருபத்தஞ்சு லட்சம் ஜாஸ்தின்னு உனக்குப் படலே!'

'படுது தனம்.'

MithraVintha

"யோவ்! அந்த ஆள் முழியே எனக்குப் புடிக்கலே, ஓடிப்பா."

"அவரு மயிலாப்பூர்ல அபிராமபுரத்திலே இருக்காரு."

"எந்த டில்லியிலே இருந்தா உனக்கு இன்னாயா? போய் டிக்கட்டை வாங்கியா... முணாவது ஊட்ல மாணிக்கம்னு ஒருத்தரு இருக்காரு. ஸ்கோல் வாத்தியாரு. படிச்சவரு. நல்லவரு. அவர் கையில சொல்லி, நாம பணத்தை வாங்கிக்கலாம்."

"மணி ஒம்பதுக்குமேல ஆயிடுச்சு தனம். நாளைக்கு விடிஞ்சதும் போறேன்."

"தூப்புக்கெட்ட மனுசனாயிருக்கியே... ஒரு ஆட்டோ பிடிச்சு ஓடிப்யா. நானும் கூட வரேன்."

"வேண்டாம் தனம். உன் ஒடம்புக்கு ஆவாது. நானே போறேன்!"

"அந்த ஆளு கையில பிரைஸ் அடிச்ச விசயத்தைச் சொல்லிடாதே. அப்புறம் அது உஜாராயிடும். அவர்ட்ட குடுத்து வைச்சிருக்கிற அல்லா டிக்கட்டும் வோணும்னு சொல்லி வாங்கியா. அப்பத்தான் ஒன்பேர்ல சந்தேகம் வராது."

ரங்கன் தயங்கினான். இந்த உலகமே ரமணியைத் தூண்டினாலும், அவன் ஏமாற்றமாட்டான். இதுவரையில் நல்லதையே நினைத்து, நல்லதையே செய்து வரும் ரமணி துரோகம் செய்யமாட்டான். இது சத்தியம்! ரமணியின் மனத்தின் பரிசுத்தத்தை உணர தனத்துக்கு ஏது வாய்ப்பு? அதுதான் இப்படிப் பேசுகிறாள்.

"யோவ்! நீ போகமாட்டே?"

வேறு வழியில்லாமல் அவன் ரமணியின் வீடு செல்லப் புறப்பட்டான். கடைசி பஸ் அவனுக்குக் கிடைத்தது.

இரவு அவனால் திரும்பி நடக்க முடியவில்லை. கண்கள் இருண்டன. கால்கள் பின்னின.

பணம் என்றால் கடவுள்கூட ஏமாற்றும் என்றாள் தனம்! எப்பேர்ப்பட்ட உண்மையை அவள் கூறிவிட்டாள்?

ரமணி திடீரென்று வெளியூர் சென்றிருப்பதாக அவனுடைய தாயார் மூலமாகத் தெரியவந்தது. தான் கொடுத்து வைத்திருந்த லாட்டரி டிக்கட்டுகளை எடுத்துத் தருமாறு கெஞ்சினான் ரங்கன். ஏற்கெனவே ரங்கனை அறிந்திருந்த அவளும் அலமாரியைத் திறந்து, ஒரு நீண்ட உறையை அவனிடம் கொடுத்தாள்.

பழைய பழைய டிக்கட்டுகளெல்லாம் அழகாகக் கோர்த்து வைக்கப்பட்டிருந்தன. சமீபத்தில் வாங்கிய ஒரியானா டிக்கட்டும் இருந்தது. ஆனால்—

AB 2987654 இல்லை!

8

ரங்கனால் விரைவாக நடக்க முடியவில்லை. மனம் அலறியது. தனக்குப் பைத்தியம் பிடித்துக்கொண்டு வருவதாக அவன் தனக்குத்தானே கூறிக்கொண்டான். எந்த வழியில் சென்றால் வீட்டை அடையலாம் என்ற பிரக்ஞைகூட அற்றுப்போய்விட்டது. ஆழ்வார்ப்பேட்டை சதுக்கத்தை அடைந்தவன் திசை தெரியாமல் விழித்தான். நெஞ்சை ரமணி இன்னும் பிழிந்துகொண்டிருந்தான். நம்பிக்கை துரோகம் பற்றி அவன் கேள்விப்பட்டிருக்கிறான். இப்போது அனுபவரீதியாக உணர்ந்தபோது முதலில் தீராத கோபமும் அதன் பின்னர் அடங்காத துயரமும் உண்டாயின. மோபரீஸ் சாலை வழியாக நடக்காமல்,

MithraVintha

கால்கள் எல்டாம்ஸ் சாலையில் மனத்தின் கொந்தளிப்பில், நீண்டதூரம் நடந்த பிறகுதான் புத்தி பிரவேசித்தன. இனித் திரும்பிச் செல்வது, நடக்க வேண்டிய வந்தது. தூரத்தை அதிகரிக்கும் என்ற எண்ணம் பிறக்கவில்லை. திரும்பினான். எல்டாம்ஸ் சாலையின் எல்லை வந்து விட்டால், வலதுபுறமாக அண்ணாசாலையை அடைந்து நடக்கலாம் என்று தோன்றவில்லை.

மீண்டும் ஆழ்வார்ப்பேட்டை.

இப்போது திடீரென்று ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. ரமணியின் தாயார் எந்த ஊர் என்று சொல்லவில்லை. 'வெளியூர்' என்றுதான் கூறினாள். பஸ்ஸா, ரெயிலா, விமானமா என்றும் குறிப்பிடவில்லை.

என்ன முட்டாள் அவன்?

ரமணியின் வீட்டை நோக்கி நடந்தான். இப்போது கோபம் இல்லை. துயரமும் சற்றே விலகியிருந்தது. ரமணி நிச்சயமாக பரிசுச் சீட்டுடன் ஓடியிருக்க மாட்டான் என்ற நம்பிக்கை அரும்பாக முளைத்தது. அவனை ஆளாக்கியவன் ரமணி. அவனுக்கு வழிகாட்டியாக இருந்தவன் ரமணி. அவனுடைய மனம் துயரப்பட்டபோதும், பலவீனம் அடைந்தபோதும் ஆறுதல் அளித்து, தைரியம் கொடுத்தவன் ரமணி. அவனுடைய பணத்தைப் பத்திரப்படுத்தி வைத்திருப்பதுபோல, பரிசுச் சீட்டையும் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறான். பரிசு பெற்றுள்ள செய்தியே ரமணிக்குத் தெரிந்திருக்காது. ரமணி எங்கே, மாலையில் வெளியாகும் தமிழ் தினசரிகளைப் படிக்கிறான்? நிச்சயமாக, வேறு ஏதோ அவசர வேலையாகத்தான் வெளியூர் சென்றிருக்க வேண்டும். ஆனால் வீட்டில் அவன் ஒப்படைத்த பரிசுச் சீட்டுகள் இல்லையே? ரமணியின் தாயார் தேடினாளே. ஒருவேளை வீட்டிலுள்ளவர்களுக்கும் தெரியாமல் எங்காவது ஒளித்து வைத்திருப்பானோ? ஊஹூம். இருக்க முடியாது. ரங்கன் மாதா மாதம் பணத்தைப் பரிசுச் சீட்டுகளில் விரயமாக்குவ

தைக் கண்டிக்கிறவன் ரமணி. புதையலைப் பத்திரப் படுத்துவதுபோல அவன் கொடுத்து வைத்த சீட்டுகளை ஒளித்து வைக்க வேண்டிய எண்ணமே ரமணிக்கு வந்திருக்காது.

பரிசுச் சீட்டு எங்கே?

ஒருவேளை ஆபீஸிலேயே மேஜை டிராயரில் வைத்திருப்பானோ? பாங்க் புத்தகத்தை அங்கேதானே வைக்கிறான்?

அபிராமபுரம் வரை சென்றவன், ரமணியின் வீட்டை மறந்தான். இப்போது மண்டையில் ஒரு தெளிவு பிறந்தது. பரிசுச்சீட்டு ஆபீஸில்தான் இருக்கிறது என்று மனம் உறுதி அளித்தது.

நடக்கலானான்.

என்ன மணி என்று தெரியவில்லை. மோபரீஸ் சாலை கேட்பாரற்று நீண்டது. ராயப்பேட்டை அடைந்ததும், ஒளிப்பிழம்புடன் காட்சி அளித்த ஒரு ஓட்டலைக் கண்டான். வாயிலில் நின்று உள்ளே எட்டிப் பார்த்தான். தேடிய சுவர்க் கடிகாரம் கண்ணில் பட்டது. பன்னிரண்டரை.

மணியைத் தெரிந்துகொண்டு என்ன லாபம்? இந்த ஞானம் தாமதமாக, அதைத் தெரிந்துகொண்ட பிறகு பிறந்தது.

நடந்தான், நடந்தான். கால் வலிக்கவில்லை. இருபத்தைந்து லட்சம் ரூபாய் நிச்சயமாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஊற்றெடுத்தது. சீட்டு நிச்சயமாக ரமணியின் மேஜையில்தான் இருக்கிறது; சந்தேகமே இல்லை! அவன் நாளைக்குப் பெரிய பணக்காரனாக ஆகிவிடுவான்.

போதை ஏற ஏற ரங்கன், பதினாறு வயது வாலிபனைப் போல ஓடினான். கால்வலி தெரியவில்லை. மனவலி மறைந்துவிட்டது.

MithraVintha

கட்டட வாசலில் கூர்க்கா இன்னொரு கூர்க்காவுடன் பரிக்கொண்டிருந்தான். அவனுக்கு ஏற்கெனவே ரங்கனைத் தெரியும். மடக்கவில்லை, கேள்வி கேட்கவில்லை.

ஆபீஸ் கதவு உள் பக்கமாகப் பூட்டப்பட்டிருந்தது.

தட்டினான். திறக்கப்படவில்லை.

'மயிலு... மயிலு... கதவைத் தொற... ரங்கன் வந்திருக்கேன்.'

பதில் இல்லை.

கதவின்மீது காதை வைத்துப் பார்த்தான். பயங்கரமான குறட்டைதான் கேட்டது.

ரங்கனுடைய சோனிக் கைகளும் சோனிக் கால்களும், மயில்சாமியின் குறட்டையை உடைக்காமற்போகவே ஒரு யோசனை தோன்றியது.

ஆபீஸ் வாயிலுக்கு வெளியே, இரண்டு மூன்று மரக் கட்டைகள் இருந்தன. ஒன்றை எடுத்தான். தூக்க முடியாமல் தூக்கினான். கதவை பலம்கொண்ட மட்டும் இடித்தான்.

'யார்டா அது சோமாறி!'

மயில்சாமி அரைத் தூக்கத்தில் கத்தினான்.

மீண்டும் ஒரு இடி.

'கஸ்மாலம், இந்த வேளையிலே எவன்டா இடிக்கிறான்...கய்தே யார்டா அது?'

'மயிலு...மயிலு...நான்தான் ரங்கன்...ரங்கன்!' அவன் கத்தினான்.

கதவு திறந்தது.

''யோவ்! இன்னா நீ? என் பொண்ணைத் தனியா வுட்டுட்டு இங்கே வந்து நிக்கறே? அவ ஒன்னை அடிச்சாளா?'

'இல்லே மயிலு. நான் மயிலாப்பூர்லேந்து ஓடிவர்றேன்.'

'அங்கே எங்கே போனே? இப்ப மணி ரெண்டு.'

'ரமணி சார் மேஜையைத் தொறக்கணும் மயிலு.'

'இன்னா சொன்னே? ரமணி சார் மேஜையைத் தொறக்கணுமா?'

'ஆமாம் மயிலு.'

'எங்கையிலே ஏது சாவி? அது அந்த ஆள்ட்டதான் இருக்கு.'

'அப்ப உடைச்சுடு...'

'யோவ், நீ என் மருமகப் புள்ளைதான். ஆனா அதுக்காக என் டூட்டியிலே கை வைக்க மாட்டேன்.'

'விவரமெல்லாம் அப்பாலே சொல்றேன்...மேஜையை உடைச்சுடு மயிலு.'

'முடியாது. வெளியே போ...இல்லாட்டி, உன் வேலை பூடும்.'

''ஐயோ கடவுளே!'

ரங்கன் வெளியே புலம்பினாலும் உள்ளே ஒரு விவேகம் பிறந்திருந்தது. தனக்கு இருபத்தைந்து லட்சம் ரூபாய் பரிசு விழுந்திருக்கிறது என்று மயில்சாமியிடம் சொல்லிவிட்டால் அவ்வளவுதான். பரிசுச்சீட்டைப் பறித்துக்கொண்டதோடு நிற்காமல், அவனை அங்கேயே தீர்த்துக் கட்டி, ஒரு கோணியில் போட்டுத் தைத்து சமுத்திரத்தில் எறிந்துவிடுவான்.

என்ன செய்ய?

உண்மையைச் சொன்னால் நிச்சயமாக, பரிசுச்சீட்டு அது மேஜையினுள் இருந்தாலும் அவனுடைய கைக்கு வராது.

MithraVintha

'போய்யா ஜூட்டுக்கு...ஆபீஸ் தொறந்ததும் வா...எந்த மேசையை வோணும்னாலும் ஒடை' என்றான் மயில்சாமி.

சூதுவாது தெரியாத ரங்கனுக்கு ஒரு நம்பக்கூடிய பொய்யை உதிர்க்க வரவில்லை. எந்த ஒரு மிருகத்திடமும் இயல்பாய் வரக்கூடிய பயமும் முன் ஜாக்கிரதை உணர்வும் அவனிடமும் தோன்றின.

அவன் மெதுவாக நகர்ந்தான்.

'யோவ் ரங்கா!'

'என்ன மயிலு?'

'இந்த நேரத்திலே வந்து மேசையை ஒடைன்னியே அதுக்கு இன்னா அர்த்தம். அதுக்குள்ளாற இன்னா இருக்கு? ஹம்...சொல்லுய்யா?'

ரங்கன் பதில் சொல்லாமல் அவசர அவசரமாக வெளியேறி, மாடிப்படியை அடைந்தான்.

வீட்டை அடைந்து அவன் கதவைத் தட்டியபோது, 'யாருய்யா அது?' என்ற குரல் அதட்டியது.

'தனம் நான்தான்.'

'டிக்கட்டு கிடைச்சுதாய்யா?'

கதவைத் திறக்கையிலேயே கேட்டாள்.

'இல்லே தனம்.'

'இன்னாய்யா சொல்றே, டிக்கட்டு கெடைக்கலியா? யோவ்! எங்கையிலே பொய் சொன்னே, ஒன்னைக் கிளிச்சுடுவேன்.'

முதன் முறையாகத் தனத்தைக் கண்டு ரங்கனுடைய நெஞ்சம் அலறியது. அப்பனைப் போலத்தானோ பெண்ணும்? ஒரு ஆவேச வெறியில், அவன் தனக்கு லாட்டரி

யில் பரிசு கிடைத்திருப்பதை மனைவி என்ற உறவின் காரணமாக அவனிடம் சொல்லிவிட்டான். இது அவனுக்கே ஆபத்தாகப் போகிறதா?

'சத்தியமாச் சொல்றேன், தனம். ரமணி சார் வீட்டுக்குப் போனேன். அவரு வெளியூர் போயிருக்காராம்.'

'பூட்டானா? ஒன் இருபத்தஞ்சு லட்சத்தை எடுத்துக் கிட்டு ஓடிட்டானா...'

'இப்படிப் பேசாதே, தனம்...ரமணி சார் நல்லவர்... ஏமாத்தமாட்டார்.'

'யோவ்! சும்மாக் கிடய்யா. அந்த ஆளு உன்னை ஏமாத்திட்டான்!'

'இல்லே தனம், டிக்கட்டை ஆபீஸ் மேஜைக்குள்ளே தான் அவரு வைச்சிருப்பாரு.'

'அப்ப அங்கே போய் பாக்கறது.'

'போனேன். உங்க அப்பா மேஜையை உடைக்க முடியாதுன்னு என்னை விரட்டிட்டார்.'

'என் அப்பன் கையிலே இன்னா சங்கதின்னு சொன்னியா?'

'இல்லே.'

'ஒனக்குக்கூட அறிவு இருக்குதய்யா! அந்த ஆளு பொல்லாத ஆளு. பொண்டாட்டி களுத்திலேருந்து செயினைத் திருடின ஆளு.'

'மயில்சாமி உன் அப்பா!'

'அப்பன்காரனா இருந்தா என்னய்யா? ஏமாத்தமாட்டானா?'

'அப்ப அவர்ட்ட சொல்ல வேண்டாம்னு சொல்றியா தனம்?'

MithraVintha

'டிக்கட்டு கைக்கு வரட்டும். அப்பாலே டமாரம் அடிப் போம்!'

'சரி.'

'யோவ்!'

'என்ன தனம்?'

'பணம் கெடைச்சதும் வளையலு, கம்மலு அல்லாம் வாங்கணும்.'

'வாங்கலாம்!'

'எனக்கு நம்பிக்கை இல்லை! அந்த ரமணி நான்தான் டிக்கட் வாங்கினேன்னு சாதிப்பான். ஒலகம் அவனைத் தான் நம்பும்.'

'இல்லே தனம்! நீ நினைக்கிறது தப்பு. என் டயரியிலே நம்பர் எழுதியிருக்கும்.'

'யார் எழுதினாங்க?'

'ரமணி சார்தான்!'

'டயரியும் என் டயரிம்பான். நீ அதைத் திருடிட்டேம் பான்!'

அவளை எப்படி நம்பவைப்பது என்று ரங்கனுக்குத் தெரியவில்லை.'

'யோவ்!'

'என்ன தனம்?'

'பணம் கைக்கு வந்ததும் புச்சா ஒரு வூடு வாங்கணும்.'

'வாங்கலாம்.'

'காரு வாங்கணும்.'

'வாங்கலாம் தனம்!'

'நான் பட்டுப் பொடவைதான் கட்டிப்பேன்; வைரக் கம்மல் போட்டுப்பேன்!'

'இப்பத் தூங்கு தனம்.'

'யோவ்! பணம் ஒன் கைக்கு வந்தப்புறம் என்னைவிட்டு ஓடினே, நான் இன்னா செய்வேன் தெரியுமா?'

ரங்கன் பதில் கூறவில்லை.

'என்னைக் கைவுடமாட்டியே?'

'மாட்டேன்.'

'சத்தியமா? என் தலையிலே அடிச்சுச் சொல்லு. கப்பூரம் ஏத்திச் சொல்லு.'

'சத்தியமா உன்னைக் கைவிடமாட்டேன் தனம்! உன் மேல் ஆணையா?'

அவளுடைய தலையை வலது கையால் தொட்டான்.

'யோவ்!'

'என்ன தனம்?'

'ஒரு மாசம் பல்லைக் கடிச்சுக்கிட்டுப் பொறுத்துக்க. அப்புறம் நீ என்கிட்ட ஆசைப்பட்டதையெல்லாம் நான் தரேன்.'

ரங்கனுடைய மனம் இப்போது அவளுடைய உடலில் லயிக்கவில்லை. அது சுற்றிச் சுற்றி இருபத்தைந்து லட்சத்தி லேயே ஓடிக்கொண்டிருந்தது.

'சரி' என்றான் இயந்திரமாக.

விடிந்தது.

'நானும் ஆபீசுக்கு வரப்போறேன்' என்றாள் தனம்.

'எதுக்கு?'

'அந்த ஆள் கையிலே நீ கேக்கறப்ப நானும் கூட இருக்கணும்.'

MithraVintha

'ரமணி சார்தான் வெளியூர் போயிருக்காரே. என்னிக்கு வர்றார்னு தெரியாதே!'

'அப்ப உன் முதலாளி கையிலே விசயத்தைச் சொல்லிட லாம்.'

'இப்ப யாருக்கும் தெரியவேணாம் தனம்!'

'அதுவும் சரிதான். ஆனா அந்த ஆள் வந்ததும் என் கையிலே சொல்லு.'

'சொல்றேன்.'

'ஆனா அந்த ஆள் வருவான்னு எனக்குத் தோணலை.'

'ரமணி சார் நல்லவரு. ஏமாத்தமாட்டாரு. நிச்சயம் வந்துடுவாரு.'

தனத்துக்கு ஆத்திரம் பீரிட்டது.

'யோவ்! அந்த ஆள் நல்லவருன்னு என் கையிலே இன் னொருவாட்டி சொல்லாதே! ஹங்ஹாங்... அந்த ஆள் முழியே சரியில்லே!'

பதில் கூறாமல் ரங்கன் வெளியேறினான்.

ஒவ்வொருவராக ஆபீசுக்கு வந்தார்கள். சுகந்தியின் டைப்ரைட்டர்மீது கிடந்த தூசியைத் தட்டிக்கொண்டே, மயில்சாமி அவளுடன் தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டிருந் தான். சுகந்தியை ஒரு தனிப்பட்ட முறையில் மயில்சாமி கவனித்துக்கொள்ளுவது ஆபீஸ் முழுதும் அறிந்ததுதான். ஆனால் இன்று அவன் தாழ்ந்த குரலில் பேசியது ரங்க னுக்குச் சங்கடமாக இருந்தது.

பத்து மணிக்கு மாலு வந்தாள்.

'வணக்கம் மாலு அம்மா!'

'என்ன ரங்கா! என்னிக்கும் இல்லாம நான் வந்ததுமே என்கிட்ட வர்றே?'

'ரமணி சார் என்னிக்கு வராரு?'

'என்ன கேட்டே? ரமணி சார் என்னிக்கு வர்றாரா? ஆமாம் அவர் எங்கே போயிருக்கார்?'

'வெளியூர்னு வீடல சொன்னாங்க. உங்ககிட்ட சொல் லாம இருக்கமாட்டாரேன்னு கேட்டேன்.'

'எனக்குத் தெரியாது.'

'ஆபீஸ் விசயமா வெளியூர் போயிருப்பாரோ?'

'என்னைக் கேட்டா?'

'முதலாளியைக் கேட்கலாமா?'

'கேளேன்,'

'பயமாயிருக்கு.'

'அப்ப ஒண்ணு செய்.'

'என்ன மாலு அம்மா?'

'கேட்காதே.'

காற்று இழந்த பலூனைப்போல ரங்கனுடைய முகம் சுருங்கியது.

நகர்ந்தான்.

'ரங்கா?'

சுகந்தியின் குரல்.

சென்றான்.

'என்ன ரங்கா எப்படி இருக்கே?'

'இருக்கேன்.'

'என்ன உன் முகம் எப்படியோ இருக்கு. கண் ரெண்டும் சிகப்பா பொங்கிக்கிடக்கு. ராத்திரி முழுக்கத் தூங்கலையா?'

ரங்கன் மந்தனாக இருந்தாலும் கேள்வியின் அர்த்தம் புரிந்துவிட்டது. மயில்சாமி முந்தின இரவு நடந்ததைச் சுகந்தியிடம் கூறியிருக்கிறான். அவள்தானே அவனுக்கு அவ்வப்போது, ஐந்தும் பத்தும் கைமாற்று கொடுக்கிறாள்?

MithraVintha

'அதோ பாரு ரங்கா, மாலு டெலிபோன்ல சிரிச்சுச் சிரிச்சுப் பேசறா! நிச்சயமா ரமணியாகத்தான் இருக்கும்.' மறுகணம் ரங்கன் ரமணியின் மேஜை அருகே, டெலிபோன் மூலமாக உறவாடிக் கொண்டிருக்கும் மாலுவிடம் ஓடினான்.

அவன் அவளை அடைவதற்கும், மாலு டெலிபோனை வைப்பதற்கும் சரியாக இருந்தது.

9

மாலு, டெலிபோனை வைத்தவள் பதற்றத்துடன் ஓடிவந்து அருகே நின்ற ரங்கனைப் பார்த்தாள்.

'என்ன ரங்கா, ஏன் இப்படிப் பதறிப்போய் நிக்கறே?'

'மாலு அம்மா, மாலு அம்மா...' அவனுடைய தொண்டை கம்மியது. மனத்தில் உதித்த வார்த்தைகள் நாவில் புரளவில்லை.

மாலு தன்னுடைய இருக்கைக்கு வந்தாள். ரங்கன் பின் தொடர்ந்தான்.

மாலு அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

அவன் பசியில் துடிக்கும் சிறு பையனைப்போல் அவளைப் பார்த்து ஏங்கினான்.

'ரங்கா, உனக்கு என்னாச்சு? ஏன் இப்படி எல்லாமே அழிஞ்சுட்ட மாதிரி பார்க்கிறே?'

'மாலு அம்மா... நான் உங்க காலைப் புடிச்சுக் கேக்கறேன்...உங்ககிட்ட இப்பப் பேசினது ரமணி சார் தானே?'

மாலு பதில் கூறவில்லை. சிரித்தாள்.

'சிரிக்காதிங்க, மாலு அம்மா.'

'யார்ட்டேயும் சொல்லப்படாது.'

'சத்தியமாச் சொல்லமாட்டேன். எங்கிருந்து பேசினார் மாலு அம்மா?'

'தெரியலே...பாதி பேசறப்ப கட் ஆயிடுச்சு. ஒருவேளை மறுபடியும் போன் பண்ணினாலும் பண்ணுவாரு.'

'அப்படிப் பண்ணினார்னா எங்கிட்ட சொல்லுங்கம்மா, நானும் ஒரு விஷயம் பேசணும்.'

'முடிஞ்சாப் பார்க்கறேன். நீ இப்ப உன் இடத்துக்குப் போ!'

ஏழெட்டு நிமிடங்களுக்குப் பிறகு, முதலாளி ரமேஷ் சாண்டில்யாவின் பியூன்—குதிரை ஆலோசகர்—அகவ ஞானி—வெங்கி, மாலு அருகே வந்தான். முதலாளி இன்னும் ஆபீசுக்கு வரவில்லை. இவன் ஏன் அவளைப் பார்க்க வருகிறான்?

'போன் வந்திருக்கு மாலு.'

'இதோ.'

ஏன் ரமேஷின் அறையிலுள்ள போனில் அழைப்பு வருகிறது?

'மாலு...நான்தான். போன் கட்டாயிடுத்து...யாரும் பக்கத்தில் இல்லையே?'

'இல்லே... பாஸ் இன்னும் வரலே!'

'நீ என்ன செய்யறே...?' ஒரு இழுப்பு.

'சொல்லுங்க.'

'ராத்திரி ஏர்க்காடு எக்ஸ்பிரஸ்லே ஏறி சேலம் வர்றே... கூட ரங்கனையும் அழைச்சுக்கிட்டு வர்றே.'

'என்ன விஷயம்?'

'சேலத்துக்கு வந்ததும் தெரியும்.'

Mithra Vintha

'அங்கே நாம ரிஜிஸ்தர் மாரேஜ் பண்ணிக்கப் போறோமா? சாட்சிக் கையெழுத்துப் போட ரங்கன் வரணுமா?'

'விளையாடாதே மாலு...இது ரொம்ப சீரியஸ். ரங்கன் என்ன கேட்டாலும் தெரியாதுன்னு சொல்லிடு. அவன் சேலம் வர்ற விஷயம் அவன் பெண்டாட்டிக்குக்கூடத் தெரியக்கூடாதுன்னு எச்சரித்து வை. நான் நாளைக்கு ஸ்டேஷன்லே மீட் பண்றேன்.'

மாலு மேலும் பேச முனைவதற்குள் ரமணி சேலத்தில் போனை வைத்துவிட்டான்.

அரைமணி நேரத்துக்கு ஒருமுறை ரங்கன் அவள் அருகே வந்து ஏக்கமும் ஆர்வமுமாக நின்றான். தான் வேலையில் மூழ்கிவிட்டதுபோல மாலு பாசாங்கு செய்தாள். அவள் ரமேஷின் அறைக்குச் சென்று போனில் பேசியது ரங்கனுக்குத் தெரிய வரவில்லை என்று ஊர்ஜிதமாயிற்று.

பன்னிரண்டே முக்காலுக்கு ரங்கன் ஏழாவது தடவையாக மாலு அருகே வந்து நின்றான். அவள் முதலாளியின் அறைக்குள் பிரவேசித்து, ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு வெளியே வந்ததை அவன் அறிவான். இதற்கான காரணத்தை அவன் விசாரிக்கவில்லை. மாலுவும் சரி, ரமணி சாரும் சரி, அடிக்கடி முதலாளியின் அறைக்கு, அவர் இருக்கிறபோதும் இல்லாதபோதும், ஆபீஸ் சம்பந்தமான காரியங்களைக் கவனிக்கவோ, ஃபைல்களை எடுக்கவோ, பார்க்கவோ செல்லுகிறவர்கள். இன்றும் மாலு அப்படித் தான் செய்திருக்கிறாள்.

'ரங்கா!'

'என்ன மாலு அம்மா?' திடீரென ஒரு நம்பிக்கை தளிர் விட்டது.

'என் வீடு தெரியும் இல்லையா?'

'தெரியும்.'

'ராத்திரி ஒம்பது மணிக்கு நீ என் வீட்டுக்கு வர்றே.'

'எதுக்கும்மா?'

'இப்ப ஒண்ணும் சொல்லமாட்டேன். நீ வந்தே ஆகணும்.'

'சரிம்மா.'

'முதலாளி ஒரு ஸ்பெஷல் வேலை போட்டிருக்கார். அவரோட நான் போன்ல பேசினேன். ரமணி ஆபீசுக்கு வரலியா, அதனாலே அந்த வேலையை நான் செஞ்சு முடிக்கணும்னார். உதவிக்கு உன்னை எடுத்துக்கச் சொன்னார்.'

'சரிம்மா!'

'இன்னொரு விஷயம்.'

'சொல்லுங்க.'

'நீயும் நானும் நாளைக்கு ஒரு நாள் லீவு போடறோம்.'

'லீவா?'

'ஆபீஸ் வேலைதான். இருந்தாலும் லீவு போடச் சொல்லியிருக்கார் முதலாளி. உன் லீவு லெட்டரை நானே எழுதி வைக்கிறேன். நீ கையெழுத்து மட்டும் போடு.'

ரங்கனுக்குத் தலை சுற்றியது.

இவள் என்ன சொல்லுகிறாள்? இப்படிப்பட்ட ஒரு நிர்ப்பந்தம் ஆபீசில் இந்த நான்கு ஆண்டுகளாக ஏற்பட்டதில்லை. ஆபீஸ் வேலை. ஆனால் அதைச் செய்துமுடிக்க லீவ் போட வேண்டும். இது என்ன விசித்திரம்? அவனுடைய மண்டை மரமண்டை. ஒன்றும் புரியவில்லை.

அவன் நகர்ந்தான்.

Mithra Vintha

'ரங்கா!'

'இருபத்தி யார்கிட்டேயும் மூச்சு விடக்கூடாது. ஏன், உன் மனைவி தனத்துக்குக்கூடத் தெரியக்கூடாது. தெரிஞ்சது உன் வேலை போயிடும்!'

ஏற்கெனவே லாட்டரிச் சீட்டு அவன் கையிலிருந்திருந் தால், மாலுவின் இந்த பயமுறுத்தலுக்கு அவன் பணிந் திருக்கமாட்டான். பணமே வராதோ என்கிற பயம் அவனைக் கவ்விக்கொண்டாகிவிட்டது. என்ன செய்ய?

'சொல்லமாட்டேன், மாலு அம்மா.'

'ஒன்பது மணி! எதுக்கும் மாத்துச் சட்டை பாண்ட் டோட வா. தனம் கேட்டா ஆபீஸ் காரியமா வெளியூர் போறதாச் சொல்லிச் சமாளி.'

ரங்கன் தலையை மட்டும் அசைத்துவிட்டு மௌனமாகத் தன் இருக்கைக்குத் திரும்பினான்.

டைப்பிஸ்ட் சுகந்தி அவனுக்காகக் காத்திருந்தாள்.

'என்ன ரங்கா, பேசறதுக்கு ரமணி இல்லையேன்னு மாலு உங்கிட்ட பேசிட்டிருந்தாளா?'

ரங்கன் பதில் கூறாமல் மௌனமாய் உட்கார்ந்தான்.

'என்ன சொல்றா அவ?'

சுகந்தியை அவன் ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை. அவனுக்குச் சாதுரியமாகப் பேசவோ, பொய் சொல்லவோ வராது. உண்மையை வெளியிடவும் முடியாத நிலை, ரங்கன் என்ன செய்வான்? சிலைபோல உட்கார்ந்திருந்தான்.

மாலை ஐந்தரை மணிக்கு ஆபீஸ் காலியாகியது. மயில்சாமி வருவதைக் கண்ட ரங்கன், அவனுடைய பார்வை யிலிருந்து ஒதுங்கி, சுகந்தியின் பீரோவுக்கு அருகே நின்றான். மயில்சாமி அவனைக் கவனிக்காமல் முதலாளி யின் அறையைப் பூட்டச் சென்றான்.

அவசர அவசரமாக மாடிப்படியில் இறங்கி நடந்த ரங்கன் சாலையின் பிளாட்பாரத்துக்கு வந்ததும் நின்றான். வீட்டுக்குச் சென்று, மாற்று உடைகளுடன் புறப்பட்டு மாலுவை ஒன்பது மணிக்குச் சந்திக்க வேண்டும் என்று திட்ட மிட்டிருந்தவன் இப்போது திடீரென மனம் மாறினான்.

வீட்டுக்குச் சென்றால், தனம் அவனைப் புரட்டிப் புரட்டி எடுப்பாள். லாட்டரிச் சீட்டை ஏன் கொண்டு வரவில்லை என்று அவன்மீது பாய்வாள். அவன் வெளியே செல்லுவதையும் தடுப்பாள். சரியாக ஒன்பது மணிக்கு அவன் மாலுவின் வீட்டில் இல்லை என்றால் என்னென்ன விபரீதங்கள் உண்டாகுமோ?

மனம் ரமணிக்குச் சென்றது. ரமணி சார் நல்லவர். அவருக்கு நிச்சயமாக லாட்டரியில் முதற் பரிசு விழுந்தது தெரிந்திருக்காது. தெரிந்திருந்தால் வெளியூர் புறப்படுவதை ஒத்திப்போட்டுவிட்டு, டிக்கெட்டுடன் அவனுடைய வீட்டுக்கு வந்திருப்பார்.

திடீரென்று ஒரு புதுவித நம்பிக்கையும் உண்டாகியது.

இது ஆபீஸ் வேலை இல்லை!

மாலு, ரமணியின் ஏற்பாடு காரணமாகத்தான் அவனை வரச்சொல்லியிருக்க வேண்டும். ரமணி சார்தான் அவளுடன் டெலிபோனில் பேசியிருக்கிறார். இதை அவளே சொல்லி விட்டாள். இதுநாள் வரை மாலு ரங்கனை மனிதனாக மதித்துப் பேசியதில்லை. ஏளனம் செய்வதே அவளுடைய பொழுதுபோக்கு. அவனை நையாண்டி செய்வதில் ஒரு தனி உற்சாகம். இப்படிப்பட்ட பெண் அவனைத் தன் வீட்டுக்கு இரவு ஒன்பது மணிக்கு வரச்சொல்லுகிறாள் என்றால் என்ன அர்த்தம்? முதலாளி எப்படி ஒரு பெண்ணிடம் முக்கியமான வேலையை ஒப்படைப்பார்? உண்மையாகவே ஒரு முக்கிய மான வேலை இருந்தால், ரமணி இல்லாதபோது 'நெய் ரோஸ்ட்' இச்சாமியிடம்தானே ஒப்படைக்க வேண்டும்?

MithraVintha

உதவி செய்யப் போயும் போயும் ரங்கனையா முதலாளி தேர்ந்தெடுப்பார்? வெங்கி இருக்கிறானே? ஆபீஸ் வேலை என்றால் ஏன் லீவ்?

நிச்சயமாக இது ஆபீஸ் வேலை இல்லை. மாலு பொய் சொல்லுகிறான்.

ரங்கன், தானே ஆச்சரியப்பட்டுப் போனான். அவனால் கூட, மனக்கொந்தளிப்புக்கிடையிலும், சுயமாகச் சிந்திக்க முடிகிறதே?

அவன் வீட்டுக்குச் செல்லவில்லை.

நிஜார் பாக்கெட்டில் ஐந்து ரூபாய் இருந்தது. இரண்டு பன் வாங்கி, விண்டு விண்டு போட்டுக்கொண்டான். உலர்ந்து போன துண்டுகள் லேசில் இறங்கவில்லை. ஒவ்வொரு துண்டையும் ஒரு வாய் தண்ணீரால் மூழ்கடித்துத் தொண்டையில் இறக்கினான்.

'டீ'யைக் குடித்த பிறகுதான் ஆசுவாசம் ஏற்பட்டது.

தி. நகரில் வசிக்கும் மாலுவின் வீட்டை அடைந்தபோது இரவு மணி எட்டே முக்கால்.

அடிபட்ட புலியைப் போல தனம் தனக்குத்தானே உறுமிக்கொண்டிருந்தாள். ஏன் அவனுடைய சோனிச் சோப்ளாங்கி இன்னும் ஆபீசிலிருந்து திரும்பவில்லை? எங்கே போய்விட்டான்? அந்தப் பாழாய்ப் போகிற ரமணி வீட்டுக்கு லாட்டரிச் சீட்டை வாங்கப் போய்விட்டானோ? டிக்கெட் இருந்தாலும் அவன் கொடுக்கவா போகிறான்? இந்தச் சோப்ளாங்கியின் தலையில் மிளகாய்தான் அரைத்து அனுப்பப் போகிறான். முட்டாள்! யாரை நம்புவது யாரை நம்பக்கூடாது என்றுகூட இந்த செக்குமாட்டுக்குத் தெரியவில்லையே! அவனுடைய முட்டாள் புருஷன் இருபத்தைந்து லட்சம் ரூபாய் லாட்டரிச் சீட்டை ரமணியிடம் ஒப்படைத்திருக்கிறானே!

ஆவேசத்துக்கிடையில் ரமணி அவனைத் தேடி வீட்டுக்கு வந்த காட்சியும் கண்முன் தோன்றியது. ஒரு கணம் பயத்தில் அடிவயிறு சுருங்கி வலித்தது. லேடி டாக்டர் அம்புஜம் தனக்கு உறவுக்காரி என்றான் அவன். என்ன ஆபரேஷன் என்று தனக்குத் தெரியும் என்று சொல்லாமல் சொன்னான். ரங்கனை மிரட்டிப் பணம் பறிக்க முயன்றால் தான் சும்மா இருக்கப் போவதில்லை என்று பயமுறுத்தினான். கடைசியில் செலவுக்கு நூறு ரூபாயும் கொடுத்துவிட்டுப் போனான். தனத்துக்கு எதிர்ப்பதா, பயப்படுவதா என்றுகூடத் தெரியவில்லை.

இரவு முழுவதும் ரங்கன் வராமற்போகவே, அவளுக்கு நம்பிக்கையும் பீதியும் மாறி மாறி வந்தன. டிக்கெட்டுடன் வருவான்! டிக்கெட் கிடைக்காமல் மனம் நொந்து போய்க் குளம் குட்டையில், ஏன் சமுத்திரத்திலேகூட விழுந்திருக்கலாம்.

பொழுது விடிந்தது. ரங்கனைக் காணோம். என்ன செய்ய? ஆபீஸ் நினைவு வந்தது.

ரங்கன் வீட்டுக்கு வராமலிருக்கலாம். ஆனால் நிச்சயமாக ஆபீசுக்குச் செல்லாமல் இருக்கமாட்டான். லாட்டரிச் சீட்டு கிடைத்துவிட்டதா இல்லையா என்ற விவரம் அங்கே சென்றால் தெரியும்.

அவள் சரியாக ஒன்பதரை மணிக்கு ஒரு சில்க் புடைவையைக் கட்டிக் கொண்டு, ஒரு ரூபாய் வட்டத்துக்குக் குங்குமத்தை ஒட்டிக்கொண்டு, தலை நிறையச் சாமந்திப் பூவுடன் ஆபீசுக்குப் புறப்பட்டாள்.

நுழைவாயிலிலேயே, மயில்சாமி மடக்கினான்.

'ஏய் தனம்! ஒன் புருசன் எங்கே?'

'அந்த ஆளைத் தேடிட்டுத்தான் நாயினா, நானே வர்றேன்.'

MithraVintha

'இன்னா சொல்றேடீ, சுப்தே?'

'ஆட்டுக்கே வரலே.'

'மெய்யாலுமா?'

'பொய்யா சொல்றேன், தாயினா?'

'நீ பொய் சொல்ற பொறுக்கிதானே?'

'மயில்சாமி சத்தம் போடாமல் பேசு!' என்றாள் சுகந்தி. பிறகு, 'ஓ, நீ ரங்கன் பெண்டாட்டி இல்லே?' என்றாள்.

அப்பனை விட்டுவிட்டுத் தனம் சுகந்தி அருகே வந்தாள்.

'ஆமாம், கண்ணு...நீ சொகந்திப் பொண்ணுதானே?'

'சொகந்தி இல்லே, சுகந்தி...ஆமாம், நீ எங்கே இங்கே வந்தே?'

'நேத்துலேந்து என் புருஷன் ஆட்டுக்கே வரலே சொகந்தி.'

'ஏன்? உன் மேலே கோபமா?'

'ஹெங்...கோவமா? எம் புருசனுக்கு எப்படிக் கோவிச்சுக் கறதுன்னுகூடத் தெரியாது.'

'உன் புருசனும் ரமணியும் தோஸ்து. ரமணியைக் கேட்டாத் தெரியும். ஆனா அவரும் ரெண்டு நாளா ஆபீஸுக்கு வரலே. ஏன் நிக்கறே, ஒக்காரு... இந்தப் பொடவை உனக்கு ரொம்ப அழகா இருக்கு.'

'மெய்யாலுமா?'

'ஆமாம். அது சரி, உன் அக்கா இப்ப எப்படி இருக்கா? புருசன்கூட சௌகரியமா இருக்காளா?'

தனம் சிரித்தாள்.

எனக்கு அக்கா கெடையாது. நான் ஒரே பொண்ணு.'

சுகந்தி மௌனமாய் தனத்தைப் பார்த்தாள். தனம் ஒரே பெண்ணா? அக்கா இருப்பதும் அவளுக்குக் கலியாண மானதும்கூட ஒரு தங்கைக்குத் தெரியவில்லை என்றால் என்ன அர்த்தம்?

மயில்சாமி பலே ஆள்! ராஸ்கல், ரெண்டு சம்சாரம்னு ஒரு தடவைகூடச் சொன்னதில்லை. அடுத்த தடவை கை மாத்துக் கேட்டு வரும்போது உண்மையைக் கக்க வைக்கலாம்.

தனத்துக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. ரங்கன் ஆபீசுக்கே வரவில்லை. அவனுடைய தோஸ்த்தும் இல்லை.

இருபத்தைந்து லட்சம் ரூபாய் பரிசு விழுந்திருக்கிறது என்று இப்போது பகிரங்கமாகச் சொல்லவும் அவளால் முடியவில்லை.

'சொகந்திக் கண்ணு, நான் வர்றேன்!' என்று புறப் பட்டாள் தனம்.

'இனிமே ஆபீஸ் பக்கம் வந்தே, ஒன் காலை ஒடிச்சுப்புடு வேன். ஹாங் ஹாங்!' என்றான் மயில்சாமி.

'சரித்தான் போய்யா!' என்று சொல்லிவிட்டு, தனம் வெளியேறினாள்.

10

கடந்த சில மணி நேரங்களாக ரங்கன் நடந்திருந்தான். இப்போது சாலையில் மாலுவின் வீட்டின் எதிரே நீண்ட நேரமாய் நின்றுகொண்டிருக்கிறான். இருப்பினும் உடல் வலியோ, கால் வலியோ தெரியவில்லை. மனம்தான் வலித்தது. கடந்த சில நாட்களாக எதிர்பாராததெல்லாம் நடந்துகொண்டு வருகின்றன. அவனுடைய வாழ்க்கையைப் பாதிக்கும் சம்பவங்கள், நிகழ்ச்சிகள்.

MithraVintha

அவனுக்கு இருபத்தைந்து லட்சம் ரூபாய் பரிசாக விழுந்திருக்கிறது. ஆனால் லாட்டரிச் சீட்டு அவனிடம் இல்லை. யாரை நம்பி அதை ஒப்படைத்திருந்தானோ அவன் ஊரிலேயே இல்லை. ரமணி ஏமாற்ற மாட்டான் என்ற நம்பிக்கை ஆரம்பத்தில் ஒரு தாம்புக் கயிறாகத்தான் இருந்தது. ஆனால், அது மெல்ல மெல்ல மெலிந்து நைந்து போய்க்கொண்டிருக்கிறது. ரமணி முழுதுமா அவனை வஞ்சிக்கப் போகிறான்? பாதித் தொகையாவது தரலாமே?

பற்பல விதமான மகிழ்ச்சி ஆரவார எதிர்பார்ப்புக் களுடன் அவன் தனத்தைக் கல்யாணம் செய்துகொண்டான். தாம்பத்தியம் என்ற வார்த்தைக்கு அர்த்தமே இல்லாத வாழ்வாக அமைந்துவிட்டது. தனத்துக்கு ஒன்றே ஒன்று தான் தெரியும், ரங்கனிடமிருந்து பணத்தைக் கறப்பது. அவளுக்கு வயிற்றில் கட்டி என்று அறிந்தபோது துடி துடித்துப் போனான். ரண சிகிச்சை என்று வந்தபோது, பணச்செலவினால் ஏற்பட்ட மனக்கஷ்டத்தைவிட, அவளைப் பற்றிய பயம்தான் மேலோங்கி நின்றது. ஆனால் தனம் அவனுடைய மனத்தைப் புரிந்துகொள்ளவில்லை. அறிந்துகொள்ள இம்மியும் ஆசைப்படவுமில்லை. இப்படிப் பட்ட மண வாழ்க்கையையா அவன் எதிர்பார்த்தான்?

இன்னொரு விஷயமும் அவனை வாட்டியது. தனத்தின் வயிற்றுக் கட்டியைப் பற்றிச் சுகந்தியிடம் கூறியபோது, அவள் விஷமமாகச் சிரித்தாள்.

ஒரு பெண் வாந்தி எடுப்பதும், தலை சுற்றிக் கண்கள் செருகப் படுத்திருப்பதும், உணவே வெறுத்துப் போவதும் மிகவும் சாதாரண விஷயங்கள் என்பதைச் சொல்லாமல் சொல்லிச் சுகந்தி சிரித்தாள். சுகந்திக்கு ஏன் இந்த விஷயத்தில் ஒரு திருப்தி!

ரங்கன் துவண்டுபோனான்.

எதிர்பார்த்த மணவாழ்க்கை கிடைக்கவில்லை.

அவன் வாங்கிய லாட்டரிச் சீட்டுக்கு இருபத்தைந்து லட்சம் ரூபாய் என்று அறிவிப்பு வந்திருக்கிறது. ஆனால் பணம் கிடைக்காது போயிருக்கிறது. ரமணி தன்னை ஏமாற்றிவிட்டான் என்று அவனால் யாரிடம் சொல்ல முடியும், புகார் செய்ய முடியும்? 'டீ காப்பி வாங்கி வரச் சொல்லுவதுபோல, லாட்டரிச் சீட்டும் வாங்கி வரச் சொன்னேன்' என்று ரமணி சொன்னால் ஊரும் உலகமும் அவனைத்தான் நம்பும். டயரியில் ரமணி தன் கைப்பட நம்பர்களை எழுதி வைத்திருக்கிறான். அந்த டயரியை ஆதாரமாகவோ சாட்சியாகவோ கொண்டுவரவும் முடியாது. 'என்னுடைய மேஜையைத் திறந்து ரங்கன் டயரியைத் திருடிவிட்டான்' என்று ரமணி கூறலாமே?'

இன்னோர் உண்மையும் அவனைத் தாக்கியது. சீட்டு வாங்கும்போதெல்லாம், கடைக்காரரிடம் ரமணியின் பெயரைத்தான் கூறியிருக்கிறான்.

ரமணி ஏமாற்றுகிறானா?

ரமணி ஏமாற்றக்கூடியவனா?

இருபத்தைந்து ரூபாய்க்கே ஒருவன் இன்னொருவனை ஏமாற்றும் இந்த நாளில் இருபத்தைந்து லட்சம் என்றால்...

ஆனால் ரங்கன் மனத்தில் ஒரு சிறு ஆசை பிறந்தது.

பாதிப் பணம் வேண்டாம்.

ஏன் ஐந்து லட்சம்கூட வேண்டாம்.

ரமணி ஒரு லட்சமாவது ரங்கனுக்குத் தரமாட்டானா?'

திடீரென்று மாலுவின் குரல் கேட்டது.

'ரங்கா!'

இத்தனை நேரச் சிந்தனைகளையும் ரங்கன் ஒரு நொடியில் மறந்தான்.

'மாலு அம்மாவா?'

MithraVintha

'ரொம்ப நேரமா நின்னுட்டிருக்கியா?'

'நான் அப்பவே வந்துட்டேன்.'

'ஏன் உள்ளே வரலே? சரி, சரி மணி ஒம்பதே முக்கால் தாண்டியாச்சு. வா, போகலாம்.'

அவள் கையில் ஒரு சிறு பெட்டி இருந்தது.

'அதைக் கொடுங்கம்மா. நான் தூக்கிக்கறேன்.

'வேண்டாம். கனமில்லை. ரெயில் பத்தேமுக்காலுக்குத் தான். பஸ்லே போனாக்கூடப் போதும்.'

'எங்கே மாலு அம்மா போறோம்?'

'சேலத்துக்குப் போறோம்.'

'ரமணி சார் அங்கேதான் இருக்காரா?'

'ஆமாம்...வா...அதோ பதினொண்ணாம் நம்பர் பஸ் வர்றது.'

மாலு விரைவாக நடந்து பஸ்ஸில் ஏற, ரங்கன் ஓடினான்.

மாலை மணி ஐந்து.

ஆபீஸ் ஹால் சின்னஞ் சிறிதாக ஒரு வட்டமாக மாறியது. அந்த வட்டத்தின் மையத்தில் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவரைச் சுற்றிச் சுகந்தி, வெங்கி, தெய் ரோஸ்ட் இச்சா, மற்றும் மயில்சாமி ஆகியோர் நின்றுகொண் டிருந்தார்கள்.

'ரமணி என்கிறவர் இந்த ஆபிசில்தானே வேலை செய்யறார்?'

'ஆமாம். நீங்க யாரு?' என்று கேட்டாள் சுகந்தி.

'நான் லிங்கிச் செட்டித் தெருவிலே, அதிர்ஷ்ட லட்சுமி லாட்டரிச் சீட்டுக் கடை, அப்படீன்னு நடத்திக்கிட்டு வர்றேன். என் கடையிலிருந்துதான் அடிக்கடி ரமணி டிக்கெட் வாங்குவார்.'

'அந்த ஆளுக்கு ப்ரைஸ் விழுந்திருக்கா?' என்று கேட்டான் மயில்சாமி.

'எவ்வளவு ரூபா?'—வெங்கி.

'இருபத்தஞ்சு லட்சம்!'

'என்ன! என்ன?'

'இருபத்தஞ்சு லட்சமா?'

'ரமணிக்கா?'

'அவர் எங்கே?' என்று கேட்டார் கடைக்காரர்.

'ரெண்டு நாளா லீவு!' என்ற இச்சா, 'ரமணிக்கே இந்த விஷயம் இன்னும் தெரியாது போலிருக்கு!' என்றான்.

'யோவ் கடைக்காரரே, சரியாப் பார்த்துச் சொல் லுய்யா. ரமணிதான் அந்த டிக்கெட்டை வாங்கினாரா?' என்று மயில்சாமி கேட்டான்.

'என் நோட்புத்தகத்திலே அவர் பேர்தான் இருக்கு.'

'நீ தப்பா எழுதியிருக்கேய்யா! டிக்கெட் வாங்கினது என் மருமகப்புள்ளே. பேரு ரங்கன்! நீ ரங்கன் பேரை எழுதியிருக்கணும்!' மயில்சாமி சீறினான்.

'இந்தாப்பா, நான் யார் என்ன டிக்கெட் வாங்க வந்தாலும் அவர் பேர் என்னன்னு விசாரிச்சுக் குறிச்சு வைச்சுப்பேன். இதுக்கு ரெண்டு காரணம். ஒண்ணு, பரிசுத் தொகையிலே பத்து சதவீதம் ஏஜென்ட்டுக்கு உண்டு. நான் ஒரு ஏஜென்ட். இரண்டாவது நாளைக்கு கோர்ட்டு கேஸுன்னு வந்தா நான் கூண்டிலே ஏறிச் சாட்சி சொல்ல வேண்டி வரும். அஞ்சாறு வருஷம் முன்னாடி ஒரு கேஸ் வந்தது. அதிலே என்னாலே சரியாச் சாட்சி சொல்ல முடியலே... அதுதான் இப்பவெல்லாம் ரொம்பக் கவனமா எழுதிட்டு வர்றேன்!'

Mithra Vintha

'அல்லாம் சரித்தான்யா...லாட்டரிச் சீட்டு வாங்கினது என் மருமகப் புள்ளை ரங்கன்தான்!'

'நீ சொன்னாப் போதுமாய்யா. நீ சொல்ற ரங்கன்ங்கிற பேரு என் நோட்டுப் புத்தகத்திலேயே இல்லை. ஆனா ரமணி பேரு நிறைய இடத்திலே இருக்கு...' என்றார் கடைக்காரர்.

'உன் கைகாலை ஒடிச்சு, உன் புஸ்தகத்தையும் கிழிச்சு நெருப்பிலே போட்டுடுவேன்!' மயில்சாமி கடைக்காரரின் கையைப் பிடித்தான்.

'டேய் மயிலு. அவர் கையை விடு...உன்னை அலக்காத் தூக்கி இந்த மாடியிலிருந்து எறிஞ்சுடுவேன்!' என்ற வெங்கி, 'நீ போ சார்... எதுக்கும் இந்த ஆள்பேர்லே பூக்கடைப் போலீஸ்லே கம்ப்ளெய்ன்ட் எழுதிட்டுப் போ... சாட்சி சொல்ல நான் வர்றேன்'' என்றான்.

மயில்சாமிக்கு ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வந்தது. ஆனால் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. மௌனமாய்த் தன் இருக்கைக்கு நடந்தான்.

'ரமணி வந்ததும், முடிஞ்சா சொல்லியனுப்புங்க' என்றார் கடைக்காரர்.

'இது எங்க வேலை இல்லை. நீங்க தினசரி வந்து பாருங்க!' என்றான் கிச்சா.

அவர் போன பிறகும் ஆரவாரம் அடங்கவில்லை.

ஒரே ஓர் ஆச்சரியம்தான் எல்லோர் மனத்திலும் ஏற்பட்டது.

இத்தனை வருடங்களாக லாட்டரிச் சீட்டு வாங்கியது ரமணியா?

சர்ச்சை பிறந்தது.

'இருக்கவே இருக்காது, கிச்சா! ரமணி வாங்கியிருந்தா ஏன் நம்பரை ஒரு டயரியில் நோட் பண்ணி ரங்கன் கையில கொடுத்திருக்கணும்?' என்றாள் சுகந்தி.

'நீ சொல்றதிலும் ஒரு பாயின்ட் இருக்கு, சுகந்தி... ஒரு வேளை ஆளுக்குப் பாதியாப் போட்டிருப்பாங்களோ... டிக்கெட்டை ரமணியும் டயரியை ரங்கனும் வைச்சிருக்காங்க.'

'அடிச்சா அதிர்ஷ்டம் இப்படி அடிக்கணும்!' என்ற வெங்கி, 'நான் அஞ்சு ரூபா கட்டினா குதிரை இருபத்தஞ்சு கூடத் தர்றதில்லே'' என்று புலம்பினான்.

'ஆனா ஒரு விஷயத்தைப் பார்த்தீங்களா கிச்சா?' என்றாள் சுகந்தி.

'என்ன?'

'நேத்து ரமணி வரலே! இன்னிக்கு மாலுவும் ரங்கனும் வரலே! இதிலே ஏதோ மர்மம் இருக்கு!'

'என்ன மர்மம் இருந்தா உனக்கும் எனக்கும் என்ன சுகந்தி... இருபத்தஞ்சு லட்சம் உனக்கும் எனக்கும் விழலேன்னு சந்தோஷப்படு... பணம் பாஷாணம்னு பெரியவங்க சொல்லியிருக்காங்க' என்றான் கிச்சா.

'உங்களுக்கு விழாதபோது நீங்க வேறு எப்படி உங்களைத் தேற்றிக்கொள்ள முடியும்?' என்றாள் சுகந்தி.

அன்று இரவு பத்து மணிக்கு மயில்சாமி தன் வீட்டை நோக்கி நடந்தான். அவன் அதை நெருங்குவதற்கும், ஒருவன் வீட்டை விட்டு வெளியேறி, எதிர்த் திசையில் நடந்து செல்லுவதற்கும் சரியாக இருந்தது. அவன் யார் என்று மயில்சாமிக்குப் புரிந்துவிட்டாலும், அதைப் பற்றிப் பேச இது சமயமில்லை என்று தன்னை அடக்கிக் கொண்டான்.

MithraVintha

'என்னப்பா, எதுக்கு இப்ப இங்கே வந்திருக்கே?' என்று தனம் கேட்டாள். அவள் குரலில் எரிச்சல் ஒலித்தது.

'உனக்கு விசயம் தெரியுமாடி?'

'இன்னா விசயம்?'

'உன் புருசன் வாங்கின லாட்டரிச் சீட்டுக்கு இருபத்தஞ்சு லட்சம் ரூபா விளுந்திருக்கு.'

'அதுக்கு இன்னா இப்ப?'

'அப்ப? உனக்கு முன்னாடியே தெரியும்னு சொல்லு.''

'ஆமாம் தெரியும். ஆனா, நான் ஏன் உன் கையிலே சொல்லணும்? நீ சாராயக் கடையையே வாங்கிடுவியே!'

''தப்புக்கெட்டக் களுதே... விசயம் புரியாம பினாத்தாதே... அந்தச் சீட்டை வித்த கடைக்காரன் சொல்றான் ரமணிதான் டிக்கெட்டை வாங்கினான்னு. புஸ்தகத்திலே வேறே அவன் பேரைக் குறிச்சு வைச்சுருக்கான்.''

'அடப்பாவி!'

'இப்ப இன்னா சொல்றே?'

'என் புருசன்தான் டிக்கெட்டு வாங்கினான். முந்தா நான் ராத்திரி ரமணி வூட்டுக்குக்கூடப் போனான். அந்த ஆளு ஊர்லேயே இல்லேன்னு திரும்பி வந்தான்.'

'இதெல்லாம் ஏன் என்கிட்ட சொல்லலே நீ?'

'உன் கையிலே சொல்லத் தாவலேன்னு சொல்லலே... சொல்லியிருந்தா நீ இன்னா கிளிச்சிருப்பே?'

'இன்னிக்கு ரமணி ஆபீசுக்கு வரலே... உன் புருசனும் வரலே... மாலுன்னு ஒரு பொண்ணு இருக்கு... ரமணிக்கும் இந்தப்பொண்ணுக்கும் ரொம்ப நாளா சிநேகம். கல்யாணம் கட்டிக்கப் போறாங்க. இந்தப் பொண்ணு மாலுவும் இன்னிக்கு ஆபீசுக்கு வரல்லே!''

'இத்தையெல்லாம் ஏன்யா என் கையிலே சொல்றே? என் புருசன் டிக்கெட் வாங்கியிருக்கான். அதுக்கு இருபத்தஞ்சு லட்சம் வுளுந்திருக்கு. வேற எவனாவது இந்தப் பிரைஸ்லே கைவைக்க வந்தான், அவன் எவனா இருந்தாலும் சரி, என் கையிலே மாட்டிப்பான். அவனை நான் கொன்னுடுவேன்!'' என்றாள் தனம்.

'அப்பாலே, ஜெயில்லே இருபத்தஞ்சு லட்சத்தை எண்ணிப் பாப்பியாக்கும்...களுதைக்கு ஒடம்புதான் வளந்து கிடக்கு. மூளை இல்லே.'

'சரி, நீ போ ஆபீசுக்கு. நான் தூங்கணும்.' என்றாள் தனம்.

'போறேன்டீ களுதே... எதுக்கு மறுபடியும் அந்த ஆள் இங்கே வர்றான்?'

'உன் கையிலே சொல்லத் தாவலே!'

தனம் கதவை அறைந்து சாத்த, மயில்சாமி உறுமிக் கொண்டே நடக்கலானான்.

ரயிலில் மாலு நிம்மதியாக உறங்க, ரங்கன் பித்துப் பிடித்தவனைப்போல உட்கார்ந்திருந்தான்.

எதற்காகச் சேலம் போகிறான்?

ஏன் மாலு அழைத்துச் செல்லுகிறான்?

ரமணிக்குச் சேலத்தில் என்ன வேலை?

பரிசு விழுந்த விஷயமே ரமணிக்குத் தெரியாதோ? அப்படி என்றால் இந்தப் பிரயாணத்துக்கும் பரிசுக்கும் சம்பந்தமில்லையா?

திடீரென்று ரங்கனுக்கு, அவனுடைய அண்ணனுடைய கல்யாணம் நினைவுக்கு வந்தது. அவன் பதிவுத் திருமணம் செய்துகொண்டான். ஓர் அதிகாரிக்கு முன்பு அண்ணனும்

MithraVintha

அண்ணியும் ஒரு ரிஜிஸ்தரில் கையெழுத்துப்போட்டார்கள். ரங்கன் ஒரு சாட்சிக் கையெழுத்துப் போட, அண்ணியின் உறவுக்காரன் ஒருவன் இன்னொரு சாட்சிக் கையெழுத்துப் போட்டான்.

இப்போது எல்லாம் புரிந்தது ரங்கனுக்கு.

சேலத்தில் ரமணியும் மாலுவும் பதிவுத் திருமணம் செய்துகொள்ளப் போகிறார்கள்.

அவன் சாட்சிக் கையெழுத்துப் போடப்போகிறான்!

திடீரென்று மனத்தில் ஒரு தெளிவு பிறந்தது. நிச்சயமாக ரமணிக்கும் பரிசு விழுந்த விஷயம் தெரியாது.

ரங்கன் நிம்மதியாய், ஆனந்தமாய்த் தூங்கினான்.

சேலம் வந்ததுகூட அவனுக்குத் தெரியாது.

'எழுந்திரு, ரங்கா... எத்தனை தடவைதான் ரங்கா, ரங்கான்னு கத்தறது!'

மண்டையில் ஏதோ இடிப்பதை உணர்ந்து திடுக்கிட்டு ரங்கன் கண் விழித்தான். மாலுவின் பெட்டி முனை, தன் மூன் மண்டையை வேண்டுமென்றே இடித்திருக்கிறது என்பதை அவன் புரிந்துகொள்ளவில்லை.

மாலு ரெயிலிலிருந்து இறங்க, அவன் அவசர அவசரமாய்ப் பின் தொடர்ந்தான்.

11

தினம் தூங்கவில்லை. தூக்கம் வராமல் ரமணியும் மயில்சாமியும் ரங்கனும் தடுத்தார்கள். அவள் மேற்கொண்டு என்ன செய்வாள்? செய்யமுடியும்! இருபத்தைந்து லட்சம் ரூபாய் என்றால் எவ்வளவு என்று நிர்ணயமாக அவளால் அறிந்துகொள்ள முடியவில்லை என்றாலும், அது ஒரு பெரிய

தொகை. அதன்மூலம் தான் ஒரு பணக்காரியாகிவிடலாம் என்பதைப் புரிந்துகொண்டாள். ரங்கனுடைய கைக்குப் பணம் வந்துவிட்டாலே போதும். அவளுடைய கைக்கு வந்த மாதிரிதான்.

ஆனால் வராது போலிருக்கிறதே?

சீட்டுக் கடைக்காரன் ரங்கனுடைய பெயரை எழுதி வைத்துக்கொள்ளாமல் ரமணியின் பெயரை அல்லவா எழுதி வைத்திருக்கிறான்? சீட்டும் ரமணியின் பெயரில் இருக்கிறது. அவளுக்குத் தெரியும், ரங்கன்தான் வாங்கியிருக்கிறான், ரமணியிடம் ஒப்படைத்திருக்கிறான் என்றெல்லாம். இவ்வளவு முட்டாள்தனமாக யாராவது இருப்பார்களா?

திடீரென்று அவளுடைய குறுக்குப் புத்தி சிந்திக்க ஆரம்பித்தது.

அவள் பணத்தின்மீது உரிமை கொண்டாட வேண்டும். எப்படி? ரங்கன் ஒருவன் மூலமாகத்தான் உரிமையின் கொண்டாட்டம் ஆரம்பிக்க முடியும்.

ரங்கன் அவள்மீது அபரிமிதமாக ஆசை கொண்டிருக்கிறான். ஆனால் அதுவரைக்கும் அவள் அவனை அலட்சியம் செய்திருக்கிறாள். அவனிடம் தான் இதுவரை கையாண்டிருக்கும் அணுகுமுறையை மாற்றிக்கொள்ள வேண்டும். ஆனால், இதனால் எப்படி ரங்கனால் ரமணியிடமிருந்து, பரிசுச் சீட்டைப் பெறமுடியும்? ரங்கன்—ரமணி இருவருக் இடையே அவள் எப்படிப் பாய்வாள்?

அவளுக்கு இன்னொரு யோசனையும் பிறந்தது. பேட்டை ரௌடிகள் சிலபேர்களை அவளுக்குத் தெரியும். மம்மட்டி கோவிந்து இருக்கிறான். பிக்பாக்கெட் காசி இரு றான். இருவரில் யாராவது ஒருவனுக்கு ஆயிரமோ இரண்டாயிரமோ தள்ளினால், [illegible] யின் குடலையே உருவி எடுத்து வந்து அவள் [illegible]

MithraVintha

மாலையாகப் போடுவார்கள். ஆனால் அவர்களுக்கு விஷயம் தெரிந்துவிடும். பரிசுச்சீட்டே அவனுடைய கைக்கு வராமலும் போய்விடலாம். மேலும் ரமணியைத் தாக்கு வதோ, அவனிடமிருந்து சீட்டைப் பறிப்பதோ அவ்வளவு எளிதாக இருக்காது. அவன் நேரே போலீசுக்குப் போவான். போலீஸ் என்று வந்தால், நிச்சயம் தோல்வி அவனுக்குத் தான். அவள் ஒரு தடவை பூக்கடை போலீஸ் ஸ்டேஷனில் ஒரு நாள் முழுதும் அடைக்கப்பட்டிருக்கிறாள்.

என்ன செய்ய?

அடிதடி முறை உதவாது என்றால் வேறு என்ன வழி?

பரிசுச் சீட்டிலிருந்து மனம் ரங்கனுக்கு வந்தது. நேற்றுக் காலை ஆபீசுக்குப் புறப்பட்டவன் இன்னும் வரவில்லை. அவன் அன்று ஆபீசுக்கே செல்லவில்லை; ரமணியும் அவ னுடைய சிநேகிதிப் பெண்ணும்கூட வரவில்லை என்று மயில்சாமி சொன்னான். அப்படியானால் என்ன அர்த்தம்? மூன்று பேருமாகப் பணத்தைப் பங்கு போட்டுக்கொள்ளு கிறார்களா? இந்தப் பட்டணத்தில் ரங்கனை எங்கே என்று தேடுவது?

மறுபடியும் ஆபீசுக்குச் செல்வது என்று முடிவு எடுத்து, மீண்டும் இரண்டு மூன்று தம்ளர் தண்ணீர் குடித்துப் படுக் கையில் விழுந்தாள்.

ரமணி சேலம் ரயில் நிலையத்தில் நின்றுகொண் டிருந்தான்.

அவனைக் கண்டதும் ரங்கன், ''ரமணி சார்...ரமணி சார்...இப்படிப் பண்ணிட்டீங்களே, ரமணி சார்!'' என்று அலறி அழுதான். ஒரு சிலர் அவனுடைய குரலைக் கேட்டு, நின்று வேடிக்கை பார்க்கத் தயாரானார்கள்.

'டேய் மடையா, ஏண்டா ஊளையிடறே? உனக்கு என்னாச்சு? மாலு, இவன் இப்படித்தான் ரயிலிலே அலறிட்டு வந்தானா?'

'இல்லையே... கும்பகர்ணன் மாதிரி தூங்கிட்டு வந் தானே! ரங்கா, என்ன நீ, யாரோ செத்துவிட்டமாதிரி அழறே? இது பிளாட்பாரம். பேசாமல் வா!'

'இன்னொருவாட்டி கத்தினே, உன்னை ஏர்க்காடு மலைக்காட்டிலே மரயோடு மரமாக் கட்டிப் போட்டுடுவேன்! வா பேசாம!' என்றான் ரமணி. பிறகு 'மாலு! மொதல்ல லாட்ஜுக்குப் போகலாம். குளிச்சு, டிபன் சாப்பிட்டப்புறம் மத்த வேலைகளைப் பார்க்கலாம்' என்றான்.

என்ன வேலை என்று மாலுவுக்கு இன்னமும் தெரியாது. இருந்தாலும் தலை ஆட்டினாள்.

நாலு ரோடு அருகே ஒரு பெரிய ஓட்டலின் முன் ஆட்டோ நின்றது.

'இறங்கு ரங்கா!' என்றான் ரமணி.

ரங்கன் மௌனமாய் இறங்கி, அவர்களைப் பின் தொடர்ந்தான். மாலு ஒரு தனி அறைக்குச் செல்ல, ரங்கனை அழைத்துக்கொண்டு ரமணி தன் அறைக்குள் பிரவேசித்தான்.

'ரங்கா பல் தேய்ச்சியா?'

'இல்லே.'

'மொதல்ல பல் தேய்ச்சுக் குளி. அதுசரி...குளிச்சப்புறம் போட்டுக்க கையிலே பாண்ட் ஷர்ட் கொண்டு வரலியா?'

'இல்லே!' என்ற ரங்கன், 'ரமணி சார் எதுக்கு என்னை இந்தச் சேலத்துக்கு வரச் சொல்லியிருந்தீங்க? நீங்க ரெண்டுபேரும் ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் கல்யாணம் செய்து கொள்ளப்போறீங்களா? அதுக்கு நான் சாட்சிக் கை யெழுத்துப் போடணுமா?' என்றான்.

ரமணி சிரித்தான்.

MithraVintha

'நீ ஒரு முட்டாள்னு உலகம் பூரா நினைக்கிறது. ஆனால் நீ முட்டாள் இல்லே! மூளை நன்னா வேலை செய்யறது. ஆமாம் நீ ஏன் ரயில்வே ஸ்டேஷன்லே அழுதே?'

'ஏன்னு உங்களுக்குத் தெரியாதா, ரமணி சார்...? எனக்கு...எனக்கு...'

'சரி, சரி, கொஞ்சநேரம் பேசாம இரு. மொதல்ல இந்த பாண்ட் ஷர்ட்டை சோப் போட்டுத் தோய்ச்சு, ஃபேனுக்கு அடியிலே காயப் போடு. ரெண்டுமணி நேரத்திலே காய்ஞ் சுடும். அதுவரையில் என் வேஷ்டியைக் கட்டிக்க' என்றான்.

'அதுக்கு முன்னாடி ஒரு முக்கியமான விஷயம் பேசணும் ரமணி சார்!'

'எதைப்பத்தி?'

'ராஜஸ்தான் லாட்டரிச் சீட்டு! என் டிக்கெட்டுக்கு இருபத்தைஞ்சு லட்சம் ரூபாய் விழுந்திருக்கு ரமணி சார்!'

'அப்படியா, ரொம்ப சந்தோஷம். போய்ப் பல் தேய்.'

டிக்கெட் உங்க கையிலே இருக்கு ரமணி சார்.'

'அதுக்கு இப்ப என்ன, நான் சொன்னதைச் செய்... போ!'

ரமணியை எதிர்த்துப் பேச ரங்கனுக்குத் தைரியம் வரவில்லை. ரமணியின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டால் அவன் டிக்கெட்டையே கண்ணில் காட்ட மாட்டான்.

குளியலறைக்குள் சென்ற ரங்கன் குழம்பிப் போனான். ஷர்ட்டைக் கழற்றுகையில் கை நடுங்கியது. அவன் ரமணி யிடம் ராஜஸ்தான் லாட்டரியில் இருபத்தைந்து லட்சம் ரூபாய் பரிசு விழுந்திருக்கிறது என்கிறான். அதற்கு எப்படிப் பட்ட உணர்ச்சியையும் காட்டாமல் ரமணி, 'அப்படியா, ரொம்ப சந்தோஷம் என்கிறான். டிக்கெட்டைப் பற்றிப் பேசும் பொழுது 'அதுக்கு இப்ப என்ன?' என்று லட்சியமில்

லாமல் பேசுகிறான். இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? எதற்குச் சேலத்துக்கு அவனை இந்த ரமணி அழைத்திருக் கிறான்? ஏர்க்காடு காட்டினுள் துரத்தி அடிக்கவா? ஏர்க்காடு எங்கே இருக்கிறது?

காடு என்றால் அதில் புலி, கரடி, யானை எல்லாம் இருக்குமே?

அவன் குளியலறையிலிருந்து திரும்பியபோது ரமணி இல்லை. ஒரு டீப்பாயின் மேல், இட்லி, வடை, பொங்கல் எல்லாம் இருந்தன. ஒரு பிளாஸ்க்கில் காபியும் இருந்தது.

துணிகளைக் காயப்போட்ட ரங்கன், கட்டிலின்மீது கிடந்த வேட்டியைக் கட்டிக்கொண்டான்.

இட்லியும் வடையும் லேசில் இறங்கவில்லை. ஆனால் வயிறு பசியில் இரைந்தது.

ரமணி எங்கே போய்விட்டான்?

பக்கத்து அறையில் மாலு இருக்கிறாள். இருவருமாக அங்கே டிபன் சாப்பிடுகிறார்களோ?' ரங்கன் எழுந்து கதவைத் திறக்க முயற்சி செய்தான். அது வெளியே பூட்டப் பட்டிருப்பது தெரிந்தது. ரமணி ஏன் அவனை இந்த அறை யில் வைத்துக் கதவைப் பூட்ட வேண்டும்?

திடீரென்று ஒரு யோசனை தோன்றியது.

ரமணி நடிக்கிறானா அல்லது உண்மையிலேயே லாட்டரிப் பரிசு பற்றித் தெரியாதா? பணத்தின்மீது எழுந்த வெறியில் இப்போது மூளை சுறுசுறுப்பாக வேலை செய்தது. ரமணியின் பெட்டியைக் குடைந்து பார்த்தால் என்ன?

கதவின் உள் தாழ்ப்பாளைப் போட்டுவிட்டுப் பெட்டிக்கு வந்தான். துணிமணிகள்தான் இருந்தன. பெட்டியின் அடிப்பாகம் வரை துழாவினான்.

பரிசுச் சீட்டு இல்லை.

MithraVintha

ரமணி சார் தன் மணிபர்சிலேயே வைத்திருக்க வேண்டும்.

சரியாகப் பத்து மணிக்கு ரமணி அறைக்கு வந்தான்.

'ஷர்ட்டும் பாண்ட்டும் காய்ஞ்சுடுத்தா ரங்கா?'

'ஷர்ட் காய்ஞ்சுடுத்து. பாண்ட் ஈரமா இருக்கு.'

'பரவாயில்லே. அதையே போட்டுக்க. வெயில்லெ கொஞ்ச நேரம் நடந்தால் காய்ஞ்சுடும். வா போகலாம்!'

'எங்கே ரமணி சார்?'

'நீ எங்கிட்டே கேள்வி கேட்கப்படாது. வாயை மூடிட்டு வரணும்.'

'எதுக்கு ரமணி சார் என்னை இப்படிப் பயமுறுத்தறீங்க? நீங்க இதுமாதிரி எப்பவுமே என்கிட்டப் பேசினதில்லே?'

''இப்பத்தானே சொன்னேன், நீ கேள்வி கேட்கப்படாதுன்னு. நீ ஒரு முட்டாள். நான் எவ்வளவு முட்டிண்டும் நீ அந்த பஜாரி கழுத்திலே தாலியைக் கட்டினே. அதுக்கு அனுபவிக்கறே. இப்ப நான் அவகிட்டேந்து உன்னைக் காப்பாத்தப்போறேன்!'

'அவ என் பெண்ஜாதி ரமணி சார்! அவளுக்கு வாய் கொஞ்சம் அதிகம்தான்... அதுக்காக...'

'பேசாமல் வா!' என்ற ரமணி, ஒருகணம் நின்று 'இப்ப நீ, நான், மாலு மூணுபேரும் ஒரு இடத்துக்குப் போகப் போகிறோம்! அங்கே நீ அனாவசியமாப் பேசப்படாது. பேசினா காரியமே குட்டிச்சுவராகிவிடும்!'

'என்ன காரியம் ரமணி சார்?' ரங்கனால் கேள்வி கேட்காமல் இருக்க முடியவில்லை.

ரமணி பதில் பேசாமல் கதவைப் பூட்டினான். தன் அறை வாயிலின் முன் மாலு முகமெல்லாம் சிரிப்பாய் நின்று கொண்டிருந்தாள். ரங்கனை அவள் பார்த்தபோது, அவனுக்கு அது ஏளனச் சிரிப்பாகப் பட்டது.

ஆட்டோவிலிருந்து இறங்கிய பிறகுதான் ரங்கன், தான் பாரத ஸ்டேட் வங்கியின் முன் நிற்பதை உணர்ந்தான்.

'வா, ரங்கா' என்றான் ரமணி. இப்போது அவனுடைய குரலில் கடுமை இல்லை.

வங்கி மேலாளர் அறைக்குள் மூவரும் பிரவேசித்தார்கள்.

'வாடா ரமணி! சொன்னபடி ரெண்டுபேரையும் அழைச்சு வந்துட்டே... மிஸ் மாலு, ஐ'ம் சிவா! மானேஜர் ஆஃப் திஸ் ப்ராஞ்ச். ரமணியின் மாமா பிள்ளை. உன்னைப் பத்தி ரமணி சொல்லியிருக்கான். உட்கார்ப்பா ரங்கா, உட்கார்.'

மாலு சிரித்தாள்.

ரங்கனுக்குத் தலை சுற்றியது. அவன் இந்தச் சிவாவை முன்பின் பார்த்ததில்லை. ஆனால் அவர் அவனைப் பல நாள் பழகியதுபோல பெயர் சொல்லி அழைக்கிறார்.

'ரங்கா உட்கார்' என்றான் ரமணி.

பயம் எப்போதோ போய்விட்டது. ரங்கன் உட்கார்ந்தான்.

'ரமணி, நீ சொன்னபடியெல்லாம் செய்துடறேன். அதுக்கு முன்னாடி ரங்கனுக்கு என் வாழ்த்தைத் தெரிவிச்சுடறேன்!'

'அதெல்லாம் ஒண்ணும் தேவை இல்லை சிவா! இந்த லாட்டரி டிக்கெட் மெட்ராஸ்லே இருந்தா அதைப் பெண்டாட்டி, மாமனார் ரெண்டுபேருமாச் சேர்த்து சுக்குநூறா

MithraVintha

ஒழிச்சுப் போட்டுடுவா! நான் சொன்னபடி இவன்பேர்ல ஒரு அகௌண்ட்டை ஓபன் பண்ணு. நாத்துஒண்ணு ரூபா யோட அகௌண்ட் ஆரம்பிக்கட்டும். அப்புறம் இந்த லாட்டரிச்சீட்டு மூலமா வர்ற பணத்தை அதிலே சேர்த்துடு.'

ரங்கன் தான் ஏன் இன்னும் மயங்கி விழவில்லை என்று தன்னையே கேட்டுக்கொண்டான்.

'சே, என்ன மனிதன் அவன்? சுத்தமான பாலில் விஷம் இருக்கிறது என்று ரமணியை எடை போட்டானே?'

'இதிலே ஒரு கையெழுத்துப் போடு ரங்கன். அப்புறம் இமே ரெண்டு 'X' மார்க் பென்சில்லே போட்டிருக்கே. அங்கே ரெண்டு கையெழுத்துப் போடு' என்றார் மானேஜர்.

ரங்கன் கை நடுங்காமல் கையெழுத்துப் போட்டுக் கொண்டிருக்கையில், 'ரமணி! நான் இன்னிக்கே டிக்கெட்டை ஜெய்ப்பூருக்கு அனுப்பிடறேன். இன்கம்டாக்ஸ் நாப்பது சதவீதம் கழிப்பாங்க. பத்து சதவீதம் ஏஜெண்ட் கமிஷன்னு குறைப்பாங்க. ரங்கன் கணக்கிலே இட்டத்தட்ட பதிமூணரை லட்சம் வரும். அது வந்தப்புறம் என்ன செய்யணும்னு சொல்லு. அப்படிச் செய்யறேன்!' என்றார் மானேஜர்.

'பதிமூன்றரை லட்சம்தானா ரமணி சார்?' என்றான் ரங்கன்.

ரமணி பதில் கூறாமல் விறைத்துப் பார்த்தான். சிவா, 'ஆமாம் ரங்கா! வருமானவரி ஏஜெண்ட் கமிஷன்னு நிறையப் போயிடும்! ஆனா மீதி இருக்கே! அதுவே பெரிய தொகையாச்சே!' என்றார்.

'இந்தப் பணத்தை நான் சொல்றபடிதான் நீ முதலீடு செய்யணும் சிவா! உங்க பாங்க்லே பிக்சட் டெபாசிட்டுக்கு என்ன வட்டி கொடுப்பீங்க? பதினோரு சதவீதம் நேஷனல் சேவிங்ஸ், ஐடிபிஐ, யூனிட் ட்ரஸ்ட் இதிலெல்லாம் அதிக டிவிடெண்ட் கிடைக்கிறது. அதனாலே...'

'ஒரு நிமிஷம் ரமணி!' என்ற சிவா 'இந்தவருஷம் மார்ச் முப்பத்தொன்றுக்கு முன்னாடி பணம் வந்துடும். அதுக்குச் சொத்து வரி உண்டு. இதை மறந்துடாதே!' என்றான்.

'நான் எதையும் மறக்கலேடா சிவா! இந்த ரங்கன் அஞ்சாறு வருஷமா மாசம் தவறாம அம்பது நாறுன்னு செலவழிச்சு லாட்டரி டிக்கெட் வாங்கிட்டு வர்றான். இப்ப அதிர்ஷ்ட தேவதை இவனைப் பார்த்துச் சிரிச்சிருக்கா. ஒவ்வொரு சிரிப்பிலும் ஒவ்வொரு அர்த்தம் இருக்கு. இல்லையா? இப்ப தெய்வம் சிரிக்கிற சிரிப்புக்கு என்ன அர்த்தம்னு எனக்கு முழுமையா விளங்கல்லேன்னாலும் அது விபரீதமா இவனைத் தாக்கிடுமோங்'கற பயம் எனக்கு இருக்கு! இந்த ரங்கனுக்குப் பணத்துமேலே ஆசை இருக்கிற அளவுக்கு, அதை அனுபவிக்கத் திறமை கிடையாது. ஏன்னா இவனாலே தன்னிச்சையா எதையும் சிந்திக்க முடியாது. அதனாலதான் நான் இங்கே வந்து இவனுக்காக பிளான் போட வேண்டியிருக்கு.'

'நீ என்ன சொல்றியோ, அப்படிச் செய்யறேன் ரமணி!'

'அப்ப குறிச்சு வைச்சுக்க.'

'சொல்லு.'

'சொத்து வரி எவ்வளவுன்னு தெரியாது. நீ அப்புறமாக் கணக்குப் போட்டு அதைத் தனியா வை. ஏப்ரல் மாசத்திலே யூனிட் ட்ரஸ்ட்டோட ஒரு திட்டம் அமுலுக்கு வரும். அதிலே மூணு லட்சம் போடலாம். மாசா மாசம் மூவாயிரம் இவன் செலவுக்கு வரும். அப்புறம் உன் பாங்க்லே ரெண்டு லட்சம் அஞ்சு வருஷத்துக்குப் போடு. வருஷா வருஷம் வர்ற வட்டியும் அதிலேயே இருந்து வளரட்டும். அஞ்சு வருஷத் துக்கு அப்புறம் மூணேமுக்கால் லட்சத்துக்கும் அதிகமா வரும். அஞ்சு லட்சமாச்சா? பாக்கியை நேஷனல் சேவிங்ஸ்ல போடு.'

'ஜாயின்ட் அகௌண்ட் இல்லையே?' என்று கேட்டான் சிவா.

MithraVintha

'இல்லை. எல்லாம் இவன் பெயரில். விலாசம், ரங்கன், கேர் ஆப் ரமணி, என் வீட்டு விலாசம்தான் உனக்குத் தெரியுமே?'

'ஓகே...என்ன சாப்பிடறீங்க?'

'எல்லோருக்கும் ஜில்லுன்னு கொண்டுவரச் சொல்லு' என்ற ரமணி, ரங்கன் பக்கம் திரும்பி, 'உன் பரிசுப் பணம் இங்கே பத்திரமா இருக்கும். டெபாசிட் ரசீது, அப்புறம் நேஷனல் சேவிங்ஸ் பத்திரம் எல்லாம் இந்த பாங்க் லாக்கர்லே இருக்கும். லாக்கர் அகௌண்ட் மட்டும் நம்ப ரெண்டுபேர் பேர்லேயும் இருக்கும். சாவி என்கிட்டதான்! பயப்படாதே, உன் கையெழுத்து இல்லாம யாராலும் பணத்தைத் தொட முடியாது!'

அங்கேயே அவன் கால்முன் சாஷ்டாங்கமாய் விழுந்து ரமணியின் கால்களைத் தன் கண்ணீரால் கழுவ வேண்டும் என்று தோன்றியது ரங்கனுக்கு. ஆனால் இடம் சரியாக இல்லை.

தன்னையும் மீறி, 'தனத்துக்கு?' என்ற அவன், 'அவ கேட்டால் என்ன சொல்றது?' என்றான்.

'பளாரென்று கன்னத்தில் அறை! பணம் வந்தால் கூடவே பலமும் வந்துடும்!' என்றான் ரமணி.

12

ரமணியும் மாலுவும் தங்களுக்குள் சிரித்துப் பேசிக் கொண்டு வெளியேற, ரங்கன் வங்கியை விட்டு வெளி வர மனம் இல்லாமல் பித்துப் பிடித்தவனைப்போல் நின்றான். ரமணி அவனுக்காக, அவனுடைய நலனை உத்தேசித்துச் செய்திருந்த ஏற்பாடுகளில் திருப்தி இருந்தாலும், உள்ளூர பயம் கவ்வியது. லாட்டரிச் சீட்டை இந்த மானேஜர்

ஜெய்ப்பூருக்கு அனுப்புவாரா? இன்னும் சில வாரங்களில் பல லட்சம் ரூபாய் நிச்சயமாக வந்துவிடுமா? அவனுக்கு லாட்டரிப் பணம் முழுவதையும் கரென்சி நோட்டுகளின் உருவத்தில் பார்க்கக் கொள்ளை ஆசை. அது இப்போது சாத்தியமில்லை.

திடீரென்று ரமணியின் குரல் கேட்டது.

'ரங்கா!'

'என்ன ரமணி சார்?'

'என்ன இங்கேயே நின்னுட்டிருக்கே...? நானும் மாலுவும் நடந்துபோய்க்கிட்டிருக்கிறப்ப, திரும்பிப் பார்த்தா, உன்னைக் காணோம்... வா, ஓட்டலுக்குப் போகலாம்.'

ரங்கன் வேறுவழி தெரியாமல் மௌனமாக நடந்தான்.

'லாட்டரிச் சீட்டைப் பத்தியே நினைச்சுக்கிட்டிருக்காதே! உனக்குப் பைத்தியம் பிடிச்சுடும்.'

'பாதிப் பிடிச்சாச்சு. ரமணி சார்!'

'ஏன் என்னாச்சு?'

'பாங்க் மானேஜர் ஏதானும் தில்லுமுல்லு பண்ணிடுவாரோன்னு பயம்!'

'அறைஞ்சேன்னா... ஏன்டா, சீட்டைப் பாங்க்லே கட்டினதுக்கு ரசீது இருக்கு. இல்லே?'

'இருக்கா சார்?'

'எங்கிட்ட இருக்கு. பேசாம வா!'

மூவரும் ஓட்டலை அடைந்தார்கள்.

'ரங்கா! நாம ஏன் ஒருநாள் ஏர்க்காடு போகப்படாது? ஜில்ஜில்லுன்னு இருக்கும். மலை முகட்டிலேந்து கீழே பார்க்கறப்ப நீ உன்னையே மறந்துடுவே!'

MithraVintha

ரமணி சொல்லியிருந்த ஏர்க்காடு மலையும் காடுகளும் நினைவுக்கு வர, ரங்கன் 'வேணாம் சார்! நாம மெட்ராஸ் போயிடலாம்' என்றான்.

'உன் இஷ்டம்...நீ இப்ப ஒரு லட்சாதிபதி...என்னைவிட எல்லாவிதத்திலும் உசந்தவன்... மெட்ராசுக்கே போயிடுவோம்! மாடி பக்கத்து அறையிலே இருக்கா... ஏர்க்காடு ட்ரிப் கிடையாதுன்னு சொல்லிடறேன்.'

'நான் என்னிக்கும் உங்களைவிட உசந்தவன் இல்லே ரமணி சார்... இனிமே அப்படிப் பேசாதீங்க... ஏதோ அதிர்ஷ்டம் அடிச்சது. அவ்வளவுதான்.'

'அப்ப நீ என்னை உதறித் தள்ளமாட்டேன்னு சொல்லு.'

'உங்க பேச்சே எனக்குப் பிடிக்கலே, ரமணி சார்!'

'இனிமே நான் பேசப்போகிற பேச்சுக்களும் எடுக்கப் போகிற நடவடிக்கைகளும்கூட உனக்குப் பிடிக்காமல் போகலாம் ரங்கா!'

'என்ன சார் செய்யப்போறீங்க?'

'போகப் போகத் தெரியும்' என்ற ரமணி, 'மெட்ராஸ் போனதும் நீ உன் ஆபீஸ் வேலையை ராஜினாமா செய்துடு' என்றான்.

'சார்...சார்...'

'நான் சொன்னபடி செய்... நீ இப்ப ஒரு மிலியனர்... அதாவது பத்து லட்சத்துக்கும் அதிகமாச் செல்வம் உள்ளவன்... முதலாளி ரமேஷுக்குச் சமம்!'

'வேலை இல்லாம நான் எப்படி...?'

'முட்டாள். இப்போதைக்கு உன் செலவுக்கு ரெண்டாயிரம்னு மாசாமாசம் வரும். அது போதாதா?'

'தனம் என்னைக் குதறி எடுப்பா ரமணி சார்!'

'மாட்டாள்.'

'சார்!'

'உன்னைப் பார்க்கணும்னா, அவ என் வீட்டுக்குத்தான் வரணும். என் வீட்டுக்குள்ளே அவளை யாரும் அனுமதிக்க மாட்டாங்க.'

'புரியலே, ரமணி சார்!'

'என் வீட்டு மாடியிலே ஒரு சின்ன ரூம் இருக்கே. நீதான் பார்த்திருக்கியே. அதிலே தட்டுமுட்டுச் சாமானெல்லாம் கொட்டிக் கிடக்கு. நாளைக்கு ரூமை ஒழிச்சு, சுவருக்கெல்லாம் சுண்ணாம்பு பூசி, ஒரு ஃபேனையும் வாங்கிப் போட்டுடறேன். நீ அங்கேதான் தங்கப்போறே! பக்கத்திலே நல்ல நல்ல ஓட்டலெல்லாம் இருக்கு. வேளா வேளைக்கு அங்கே போய்ச் சாப்பிட்டுக்கலாம்.'

'அப்ப தனம்?'

'இனிமே அவ உனக்குக் கிடையாது.'

'ரமணி சார்!' ரங்கனுடைய மென்மையான குரல் பலமடைந்து கத்தியது.

ரமணி சிரித்தான்.

'மடையா...நீ அங்கே மறுபடியும் போனே, உன் பணத்துக்காக அவ உன் சோத்திலேயே விஷம் வைச்சுடுவா. அவ வைக்கிறதுக்கு முன்னாடி, மயில்சாமி தயாரா நிப்பான்!'

'தனம் என் பெண்டாட்டி, சார்!'

'இனியும் அவளைப் பத்திப் பேசாதே... எனக்கு அவ யார்னு தெரியும்!'

'ஆரம்பத்திலிருந்தே உங்களுக்குத் தனம்னா ஒரு வெறுப்பு, சார்!'

'கரெக்ட் ரங்கா... ரொம்ப கரெக்ட், நான் தனத்தை லவ் பண்ணினேன். நீயும் லவ் பண்ணினே. அவ என்னை உதறி எறிஞ்சுட்டு, உன்னைத்தான் லவ் பண்றதாச்

MithraVintha

சோக்கி உன் கழுத்திலே மாலையைப் போட்டா... அதனால் எனக்கு அவபோல வெறுப்பு. நீ ரொம்பக் கரெக்டா என் மனசைப் புரிஞ்சுக்கிட்டுப் பேசறே?'

'ஆபீஸ் வேலையை ராஜிநாமா பண்ணித்தான் ஆகணுமா சார்? கிடைக்கிற சம்பளம் கிடைச்சுட்டு வரட்டுமே?'

திடீரென்று மாலு பிரவேசித்தாள்.

'இங்கே என்ன தர்க்கம் ரமணி?'

'ஐயா சொல்றார். நான் வேலையை ராஜினாமாச் செய்யணும்னு. இது நியாயமா மாலு அம்மா?'

'ஓகே ரங்கா...நீ இப்போதைக்கு ராஜினாமா செய்ய வேண்டாம். ஆனா, நீ என் வீட்டு மாடியில்தான் தங்கறே!'

ரங்கன் என்ன சொல்லுவது என்று புரியாமல் மாலுவையே பார்த்தான்.

'நீ உன் வீட்டிலே தங்கினா உனக்கு ஆபத்து வரும் ரங்கா!' என்றாள் மாலு. பிறகு, 'உங்க வீட்ல ஏது இடம் ரமணி?' என்றாள்.

'மாடியிலே ஒரு லம்பர் ரூம் இருக்கு மாலு... அதை ஒழிச்சுட்டாக் காலியாயிடும்.'

'எங்க வீட்ல நிறையப்பேர் இருக்கா... நாம தனியாப் படுத்துக்கக்கூட ஒரு தனி ரூம் கிடையாதுன்னு சொல்லி நம்ப கல்யாணத்தையே ஒத்திப் போடறீங்களே ரமணி! இப்ப எப்படிப் புதிதாக ஒரு ரூம் பிறந்தது?'

'லம்பர் ரூம், மாலு. எட்டு அடிக்கு எட்டு அடி.'

'எட்டடிச் சதுரம் நமக்குப் போதாதாக்கும்!'

'இதுபத்தி அப்புறம் பேசலாம் மாலு!'

'எனக்கு இப்பப் பசிக்கிறது.'

'ரங்கா, மூஞ்சியை அலம்பிட்டு வா...எல்லாரும் போய்ச் சாப்பிடுவோம்' என்றான் ரமணி.

தினத்துக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஓர் அறை வீட்டுக்குள்ளேயே நடந்தாள். ரங்கன் எங்கே இருக்கிறான்? லாட்டரிச்சீட்டு என்ன ஆயிற்று?

திடீரென்று கதவைத் தட்டும் ஒலி கேட்டது.

முன்பின் பார்த்திராத ஒருவரும், அவருக்குப் பின்னால் தோளில் காமிராவைத் தொங்கவிட்டபடி ஒருவனும் நின்று கொண்டிருந்தார்கள்.

'யார்ங்க நீங்க?'

'ரங்கன் வீடு இதுதானே?'

'உன் புருஷனுக்கு ராஜஸ்தான் லாட்டரியிலே இருபத் தஞ்சு லட்சம் ரூபா விழுந்திருக்கு.'

'தெரியும். அதுக்கு இன்னா இப்ப?'

'லாட்டரிச்சீட்டை வித்த கடைக்காரர் நான்தான்.'

'லாட்டரிச்சீட்டை என் புருசன் பணம் குடுத்துத்தானே வாங்கினாரு?'

'ஆமாம்மா.'

'அப்ப என்ன? ஏன் இப்ப வந்து நிக்கறீங்க?'

'அவரைப் போட்டோ எடுக்கணும். இதோ இவரு அவரைப் பேட்டி கண்டு போட்டோ எடுத்து நாளைக்கு வர்ற பேப்பர்லே போடுவாரு.'

'அவர் வீட்லே இல்லே.'

'எப்ப வருவாரு?'

'தெரியாது.'

'எங்கே போயிருக்காரு?'

'தெரியாது.'

MithraVintha

'இருபத்தஞ்சு லட்சம் ரூபா பரிசு விழுந்திருக்குன்னு தெரிஞ்சதும் உங்க மனசு என்ன நினைச்சது?' என்று கேட்டார் நிருபர்.

'அத்தனை பணத்துக்கும் புண்ணாக்கு வாங்கி, பட்டணத்துத் தெருவிலெல்லாம் கொட்டணும்னு என் மனசு நினைச்சது...என்யா வெறுப்பு ஏத்தறீங்க? ரெண்டுநாளாப் புருசனைக் காணலியேன்னு நான் கண்ணீர் வுட்டுட்டிருக்கேன்.'

'உங்க முகத்தைப் பார்த்தா கண்ணீர் விட்ட முகமாத் தெரியலியே?' என்றார் நிருபர்.

'எல்லாம் வறண்டுபோச்சு.'

'ஏம்மா, தயவுபண்ணி போட்டோவுக்கு நிக்கறீங்களா?'

தனம் ஒரு நிமிடம் யோசித்தாள்.

அவள்தான் ரங்கனுடைய மனைவி என்று இந்தச் சென்னை முழுவதும் தெரிந்தால் என்ன? மறுநிமிஷமே ஒரு பயம் அவளைக் கலக்கியது.

'அவர் மொதல்ல வரட்டும். அப்புறம் போட்டோ எடுத்துக்கலாம்.' என்றாள்.

'இன்னிக்கு நான் ஆபீசுக்குப் போயிருந்தேன். ரங்கன் லீவுன்னு சொன்னாங்க!' என்றார் கடைக்காரர்.

'ஆபீஸ்ல அல்லார்க்கும் தெரிஞ்சுபோச்சா?'

தனம் அலறினாள்.

'ஏன் தெரியக்கூடாதா?' என்று கேட்டார் பத்திரிகை நிருபர்.

'தெரிஞ்சா என்ன? தெரியாமயாப் போகப்போவுது?'

'அதுசரி, அந்த ஆபீஸ்ல மயில்சாமின்னு ஒருத்தர் இருக்காரே... அவர் உங்க அப்பாவா?'

'ஆமாம். அவர் என்ன சொன்னாரு?'

'என்னைக் கொஞ்சம் மிரட்டினாரு, அவ்வளவுதான்.'

இருவரும் வெளியேறிய பிறகு தனத்தை ஒரு புது பயம் தாக்கியது. அப்பா மயில்சாமி முரடன். அவனை அவளாலேயே எளிதில் சமாளிக்க முடியாது. பயந்த சுபாவமுள்ள ரங்கன் என்ன செய்வான்?

அன்றைய இரவும் தூக்கமில்லாமல் முடிந்தது.

முதலாளி ரமேஷ் சாண்டில்யா ரங்கனைத் தம் அறைக்கு அழைத்தார்.

'வணக்கம் சார்!'

'உனக்கு லாட்டரியிலே இருபத்தைந்து லட்சம் விழுந்திருக்கு. டிக்கெட்டை எடுத்துட்டுச் சேலம் போறதாக ரமணி போன் பண்ணினார்.'

'ஆமாம் சார். நானும் சேலம் போயிருந்தேன்.'

'தெரியும். மாலு உன்னை அழைச்கட்டுப் போனா...'

'ஆமாம் சார்!'

'நடந்ததையெல்லாம் ரமணி சொன்னார். அவர்தான் உனக்கு இங்கே வேலை வாங்கிக் கொடுத்தவர். உன் டிக்கெட்டைப் பத்திரமா வைச்சுட்டிருந்தவரும் ரமணிதான். இன்னொருத்தரா இருந்திருந்தா இவ்வளவு பெரிய தொகை புத்தியை வக்கிரமாக்கியிருக்கும். ஆனால் ரமணி நேர்மையானவர். உன்னை ஏமாத்தலே.'

'ஆமாம் சார்! ரமணி சார் ரொம்ப நாணயமானவர்.'

'நீ அவருக்குக் கைம்மாறா எதுவும் செய்ய வேண்டாமா?'

'சார்! நான் படிப்பில்லாதவன். அனுபவமில்லாதவன். எப்படிக் கைம்மாறு செய்யறதுன்னுகூடத் தெரியாதவன்!'

'ஏன் ஒரு லட்சம் ரூபாயை ரமணிக்குக் கொடேன்!'

'கொடுக்கறேன் சார்... சத்தியமாக் கொடுக்கறேன்.'

MithraVintha

'ஆனா அவர் வாங்கிப்பாரோ என்னமோ? இப்போதைக்குக் கொடுக்க வேணாம். அவர் மனசைத் தெரிஞ்சுக்கிட்டுக் கொடு.'

'சரி சார்!'

ரங்கன் நீ இப்ப ஒரு பெரிய பணக்காரன். நீ இனிமே இந்த ஆபீஸ்லே வேலை செய்யறது உனக்கும் அழகு இல்லே! உன்னை வைச்சுக்கறது எனக்கும் நல்லது இல்லே!'

'சார் அப்படிச் சொல்லக்கூடாது! எனக்குப் பணம் வந்திருக்கு சார். ஆனா நிம்மதி போயிடுத்து. ஏன் பயமாக் கூட இருக்கு. நான் இந்த ஆபீஸ்லே தொடர்ந்து இருக்க ஆசைப்படறேன். அது கொஞ்சமாவது நிம்மதியைக் கொடுக்கும்.'

'இருக்கலாம் ரங்கன்! ஆனா, நீ ஒரு ப்யூன். இத்தனை நாளா உன்னை விரட்டி வேலை வாங்கினவங்க உன்னைக் காப்பி வாங்கி வரச்சொல்ல முடியாமத் தவிப்பாங்க... அதனாலே, நீ நாளையிலிருந்து வரவேண்டாம். ஒரு மாதச் சம்பளத்தை வாங்கிக்கிட்டுப் போயிடு.'

ரங்கனுடைய கண்கள் கலங்கின.

'சார்...சார்...'

'இதைப் பார் ரங்கன்! நான் உன் வயத்திலே அடிச்சிருந்தா, நீ கண்ணீர்விடறதுக்கு நியாயமிருக்கும். நீ இனிமே வேலை செய்துதான் வாழணும்னு இல்லை. அதுவுமில்லாம, ஒரு லட்சாதிபதியை நான் என் ஆபீசிலே பியூனா வைச்சுட்டிருந்தா, பலவிதமான பிரச்னைகள் வரும்.'

'பிரச்னை வராம...'

'நீ போகலாம் ரங்கன். உனக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.'

ரங்கன் முதலாளியின் அறையை விட்டு வெளியே வந்தான்.

'ஏண்டா ரங்கா அழறே?' என்று டீப்பாயின்மேல் உட்கார்ந்திருந்த வெங்கி கேட்டான்.

பதில் சொல்லாமல் ரமணி அருகில் வந்தான் ரங்கன்.

'என்ன ரங்கா என்ன ஆச்சு?'

ரங்கனால் பதில் சொல்ல முடியவில்லை. தேம்பித் தேம்பி அழுதான்.

'மொதல்ல அழுகையை நிறுத்து. நீ என்ன பச்சைக் குழந்தையா?'

'யோவ்! அந்த ஆளு பச்சைக் குழந்தை இல்லேய்யா! அவன் என் மருமகப்புள்ளே... அவனை நீதான்யா அழ வைக்கிறே!' என்று மயில்சாமி பாய்ந்து வந்தான்.

'இப்ப நீ சிரிக்க வைக்கப்போறியா? மொதல்ல இடத்தைக் காலி பண்ணு!'

'பண்ணாட்டி?'

'ராத்திரி வாட்ச்மேன் நீயா இருக்கமாட்டே!'

'பயம் காட்றியா? என் பொண்ணுக்கும் என் மருமகப் புள்ளைக்கும் இருபத்தஞ்சு லட்சம் ரூபா பிரைஸ் விழுந்திருக்கு...உனக்குக் கைமாத்து வேணும்னா எங்கிட்ட வா!'

'இருபத்தஞ்சு லட்சமா? பிரைஸா? உன் மருமகப் புள்ளைக்கா? யார் சொன்னா?'

'ஊரே சொல்லுது! ஏன் அந்த லாட்டரிக் கடைக்காரனே இங்கே வந்து சொன்னான்!'

'நீயும் நம்பினியாக்கும். பிரைஸ் வந்தது எனக்கு... இதோ இந்த ரங்கனை டிக்கெட்டை வாங்கி வரச் சொன்னதும் நான்தான்...இப்ப நீ உன் நடையைக் கட்டு... கைமாத்து வேணும்னா சுகந்திகிட்டே வாங்கிக்க...' ரமணி சிரித்துக்கொண்டே சொல்லச் சொல்ல மயில்சாமியின் ஆத்திரம் தலைக்கு ஏறிக்கொண்டே போயிற்று. மாலுவின் மேஜையிலிருந்த உருண்டையான கழியை எடுத்தான். ரமணியின் தலையைத் தாக்க ஓங்கினான். ரங்கன் நடு நடுங்கிப் போனான்.

MithraVintha

13

இதுவரையில் ரமணியின் பேச்சையும் மயில்சாமியின் முரட்டுத்தனத்தையுமே பார்த்து ரசித்துக்கொண்டிருந்த வெங்கி, மயில்சாமி கழியை எடுத்து ரமணியைத் தாக்க ஓங்கினதும் மின்னலாகப் பாய்ந்தான். மறுகணம் கெட்டியான மர உருளை அவனுடைய கைக்கு வந்தது.

'டேய் மயில்சாமி, உன்னை இங்கேயே தீர்த்துப் பிடுவேன்... ரமணி சாரை அடிக்கவா பார்க்கறே?'

'தாங்க்ஸ் வெங்கி!' என்ற ரமணி, 'பட்டை அடிச்சுட்டு வந்து நிக்கறான். அவனை மொதல்லே ஆபீசுக்கு வெளியே தள்ளிட்டுப் போ... நான் போலீசுக்குப் போன் பண்றேன்' என்றான்.

'யோவ் குமாஸ்தா, என் மருமகப் புள்ளையை ஏமாத்திட்டே இல்லை...நான் இப்ப போறேன்யா...நேரே பொண்ணையும் அழைச்சிட்டுப் போலீசுக்குப் போறேன். வக்கீல்ட்டே போறேன்.'

மயில்சாமி கத்திவிட்டு நகர்ந்தான்.

'ரமணி சார்! நீங்க அந்த ஆளைக் கண்டுக்காதீங்க... நாய் குரைக்கிறது' என்ற வெங்கி, 'ஏண்டா லட்சாதிபதி. உனக்கு ஊர்ல வேறே பொண்ணா கிடைக்கலே...போயும் போயும் ஒரு சாக்கடையின் பொண்ணைக் கட்டினியே!' என்று ரங்கனிடம் சீறினான்.

இன்னும் பயத்தில் வெலவெலத்துப் போய் நின்ற ரங்கன் பதில் ஏதும் கூறவில்லை. என்ன சொல்லுவது?

அவனுக்கு லாட்டரியில் முதல் பரிசு விழுந்திருக்கிறது. என்ன புண்ணியம்? மயில்சாமி அதில் உரிமை கொண்டாடத் தொடங்கிவிட்டான். நேரே தனத்திடம் போவான். அவளையும் மூட்டிவிடுவான். இந்த லாட்டரிப் பணம் இன்னும் என்னென்ன அனர்த்தங்களையும் விபரீதங்களையும் கொண்டு வரப்போகிறதோ!

ஒன்று மட்டும் அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது. பரிசு தனக்குத்தான் கிடைத்திருக்கிறது என்று ரமணி மயில்சாமியிடம் அழுத்தத்துடன் கூறியிருக்கிறான். இது அவனை தனத்திடமிருந்தும் மயில்சாமியிடமிருந்தும் காப்பாற்றத்தான். இத்தகைய உள்ளம் படைத்த ஒரு நல்ல மனிதனை மாலு கோடுகள் வரைய உபயோகிக்கும் கழியால் மயில்சாமி தாக்க இருந்தானே! ரமணியின் மண்டை பிளந்து போயிருக்குமே! அப்புறம் இந்த உலகத்தில் உதவி செய்ய யார் இருக்கிறார்கள்? அவனுடைய லாட்டரிப் பணத்தை யாரால் கச்சிதமாக நிர்வாகம் செய்ய முடியும்!

'ரங்கா!'

ரமணியின் குரல் கேட்கவே, அவன் தலைநிமிர்ந்து பார்த்தான்.

'நீ ஏன் உன் மூஞ்சியைத் தொங்கப் போட்டுட்டு நிக்கறே...நான் நாகரீகமாகப் பேசினேன். வெங்கி நாக்கைப் பிடுங்கிக்கற மாதிரிக் கேட்டான். அவ்வளவுதான்.'

எல்லாம் என் தப்புத்தான். ரமணி சார்... நீங்க சொல்லியும் கேளாம ஆபீசுக்கு வந்தேன்' ரங்கன் கேவினான்.

'உனக்குப் போக வேற இடம் இல்லே. அதான் வந்தே... சரி, முதலாளி என்ன சொன்னார்?'

மறுபடியும் அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. ரங்கனால் அடக்கிக்கொள்ள முடியவில்லை.

MithraVintha

'நாளையிலிருந்து நான் ஆபீசுக்கு வர வேண்டாம்னு சொல்லிட்டார்.'

ரமணி சிரித்தான்.

'எப்படி ரங்கா ஒரு லட்சாதிபதி ப்யூனா தொடர்ந்து இருக்க முடியும்?'

'என்ன ரமணி சார்! சும்மா சும்மா லட்சாதிபதி லட்சாதிபதின்னு கேலி செய்யறீங்க...'

'நான் சொல்றது கேலியாப் படறதா? சரி சரி. நீ கிச்சாமிகிட்டே இந்த மாசத்துச் சம்பளத்தை வாங்கிக்கிட்டு வீட்டுக்குப் போ!'

'நீங்க போறப்ப நான் கூட வர்றேன்...மயில்சாமி என்னை என்ன செய்வானோ, பயமா இருக்கு.'

'உன் கையிலே பணம் வர்ற வரைக்கும் அவன் ஒன்றும் செய்யமாட்டான்.'

'ரமணி சார்!'

'என்ன ரங்கா.'

'என் பெட்டியை எடுத்துட்டு வரலாமா?'

'ஏன் சாக்கு சொல்றே? 'என் மனைவி தனத்தைப் பார்த்துட்டு வரேன்'னு சொல்லேன்.'

ரங்கன் தலை குனிந்தான்.

'கடையோ ஒரு தடவை பார்த்துட்டு வா... தப்பு இல்லே. ஆனா அவ ஏதாவும் வம்பு பண்ணினா, இல்லே லாட்டரி பணம்பட்டதே... நீ சொன்னதான். ஆனா பணம்பற பலம் இருக்கு... அவ கத்தினா நீ திரும்பிக் கத்து...செலவு போன விஷயத்தை மட்டும் சொல்லிடாதே...அப்புறம் அவ தேடி அங்க போய் பாக்க மானேஜரையே பார்த்துடுவா!'

'சரி, ரமணி சார்!'

தனத்துக்குப் பசித்தது. ஆனால் வாய்க்கு எதுவும் பிடிக்கவில்லை. ரங்கன் என்ன ஆனான்? லாட்டரிப் பணம் என்னாயிற்று? ரமணி என்னென்ன தில்லுமுல்லுகள் செய்கிறான்? அவனை எப்படிச் சமாளிப்பது?

'தனம்...தனம்'.

மெல்லிய குரலை உடனே அடையாளம் கண்டு கொண்ட தனம், அவசர அவசரமாக எழுந்து கதவைத் திறந்தாள்.

'தனம் நான்தான்... நான்தான் வந்திருக்கிறேன்!'

'அதான் தெரியுதே... ஆமாம் நீ எங்கே திடீர்னு சொல்லாம கொள்ளாம அம்பேலாயிட்டே...?'

'முதலாளி அவசர வேலையா வீட்டுக்கு வரச் சொன்னாரு.'

'என்யா எங்கிட்டேயா ரீல் வுடறே நீ... ஆபீசுக்குப் போனா, அங்கே நீ இல்லை... அந்த ரமணி அய்யரு இல்லே. அந்த மாலும் பொண்ணு இல்லே... அல்லாரும் சேர்ந்து என்னாய்யா சதி செய்றீங்க?'

'சதி எதுவும் செய்யலே, தனம்!'

'லாட்டரிப் பணம் என்னாய்யா ஆச்சு? கொணாந்திருக்கியா?'

'இல்லே!'

'ஏன்... ஏன் கொணாரலே?'

'லாட்டரி டிக்கட்டுக்கு உடனே பணம் கெடைக்காது தனம்...ஒரு மாசம் ரெண்டு மாசம் ஆகும். ஜெய்ப்பூர்னு ஒரு ஊரு வடக்கே இருக்கு. டிக்கட்டை அங்கே அனுப்புவாங்க. வரி, அப்புறம் கமிஷன் எல்லாம் கழிச்சுட்டு, பாக்கி பணத்தை அனுப்புவாங்க...'

MithraVintha

'ஏன்யா அந்த ஆளு சொல்லிக் கொடுத்த பாடத்தை எங்கிட்டே ஒப்பிக்கிறியா?'

'சத்தியமா இல்லே தனம்! பிரைஸ் விழுந்தா முழுப் பணமும் தரமாட்டாங்களாம். இன்கம்டாக்ஸ் பிடிச்சுப் பாங்களாம். அப்புறம் டிக்கட்டு ஏஜெண்ட்டுக்கு வேறே கமிஷன் கொடுக்கணுமாம்.''

'மெய்யாலுமா? இல்லே கதை வுட்றியா?'

'முருகன்மேல ஆணையா?'

'அப்ப எவ்வளவுதான் ஒன் கைக்கு வரும்!'

'பதிமூணு லட்சத்துக்குக் கொஞ்சம் அதிகம்.'

'பூ இவ்வளவுதானா...ஆமாம் அதை இன்னா செய்யப் போறே?'

'மொதல்ல பணம் வரட்டும். தனம்!'

'நான் ஒன் பொஞ்சாதி... கந்தசாமி கோயில்ல என் கழுத்தில தாலி கட்டியிருக்கே. பணம் வந்திருக்கேன்னு, என்னை வுட்டுட்டு வேற ஒரு சிறுக்கி பின்னாடி ஓடினே, ஒன் எலும்பை ஒடைச்சுடுவேன்!'

'நீ உடைக்காமப் போனாலும் மயில்சாமி விடமாட்டான். தனம்!'

'இன்னாய்யா சொல்றே நீ?'

ரங்கன் அன்று ஆபீசில் நடந்ததை விவரித்தான். மயில்சாமியிடமிருந்து அவனைக் காப்பாற்ற ரமணி எப்படி பொய் சொல்லிச் சமாளித்தான் என்பதையும் கூறினான்.

'இப்ப என் கையில துட்டு இல்லே...?'

'என் கையிலும் பணம் இல்லே தனம்!'

'கடன் வாங்கு.'

'முடியாது தனம்!'

'இன்னாய்யா சொன்னே?'

'கடன் வாங்க முடியாதுன்னு சொன்னேன்!'

'யோவ்!' தனம் சீறினாள்.

'இதப் பாரு தனம்... இனிமே உன்னால என்னை விரட்ட முடியாது. நீ என் பேச்சுக்கு அடங்கிப்போனா என் பணத்திலே நீ சுகமா இருக்கலாம். ஏறுமாறாய்ப் பேசினே உனக்குச் சல்லிக்காசு கிடைக்காது... இதப் புரிஞ்சிக்க மொதல்ல...'

தனம் வாயடைத்துப் போய் நின்றாள். ரங்கனா இப்படிப் பேசுகிறான். இந்தத் துணிச்சல் எப்படி வந்தது? எங்கேயிருந்து வந்தது? ரமணி இவனுக்கு ஏதாவது மசி போட்டுவிட்டானோ? பணம் பேச ஆரம்பிக்கிறதா?'

'இந்தாய்யா, நீ இப்பப் பணக்காரன்தான். ஒத்துக்கறேன். அம்பது நூறுன்னு கைமாத்து வாங்கினா அது ஒனக்கு அவமானம்தான். நீ கடன் வாங்கத் தாவலே. நான் வீட்டைச் சமாளிச்சுக்கறேன்... பணம் வர்றப்ப வரட்டும்! நாம் இரண்டுபேர்தானே! சோத்துக்கா கஸ்டம்?'

'நீ ஒருத்திதான் தனம்!'

'இன்னா சொன்னே நீ?'

'தனம்! நான் ஆசைப்பட்டு உன்னைக் கட்டிக்கிட்டது என்னமோ நிசம்தான். ஆனா நீ எதுக்கு இந்தக் குள்ளனை, இந்த நோஞ்சானைக் கட்டிக்கத் தயாரா இருந்தேன்னு எனக்கு அப்பப் புரியலே! ஆனா கலியாணமான அன்னிலிருந்தே நீ என்னை ஒரு புருசனா மதிக்கலே! பணம் காய்க்கிற மரமாத்தான் என்னை உலுக்கி எடுத்தே! இனிமே நீயும் நானும் ஒரே வீட்லே இருந்து வாழறது என்னைப் பொறுத்தவரைக்கும் முடியாத காரியம்! நான் எங்கே இருந்தாலும் நீ தாராளமாச் செலவு செய்ய மாசா மாசம் பணம் வரும்! இப்ப நான் என் பெட்டியை எடுத்துட்டுப் போறேன்!'

MithraVintha

ரங்கன் நகர்ந்தான்.

'யோவ், நில்லுய்யா!'

இத்தனை காலமும் கண்களைத் தாழ்த்தியே பார்த்துப் பழக்கப்பட்ட ரங்கன் முதன் முறையாக அவளை ஏடுட்டுப் பார்த்தான். பிறகு விறைப்பாக—

'என்ன வேணும்?'

'நீ என் புருசன். நான் ஒன் பொண்டாட்டி!'

'அதுக்கென்ன இப்ப?'

'ஒனக்கு ஏதாலும் ஆச்சுன்னா பணம் அவ்வளவும் எனக்குத்தான் வரும் அதான் சட்டம்.'

'நான் செத்தப்புறம் என் பணம் யார் கைக்குப் போனா எனக்கு என்ன?'

'ஏன்யா, எங்கிட்ட இப்படியெல்லாம் பேச எப்படிய்யா ஒனக்குத் தைரியம் வந்தது? நான் ஏதோ ஒரு பேச்சுக்குத் தான்யா சொன்னேன! நீ சாகணும்னு நான் ஆசைப் படுவேனாய்யா?'

ரங்கன் மேலும் நின்று பேச விருப்பமில்லாமல் பெட்டியை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

'யோவ் நீ நாலு நாளுக்கு ஒரு வாட்டி என்னைப் பார்க்க வராட்டி, நான் இணைத்துலே வுளுந்துடுவேன்... அங்காளம்மாள்மேலே ஆணையாச் சொல்றேன்!'

மறுநாள் எல்லாத் தமிழ் தினசரிகளிலும் அவனுடைய பெயர் வந்தது. ஒரிரு பத்திரிகைகள் அந்த ஞாயிற்றுக் கிழமையன்று, பரிசு பெற்றவருடன் நடத்திய சிறப்புப் பேட்டி வெளிவரும் என்று உறுதி அளித்திருந்தார்கள். முதற் பரிசுச் சீட்டை ரங்கனுக்கு விற்ற கடைக்காரருடைய போட்டோ பிரசுரமாகியிருந்தது.

'ரங்கா, பேப்பரைப் பார்த்தியா?' என்று கேட்டுக் கொண்டே அறைக்குள் ரமணி பிரவேசித்தான்.

'பார்த்தேன்!'

'சிறப்புக் கட்டுரை வரப்போறதுன்னு எழுதியிருக் காங்க.'

'பார்த்தேன்!'

'பத்திரிகைக்காரங்களுக்கு நீ இப்ப இருக்கிற இடம் தெரியாதே!'

'தெரியாது ரமணி சார்!'

'அப்ப எப்படி பேட்டி காண வருவாங்க?'

'அதான் புரியலே!'

'ஒரு முக்கியமான காரியம் நீ செய்ய வேண்டியிருக்கு ரங்கா!'

'அது என்ன ரமணி சார்!'

'விடுதலை வாங்கிக்கணும்.'

'அப்படீன்னா?'

தனம் சும்மா இருக்கமாட்டா...அவ அப்பன் மயில்சாமி கருவிட்டிருக்கான், அதனாலே நீ தனத்தை விவாகரத்து செய்தாகணும்.'

'விவாகரத்தா? அது தப்பில்லையா ரமணிசார்...'

'ஒழுங்காக் குடும்பம் நடந்தா விவாகரத்து தப்புத் தான்... நீதான் குடும்பத்தை ஒழுங்கா நடத்தலியே...'

'கலியாணம் ஆகிக் கொஞ்ச காலம்தான் ஆகியிருக்கு ரமணி சார்!'

'அதெல்லாம் எனக்குத் தெரியாது. ரங்கா... நீ நிம்மதியா, உயிருக்கு பயமில்லாம வாழணும்னா, லாட்டரிப் பணம் பாங்க்ல வந்து சேர்றதுக்கு முன்னாடி விவாகரத்துக்கான நோட்டீசை நீ அனுப்பியாகணும். நான் உனக்காக வக்கீலைப் பார்க்கிறேன்.'

MithraVintha

'என்ன காரணம்னு கேட்டா நான் என்ன சொல்லுவேன் ரமணி சார்?'

'அதை நான் பார்த்துக்கறேன்.'

சொல்லிவிட்டு ரமணி வெளியேறினான்.

சுகந்தியைப் பொறுத்தவரை ஆபீஸ் வெறிச்சோடியது.

மயில்சாமிக்குப் பதிலாக ஒரு கூர்க்கா காவலாளியாக வந்தான். அவனுடன் ஒரு நிமிடம்கூட அவளால் பேச முடியவில்லை. ரங்கன் இருந்தால் அவனை வம்புக்கு இழுக்கலாம். அவனும் இல்லை. எங்கே வசிக்கிறான் என்றுகூடத் தெரியவில்லை. ரமணி எங்காவது அவனை ஒளித்து வைத்திருக்கிறானோ?

நெய் தோசை இச்சா என்றுமே அவளுடன் அனாவசியமாகப் பேசமாட்டான். மிச்சம் யார் இங்கிருக்கிறார்கள். வெங்கி. அவனுக்குக் குதிரை பாஷைதான் தெரியும். அப்புறம் மாலு! அவளுக்கு ரமணியுடன் சிரித்துப் பேசவே நேரம் போதவில்லை.

என்ன செய்ய!

திடீரென்று ஒரு குரல் கேட்டது.

'குட்மார்னிங் மேடம்... என் பெயர் சிவலிங்கம். எஸ். லிங்கம்னுதான் கும்பகோணத்திலே எல்லாருக்கும் தெரியும்.'

'இப்ப எனக்கும் தெரிஞ்சுட்டுது. உங்களுக்கு என்ன வேணும்?'

'என் தம்பி ரங்கன் இந்த ஆபீஸ்ல வேலை செய்யறான்.'

'அதோ, அங்கே கண்ணாடி போட்டுட்டு, சிவப்பா ஒருத்தர் உட்கார்ந்திருக்கிறாரே அவரை விசாரியுங்க' என்றாள் சுகந்தி.

எஸ். லிங்கம் ரமணியை அணுகினான்.

'குட்மார்னிங் சார்! என் பெயர் எஸ். லிங்கம். சிவலிங்கம்.'

'கும்பகோணத்திலேந்து வர்றீங்க... அங்கே ஒரு பலசரக்குக் கடை நடத்தறீங்க' என்றான் ரமணி.

'ஆமாம் சார்... எப்படி சார் தெரியும் உங்களுக்கு... நீங்களும் கும்பகோணம்தானா? என் கடைக்கு வந்திருக்கீங்களா?'

'நீங்க யாருன்னு தெரிஞ்சுக்க ஏன் கும்பகோணம் வரணும். லிங்கம்! உங்க தம்பி ரங்கனைத்தான் ஆறு வருஷம் முன்னாடி அடிச்சு விரட்டிட்டீங்களே!'

லிங்கத்தின் முகம் சுருங்குயது.

'சரி, என்ன விஷயமா நீங்க வந்திருக்கீங்க?'

'எனக்கு என் தம்பியைப் பார்க்கணும்!'

'தம்பியைத்தான் நீங்க என்னிக்கோ கை கழுவிட்டாச்சே மிஸ்டர் லிங்கம்.'

'அது எங்க குடும்ப விஷயம். ரங்கன் இப்ப எங்கே இருக்கான்?'

'என் பாதுகாப்பிலே!'

'அப்படீன்னா?'

'அவனை நான் ஜாக்கிரதையாப் பார்த்துக்கறேன்னு அர்த்தம்...'

'நாங்க சந்திக்க நீங்க உதவி செய்யணும்.'

'செய்யறேன்.'

'எப்ப எங்கே பாக்கலாம்?'

'மயிலாப்பூர்லே லஸ்னு ஒரு இடம் இருக்கு. அந்த லஸ்லே நாகேஸ்வரராவ் பார்க் அப் [illegible] இருக்கு. இன்னிக்குச் சாயங்காலம் [illegible] ஆறு மணிக்கு

MithraVintha

'ரொம்ப தாங்க்ஸ்...'

'ஒரு விஷயம் தெரியுமா மிஸ்டர் லிங்கம்?'

'என்ன சார்?'

'உங்க தம்பி ரங்கனுக்கு ராஜஸ்தான் லாட்டரியிலே முதல் பரிசா இருபத்தஞ்சு லட்சம் விழுந்திருக்கு.'

'அது தெரிஞ்சுதான் நான் கும்பகோணத்திலிருந்து வந்திருக்கேன் சார்! என் தம்பி படிப்பறிவு இல்லாதவன். ரொம்ப சாது. சாமர்த்தியம் போதாது. அவனுக்கு நல்லது பொல்லாதது சொல்ல யார் இருக்காங்க?' என்றான் லிங்கம்.

'அதான் நீங்க வந்துட்டீங்களே!' என்றான் ரமணி, சிரித்துக்கொண்டே.

14

எட்டு அடிச் சதுர அறைக்குள் சிறைப்பட்ட ரங்கனுக்கு ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு யுகமாக அலுத்தது. ரமணி நல்ல எண்ணத்துடன்தான் அவனைத் தன் வீட்டு மாடியில் தங்க வைத்திருக்கிறான். இதை அவன் உணர்ந்திருந்த போதிலும், ரமணிமீது அவனுக்குக் கோபம் வந்தது. அவன் ஏன் சுதந்திரமாக வெளியே நடமாடக்கூடாது? யார் அவனை என்ன செய்துவிட முடியும்?

அறையில் ரமணி ஓர் அலாரம் கடிகாரத்தை வைத்திருந்தான். முக்கால் மணி நேரம் வேகமாக ஓடும் கடிகாரம். இப்போது அது நான்கு மணி என்று அறிவிக்க ரங்கன் சரியான நேரத்தைக் கணக்கிட்டுப் பார்த்தான். மூன்றே கால். பிற்பகல் ஒரு மணிக்கு ஆழ்வார்ப்பேட்டை ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு வந்த அவனுக்குப் பசிக்கவில்லையென்றாலும்,

ஒரு 'ஸிங்கிள்' டீயாவது குடித்து வர வேண்டும் என்று தோன்றியது. சிறைக் கைதியைக்கூட அவ்வப்போது வெளியே உலாவ விடுவார்கள். ஏதானும் வேலை கொடுப்பார்கள். சுவாசிக்க நல்ல காற்று கிடைக்கும். லாட்டரியில் இருபத்தைந்து லட்சம் ரூபாய் பரிசு பெற்ற ஒரு பெரிய பணக்காரன் இப்போது சூழ்நிலை காரணமாக ஓர் அறையில் அடைக்கப்பட்டிருக்கிறான். ரங்கனுக்கு இதை நினைத்துப் பார்த்தபோது அழுகையே வந்தது.

திடீரென்று கதவைத் தட்டும் ஓசை கேட்டது. ரமணி நேரத்துக்கு முன்னாலேயே வந்துவிட்டானா? இருக்காது. ரமணி என்றால், 'ரங்கா' என்று குரல் கொடுத்திருப்பான். பின் யார் கதவை இடிக்கிறார்கள்?

அச்சத்துடன் அவன் கதவை லேசாகத் திறந்தான்.

'நான்தான் ரங்கா!'

'வாங்கம்மா.'

ரமணியின் தாயார் கோமதி புன்முறுவலுடன், "'ஏம்ப்பா பயந்துட்டியா?'" என்று கேட்டாள்.

'ஆமாம்மா. ரமணி சார் சொல்லியிருக்கார், நான் ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்னு...'

'ரமணி எல்லா விவரத்தையும் எங்கிட்ட சொல்லியிருக்கான். கவலைப்படாதே... உன்னைப் பார்க்க ஒருத்தன் வாசல்லே நிக்கறான்.'

'யார் அம்மா?'

'பேர் கேட்டேன். வெங்கின்னான். இங்கே வரச் சொல்லட்டுமா... இல்லே நீ இறங்கிப் போய்ப் பார்க்கறியா?'

'நானே போறேம்மா!'

'வெங்கி நல்லவன்தானே?'

'ரொம்ப நல்ல மனுசன் அம்மா.'

MithraVintha

ரங்கன் அவசர அவசரமாய் வெளியேறினான்.

காம்பவுண்டு கேட் அருகே போன பிறகுதான் அதிர்ச்சி அவனைத் தாக்கியது. அவனுக்காக மயில்சாமி காத்துக் கொண்டிருந்தான். ரமணியை மரக்கழியால் அடிக்க வந்தவன், எப்படி அவன் இருக்கும் இடத்தைத் தேடிக் கண்டுபிடித்திருக்கிறான்?

'வா, மாப்ளே... எம்மாம் நேரம் நான் காத்துட்டிருக்கிறது?' என்றான் மயில்சாமி.

ரங்கன் அவனிடமிருந்து தப்பி ஓட நினைத்து விரைவாய்த் திரும்ப, மயில்சாமி ஒரே எட்டில் பாய்ந்து ரங்கனுடைய கையைப் பிடித்தான்.

'ஏன் பயந்து சாகறே... நான் என்ன உன்னைக் கொலை செய்யவா வந்திருக்கேன்?'

ரங்கனுக்கு ஒருவிதமான அசட்டு தைரியம் திடீரெனப் பிறந்தது.

'ரமணியை நீ தாக்கினதுக்கு போலீஸ்லே புகார் கொடுத்திருக்காங்களே? நீ எப்படி இங்கே வந்தே?'

'எவனுக்கு தில்லு இருக்கு, எம்பேர்ல கம்ப்ளெயிண்ட் கொடுக்க... விசயம் தெரியுமா மாப்ளே, எனக்கு வேலை பூட்டுது.'

ரங்கன் மௌனமாக அவனையே பார்த்தான்.

'ஏன் அப்படிப் பாக்கறே... எனிக்கு இன்னாத்துக்கு இனிமே வேலை? என் மருமகப் புள்ளைதான் லட்சதிபதியாயிட்டானே!'

'உனக்கு என்ன வேணும் மயிலு? நான் இங்கேதான் இருக்கேன்னு உனக்கு யார் சொன்னாங்க?'

'இதொரு கேள்வியா மாப்ளே? ரமணி கையில நீ இருக்கே... அவன் உன்னை எங்கே உட்கார்த்தி வைப்பான்? பெரிய ஓட்டல்லேயா... மயில்சாமின்னா நீ வரமாட்டேன்னு, வெங்கின்னேன்... அந்த அம்மாவும் ஏமாந்திடுச்சு.'

'உன்னோடு நின்னு பேச எனக்கு இஷ்டம் இல்லே.'

'எனிக்கு இருக்குதே!' மயில்சாமி சிரித்தான்.

'என்ன வேணும்?'

நான் எதுக்கு வருவேன் மாப்ளே? மொதல்ல நீ வேணும். அப்பாலே உன் பணம் வேணும்.'

'நான் தனத்துகிட்டே சொல்லிட்டே வீட்டை விட்டு வந்துட்டேன் மயிலு... நீ என்னைத் தொந்தரவு செய்யாதே.'

'தனம் என் மவ. அவ உன் பொண்ஜாதி.'

'எனக்கு அவளோட வாழ இஷ்டமில்லே... அவ செலவுக்கு மாசா மாசம் பணம் அனுப்பிடறதாச் சொல்லிட்டேன். நீ போயிரு!'

'நீ சொன்னாப் போயிடுவேனா மாப்ளே... அவளோட வாழ உனக்கு விருப்பம் இல்லாட்டி என்ன, அவளுக்கு உன்னோடு வாழ ஆசை இருக்கே... வா வூட்டுக்கு.'

'முடியாது!'

'உனக்கு ஒரு விசயம் தெரியுமா ரங்கா?'

'முதன் முதலாக 'மாப்பிள்ளை' சொந்தத்தைக் கை விட்ட மயில்சாமியின் குரல் இறுகியது.

'என்ன?' என்று ரங்கன் கேட்கவில்லை.

'நீ செத்தா உன் பணமெல்லாம் என் பொண்ணுக்குத் தான் வரும். நீ சாக ஆசைப்படறியா?'

சிலிர்த்தெழுந்த பயத்துடன் ரங்கன் மயில்சாமியைப் பார்த்தான். பிறகு மெல்லிய குரலில், 'என்னைக் கொலை செய்யப்போறியா?' என்றான்.

'என் கையாலே செய்யமாட்டேன்! பயப்படாதே! ஆனா அப்படி உனக்கு ஒரு முடிவு வந்துட்டா, பணத்தை அனுபவிக்காமயே நீ பூடுவே! நீ

Mithra Vintha

ஆட்லே ஒளிஞ்சுகட்டு என்ன சுகத்தைக் காணுவே... வா, என் கூட வா... தனத்தோட வாழ்ந்தா வாழ்ந்து இட, வாழாமப் போனாலும் சரி. அது உன் இஷ்டம். பணத்தால உலகத்தில என்னென்ன சொகமெல்லாம் கெடைக்குமோ அதெல்லாம் நான் வாங்கித் தாரேன்! ஒரு காலத்தில நான் மிலிட்டரி லிலே இருந்தப்ப விஸ்கியும் ரம்மும்தான் குடிப்பேன்! இப்பப் பணம் இல்லே. பட்டைக்கு வந்துட்டேன்... அந்தக் காலத் திலே என்கூடச் சுத்தின குட்டிங்க எவ்வளவு பேர் தெரியுமா? அவங்களுக்கெல்லாம் இப்ப வயசாகியிருக்கும்... ஆனா இப்பவும் புதுப்புதுக் குட்டிங்களெல்லாம் இருக்காங்க.'

மயில்சாமி பேசிக்கொண்டே போனவன், ரங்கன்மீது இருந்த பிடியைத் தளர்த்தினான். இடது கையால் பாக் கெட்டிலிருந்து பீடியை எடுத்து, ரங்கனை முழுதும் விடு வித்து வலதுகையால் வத்திப்பெட்டியை எடுக்கப் போனான்!

அவன் பிடியைப் பற்றவைக்கவும் ரங்கன் அசுர வேகத் துடன் வீட்டை நோக்கிப் பாய்ந்து ஓடவும் சரியாக இருந்தது.

அவன் வேகமாக வருவதைக் கண்ட கோமதி, பதற்றத் துடன் தன் கணவரை அழைத்தாள்.

அவர் வராந்தாவுக்கு வர, ரங்கன் மூச்சு இரைக்க ஓடி வந்து நின்றான்.

'என்ன ரங்கா, என்ன நடந்தது?' என்று கேட்டாள் கோமதி.

'அந்த ஆளு வெங்கின்னு பொய் சொல்லியிருக்கான் அம்மா. அவன் பேரு மயில்சாமி. அவன் கொலை செய்யவும் பயப்பட மாட்டான்.'

'நீ மொதல்ல மாடிக்குப் போய் உன் ரூமிலே இரு' என்றாள் கோமதி. பிறகு கணவரைப் பார்த்து, 'அவன் உள்ளே வந்தா என்ன செய்யறது?' என்று கேட்டாள்.

'வரட்டும் பார்க்கலாம்' என்றார். ரமணியின் தகப்பனார் சுந்தரம்.

அவர்கள் இருவரும் எதிர்பார்த்ததுபோல மயில்சாமி வீட்டை நோக்கி வரவில்லை. மாறாகத் திரும்பிச் சென்று கொண்டிருந்தான்.

'இந்த ரங்கனுக்கு ஆபத்து வருமோ வராதோ, இவ னாலே நம்ப ரமணிக்கு நிச்சயமா ஏதானும் ஆபத்து வரும்!' என்றாள் கோமதி.

'உன் புள்ளைக்கு இந்த வீட்டைப்பத்தி லட்சியம் இடையாது. ஊரார் பிரச்னையைத் தலைமேல் போட்டுக் கொண்டு கூத்தாடுவான்.'

'இப்ப என்ன செய்யறது?'

'மொதல்ல ரங்கனை வேற எங்கானும் ஓர் இடத்திலே போய்த் தங்கச்சொல்லு...! இந்த வீடு என்ன அகதிகள் முகாமா?' என்றார் சுந்தரம்.

'ரமணி வரட்டும். இதுக்கு ஒரு முடிவு கட்டுவோம்' என்றாள் கோமதி.

ரங்கனுடைய அண்ணன் பெயர் சிவலிங்கம் என்று சொல்லிக்கொண்டு வந்தவன் வெளியேறியதும், மாலு ரமணி அருகே வந்து உட்கார்ந்தாள்.

'யார் அந்த ஆள் ரமணி?'

'இன்னொரு கழுகு!'

'புரியும்படியாச் சொல்லுங்களேன் ரமணி.'

அனாதைப் பொணம் கிடந்தா அஞ்சு மைல் உயரத்தி லேந்து கழுகுகள் பாய்ந்து வந்து கொத்தித் தின்னும். ஓர் அனாதைக்குப் பணம் வந்துட்டா, சொந்த பந்தத்தை மறந்துபோனவங்களெல்லாம், மறுபடியும் சொந்தம் கொண்டாடி அவனைப் பிய்ச்சுத் திங்க வருவாங்க... இவன்

MithraVintha

அவர்களிலே ஒருத்தன். ரங்கனுக்கு அண்ணாவாம். பேர் எஸ். லிங்கமாம். அதாவது சிவலிங்கம். கும்பகோணத்திலே உப்பு, புளி, மிளகாய் விக்கறவன்.'

'என்ன வேணுமாம்?'

'இவ்வளவு சொல்லியும் கேள்வி கேட்கிறியே மாலு? நாளைக்கு நீ என் மனைவியா வர்றப்ப, உன்னை நான் எப்படிச் சமாளிப்பேன்?'

'உங்களை லவ் பண்றப்பத்தான் என் புத்தி மழுங்கறது ரமணி! கலியாணமாகி நீங்க என் கைக்குள்ளே அடங்கிட்டா என் புத்தி கூர்மையாகிவிடும்.

தாழ்ந்த குரலில் பேசிய மாலு சிரித்தாள்.

'ரங்கனுக்குப் பரிசு வந்ததில் கஷ்டத்தை அனுபவிக்கிறவன் நான்தான் மாலு!'

'உங்க இடத்தில் வேறு ஒரு ஆள் இருந்திருந்தா நடக்கிற கதையே வேறே!'

'ஏன்? என்ன கதை நடந்திருக்கும்?'

'ரங்கன் ச விக்காசு பார்த்திருக்கமாட்டான். எந்தக் கோர்ட்டுக்குப் போயிருந்தாலும் அவன் ஜெயிக்கமாட்டான். ஏன்னா லாட்டரிச் சீட்டை வித்தவன் அவன் பேரை எழுதி வைக்கவில்லை. சீட்டும் ரங்கன் கையில் இல்லை.'

'அதாவது ரங்கன் தலையில் மிளகாய் அரைச்சிருப்பான்னு சொல்றே!'

'நீங்க சந்தனம் அரைச்சிருக்கீங்க ரமணி. நேர்மையின் உச்சாணிக் கொம்புக்கே போயிட்டீங்க!'

'நேர்மைக்கு நீளமும் இல்லே, உயரமும் இல்லே மாலு! ரங்கனை ஒரு ரூபாய்க்கு ஏமாத்தறதும் ஒண்ணுதான், பல லட்சங்களுக்கு ஏமாத்தறதும் ஒண்ணுதான். நான் நினைச்சிருந்தா அவனை ஏமாத்தியிருக்கலாம். ஆனா அந்த எண்ணமே வரலே...அன்னிக்குத் தற்செயலா ஒரு 'மாலைப்'

பத்திரிகையைப் பார்த்தேன். அப்பாவைப் பார்க்க ஒருத்தர் வந்திருந்தார். பெரிய கொட்டை எழுத்தில் '25 லட்சம் ரூபாய் யாருக்கு?' என்று எழுதி, கீழே நம்பரும் போட்டிருந்தது. அப்ப எனக்கு ரங்கன் ஞாபகமே வரலே. ஆனா வந்தவர், பேப்பரை மறந்துபோய் வைச்சுட்டுப் போயிட்டார். மறுபடியும் படிக்கறப்ப முதல் பரிசிலிருந்து கடைசி பரிசு வரை நம்பரெல்லாம் போட்டிருக்கிறதைப் பார்த்தேன். அப்பத்தான் ஏதாலும் ஒரு பரிசாவது ரங்கனுக்கு விழுந்திருக்குமான்னு பார்த்தேன்.'

'முதல் பரிசுன்னு தெரிஞ்சதும் உங்களுக்கு என்ன தோணித்து?'

'ஏது, பத்திரிகை நிருபர் கேட்கிறமாதிரிக் கேட்கிறே! சரி, சொல்றேன். ஒரு தடவைக்குப் பத்துத் தடவையா டிக்கட்டையும் நம்பரையும் மாறிமாறிப் பார்த்தேன். நடுவிலே சிவாவின் நினைவு வந்தது. டிக்கட்டைப் பத்திரப் படுத்தறதுதான் முதல் வேலைன்னு தோணித்து. உள்ளூர் பாங்க்கைவிட வெளியூர் பாங்க்தான் நல்லதுன்னு பட்டது. அம்மாகிட்டக்கூட எந்த ஊர்னு சொல்லாம சேலத்துக்கு ரெயில் ஏறினேன்...ரங்கனுடைய பணத்தை மத்தவங்க நார் நாராக் கிழிக்கக்கூடாதுங்கற எண்ணம்தான் இருந்தது.'

'இப்படிப்பட்ட நேர்மைக்கு என்ன பரிசு கிடைச்சது உங்களுக்கு? வெங்கி மட்டும் சமயத்திலே பாய்ஞ்சு வந்து காப்பாத்தியிருக்காவிட்டால் உங்க மண்டையை மயில்சாமி ரெண்டாப் பிளந்திருப்பான்!'

'இப்படிப்பட்ட அனர்த்தத்தை நான் நிச்சயமா எதிர் பார்க்கலே மாலு! ஆனா அதிலேர்ந்து ஒண்ணு புரிஞ்சுக்கிட்டேன... ரங்கனுக்கு வரக்கூடிய ஆபத்து எனக்கும் உண்டுன்னு...'

'பணத்திலே பாதி இல்லேன்னாலும், ஆபத்திலே பாதி இருக்கு ரமணி! நான் ஒண்ணு சொன்னா கேட்பீங்களா?'

MithraVintha

'என்ன மாலு?'

'படிப்போ புத்தியோ இல்லாத ஒரு ரெண்டுங்கெட்டானுக்கு நீங்க மகத்தான உதவி செய்ஞ்சுட்டீங்க. எல்லாப் பணத்தையும் அவன் பேர்லேயே போட ஏற்பாடும் செய்துட்டீங்க... இனிமேலும் ரங்கனை உங்க வசம் வைச்சுப் பானேன்...? அவனை அவிழ்த்து விட்டுடுங்களேன்.'

'அதுக்கு இன்னும் நேரம் வரலே மாலு! வந்ததும் நானே ஒதுங்கிடுவேன்.'

'நீங்க மட்டும் ரங்கனை மோசம் செய்திருந்தா... சரி சரி ஒண்ணுமில்லே!'

'சொல்ல வந்ததைச் சொல்லு மாலு. ஏன் தொண்டைக் குள்ளேயே நிறுத்திட்டே!'

'நீங்க இமயத்தின் உச்சியிலிருந்து விழுந்திருப்பீங்க. என் காதலே சுக்குநூறா வெடிச்சுச் சிதறியிருக்கும்.'

'நான் என்னைச் சத்திய சந்தன்னு சொல்லிக் கொள்ளலே மாலு. பணத்தைத் தூச்சமா மதிக்கிறவனும் இல்லே! சொல்லப்போனா நான் ஒரு மனக்கோட்டை கட்டி வைச்சிருக்கேன். லட்சம் லட்சமா சம்பாதிக்கத் திட்டம் போட்டிருக்கேன்! நான் நினைச்சிருந்தா இந்த ரங்கனை ஏமாத்தியிருக்கலாம் மாலு. இந்த லட்சங்கள் மூலமா மேலும் பல லட்சங்களைச் சம்பாதிக்க வழி ஏற்படுத்தியிருக்கலாம். ஆனா எனக்கு அப்படிச் செய்யத் தோணலே... ஏன்னும் சொல்லத் தெரியலே.'

'யூ ஆர் ரியலி க்ரேட் ரமணி.'

'யாருமே க்ரேட்டும் இல்லே. யாருமே ஸ்மாலும் இல்லே மாலு. எனக்கு என்ன கிடைக்கணுமோ அது நிச்சயம் கிடைக்கும்... இதிலே எனக்கு நம்பிக்கை இருக்கு.'

'ஆனா பணம் காசு எல்லாத்துக்கும் மேல, எனக்கு ஒரே ஒரு ஆசைதான் இருக்கு ரமணி. அது என்னன்னு நான் சொல்லித்தான் தெரியணும்னு இல்லே.'

'எனக்கு மட்டும் அந்த ஆசை இல்லியா மாலு? நாம் ஏன் இன்னும் கொஞ்ச காலம் பொறுமையாக் காதல் உலகத் திலேயே வாழப்படாது!'

'வேற வழிதான் இல்லியே! அப்படியே வாழ்ந்துட்டுப் போவோம்!'

அன்று மாலை வீட்டை அடைந்ததும், ரமணி நடந்த தையெல்லாம் அம்மாமூலம் அறிந்துகொண்டான். மயில் சாமி ஒரு சாதாரண முள் அல்ல, விஷ முள் என்று தனக்குள் முணுமுணுத்தபடி ரங்கன் இருக்கும் அறைக்கு விரைந்தான்.

ரங்கன் கதவைத் திறந்தான். முகம் பயத்தில் வெளிறிப் போயிருந்தது.

'எதுக்கும் பயப்படாதே ரங்கா! நான் இருக்கேன்!'

'ரமணி சார்... அந்த மயில்சாமி வந்தான்.'

'எல்லாம் அம்மா சொன்னா. இப்ப மணி அஞ்சரை. நான் உனக்காகக் கொஞ்சம் சீக்கிரமே ஆபீசை விட்டு வந்தேன்... ஆறுமணிக்கு நீ ஒருத்தரைச் சந்திக்கப் போறே!'

'யார் ரமணி சார்!'

'நீயே பார்த்துத் தெரிஞ்சுக்க! நீ அசந்துபோயிடுவே! பணம் வந்தாலே மதிப்பும் மரியாதையும் தானா வந்துடறது! இன்னிக்கு உன்னை வாழ்த்த ஒருத்தன் தலை தெறிக்க வர்றான். ஆறு மணிக்கு நீ வருவேன்னு சொல்லியிருக்கேன். ஒரு கிழிசல் பாண்ட்டும் கிழிசல் சட்டையும் போட்டுக்கிட்டு ரெடியா இரு!'

சொல்லிவிட்டு ரமணி வெளியேற ரங்கன் மேலும் குழம்பிப்போனான்.

MithraVintha

15

"ரமணி சார்! எதுக்கு என்னை இந்தப் பார்க்குக்கு அழைச்சுட்டு வந்திருக்கீங்க?' என்று ரங்கன் கேட்டான், சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டே.

'அதோ குழந்தைகளெல்லாம் விளையாடறாங்களே, அதை நீ பார்த்து ரசிக்க வேண்டாமா? அதுக்குத்தான்.'

'ரமணி சார்! நான் மனசு இடிஞ்சுபோயிருக்கேன். என்னிக்கு எந்த வேளையிலே மயில்சாமி கத்தியும் கையுமா எம்பேர்ல பாய்வான்னு பயந்து சாகறேன்! நீங்க என்னைக் கேலி செய்யறீங்க!'

ரமணி பதில் கூறவில்லை. கடிகாரத்தின் பெரிய முள் பன்னிரண்டில் நிற்க, அவன் பூங்காவின் நுழைவாயிலைப் பார்த்தான். இருபத்தைந்து லட்சத்தைச் சூறையாட வருகிறவன் நிச்சயமாகக் காலதாமதம் செய்யமாட்டான் என்று அவனுக்குத் தெரியும்.

சிவலிங்கம் நுழைவாயிலைக் கடந்து முன்னேறி நடந்து வந்துகொண்டிருந்தான்.

'அதோ ஒரு ஆள் வேட்டியும் மஞ்சள் கலர்லே அரைக்கை ஜிப்பாவுமா தொந்தி வழிய நடந்து வர்றானே. அவன் யார்னு தெரியுமா, ரங்கா உனக்கு?'

ரங்கன் ஓரிரு வினாடிகள்தான் அந்த உருவத்தைப் பார்த்தான். பார்த்தவன் காலில் தேள் கொட்டியதுபோல.

'என் அண்ணன். அவர் எதுக்கு இங்கே வர்றார்?' என்று அலறினான்,

'மயில்சாமி எதுக்கு வந்தான்?'

'பணத்துக்கு.'

'இவனும் அதுக்குத்தான்.'

'எனக்கு அண்ணனைப் பார்க்க வேண்டாம். ரமணி சார்!'

'நான் இருக்கேன். பயப்படாதே!'

சிவலிங்கம் பூங்காவின் மற்ற பகுதிகளில் தேடிக்கொண்டிருக்கையில் ரங்கன் பயத்தில் சிலிர்த்துக்கொண்டிருந்தான்.

பலசரக்குக் கடையில் அவன் பட்ட அடி உதைகள். அவன் வீட்டில் சரியாக மாவாட்டவில்லை என்ற காரணத்துக்காக அண்ணி கொட்டிய வெந்நீர், ஒரு மாதம் ஓட்டலில் கிடைத்த பத்து ரூபாய்க்கும் லாட்டரிச் சீட்டு வாங்கியதற்காக. அண்ணன் அடித்த செருப்பு, ஏதோ ஒரு கோபத்தில் அண்ணி அவனைக் கிணற்றடியில் இரவு முழுதும் உட்கார வைக்க, அப்போது அவனுடைய தலையில் கொட்டித் தீர்த்த மழை...

எல்லாம் இப்போது இமைக்கும் நேரத்தில் ரங்கன் கண் முன் டி.வி. விளம்பரங்கள் போல வந்தன.

மீண்டும் அவன் தலைநிமிர்ந்தபோது 'தம்பீ...' என்ற குரல் கேட்டது.

'அண்ணா!' என்று மறு குரல் கொடுக்க அவன் நா அசையவில்லை.

'தம்பி! எப்படி இருக்கே...? சுகமா இருக்கியா...? அண்ணி உன்னை ரொம்ப விசாரிச்சா.'

ரங்கன் பதில் பேசவில்லை. என்னதான் வெகுளியாய், அப்பாவியாய் இருந்தாலும், இருபத்தைந்து லட்சம். இறந்துபோன சொந்த பந்தங்களை உயிர் மூட்டி எழுப்புகிறது என்பதை உணர்ந்தான்.

Mithra Vintha

என்கூடப் பேசக் கூச்சப்படறான்.

'சார்! என் தம்பி அவனை நான் லாட்ஜுக்கு அழைச்சுட்டுப்போறேன். ஆட்சேபனை இல்லேன்னா' என்றான் லிங்கம் புன்முறுவலுடன் அமர்ந்திருந்த ரமணியைப் பார்த்து.

ரமணி இப்போது வாய்விட்டுச் சிரித்தான்.

'என்ன எஸ். லிங்கம் இப்படிக் கேக்கறீங்க? நீங்க இவனுக்கு அண்ணன். உங்களுக்கு இவன் தம்பி. நீங்க அழைச்சுட்டுப் போறதுக்கு நான் ஏன் ஆட்சேபனை செய்யணும்?'

'நீங்கதானே சொன்னீங்க, ரங்கன் உங்க பாதுகாப்பிலே இருக்கிறதா?'

'இப்பவும்தான் சொல்றேன். ரங்கனுக்கு உங்ககூட நீங்க தங்கியிருக்கிற லாட்ஜுக்குப் போகச் சம்மதம்னா போகலாமே!

'வா தம்பி போகலாம்.'

'நீங்க யார்னு எனக்குத் தெரியாது' என்றான் ரங்கன். இப்படிப் பேசத் தனக்கு எப்படிச் சாதுரியம் பிறந்தது என்று அவன் தனக்குள்ளேயே வியந்துபோனான்.

'ரங்கா, என்னை யார்னு உனக்குத் தெரியலையா... பாவம் நீ. சின்ன வயசிலேயே மந்தனா இருப்பே... ஆனா இப்ப மறதியுமா வந்துட்டுது? நான் உன் அண்ணன்டா. லிங்கம்டா... நானும் உன் அண்ணி மரகதமும் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்லே கலியாணம் செய்ஞ்சுக்கிட்டப்ப நீதானே ஒரு சாட்சிக் கையெழுத்து போட்டே அதையும் மறந்துட்டியா?'

'சரி. நீங்க என் அண்ணனாவே இருங்க. இப்ப எதுக்கு என்னைப் பார்க்கக் கும்பகோணத்திலேர்ந்து வந்திருக்கீங்க?'

'பார்த்தாயா. நீயே நான் எங்கேந்து வந்திருக்கேன்னு சொல்லிட்டே. இவர்தான் சொல்லியிருக்கணும்.'

'அவர் எனனோட ரமணி சார். இங்கே வந்து சேர்ற வரைக்கும் அவரு உங்களைப்பத்தி ஒரு வார்த்தைப் பேசலை!'

'சரி, அப்படியே இருக்கட்டும். நாம ஒரே தாயோட வயத்தில் பொறந்தவங்க.'

'அம்மா சாகறதுக்கு முன்னாடி என்னையும் தம்பி கோவிந்துவையும் உங்க கையில ஒப்படைச்சுட்டு என்ன சொல்லி அழுதாங்க.'

'என்ன சொன்னாங்க, ரங்கா!'

'நான் அம்மாவையும் அம்மா செத்ததையும் நீங்க உங்க சௌகரியத்துக்கு மறந்துபோயிடுவீங்க... 'டேய் லிங்கம்! இந்த ரங்கன் சாதுடா...படிப்பு வரலே அவனை நீதான் உன் புள்ளைமாதிரிப் பார்த்துக்கணும்...கோவிந்து யார் சொல்லையும் கேக்காத முரடனா வளர்றான். அவனை நீதான் ஒரு வழிக்குக் கொண்டு வரணும். இவங்க ரெண்டு பேரையும் ஆளாக்கி விட்டுட்டுத்தான் நீ ஒரு பெண்டாட்டியைத் தேடிக்கணும்...' இப்படி அம்மா உங்கிட்ட சொல்லலே? நீங்களும் சரின்னு அம்மாவுக்குச் சத்தியம் பண்ணிக் கொடுக்கலே!'

'இதையெல்லாம் ஏன் ரங்கா, இப்ப எனக்கு ஞாபகப் படுத்தறே?'

'நீங்க என்னை அடிச்சீங்க, உதைச்சீங்க. மூணு நாள் சோறு தண்ணி இல்லாம பட்டினி போட்டீங்க. அண்ணி வெந்நீரை எம்மேலே கொட்றப்ப நீங்க அவளைத் தடுக்காம வேடிக்கை பார்த்தீங்க... எனக்கு புத்தி மந்தம்தான். நான் அஞ்சாங் கிளாசுக்குமேல் படிக்காதவன்தான். ஆனா ஆண்டவன் எனக்குன்னு ஒரு தெய்வத்தைக் கொடுத்திருக்கான்... இந்த ரமணி சார்தான் அந்தத் தெய்வம்! இப்ப நான் எதுக்கு உங்களோட வரணும்?'

Mithra Vintha

சிவலிங்கம் ஓரிரு நிமிடங்கள் வாயடைத்துப் போய் நின்றான். பிறகு மெல்ல—

'இப்படியெல்லாம் பேச உனக்கு யார் சொல்லிக் கொடுத்தாங்க ரங்கா?' என்றான்.

'அனுபவம் பேசறது!' என்றான் ரமணி. இன்னும் சிரித்துக்கொண்டே, 'லிங்கம் நீங்க எதுக்கு உங்க தம்பியைப் பார்க்க இப்ப வந்திருக்கீங்கன்னு சொல்லிட்டா ஒரு வேளை ரங்கன் மனசு இளகி மாறலாம் இல்லியா?' என்றான்.

ரமணியின் கேள்வியின் உள்ளர்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல், யதார்த்தமாக எடுத்துக்கொண்ட லிங்கம், 'நீங்க சொல்றதும் சரிதான்' என்று கூறிவிட்டு, தம்பியைப் பார்த்து, 'ரங்கா, உன் உடம்பு துரும்பாய்ப் போயிடுத்து. நீ நல்லாச் சாப்பிட்டு நிறைய நாள் ஓய்வு எடுத்துக்கணும். நல்ல இடத்தில் பெண் எடுத்து உனக்குக் கட்டி வைக்கணும். நம்ப அம்மா சொன்ன வாக்கை நான் அப்பக் காப்பாத்தலே! இப்பவாவது காப்பாத்திடறேன் வா! நாம கும்பகோணத்துக்குப் போவோம்.'

'ரமணி சாரும் கூட வந்தால் நான் வரேன்.'

ரமணி வாய்விட்டுச் சிரித்துவிட்டுச் சொன்னான். 'ரங்கா, உனக்குச் சமர்த்தும் சாமர்த்தியமும் வந்துட்டுது. உன்னை யாராலும் இனிமேல் அசைக்க முடியாது!'

சிவலிங்கத்துக்கு ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வந்தது.

'என்ன சார் நீங்க பக்கவாத்தியம் வாசிக்கிறீங்களா? இவன் என் தம்பி! இவன்மேலே எனக்கு உரிமை உண்டு!'

'அதை நிலைநாட்ட உங்களுக்கு இப்பத்தானே வேளை வந்தது? இந்த ஆறு வருஷத்தில் தம்பி எங்கே இருக்கிறான். வேலையிலே இருக்கானா இல்லே பிச்சை எடுக்கிறா

னான்னு ஒரு தடவையாவது விசாரிச்சிருக்கீங்களா? ஒரு பொங்கலுக்கு ஒரு தீபாவளிக்குக் கூப்பிட்டிருக்கீங்களா? எப்படிக் கூப்பிடுவீங்க? இவன் விலாசமே நேத்துப் பேப்பர் பார்த்துத்தானே தெரியும்?'

'வாயை மூடுங்க!' என்றான் சிவலிங்கம். பிறகு, 'வாடா ரங்கன்!' என்றான்.

'நீங்க என்னை வாடான்னு கூப்பிடறீங்களா இல்லே என் லாட்டரிப் பணத்தை வரச்சொல்லிக் கூப்பிடறீங்களா?' என்றான் ரங்கன்.

'சபாஷ் ரங்கா!'

'நான் போலீசுக்குப் போவேன்...'ரமணிங்கற ஒரு ஆள் என் தம்பியைத் தன் பிடியில் வைச்சிருக்கான்னு சம்ப் ளெய்ன்ட் கொடுப்பேன்!'

'ஏன் நின்னுட்டே இருக்கீங்க லிங்கம்! இதே ரோட்லே நேரே போனா வாய்க்கால் வரும். வாய்க்காலைத் தாண்டி ஒரு நிமிஷம் நடந்தா இடது பக்கமா போலீஸ் ஸ்டேஷன் இருக்கு. அங்கே துரைசாமின்னு இன்ஸ்பெக்டர் இருக்கார். வில்லியம்ஸ்னு சப்-இன்ஸ்பெக்டர். ஸ்டேஷன் ரைட்டர் பேரு கோதண்டராமன். போய் மொதல்ல கம்ப்ளெய்ன்ட் கொடுங்க. அப்புறம் நாங்க ரெண்டுபேரும் வர்றோம்!'

சொன்ன ரமணி எழுந்தான்.

'வா ரங்கா... நீ மனுஷன். ஒரு லட்சாதிபதி. தலை நிமிர்ந்து நடந்து வா...'

வீட்டை அடைந்ததும் ரமணி ரங்கனைத் தன் தாயாரிடம் அழைத்துச் சென்றான்.

'என்னடா ரமணி?' என்று கேட்டாள் கோமதி.

'அம்மா, நீ எனக்காக ஓர் உபகாரம் செய்யணும்.'

'என்ன? அதுக்குத்தானே நான் பிறந்திருக்கேன்!'

MithraVintha

'விளையாடாதே அம்மா... மூணுபேருக்குத் தினமும் சமைக்கிற நீ இன்னி ராத்திரியிலிருந்து இவனுக்கும் சேர்த்துச் சமைச்சுடு...'

'ரமணி சார்... வேண்டாம் சார், வேண்டாம் ரமணி சார்... அம்மாவுக்கு என்னாலே ஒரு சிரமமும் இருக்கப் படாது.

'இப்ப நிலைமை மோசமாயிட்டு வர்றது அம்மா! கொஞ்ச நாள்லே எல்லாம் சரியாப் போயிடும்? அது வரைக் கும் இவன் வெளியே வாசல்ல போகப்படாதுன்னு எனக்குப் படறது.

'ஆமாமாம்! இன்னிக்குக்கூட ஒரு ரௌடி பேரை மாத்திச் சொல்லி ஏமாத்தி இவனைத் தாக்க வந்தான். நாளைக்கு யார் வருவாங்களோ? மொதல்ல போலீஸ்ல சொல்லி, ஓர் ஆளை நம்ப வீட்டு வாசல் வராந்தாவில் உட்காரச் சொல்லு. போலீஸ் உடுப்பு இல்லாம இருக் கட்டும்.

'இந்த ஐடியா எனக்கு வரவே இல்லே அம்மா... இன் னிக்கே துரைசாமியைப் பார்த்துடறேன்.'

'ரமணி சார்!' என்றான் ரங்கன்.

'என்னடா ரங்கா?'

'மெட்ராஸ் வந்த புதுசிலே உங்க வீட்லதான் ரெண்டு மூணு மாசம் தங்கினேன். தாத்தாவுக்கு ஒத்தாசையா இருந்தேன். நான் ஏன் உங்க வீட்டுக்கும் தாத்தாவுக்கும் வேலை செய்யக்கூடாது?'

'என்னா, நீ இப்ப லட்சாதிபதி! மத்தவங்ககிட்ட வேலை வாங்கறதுதான் உன் வேலை!'

'அப்ப நான் இங்கே தண்டச் சோறு சாப்பிடணும்னு சொல்றீங்களா?'

'யார் சொன்னா...ரூம் வாடகை நூறு ரூபா. அதைத் தாத்தாகிட்டக் கொடு. சாப்பாட்டுச் செலவுக்கு மாசம் ஐந்நூறு ரூபா. அதை என் அம்மாகிட்டக் கொடு. என் அம்மா சமையல் நாக்குக்கு அமிர்தமா இருக்குன்னு இங்கேயே டேரா போட்டுடாதே... கொஞ்ச நாள்லே நானே உன்னை வேறு ஒரு வீட்டிலே குடி வைச்சுடப் போறேன்!'

கோமதி சிரித்தாள்.

மறுகணம் வாசலில் ஒரு பெண்ணின் குரல் கூரையைப் பிய்க்கும் ஓசையில் கேட்டது.

'யார்டா அது ரமணி?'

'தனம்!' என்றான் ரங்கன்.

'வா ரங்கா அவளை வாசல்லேயே நிக்க வைச்சுப் பேசி அனுப்பிடுவோம்! நீ இப்பத்தான் ரொம்ப தைரியமா இருக் கணும்!' என்றான் ரமணி.

சொன்னவன் வாசலை நோக்கி நடக்க, ரங்கன் பயத் தில் இதயம் துடிக்கப் பின்தொடர்ந்தான்.

கோமதிக்கும் சுவாரஸ்யம் ஏற்பட அவளும் தின் ணைக்குப் புறப்பட்டாள்.

16

பத்ரகாளியாக நின்ற தனம், ரங்கன் தனியாக வராமல் ரமணியுடன் வருவதைக் கண்டு மேலும் ஆவேச மானாள்.

'யோவ், இந்த ஆளு யார்யா ஒனக்கு. மாமனா மச்சானா? வாய்யா வூட்டுக்கு!'

MithraVintha

ரங்கன் பதில் பேசாமல் ரமணியைப் பார்க்க, ரமணி நிதானத்தின் இலக்கணமாய் 'தனமா வா! ஏன் வாசல்லே நின்னுக்கிட்டுப் பேசறே. படி ஏறி வா!' என்றான்.

'எனிக்கு இன்னாத்துக்கய்யா ஒன் ஊட்டுக்குள்ளார வரணும்? நான் என் புருசனை என் ஊட்டுக்கு அழைச்சுட்டுப் போக வந்திருக்கேன். ஹங் ஹங்...'

ரமணி பதில் கூறுவதற்குள் அவனுடைய அம்மா கோமதி முந்திக்கொண்டாள். விரைவாக நடந்து, படி இறங்கித் தனத்தின் அருகே போய் நின்று புன்முறுவலுடன், 'ஏம்மா நீ ரங்கனுடைய பெண்டாட்டியா?' என்று கேட்டாள்.

'ஆமாம்மா... நான் போய் சொல்றேனான்னு அந்த ஆளையே கேளுங்க.' திடீரென்று தனத்தின் குரல் இறங்கியது.

'முதன் முதலா நீ இந்த வீட்டுக்கு வந்திருக்கே! வாசல்ல நின்னு கத்தக்கூடாது! உனக்கு என்ன கஷ்டம் இருந்தாலும் சொல்லு. நான் தீர்த்து வைக்கிறேன்! வா, உள்ளே வா!'

திடீரென்று என்ன மர்மமோ மாயமோ தனம் வாயடைத்து நின்றுவிட்டாள். கண்கள் கனத்து, கண்ணீர் இமைகளை உடைத்துக் கசிய ஆரம்பித்தது.

கோமதி தனத்தின் கையைப் பற்றி மெதுவாக இழுத்தாள்.

தனம் அடங்கிவிட்ட மிருகமாய்ப் பின்தொடர்ந்தாள்.

உள்ளே போனதும் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு "உன் பேர் என்ன?" என்று கேட்டாள் கோமதி.

'தனபாக்கியம். தனம்னு கூப்பிடுவாங்க.'

'என்ன சாப்பிடறே? இப்ப ராத்திரி எட்டுமணி. காப்பி டீ சரிப்படாது. ஜூஸ் தரட்டுமா? இல்லே சாப்பாடே சாப்பிடறியா?'

'ஒண்ணும் வேணாம்மா.'

'சரி இப்ப வந்த விஷயத்தைச் சொல்லு.'

'என் புருசன் என்கூட இருக்கமாட்டேன்னு சொல்லி ஊட்டை வுட்டு இங்கே வந்துட்டாரும்மா.'

'இங்கேதான் வந்தான்னு யார் உன்கிட்ட சொன்னா?'

'என் அப்பன்காரன் இன்னிக்கு இங்கே வந்தாரு. ஊட்டுக்கு வரச் சொன்னாரு. என் புருசன் அவர்கிட்டே வர முடியாதுன்னு சொல்லிட்டானா...? என் அப்பா இதை என் கையிலே சொன்னாரு. அதான் நான் ஓடியாந்தேன்.'

'சரி புரியறது. ரங்கன் பண்ணினது தப்புத்தான். ஏன் அப்படிச் செய்ஞ்சான்னு நான் விசாரிக்கிறேன். ரங்கா, ரங்கா இங்கே வா! ரமணி நீ அங்கேயே இரு!' என்றாள் கோமதி.

ரங்கன் தயங்கித் தயங்கி உள்ளே வந்து கோமதியின் எதிரே நின்றான்.

'ஏண்டா உன் பெண்டாட்டி சொல்றதெல்லாம் உண்மையா?'

'தைரியமாயிரு' என்று ரமணி ஏற்கெனவே கூறியிருந்த அறிவுரை இப்போது ஞாபகத்துக்கு வர, 'நான் ஓடி வரலே! நீ தனியா இரு. மாசா மாசம் செலவுக்குப் பணம் அனுப்பறேன்னு சொல்லிட்டுத்தான் வந்தேன்' என்றான் ரங்கன்.

கோமதி சிரித்தாள்.

'ஏண்டா ரங்கா! இவ உன் பெண்டாட்டிதானே? அவளோட குடும்பம் நடத்தாம மாசா மாசம் பணம் அனுப்பிச்சிட்டிருந்தா உன் கடமை முடிஞ்சிடுமா?'

ரங்கன் பதில் சொல்ல முடியாமல் திணறினான்.

'அப்படிக் கேளுங்கம்மா...மாசா மாசம் பணம் வாங்கிக்கத்தானா நான் இவரைக் கட்டிக்கிட்டேன்?'

MithraVintha

'ரங்கா நீ இப்ப என்ன செய்யறே, உன் பெட்டியை தூக்கிக்கிட்டு உன் வீட்டுக்கே போறே... மூணு நாலு மாசம் கழிச்சு நீங்க ரெண்டுபேரும் மறுபடியும் இங்கே வர்றப்ப இவ பிள்ளைத்தாய்ச்சியா இருக்கணும்.'

'நீங்க மகாலட்சுமிமாதிரி இருக்கீங்கம்மா...ஒங்களால தான் எனிக்கு விடியப்போவுது. வாய்யா போலாம்!'

'அம்மா! நான் இந்த வீட்ல இருக்கக்கூடாதுன்னு சொல்லுங்க! நான் இப்பவே போயிடறேன். ஆனா அவனோட நான் போகமாட்டேன்! என் லாட்டரிப் பணம் என் கைக்கு வந்த மறுநாளே இவ அப்பனும் இவளுமாச் சேர்ந்து கொன்னுடுவாங்க!'

'என்னடா ரங்கா உளர்றே? ஒரு பெண்டாட்டி தன் புருஷனைக் கொலையா செய்வா? நீ அரண்டுபோயிருக்கே!'

'இல்லேம்மா, இவ அப்பன் மோசம் செய்ஞ்சு, இவளைக் காட்டி மயக்கிக் கட்டி வைச்சான். லாட்டரிப் பணத்திலே அவருக்கும் பங்கு தரணுமாம். தராட்டி ஆளை வைச்சுக் கொன்னு சமுத்திரத்திலே போட்டுடுவேன்னான். எனக்கு ஏதாச்சும் திடீர்னு ஆயிட்டா, எல்லாப்பணமும் பெண்டாட்டிக்குத்தான் வரும்னு இவளே சொன்னா... என்கூட சந்தோஷமா வாழணும்னு இவளுக்குத் தோணியிருந்தா அப்படிப் பேசியிருப்பாளா அம்மா?'

'ஏம்மா தனம்! நீ இப்படிச் சொன்னியா?'

'தப்புத்தாம்மா...காரு வேணும், புச்சா வூடு வேணும், நகை, புடைவை அல்லாம் வேணும்னு சொல்லியிருக்கேம்மா. இவரு என் புருசரு. இவர் உசிரோட இருந்தாத் தானேம்மா நான் பூவும் பொட்டுமா வாழ முடியும்?'

'சரியாச் சொன்னே தனம்!' என்ற கோமதி, 'ஏண்டா ரங்கா! லாட்டரிப் பணம் எப்பக் கையிலே கிடைக்கும்?' என்று கேட்டாள்.

'ஒண்ணு ரெண்டு மாசம் ஆகும்னு சொன்னாங்க.'

கோமதி தனத்தைப் பார்த்தாள்.

'தனம், இந்த ரங்கனுக்கு இன்னும் பணம் கையிலே கிடைக்கலே. இப்ப வேலையும் போயிட்டுது. பணம் வர்ற வரைக்கும் என்ன செய்வீங்க...? பாங்கிலே கடன் தரலாம்... அதில் குடித்தனம் நடத்துவீங்களா?'

'நீங்க இருக்கிறவரைக்கும் எனக்குக் கவலையே இல்லேம்மா.'

'அப்ப நான் சொல்றதைக் கேப்பியா? கேட்கிறதானா சொல்றேன்.'

'சொல்லுங்கம்மா. நீங்க என்ன சொன்னாலும் அது நல்லதுக்காகத்தான் இருக்கும்மா!'

'மாரியம்மன் மேலே ஆணையாக் கேட்பேன்னு சொல்லு!'

'மாரியம்மன்மேல ஆணையாக் கேப்பேன்.'

'பணம் இன்னும் ரெண்டு மாசத்திலே வந்துடும். அ
வரையில் நீ உன் வீட்லயே இரு. இவனை நான் பார்த்து
கறேன். நீ வேணும்னா அடிக்கடி வந்து பார்த்துட்டுப் போ
உன் செலவுக்கு மாசாமாசம் ஐந்நூறோ அறுநூறோ நாவ
அனுப்பி வைக்கிறேன்... ஆனா இப்ப அவன் அங்க வ
வேண்டாம். ஏன்னா, அவன் உன் அப்பனைக் கண்டு பய
படறான்.'

'எனக்கும் என் அப்பனைக்கண்டா பயமாத்தா
இருக்கும்மா...'

'அதான் சொல்றேன். இவன் இங்கே இருக்கட்டும்னு
நீ இவனோட பெண்டாட்டி. இவன்கிட்ட உனக்கு இருக்
உரிமை உன் அப்பனுக்கோ, இவனோட சொந்தக்கார
களுக்கோ இல்லை. அவங்ககிட்டேர்ந்து உன் புருச
மொதல்ல காப்பாத்தணும்

MithraVintha

'இவரு உயிருக்கு ஆபத்துன்னு நீங்களும் சொல்றீங்களா, அம்மா?'

'சந்தேகம் என்ன தனம்? ரங்கனுக்கு லட்சம் லட்சமாப் பணம் வரப்போறது. அதை நீங்க ரெண்டுபேருமாச் சந்தோஷமா அனுபவிக்கணும் இல்லையா? நானே அஞ்சாறு லட்சத்துக்கு ஒரு பங்களா வாங்க ஏற்பாடு செய்யறேன். நல்லி, குமரன் கடைக்கெல்லாம் அழைச்சுக்கிட்டுப் போய் உனக்குப் பட்டுப் புடைவையெல்லாம் செலக்ட் பண்றேன். உன் இஷ்டத்துக்கு நகை வாங்க உம்மிடியார், பாபலால் கடைகளுக்கெல்லாம் அழைச்சுக்கிட்டுப் போறேன்...'

'காரு?' தனம் வெகுளியாய்க் கேட்டாள்.

'ஓ! காரை மறந்துட்டேன் இல்லே... அம்பாசிடர்... பியட், மாருதின்னு காரெல்லாம் இருக்கு. இப்ப எல்லோரும் மாருதி, மாருதின்னு ஓடறாங்க. பணம் கைக்கு வந்ததும் அதையும் வாங்கிடலாம். அதுக்கு முன்னாடி ரங்கன் கார் ஓட்டக் கத்துக்கட்டும்.'

'ரெண்டு மாசத்துக்கு அப்பாலே லாட்டரிப் பணம் இவரு கைக்கு வந்தவுடனே இவரை அனுப்பிச்சுடுவீங்களா, அம்மா?'

'மாட்டேன்.'

'என்னம்மா [நீங்க? பால்மாறீங்க? இப்பத்தானே சொன்னீங்க...?'

'நீ அவசரப்படறே தனம். இவனை உன் வீட்டுக்கு அனுப்பமாட்டேன். நீ இவனோட புது வீட்டுக்குக் குடி வருவே! நானே வந்து உன்னை அழைச்சு இவன் கையிலே ஒப்படைப்பேன்! போதுமா?'

'நிசமாலுமா?'

'சத்தியம் பண்ணித் தரணுமா?'

'வேணாம்மா.'

'சரி, நீ இப்பப் புறப்படு. மணி ஒன்பது அடிச்சாயிடுத்து.'

'சரிம்மா.'

குங்குமம் வாங்கிக்கிட்டுப் போ!'

'நீங்க என்னைப் பெத்த அம்மாமாதிரி இருக்கீங்க... உங்க புள்ளைதான் ராங் பண்ணிக்கிட்டே இருக்காரு...!'

'இனிமே ராங் பண்ணவேமாட்டான்!' சொன்னவள், 'ரமணி!' என்று அழைத்தாள்.

'டேய்! மணி ஒம்பது அடிச்சாச்சு. இவ இங்கேருந்து பஸ் ஸ்டாண்டுக்குத் தனியாப் போகக்கூடாது. அவளை பஸ் ஸ்டாண்டிலே விட்டுட்டு வா... அவ பஸ்லே ஏற்ற வரைக்கும் காத்திரு. ரங்கா நீயும் ரமணி கூடப் போ!'

சொல்லிவிட்டுக் கோமதி குங்குமத்தை நீட்ட, தனம் ஆள்காட்டி விரலால் எடுத்து, அம்பது பைசா நாணய அளவில் இருக்கும் நெற்றிப் பொட்டின்மீது இட்டுக் கொண்டாள்.

இரவு வீட்டை அடைந்தபோது பத்துக்கு மேலாகி விட்டது. தனம் கனவுலகில் மிதந்துகொண்டே வீட்டினுள் பிரவேசித்தாள்.

'கய்தே! நீ தனியாவா வந்தே?' என்று வரவேற்ற மயில்சாமி, அவள் எதிரே கண்கள் சிவக்க நின்றான். சாராய நெடி அறையெல்லாம் வீசியது.

'ஆமாய்யா, நான் தனியாத்தான் வந்தேன். என் புருசன் வந்தா அந்த ஆளை நீ வெட்டிப் போட்டுடுவியே? அவரைக் காப்பாத்த வேணாம்? அதான் அவரை அங்கேயே வுட்டுட்டுத் தனியா வந்தேன்!'

'என்னடீ காது குத்தறே?'

'யோவ், நீ அப்பன்காரன்னுகூடப் பார்க்கமாட்டேன்!'

MithraVintha

'இன்னா செய்வே?'

'வம்பு தும்பு பண்ணாம இருந்தே, பணம் வந்ததும் உன் கையிலே ஐயாயிரமோ, ஏழாயிரமோ குடுப்பேன்... என் புருசனை அடிச்சே உதைச்சே, நானே பூக்கடை போலீஸ் ஸ்டேசனுக்குப் பூடுவேன். ஹங், ஹாங்.'

ஒரு நீண்ட நிமிடத்துக்கு மௌனமாய் நின்ற மயில்சாமி யோசித்தான். ரமணி கெட்டிக்காரன். வார்த்தைகளால் இவளை மயக்கி அனுப்பியிருக்கிறான்.

'நான் உங்கிட்ட கத்தினது தப்புத்தான் கண்ணு. ஏன் என் மருமகப் புள்ளை வரல்லே?' நான் மருமகப் புள்ளை யைக் கொல்லுவேன்னு நீ கூட நம்பறியா? இம்மாம் பணம் வந்திருக்கிறப்ப அவனைக் கொன்னுட்டா நான் மட்டுமா மாட்டிப்பேன்? நீயுமில்ல ஜெயிலுக்குப் போவே? அப்பால அந்தப் பணத்தை நீயும் நானும் கண்ணால பார்ப்பமா?'

'சரி நயினா. நீ கொல்லமாட்டே! நீ இப்ப இங்கேர்ந்து போயிடு...பணம் கைக்கு வர ரெண்டு மாசம் ஆகும்னாங்க. அப்பாலே நான் புச்சா ஒரு ஊட்டுக்குப் பூடுவேன்! நீ அப்ப அங்கே வந்து பாரு. எதனாச்சியும் தர்றேன்!'

'புச்சா வீடா? யார் கட்டித் தர்றாங்களாம்?'

'அஞ்சாறு லட்சத்திலே ஒரு ஊடு வெலைக்கு வர்றதாம்.'

'யார், அந்த ரமணிக் கழுதை சொல்லிச்சா?'

'இல்லை...அந்த ஆளு இப்ப ஒதுங்கி நின்னுட்டான்! என் கையில இனிமே ராங் பண்ணமாட்டான்னு அவனோட அம்மாவே சொல்லிச்சு. நல்ல அம்மா, மகாலட்சுமி கணக்கா இருக்காங்க. என்னை அவங்களே அளைச்சுக்கிட்டுப் போய் நகை, பட்டுப்புடைவை அல்லாம் வாங்கித் தர்றேன்னு சொன்னாங்க! ஒரு கார்கூட வாங்கப் போறேன். அதுக்குள் ளாற என் புருசன் கார் ஓட்டக் கத்துக்கிடுவாரு.'

'அப்ப மருமகப் புள்ளே இப்போதைக்கு வரமாட் டான்னு சொல்லு. பணம் வர்ற வரைக்கும் நீ சோத்துக்கு என்ன செய்வே பொண்ணு?'

'அத்தைப்பத்தி ஒனக்கென்ன? மாசாமாசம் டாண்ணு பணம் இங்கே வந்து நிக்கும்! அல்லாம் ரெண்டு மாசம் தானே?'

'உன் தலையிலே அவங்க நல்லா மொளகா அரைச்சுட் டாங்க தனம்! நீ ஒரு அறிவுகெட்ட பொண்ணு! மினுக்கிக் கிட்டு ஊர் சுத்தத்தான் தெரியும்!'

'யோவ் இன்னா சொன்னே?'

'பின்னே என்னடி? இந்த ரெண்டு மாசத்திலே என் னென்னவெல்லாம் நடக்குமோ? ரெண்டு மாசத்துக்கு உன் வாயை அடைச்சு வைச்சுட்டாங்க. உன் புருஷன் ஒரு ஏமாளி! ரமணி சொல்றதுதான் சரிம்பான். அவன் சொல்ற இடத்திலெல்லாம் கையெழுத்துப் போடுவான். இப்பச் சொல்றேன் பாரு. நீ இந்தத் தெரு முழுக்க கோவிந்தா, கோவிந்தான்னு கத்திக்கிட்டு அலையப் போறே!'

'யோவ், நீ அந்த அம்மாவைப்பத்தி எதுனாச்சியும் பேசினே. ஒன் வாய் வெந்துபூடும். ஜூஸ் குடிக்கிறி யான்னு கேட்டாங்க. நான் பொறப்படறப்ப குங்குமம் கொடுத்தாங்க... அந்த ஆளையும் என் புருசனையும் பஸ் ஸ்டாண்டுக்குத் தொணையா அனுப்பிச்சாங்க.'

'எனக்கு இவ்வளவு நல்ல அம்மாவைப் பார்க்கணும் போல இருக்கு. நாளைக்கே போறேன். எனக்கு விபூதி குடுப்பாங்க!' என்றான் மயில்சாமி.

'யோவ் அங்கே போனே, நான் சும்மா இருக்க மாட்டேன்... என் புது ஊட்டு வாசப்படி மிதிக்க விட மாட்டேன். என் கார்ல ஏறவிடமாட்டேன். சும்மாக் கெட... ஹங் ஹாங், சொல்லிட்டேன்.'

Mithra Vintha

17

கோமதி வாசற்படியில் நின்றுகொண்டிருந்தாள். தனத்துக்குத் துணையாகச் சென்றிருக்கும் பிள்ளை ரமணி, இன்னும் திரும்பி வரவில்லை. கடிகாரத்தில் மணி பத்தே கால் காட்டியது. வழக்கமாக ரமணி எட்டரைக்குச் சாப்பிட்டுவிடுவான். நிச்சயமாக அவன் பசியில் துடித்துக் கொண்டிருப்பான். ஒரு கேடு கெட்ட பெண்ணுக்கு அவள் தன் பிள்ளையைத் துணை அனுப்பியதே தப்பு. அவள் எப்படிப்போனால் என்ன என்று இருந்திருக்க வேண்டும். ஆனால் ரங்கன்? ரங்கனுக்காக ரமணி சிரமப்படுகிறான். அந்தச் சிரமங்களில் ஒரு சிரமம்தான் அவனுடைய பசியும் பட்டினியும். இதெல்லாம் இன்னும் கொஞ்ச நாட்களுக்குத் தானே? அதன் பின்னர் ரமணி எங்கேயோ, ரங்கன் எங்கேயோ?

திடீரென்று கேட் திறக்கப்படும் சப்தம் கேட்டது. பார்த்தாள். இருளில்கூட ரமணியின் உயரமும் ரங்கனின் குள்ளமும் தெரிந்தன.

அவர்கள் அருகே வந்ததும், 'என்னடா இவ்வளவு லேட்டு?' என்றாள் கோமதி.

'இதோ இவனைக் கேளு அம்மா! நாங்க போன உடனேயே அஞ்சாம் நம்பர் பஸ் வந்தது. அதுவும் ஏறிடுத்து. ஆனா இவன்? பசிக்கிறதுன்னான். இத்தனூண்டு வயத்திலே அப்படி என்னதான் பசி ஏற்படுமோ? ஒரு ஓட்டலுக்கு அழைச்சுட்டுப் போனேன்' என்றான் ரமணி.

'நீ?'

'நான் என்னிக்காவது அனாவசியமா ஓட்டல்லே சாப்பிட்டு நீ பார்த்திருக்கியா, அம்மா?'

'சரி வா, தட்டு வைக்கிறேன். ரங்கா, நீ உன் ரூமுக்குப் போய் உன் பொண்டாட்டியைச் சொப்பனத்திலே பாரு'. என்றாள் கோமதி.

'போறேம்மா!' என்று சொல்லிவிட்டு மாடியை நோக்கி நடந்தான்.

'அம்மா, நீ ரொம்ப அபாரமா இன்னிக்கு நிலைமையைச் சமாளிச்சே!'

'வாயாலே சொல்லாதே ரமணி! ஒரு சர்ட்டிபிகேட்டா எழுதிக் கொடு. பிரேம் போட்டு மாட்டறேன்.'

'குசும்புக்கும் ஒரு எல்லை உண்டு அம்மா. அது சரி. தனத்தை இப்படித்தான் கையாளணும்னு உனக்கு எப்படித் தோணித்து?'

'சூர்ப்பனகை ராவணன்கிட்டே ஓலமிட்டுக் கத்திண்டே போனமாதிரி, இவ ஓலமிட்டுண்டு வந்தா. என்ன செய்யறது? நீயானா திருப்பிக் கத்தியிருப்பே...ஏன் போலீசுக்குப் போகத் துணிஞ்சிருப்பே...எப்பவும் முள்ளை முள்ளாலேயே எடுக்கப்படாதுன்னு தோணித்து. அதான் அவளைப் படி ஏறி வரச் சொன்னேன். எடுத்த எடுப்பில அவளுக்குச் சாதகமாப் பேசினேன். அதுக்கு அப்புறம் எல்லாம் எளிசாப் போயிடுத்து.'

'தற்காலிகமா ஒரு தலைவலி தீர்ந்துபோச்சு!'

'ஒண்ணு ரெண்டு மாசத்துக்கு ஆயிரமோ, ரெண்டாயிரமோ அவகிட்டத் தள்ளினா அவ வாய் மூடிடும். அவ அப்பனையும் அப்பப்ப கவனிச்சுக்கோ' என்றாள் கோமதி.

'அதுக்கு அவசியமே இருக்காதும்மா. அவளுக்கு அடுத்த மாசம் பணம் போய்ச் சேர்ந்ததுமே மயில்சாமி தனத்தோட ஒட்டிப்பான். ரங்கன்மேல் கை வைக்கவும். அவனால முடியாது. ஏன்னா தனத்தின் மனசிலே ஒரு கோட்டையின் அஸ்திவாரத்தை நீ போட்டுட்டே, அம்மா!'

MithraVintha

'இப்ப உன் தட்டிலே சாதம் பரவிக் கிடக்கு. அதைக் குழிச்சு வை. குழம்பு போடறேன்.'

'அம்மா!'

'என்னடா?'

'நாளையிலிருந்து ரங்கன் எப்பவும் மாதிரி ஓட்டல்லேயே சாப்பிட்டுக்கட்டும்.'

'தனம் வர்றதுக்கு முன்னாடி வேறே எப்படியோ பேசினியே?'

'அப்ப நிலைமை வேறே. மயில்சாமி என்ன செய்வானோங்கிற கவலை.'

'என்னைப் பொறுத்தவரை ரங்கனுடைய நிலைமை மாறலேடா. மயில்சாமி நிச்சயமாத் தொந்தரவு கொடுத்துக்கிட்டுத்தான் இருப்பான். நான் அவனுக்கும் சேர்த்துப் பொங்கிப் போடறேன்!

'உன் இஷ்டம்.'

'அது சரி, விவாகரத்து வாங்கிக் கொடுக்கணும்னியே அது சாத்தியமா? கலியாணமாகி முழுசா ஒரு வருஷம்கூட ஆகலியே!'

'சாத்தியம்தான் அம்மா! ஆனா இப்ப ஒரு விவரமும் கேட்காதே! நானே இதுவிஷயமாக் கொஞ்சம் அலையணும்.'

'சரி, பேசிக்கிட்டே இருக்காதே. தட்டைப் பார்த்துச் சாப்பிடு' என்றாள் கோமதி.

மறுநாள் ஆபீசில் ரமணி வந்ததும், மாலு தன் இருக்கையைவிட்டு எழுந்து அவன் அருகே போய் உட்கார்ந்தாள்.

'என்ன ரமணி முகமெல்லாம் ஒரு மாதிரியா இருக்கு, சரியாத் தூங்கலியா?'

'நன்னாத் தூங்கினேன் மாலு. நீதான் அடிக்கடி வந்து தொந்தரவு பண்ணினே!'

'இதுக்கு நான் ஸாரி சொல்லமாட்டேன் ரமணி! நீங்களும்தான் இதே தப்பை நான் தூங்கறப்பவும் செய்யறீங்க. அதுவும் தினமும்.'

'ஓகே! நான் இப்ப சுகந்தியோட பேசணும். நீ இடத்தைக் காலி பண்ணு.'

'அது வந்து உட்கார்ந்தா லேசிலே எழுந்திருக்காதே! சகிக்குமே?'

'ப்ளீஸ்... மாலு தயவு பண்ணேன்.'

'ஓகே. இவ்வளவு கெஞ்சறீங்க. எழுந்திருக்கிறேன்.'

மாலு தன் இருக்கைக்கு வந்தாள். ஆபீஸ் ஹாலில் எதிர்க்கோடியில் இருந்த சுகந்தியை நெய் தோசை இச்சா மூலமாகத் தன்னைப் பார்க்கும்படி கூறினான் ரமணி.

சுகந்தி ஆச்சரியப்பட்டுப் போனாள். இந்த இரண்டு மூன்று மாதங்களில் ஒரு தடவைகூட ரமணி தன்னை எந்த விஷயத்துக்குமே அழைத்ததில்லை. இப்போது எதற்காக அழைக்கிறான்? அவள் டைப் அடித்த விஷயத்தில் ஏதேனும் பெரும் தவறு நேர்ந்திருக்கிறதோ? திடீரென பயமும் பிறந்தது.

அவள் எழுந்து, புடைவையைச் சரி செய்துகொண்டு ரமணியை நோக்கி நடந்தாள்.

'குட்மார்னிங். ரமணி சார்!'

'குட்மார்னிங் சுகந்தி! உன்கிட்ட நான் கொஞ்சம் அந்தரங்கமாப் பேசணும்!'

'அந்தரங்கமாகவா?'

'ஆமாம். இங்கே ஹால்லே, உட்காந்து பேச முடியாது. பாஸ் இன்னும் வரலே... பன்னிரண்டு மணிக்குத்தான் வருவார்னு வெங்கி சொன்னான். நாம அவர் ரூம்ல உட்கார்ந்து பேசலாம்!'

MithraVintha

'ஓகே சார்!'

இருவரும் ரமேஷ் சாண்டியல்யாவின் அறைக்குள் சென்றார்கள். 'வெங்கி, யாரையும் உள்ளே விடாதே' என்றான் ரமணி.

சுகந்தி உட்கார்ந்ததும், ரமணி, 'உன்னாலே எனக்கு ஒரு உதவி தேவைப்படறது சுகந்தி! அந்த உதவியாலே ஒரு நல்ல மனுஷனுடைய வாழ்க்கை பாதிக்கப்படாம ஓடப் போறது. உதவி செய்வியா?' என்றான்.

ரமணி இந்தமாதிரிப் பணிவாகக் கேட்டறியாத சுகந்தி ஒருகணம் திகைத்துப்போனாள். கேள்வியிலே யாரைப் பற்றி அவன் குறிப்பிடுகிறான் என்பதும் புரிந்தது.

'ரங்கனோட வாழ்க்கைதானே சார்?'

'கரெக்ட்.'

'சொல்லுங்க ரமணி சார்!'

'மயில்சாமி எப்பவும் உன்கிட்டதான் கைமாத்து வாங்குவான். என்ன அப்ளிகேஷன் போடறதா இருந்தாலும், அதை நீதான் டைப் அடிச்சுக் கொடுப்பே! அவன் எந்தப் பிரச்னை வந்தாலும் உங்கிட்டதான் வருவான்!'

'நீங்க சொல்றதெல்லாம் கரெக்ட் ரமணி சார்!'

'என்னுடைய வேலை பொது நிர்வாகம்னாலும், சிப்பந்திகளோட சம்பளம், அலவன்ஸ், ஓவர்டைம், லோன்ஸ் இதையெல்லாம் நான் கவனிச்சுக்கிறதில்லே. இச்சா பார்த்து அதெல்லாம் நேரே பாஸுக்குப் போறது. ஏன், என் லீவ் அப்ளிகேஷன்கூட இச்சா மூலமாத்தான் மேலே போறது.'

'ஆமாம் சார்... நீங்க சேல்ஸ் பர்ச்சேஸ் இதெல்லாம் தான் பார்த்துக்கிறீங்க.'

'எனக்கு மயில்சாமியைப்பத்தி சில விஷயங்கள் தெரியணும்.'

'குறிப்பா எதைப்பத்தின்னு சொல்லமுடியுமா சார்?'

'போன வருஷமோ, இல்லே அதுக்கு நாலஞ்சு மாசம் முன்னாடியோ அவன் வீட்ல ஒரு கலியாணம் நடந்தது இல்லே?'

'ஆமாம் சார்! அவனோட பொண்ணுக்கு. பாஸ் லோனா ஆயிரம் கொடுத்தார். அன்பளிப்பா ஐந்நூறு கொடுத்தார். மயில்சாமிக்கு ஒரே பெண் அப்படீன்னுதான், இத்தனை நாளும் நினைச்சுண்டிருந்தேன். ரங்கனுக்கும் அவனுடைய பெண் தனத்துக்கும் கலியாணம் ஆனப்புறம்தான் ரெண்டுபேர் இருக்கணும்னு பட்டது. ஆனா நிச்சயமா ரெண்டு பெண்களும் ஒரே தாய் வயிற்றில் பொறந்தவங்களா இருக்க முடியாது.'

'எப்படி அவ்வளவு உறுதியாச் சொல்றே?'

'தனம் அன்னிக்கு வந்தா இல்லியா? அப்ப அவ அக்கா எப்படி இருக்கான்னு விசாரிச்சேன். தான் ஒரே பெண் அப்படீன்னா... பல தடவை மயில்சாமியும் தனக்கு ஒரே பெண்தான்னு சொல்லியிருக்கான். தனத்தோட கலியாணம் விஷயமா மறுபடியும் லோன் அப்ளிகேஷன் டைப் பண்ணித் தரச் சொன்னான். அப்ப அவனை நான் மடக்கினேன். எப்படி ஒரே பெண்ணுக்கு ரெண்டுவாட்டி கலியாணம் நடக்க முடியும்னு கேட்டேன். லோனுக்கான காரணத்தை மாத்தறேன்னான்.'

'கெடைச்சுதா?'

'இல்லே. இச்சாவே சிபாரிசு செய்யலே.'

'அந்த முதல் கலியாணத்துக்கு அவன் லோன் அப்ளை பண்ணினானே அந்த அப்ளிகேஷன் இச்சாகிட்ட இருக்கிற ஃபைல்லதானே இருக்கும்.'

'ஆமாம் சார்!'

'நம்ப ஆபீஸ்லேர்ந்து யாராவும் அந்தக் கலியாணத்துக்குப் போனாங்களா?'

MithraVintha

கல்யாணம் திருநீர்மலையில நடந்தது.

'இல்லே சார்! கல்யாணம் திருநீர்மலையில நடந்தது. நான் போகலாம்னு இருந்தேன். தனியாப் போகத் தெரியலே. என் அப்பா அழைச்சுட்டுப்போறேன்னு சொல்லி கடைசி நிமிஷத்திலே கை விட்டுட்டார்.'

'நீ ஒரு உதவி செய்யணும்.'

'நிச்சயமா!'

'அந்த ஃபைலை எடுத்து லோன் அப்ளிகேஷனைத் தேடிப் பிடிக்கணும். மயில்சாமி அச்சடிச்ச பத்திரிகை வைச்சிருந்தா அதை என்கிட்ட கொடுக்கணும். நான் ஜெராக்ஸ் காப்பி எடுத்துட்டு உங்கிட்டத் திருப்பிக் கொடுத்துடறேன்.'

'சரி சார்! எதுக்கும் நீங்க கிச்சாகிட்ட ஒரு வார்த்தை சொன்னீங்கன்னா எல்லாம் எளிசாப் போயிடும்.'

'கண்டிப்பா. இப்பவே சொல்லிடறேன்... அது சரி, சுகந்தி இந்த விஷயம் பத்தி நீ என்ன நினைக்கிறே?'

'மயில்சாமி தன் பொண்ணைப்பத்தி நல்லதா ஒரு வார்த்தை சொல்லி நான் கேட்டதில்லே. அவளாலே ரெண்டு பொறுக்கிகள் குளைமேட்ல சண்டை பிடிச்சுட்டாங்களாம். ஒருத்தனுக்கு கத்திக் குத்து வேறே. ரெண்டுபேரையும் போலீஸ் அழைச்சுட்டுப் போச்சுன்னு மயில்சாமி சொல்லிட்டு, அவன் பெண்ணையும் பூக்கடைப் போலீஸ் ஸ்டேஷன்லே ஒருநாள் பூரா அடைச்சு வைச்சிருந்ததாகச் சொன்னான்.'

'மயில்சாமிக்கு ரெண்டு பெண் இருக்கும்னு உனக்குத் தோணலே இல்லியா?'

'ஊஹூம்... தோணலை. ஃபைலைப் பார்த்தா எல்லாம் வெட்ட வெளிச்சமாயிடும்.'

'இப்ப நான் இருட்லே இருக்கேன் சுகந்தி!'

'உங்களுக்கும் மாலுவுக்கும் எப்ப சார் கல்யாணம்?'

'மொதல்ல ரங்கனுடைய பிரச்னை தீரட்டும்.'

'உங்களை மயில்சாமி தாக்க வந்தப்ப நான் அலறிட்டேன்.'

'தாங்க்ஸ். போலாமா?'

ரமணி எழுந்தான்.

சுகந்தியும் எழுந்தாள்.

'ஞாயித்துக்கிழமை கார்த்தாலே நான் உன் அப்பாவைப் பார்க்க வரப்போறேன்.'

'எதுக்கு சார்?'

'உன் ஜாதகத்தை வாங்கிக்க! எனக்குத் தெரிஞ்ச இடங்கள் நிறைய இருக்கு.'

சுகந்தி பதில் கூறவில்லை. ஆனால் ரமணியின் வார்த்தைகள் மனத்துக்கு இதமாக இருந்தன.

ஏழு நாட்களுக்குப் பிறகு—

வெள்ளிக்கிழமை.

ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் வந்த கோமதி, பிடாரி அம்மன் தெருவிலிருந்து கிளைவிட்ட ஒரு சந்தின் முனையில் இறங்கினாள். ரிக்ஷாக்காரனை நிறுத்திவிட்டு, சந்தினுள் நடந்து தனத்துடைய வீட்டின் கதவைத் தட்டினாள்.

18

கதவைத் திறந்த தனம், கோமதியின் சிரித்த முகத்தைக் கண்டதும் ஆச்சரியப்பட்டுப் போனாள்.

'உள்ளே வரலாமா தனம்?'

'வாங்கம்மா...' என்று ஒரு பாயை எடுத்துப் போட்ட தனம் பரபரப்போடு சென்று முகத்தைக் கழுவிப் பொட்டிட்டுக்கொண்டு வந்தாள்.

MithraVintha

தனம் பூவும் பொட்டுமாகத் திரும்பி வருவதற்குள், கோமதி பையிலிருந்து ஒரு பிளாஸ்டிக் தட்டை எடுத்து அதன்மீது பூ, வெற்றிலைப் பாக்கு மஞ்சள் பழமெல்லாம் அடுக்கி வைத்துவிட்டாள். ஒரு சோளித் துண்டு வேறு.

அயர்ந்துபோய் நின்று, தன்னையே பார்த்துக்கொண் டிருக்கும் தனத்திடம், 'உட்கார் தனம் உட்காரு. இன்னிக்கு வெள்ளிக்கிழமை. நீ சுமங்கலிப் பொண்ணு. நான் உன்னை விட வயசிலே ரொம்பப் பெரியவ. என் கையாலே மஞ்சள் குங்குமம் கொடுத்து நீ அதை வாங்கிக்கணும்னு எனக்கு ஆசை. நீ நன்னா இருக்கணும்னா ரங்கனும் நன்னா இருக்கணும் இல்லியா?' என்றாள்.

தனம் தட்டைப் பார்த்தாள். பூ பழம் மஞ்சளெல்லாம் இருந்தன. ஆனால் பணம் இல்லையே? முதல் தேதிக்கு இன்னும் நான்கு நாட்கள் இருக்கின்றன. இவள் மீண்டும் பணம் கொடுக்கவென்று வருவாளோ?

அவளுடைய முகமாற்றத்தைக் கோமதி புரிந்து கொண்டாள்.

'மொதல்ல உட்கார் தனம்.'

தனம் உட்கார்ந்தாள். பணம் வரவில்லை என்ற எண்ணம் பிறந்தபோது அலுப்புத் தட்டியது.

'நீ இப்ப இந்தத் தட்டை வாங்கிக்கோ!'

தனம் வாங்கிக்கொண்டாள்.

'வெத்திலைக்கு அடியிலே என்ன இருக்குன்னு பாரு.'

பார்த்தாள்.

ஒரு சிறு காகித உறை.

தனம் எடுத்தாள்.

'பத்து நூறு ரூபா நோட்டை நாலா மடிச்சு சின்னக் கவர்ல போட்டேன்' என்றாள் கோமதி.

தனம் பரபரப்புடன் நோட்டுகளை எண்ணினாள்.

'ஆயிரம் இருக்கா?'

'இருக்கும்மா.' சொன்னவள் எழுந்து நமஸ்கரித்தாள்.

'நன்னாயிரு!'

கோமதி எழுந்தாள்.

'நான் போய்ட்டு வரேன்!'

'பாங்க்லேர்ந்து லாட்டரிப் பணம் வந்திருச்சாம்மா?'

'வரல்லேன்னு ரங்கன் சொன்னான். இன்னும் ஒரு மாசம் ஆகுமாம்.'

'வந்ததும் புச்சா வீடு பார்த்துக் கொடுத்துடுவீங்க இல்லே?'

'நிச்சயமா.'

'ஏம்மா, ஒங்க காதில மின்னுதே கம்மலு அது வைரம் தானே?'

ஆமாம். என்ன சந்தேகம் உனக்கு தனம்?'

'இதேமாதிரி கம்மலு எனக்கும் வாங்கிக் கொடுங்கம்மா!'

'லாட்டரிப் பணம் வந்ததும் என்னோட மொதல் வேலையே அதுதான் தனம்!'

கோமதி நகர்ந்தாள்.

'ஏம்மா, லாட்டரிப் பணம்தான் இன்னும் வரலியே... இந்த ஆயிரம் ரூபாய் என் புருசனுக்கு எங்கேர்ந்து கெடைச்சுது?'

'என் புள்ளை ரமணிகிட்டேர்ந்து கடன் வாங்கினான்.'

'நான் எப்பம்மா உங்க வூட்டுக்கு வரலாம்?'

'எப்ப வேணுமானாலும் வா! ஆனா இந்த வாரம் வேண்டாம். நானும் ரமணியோட அப்பாவும் நாலஞ்சு நாளுக்கு ஊர்ல இருக்கமாட்டோம். ரமணியும் ரங்கனை அழைச்சுக்கிட்டு வெளியூர் போனாலும் போவான்?'

MithraVintha

'எதுக்கு மா?'

'லாட்டரிப் பணம் எப்பத்தான் நிச்சயமா வரும்னு தெரிஞ்சுக்கத்தான்.'

'பணம் வந்ததும் எனக்குத் தகவல் குடுக்கச் சொல்லுங்கம்மா!'

'ஓ, தகவல் கொடுக்காம? அதைவிட எங்க யாருக்கும் எந்த வேலையும் இல்லியே தனம்?'

கோமதியின் நெக்கலை தனம் புரிந்துகொள்ளவில்லை.

கோமதி ரிக்ஷாவை நோக்கிச் செல்லுவதையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கையில் திடீரென்று மயில்சாமியின் குரல் கேட்டது.

'கண்ணு அந்த அம்மாவைத்தான் நான் பார்க்கணும்னு சொல்லிட்டிருந்தேன். இன்னிக்குப் பார்த்துட்டேன்.'

'நீயினா? நீயா?'

'ஏன் என்னைப் பார்த்தா பக்கத்து ஜூட்டு ஆள்மாதிரித் தெரியுதா? நான்தான் ஒன் அப்பன் மயில்சாமி!'

'நீ வர வேண்டாம்னு சொல்லியிருக்கேனே?'

'நீ சொன்னா என்ன தங்கம்? தெருவிலே வந்துட்டிருந் தேனா? ஒரு சைக்கிள் ரிக்ஷாவிலே ஒரு அம்மா வந்ததைப் பார்த்தேன். [illegible]

[illegible]

தனம் வீட்டினுள் பின் வாங்க, மயில்சாமி முன்னேறி உள்ளே புகுந்தான்.

'உள்ளார வராதேய்யா!'

'வாசல்லே நின்னு பணத்தை வாங்கிக்கச் சொல்றியா கயிதே...நான் ஒன் அப்பன்டீ. பிச்சைக்காரன் இல்லே?'

'ஐந்நூறு ரூபா ஏது...அந்த அம்மா குடுத்ததே இருநூறு ரூபாதான்!'

'கயிதே பொய்யா சொல்றே? நான் அல்லாத்தையும் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன். பத்து நூறு ரூபா நோட்டு இல்லே. அதை அந்த அம்மா கவர்லே போட்டு வெத்திலைக்கு அடியிலே வைக்கலே?'

'இன்னாய்யா பெரிய ரோதனையாப் போச்சு!'

'இதப்பாரு தனம் இப்பவே சொல்லிட்டேன்... உனக்கு எம்மாம் பணம் வந்தாலும் சரி, அதில் பாதி எனக்கு...'

'தராட்டி?'

'உனக்குச் சல்லிக்காசு வராம நானே செஞ்சுடுவேன்!'

'மிரட்டறியா?'

'நான் ஏன்டீ மிரட்டணும்? உன் கதை பூராவையும் அந்த ராணி கையிலே சொல்லுடுவேன்! [illegible]

[illegible]

MithraVintha

மயில்சாமி வெற்றியுடன் வீட்டை விட்டு வெளியேற, தனம் தோல்வியில் அவனை எழுத்தில் வடிக்க முடியாத வார்த்தைகளால் தாக்கினாள்.

நாட்கள் ஓடின.

மீனாட்சி கலியாண மண்டபத்தில் மாலுவின் அக்கா சுமதியின் கலியாணம்கூட நடந்து முடிந்தது.

ஒருநாள் சனிக்கிழமை அதிகாலையிலேயே புறப்பட்டு, நாலாம் நம்பர் பஸ்ஸில் ஏறின ரமணி வால்டாக்ஸ் சாலை பீல் ட்ரெவெல்யான் பேசின் நிலையத்தில் இறங்கினான்.

பல சந்துகள் வழியாக நடந்து நடந்து, ஒரு சிறு வீட்டின் முன் அவன் நின்றான். அவனைக் கண்டதும் ஒரு நடுத்தர வயதுக்காரி, முகமெல்லாம் புன்னகையாக, 'யார் வேணு முங்க?' என்று கேட்டாள்.

'வடிவேலு வீடு இதுதானே?'

'இது என் வீடு. வடிவேலு என் புள்ளை. பாக்டரிக்குப் புறப்பட்டுட்டிருக்கான். உங்களுக்கு என்ன வேணும்?'

'வடிவேலுவைப் பார்க்கலாம்னு மயிலாப்பூர்லேந்து வர்றேன்!' என்ற ரமணி, உள்ளேயிருந்து காக்கி உடுப்பில் ஒரு இருபத்தெட்டு அல்லது முப்பது வயதுக்காரன் வரு வதைக் கண்டான்.

'யார் அம்மா?'

'உன்னைப் பார்க்கத்தான் இவர் வந்திருக்காரு வேலு!' என்ற அவள் இன்னமும் அங்கே நிற்காமல் உள்ளே சென்றாள். அவள் நின்றிருந்த இடத்துக்கு வடிவேலு வந்தான்.

'என்னையா பார்க்க வந்தீங்க சார்?'

'ஆமாம்.'

'உள்ளே வாங்க.'

'வேண்டாம் வடிவேலு. இன்னொருவாட்டி வர்றப்ப நான் உள்ளே வரேன். உங்க வீட்டு காப்பி டீயையும் குடிக் கிறேன். வேலைக்குப் புறப்பட்டிருக்கீங்க போலிருக்கு.'

'ஆமாம் சார்! இன்னிக்குப் பகல் டியூட்டி. பத்து மணிக்குப் பாக்டரியில் இருக்கணும். அதுவும் பெருங் குடியிலே.'

'எப்படிப் போறே?'

'கம்பெனியிலே மோபட் கொடுத்திருக்காங்க சார்!'

'இங்கிருந்து இருபத்தைஞ்சு கிலோமீட்டர் இருக்குமே?'

'போய்ச் சேர்றதுக்கு ஒன்னரை மணி ஆவுது. இப்ப மணி எட்டேகால்.'

'நாளைக்கு டியூட்டி இருக்கா வடிவேலு?'

'நைட் ஷிப்ட் சார். ராத்திரி எட்டு மணிக்கு இருக் கணும்.'

'நீ என்ன மெக்கானிக்கா?'

'ஆமாம் சார்!'

'இவ்வளவு தூரம் போறதுக்குப் பதிலா நீயே சொந்த மாத் தொழில் நடத்தலாம் இல்லியா?'

'நடத்தலாம் சார்! ஆனா அதுக்கு வசதி வேணுமே?'

'சரி சரி. நான் உனக்குக் குறுக்கே நின்னு என் னென்னமோ பேசிட்டுப் போறேன்' என்ற ரமணி, 'உன் னாலே எனக்கு ஒரு உதவி தேவைப்படறது வடிவேலு. நீ மனசு வச்சா ஒரு உயிரைக் காப்பாத்தலாம்' என்றான்.

திடீரென உஷாராகிவிட்டவனைப்போல் சிலிர்த்த வடிவேலு மௌனமாய் அவனைப் பார்த்தான். பிறகு நிதானமாக, 'ஒரு பொம்பளை உசிரா?' என்றான்.

'ஊஹூம். ஆம்பளை உசிரு. உனக்கு ஆட்சேபணை இல்லேன்னா நம்ப ரெண்டுபேரும் நாளைக்குக் காலையிலே

MithraVintha

மறுபடியும் சந்திக்கலாம். நம்ப சந்திப்பினாலே ஒரு வேளை உன் வாழ்க்கையின் திசையே மாறிடலாம்னு எனக்குப் படறது.'

'நீங்க எதுக்காக இவ்வளவு தூரம் வந்திருக்கீங்கன்னு எனக்கு ஒரு மாதிரியாப் புரியுது சார்... ஆனா நின்னு விசாரிக்க இப்ப நேரம் இல்லே.'

'அப்ப நாளைக்கு?'

'நான் ரெடி சார்!'

'எங்கே?'

'நீங்க சொல்லுங்க.'

'இதோ என் அட்ரெஸ். அங்கே வந்தா நாம நிம்மதியாப் பேசலாம். உனக்கு ஆட்சேபணை இல்லேன்னா எங்க வீட்லேயே சாப்பிடலாம்.'

ரமணியின் முகவரியைப் பார்த்ததும், 'உங்க வீட்டுக்குப் பக்கத்திலேதானே பீமண்ண முதலித் தெரு இருக்கு.'

'ஆமாம். நீ வந்திருக்கியா?'

'பீமண்ண முதலித் தெருவிலே என் சிநேகிதன் இருக்கான். அவனும் நானும் ஒரே பாக்டரியிலதான் வேலை செய்யறோம்.'

'பேரு?'

'கபாலி...'

'கொஞ்சம் இரு...கபாலி...கபாலி. ஒசரமா ஒடிசலா டோபா வைச்ச தலைமாதிரி...'

'அவனேதான்.'

'அவனுடைய அப்பா பெயர் நல்லதம்பி.'

'கரெக்ட் சார்.'

'நல்லதம்பின் அப்பா ஒரு காலத்தில எங்க வீட்ல தோட்ட வேலை செய்திட்டிருந்தார். இப்ப அவருக்கு வயசு தொண்ணூறு இருக்கும்.'

'தெரியாது சார்!' என்ற அவன், வாசலில் நிறுத்தப்பட்டிருந்த டி.வி.எஸ். மோபட் அருகே சென்றான்.

'அப்ப நாளைக்குப் பத்து மணி.'

'ஓ.கே. சார்.'

'ரொம்ப தாங்க்ஸ் வடிவேலு. சிரமத்துக்கு என்னை மன்னிச்சுடு' என்றான் ரமணி.

ரமணி கைக் கடிகாரத்தைப் பார்த்தான். எட்டரைக்கு இன்னும் ஐந்து நிமிடங்கள் இருந்தன. பத்து மணிக்குத்தான் ஆபீஸ் ஒன்றரை மணி நேரத்தை எப்படிக் கழிப்பது? திடீரென்று ஒரு யோசனை உதித்தது. கொஞ்சதூரம் நடந்தபிறகு ஒரு பஸ் நிலையத்தில் நின்றான். சென்ட்ரலில் இறங்கி, மீண்டும் வேறொரு பஸ்ஸில் ஏறிப் பூக்கடையில் இறங்கியபோது மணி எட்டு ஐம்பது.

தனத்தின் வீட்டை அடைந்தபோது மணி ஒம்பது அடித்து ஐந்து நிமிடம்.

சற்றும் அவனை எதிர்பாராத தனம், 'வாங்க சார்!' என்று வரவேற்றாள். பிறகு 'அவரு எப்படி இருக்காரு?' என்று கேட்டாள்.

'வேளா வேளைக்கு சாப்பிட்டுத் தூங்கறான். முழிச்சுட்டிருக்கறப்பவெல்லாம் உன் நினைவா, உன் பேச்சா இருக்கிறான்.'

'அம்மாவும் ஐயாவும் வெளியூர் போறதாகச் சொன்னாங்களே?'

'போயிட்டு வந்தாச்சு. நானும் ரங்கனும்கூட வெளியூர் போயிருந்தோம்.'

'லாட்டரிப் பணம் விசயமாகவா!'

''இல்லே தனம். வேலூர் பக்கத்தில நிலம் மலிவா விலைக்கு வர்றதுன்னு சொன்னாங்க. அதைப் பார்த்துட்டு வரலாம்னு போனோம். உன் பேர்லதான் வாங்கணும்னு ரங்கன் பிடிவாதமா இருக்கான்.'

MithraVintha

'அவரு மனசு மாறிப்பூட்டுதா? இங்கேர்ந்து போனப்ப நான் இனிமே வேண்டவே வேண்டாம்னு கருவிட்டுப் போனாரே?'

'ரங்கன் மனசை நீ சரியாப் புரிஞ்சுக்கலே தனம்! ஏன் என் மனசையும் புரிஞ்சுக்காம வாயில வந்தபடி ஏசினே!'

'தப்புத்தான் ஐயா! மன்னிச்சுக்குங்க!'

'நான் நல்லவனுக்கு நல்லவன். உன் அப்பன் மாதிரி பொல்லாதவன் வந்தாலும் அவனைச் சமாளிக்கவும் என்னாலே முடியும்... சரி சரி, இதையெல்லாம் இப்பப் பேசுவானேன்...நான் இப்ப வந்த விஷயத்தைச் சொல்லிடறேன்.'

'சொல்லுங்கய்யா!'

'நாளை மறுநாள் திங்கட்கிழமை, ரங்கன் கோவில்ல அபிஷேகத்துக்கு ஏற்பாடு செய்திருக்கான். நான் அம்மா, அப்பா எல்லாரும் போறோம். நீயும் வரணும்னு ரங்கன் என்னைப் போட்டு அரிச்செடுக்கறான். லாட்டரியில பணம் வந்ததிலே அவனுக்குத் தலைகால் தெரியலே...நிறையக் கோவில்களிலே அபிஷேகம் அர்ச்சனை இதெல்லாம் நடத்தணுமாம்.'

'வரேன் ஐயா...எந்தக் கோவில்னு சொல்லுங்க. நானே வந்து சேர்ந்துக்கறேன்.'

'ரொம்ப தூரத்திலே இருக்கு தனம்! உன்னாலே பஸ் பிடிச்சு வர முடியாது. நான் கார் அனுப்பறேன்.'

'எந்தக் கோவில் ஐயா?'

'திருநீர்மலை!' என்றான்.

தனம் தாக்கப்பட்டவளைப் போலச் சுவரில் சாய்ந்தாள்.

19

சனிக்கிழமை. அரைநாள் வேலை. ரமணி, சுகந்தி சிரமப்பட்டு எடுத்துக்கொடுத்த ஃபைல்களை ஏற்கெனவே இரண்டு மூன்று நடவைகள் படித்துவிட்டான். இருப்பினும் மேலும் ஒருமுறை ஆராய வேண்டும் என்று தோன்றியது.

அவன் அந்த ஃபைலை எடுத்து மேஜைமீது வைக்கவும், 'ஹலோ ரமணி!' என்று சதா சர்வகாலமும் தவழும் புன்னகையுடன் மாலு எதிரே வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

'உட்கார் மாலு.'

'நான் உட்கார வரலை.'

'சரி நில்லு.'

'ஒரு சமாசாரம் சொல்லிட்டுப்போகலாம்னு வந்தேன்.'

'சொல்லிட்டுப் போ.'

'ஓ இவ்வளவு அலட்சியமாயிட்டுதா?'

இன்னும் உட்காராமலே நின்ற மாலு நகர்ந்தாள்.

'இப்ப நீதான் என்னை அலட்சியப்படுத்தறே, மாலு! மூஞ்சியைத் தூக்கிட்டுப் போறே... என்ன விஷயம், அதைச் சொல்லு.'

'உஹூம்... எனக்கு மூடு அவுட்! நீங்களும் வேறே ஏதோ எண்ணத்திலே இருக்கீங்க...'

'பதினொன்றரை மணிக்கு வா. காப்பி வரும்.'

'எனக்குத் தேவை காப்பி இல்லே.'

MithraVintha

'உன் தேவை என்னன்னு எனக்குத் தெரியும். எனக்கும் அது தேவைதான். ஆனா...'

'மேலே பேசாதீங்க, ரமணி. எனக்குக் கேட்டுக் கேட்டுக் காதே செத்தாச்சு. நாம இன்னும் வெயிட் பண்ணணும். அதானே நான் போறேன்!'

மாலு தன் இருக்கைக்குச் சென்றாள். ரமணி உள்ளூரச் சிரித்துக்கொண்டான். மாலுவின் கோபம், பொய்க்கோபம். பதினொன்றரை மணிக்குக் காப்பி குடிக்க வருவாள்.

ஆனால் அவள் வரவில்லை.

அவர்களுடைய காதல் உலகத்தில் இந்தப் பிணக்கு மிகவும் அபூர்வம். ரமணியையே அது சிந்திக்க வைத்தது.

ரமணி வீட்டை அடைந்தபோது பிற்பகல் மணி மூன்று.

'என்னடா ஆச்சு ரமணி?' என்று அம்மா கோமதி கேட்டாள்.

'ஆளைக் கண்டுபிடிச்சுட்டேன். நாளைக்குத்தான் விவரமாப் பேசமுடியும். அம்மா, பீமண்ண முதலித் தெருவிலே கபாலின்னு ஒருத்தன் இருக்கான். அவனும் இவனும் ஒரே தொழிற்சாலையில்தான் வேலை செய்ய றாங்க. கபாலியோட தாத்தா அந்தக் காலத்தில் நம்ப தாத்தாகிட்ட தோட்டக்காரனா இருந்திருக்கார்.'

'ஓ, அவனா? மூணு வருஷம் முன்னாடிகூட கபாலி யோட அம்மா ரெண்டு மூணு வீட்ல பத்துப் பாத்திரம் தேய்ச்சுட்டிருந்தா.'

'இன்னிக்கு ராத்திரி கபாலியைச் சந்திக்கப்போறேன்.'

'என்னமோ செய்... இப்ப டிபனைச் சாப்பிடு.'

'ரங்கன் சாப்பிட்டானா?'

'அவனுக்கு ஜுரம், மூச்சுத் திணறல்.'

'அப்புறம்?'

'நம்ப டாக்டர் வந்து பார்த்தார். ஒரு ஊசியைப் போட்டு ஏதோ மாத்திரைகளையும் கொடுத்துட்டுப் போனார்.

'சாப்பிடவே இல்லியா?'

'ரசஞ்சாதத்தைக் கரைச்சுக் கொடுத்தேன். அரைத் தம்ளர்கூட அவனாலே குடிக்க முடியலே.'

'சரி, மொதல்ல அவனைப் பார்த்துட்டு வரேன்.'

'பத்து நிமிஷம் முன்னாடி நான் போய்ப் பார்த் தேண்டா, அசந்து தூங்கறான்.'

'சரி, எனக்கு என்னமோ டிபன் தரேன்னு சொன்னியே... தா' என்றான் ரமணி.

இரவு ஒன்பது மணிக்கு அவன் கபாலியின் வீட்டில் இருந்தான்.

'இன்னா சார் நீங்க! சொல்லி அனுப்பிச்சா நானே வந்திருப்பேனே!' என்றான் கபாலி.

'சொல்லி அனுப்பறதுக்கும் நான்தானே கபாலி வரணும்!' சொல்லிவிட்டுச் சிரித்த ரமணி, 'உன்னாலே எனக்கு ஒரு காரியம் ஆகணும்!' என்றான்.

'சொல்லுங்க சார்!'

'கொஞ்சம் வாராயன்... வெளியே நின்னு பேசலாம்.'

'ஆமாங்க. இங்கே ஒரே சப்தமா இருக்கு.'

இருவரும் வீதிக்கு வந்தார்கள்.

ஒரு கடைக்கு எதிரே பிளாட்பாரம் காலியாக இருந்தது.

'சொல்லுங்க சார்.'

'நாம பேசற விஷயம் நமக்குள்ளே மட்டும்தான் இருக் கணும்.'

Mithra Vintha

சொல்லமாட்டேன் சார்!'

'சத்தியம். யார் கையிலும் சொல்லமாட்டேன் சார்!'

'எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் தம் பொண்ணை உன் ஃபிரெண்டுக்குக் கட்டிவைக்க ஆசைப்படறார். பையன் நல்ல ஆள்னு எங்க எல்லாருக்குமே படறது... ஆனா அவன் உண்மையில எப்படிப்பட்டவன்னு தெரியாது. சிகரெட் பீடி குடிச்சாத் தப்பு இல்லே... ஆனா தண்ணி... அப்புறம்.'

'குட்டின்னு சொல்ல வர்றீங்க... சரி, யாருங்க அவன், என் ஃபிரெண்டுன்னு சொல்றீங்க!'

'பேரு வடிவேலு.'

'ஓ. நம்ப வால்டாக்ஸ் ரோடு வடிவேலுவா?'

'ஆமாம்.'

'நம்ப தோஸ்து சார்!'

'தெரியும். அவனே சொன்னான்.'

'அது சரி. கல்யாண விஷயத்தை அவன் கையில சொன்னீங்களா?'

'இன்னும் இல்லே.'

'அப்படீன்னா சொல்லாதீங்க.'

'ஏம்ப்பா...'

'இந்தக் காலத்தில ஆண்டவன் நல்லவங்களைத்தான் சோதிக்கறாரு. வேலு ரொம்ப நல்ல புள்ளை சார். ஒரு சிகரெட் பீடிகூடக் இடையாது. சாமி கும்பிடாம ஒரு காரியம் செய்யமாட்டான். ஆனா அவன் தலை எழுத்தைப் பாருங்க. கட்டின பெண்டாட்டியோட வாழ முடியலே...'

'ஓ! வடிவேலுவுக்குக் கலியாணமாயிடிச்சா?'

'நானே அம்பது ரூபா மொய் எழுதியிருக்கேன். திருநீர்மலையில் கலியாணம் நடந்தது.'

'அப்படியா?'

'பத்து நாள்கூட ரெண்டுபேரும் சேர்ந்து வாழலீங்க... அந்தப் பொண்ணு பிராட்வேயை விட்டு வரமாட்டேன்னு அடம் புடிச்சது. இவனுக்குச் சொந்த வீடு இருக்கு. அவ மனசு நோக வேணாம்னு இவன் அவ வீட்டுக்கே போனான்... ஆனா என்னென்னமோ அசிங்கமெல்லாம் இருக்கறது தெரிஞ்சது. திரும்பி வந்துட்டான்.'

'அவ பேரு தனம்!'

'உங்களுக்குத் தெரியுமா சார்?'

'ஆமாம்ப்பா கபாலி... எல்லாம் தெரிஞ்சுதான் உங்கிட்ட வந்தேன். உண்மையிலே வடிவேலுக்கு உதவி செய்யறதுதான் என் நோக்கம். உன் வாயாலே அவனைப் பத்தி ரெண்டு நல்ல வார்த்தை வந்துட்டா, அவனுக்கு ஹெல்ப் பண்ண எனக்கும் தெம்பா இருக்கும்.'

'என்ன உதவி செய்யப்போறீங்க?'

'சொந்தமா ஒரு மெகானிக் ஷாப் வைச்சுக் கொடுக்க ஏற்பாடு செய்யலாம்னு உத்தேசம்.'

'நிறையப் பணம் தேவைப்படும் சார்!'

'பணம் நிறைய இருக்கு. நீ விரும்பினா, நீயும் அவனோட கூட்டாளியா இருக்கலாம்.'

'சொல்லுங்க சார்! நான் ரெடி... அதுக்கு நான் என்ன செய்யணும்?'

'இப்போதைக்கு நாம பேசினதுபத்தி நீ வடிவேலு கிட்டப் பேசக்கூடாது.'

'நீங்க இங்க வந்ததையே சொல்லமாட்டேன் சார்.'

'இன்னொண்ணு. மறுபடியும் உன் உதவி எனக்குத் தேவைப்படும். அப்ப உங்கிட்ட வருவேன்!'

சொல்லி அனுப்புங்க சார். நானே வரேன்.'

'ரொம்பத் தாங்க்ஸ் கபாலி.'

MithraVintha

வீடு திரும்பும் வழியில் திடீரென்று டாக்டர் திருமலையின் நினைவு வந்தது. அவர் குடும்ப டாக்டர். ரங்கனைப் பரிசோதனை செய்ய அன்று வந்திருக்கிறார். ரங்கனுக்கு என்ன உடம்பு? மாலை ஆறரை மணிக்குச் சென்று பார்த்த போது தூக்கத்தில் உறைந்து போயிருந்தான். ஆனால் சுவாசக் குழாயிலிருந்து பீறிட்டு வந்த காற்று. அபஸ்வர ஓசையுடன் காதைத் தாக்கியது. ஆஸ்த்துமா வியாதி அவ்வப் போது தலைகாட்டும் என்று ரமணிக்குத் தெரியும். ஆஸ்த்துமாவா? ஜுரமும் இருக்கிறது என்று அம்மா சொன்னாளே?

டாக்டர் திருமலை, தம் கடையை மூடும்போது பத்து ஏன் பத்தரை கூட ஆகிவிடும். தம் வீட்டிலேயே முன் பக்கத்து அறையில் தொழில் நடத்துவதால் அவர் நேரம் காலம் பார்ப்பது கிடையாது.

ரமணி பிரவேசித்தபோது மேஜைமீது இருகால்களையும் போட்டவராய் டாக்டர் திருமலை உட்கார்ந்திருந்தார்.

'வாப்பா ரமணி...யார் அது, ஒரு புல் தடுக்கி வஸ்தாது உன் வீட்டு மாடியிலே குடி வைச்சிருக்கே?'

'நாலு வருஷம் முன்னாலே நீங்கதான் அவனைப் பார்த் திருக்கீங்களே டாக்டர்? ரங்கன்! தாத்தாவுக்கு ஒத்தாசையா கொஞ்சநாள் இருந்தானே?'

'ஓ! அவனா? மறுபடியும் ஒத்தாசை செய்ய வந்துட் டானா? இந்த மாதிரிக் கேஸ்களையெல்லாம் வீட்ல வைச்சுக் காதே ரமணி.'

'ஏன் சார்...என்ன அவனுக்கு?'

'சுவாசக் குழாயை டெஸ்ட் பண்ணினேன். புழுதி அடைஞ்சரும் மாதிரி இருக்கு. ஏதோ ஒரு அப்ஸ்ட்ரக்ஷன்... தடங்கல்.'

'அவன் தனக்கு ஆஸ்த்துமா உண்டுன்னு சொல்லி யிருக்கான்.'

டாக்டர் சிரித்தார்.

''மூச்சுத் திணறலை வைச்சுட்டு எவனோ நாட்டு வைத்தியன் சொல்லியிருக்கான்...தற்காலிகமா ஜுரத்துக்கு மருந்தும், சிரமமில்லாம மூச்சுவிட ஒரு இஞ்செக்ஷனும் டாப்ளட்டும் கொடுத்திருக்கேன்.'

'அசந்து தூங்கறான் டாக்டர்.'

'ஃபெனர்கான் தின்னா தூக்கம் வரும். நான் கொடுத் திருக்கேனே.'

'அவனை நீங்க ரொம்பத் தீவிரமா ட்ரீட் பண்ணணும் டாக்டர். ஸ்பெஷல் ரிக்வெஸ்ட்.'

'நீ சொன்னா செஞ்சுட வேண்டியதுதான். ஆனா செலவு நிறைய ஆகுமே?'

'என்ன ஆனாலும் பரவாயில்லே!'

'அவனாலே கொடுக்க முடியுமா ரமணி?'

'அவன் லட்சாதிபதி சார்!'

'யார் இவனா? பார்த்தாத் தெரியலையே...'

'பணக்காரக் களை வர்றத்துக்கு இன்னும் கொஞ்ச நாள் ஆகும் டாக்டர்!'

'நீ என்ன சொல்றே ரமணி?'

ரமணி விஷயத்தைச் சொன்னான்!

டாக்டர் அயர்ந்துபோய் ரமணியைப் பார்த்தார்!

'நான் வரேன் டாக்டர். நாளைக்கும் வந்து பாருங்கோ ரங்கனை!'

'அவசியம் பார்க்கிறேன்.

'ஜுரம் தணிஞ்சப்புறம் அவன் உடம்பை ஸ்கான் பண்ணிப் பார்க்கலாம். முக்கியமா விண்ட் பைப். லங்ஸை யும் டெஸ்ட் பண்ணணும்.'

MithraVintha

'எனக்கு அதெல்லாம் தெரியாது டாக்டர். இன்னும் ஏழெட்டு நாள்லே அவன் பழைய ரங்கனா நடமாடணும்!'

'நடமாடுவான். அப்புறம் மறுபடியும் நிமிர்ந்து இந்த மாதிரிப் படுத்துப்பான். பூரணமா குணப்படுத்தறது கொஞ்சம் சிரமம். பார்க்கிறேன். ஸ்பெஷலிஸ்ட்டையும் கன்சல்ட் பண்ணுவோம்!'

'உசிருக்கு?'

'இப்போதைக்கு ஒண்ணும் பயமில்லே ரமணி!'

'எப்படி இது நிமிர்ந்து வந்தது டாக்டர்! புரியல்லே!'

''எல்லாமே நிமிர்ந்துதாம்ப்பா வரும். உள்ளே ஒளிஞ்சுக்கிட்டிருக்கிறது. ஒருநாள் நிமிர்ந்துதான் வரும்!'

குழம்பிய மனத்துடன் வெளியேறிய ரமணி தனக்குள் பிரார்த்தித்துக்கொண்டாள்.

'கடவுளே, ரங்கன் நீண்ட நாள் வாழ நீதான் கிருபை செய்யணும்.'

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு வடிவேலு மொபட்டில் வந்து இறங்கினான். ரமணி அவனை மாடிக்கு அழைக்க, பதில் பேசாமல் பின்தொடர்ந்தான்.

ரங்கன் இருக்கும் அறை சாத்தப்பட்டிருந்தது. ரமணி லேசாகத் திறந்தாள். ரங்கன் இன்னும் தூங்கிக்கொண்டிருந்தான். அவனுடைய மூச்சின் சிரமமும் இரைச்சலும் வடிவேலுவைத் திகைக்க வைத்தன.

ரமணி மீண்டும் கதவைச் சாத்திவிட்டு மௌனமாய் மொட்டை மாடியை அடைந்தாள். பெரிய தண்ணீர்த் தொட்டிக்குக் கீழே நிழல் இருந்ததால், அங்கே ரமணி நிற்க, கூடவே வடிவேலுவும் நின்றான்.

'யார் சார் அந்த ஆள்?'

'நான் சொன்னேனே ஒருவனுடைய வாழ்வை நீ காப்பாற்ற வேண்டும்னு, அவன்தான் இவன்!'

''புரியலே சார்! இவனுக்கு நான் என்ன உதவி எப்படிச் செய்யமுடியும் சார்? ரத்ததானம் செய்யணும்னு சொல்றீங்களா?'

'இல்லே... வாழ்வு தானம். அவனுக்கு நீ சுதந்திரம் வாங்கிக் கொடுக்க வேண்டும்!'

'நீங்க சொல்றது ஒண்ணுமே எனக்குப் புரியலே. மிஸ்டர் ரமணி!'

இவனை எனக்கு நாலஞ்சு வருஷமாத் தெரியும், வடிவேலு! பரமசாது. 'புத்தி சாதுரியமோ சாமர்த்தியமோ போதாது. என்னைத் தவிர ஆதரவு அளிக்க இவனுக்கு யாரும் இல்லே. நானும் சிநேகிதத்தோட அடிப்படையில் இதுநாள் வரை இவனுக்கு என்னால் முடிஞ்ச உதவிகளை யெல்லாம் செய்ஞ்சு வந்தேன். எந்த விஷயத்திலும் என் பேச்சைத் தட்டாத இவன், ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் என் புத்திமதியை லட்சியம் செய்யாம ஒரு காரியம் செய்தான். அதனோட பலனை இப்ப அனுபவிக்கிறான்!'

'அதான் வியாதியிலே படுத்திட்டிருக்கிறானா சார்!' வடிவேலு யதார்த்தமாகக் கேட்டான்.

'இது அவன் ஒடம்பிலே பிறந்திருக்கிற வியாதி! ஆனா மனசிலே ஒரு ரணம் இருக்கு. அது அவனாக, என் சொல்லைக் கேளாமத் தேடி வாங்கிக்கிட்ட ரணம்! அதை ஒருத்தனால்தான் அப்புறப்படுத்த முடியும்! அந்த ஒருத்தன் நீதான், வடிவேலு!'

'மிஸ்டர் ரமணி சார்! நீங்க இவனைப்பத்தி என்னவெல்லாமோ சொல்றீங்க. வாழ்வு தானம்ங்கறீங்க. தேடி வாங்கிக்கிட்ட ரணம்னு சொல்றீங்க! நான்தான் ரணத்தைக்

MithraVintha

குணப்படுத்த முடியும்ங்கறீங்க! எனக்கும் இவனுக்கும் என்ன சம்பந்தம்னு இன்னும் ஒரு வார்த்தைகூடச் சொல்லலே!'

'சொல்றேன்' என்ற ரமணி, வடிவேலுவின் கண்களைக் கூர்ந்து பார்த்தான்.

'நீங்க ரெண்டுபேரும் ஒரே பெண்ணுக்குத் தாலி கட்டியிருக்கீங்க!'

வடிவேலு ஆடிப்போனான்.

20

அதிர்ச்சியிலிருந்து வடிவேலு மீளும்வரை ரமணி மௌனமாக அவனையே பார்த்துக் காத்திருந்தான்.

'சார்! சார்... என்ன சொன்னீங்க? நாங்க ரெண்டு பேரும் ஒரே பெண்ணோட கழுத்திலே தாலி கட்டியிருக்கோமா?'

ரமணி புன்முறுவலித்தான்.

'நீ திருநீர்மலைக் கோயில்லே கிட்டத்தட்ட ரெண்டு வருஷங்கள் முன்னாடி தனத்துக்கு மாலை போட்டே. நீ இப்பப் பார்த்தியே அவன், ரங்கன். சில மாசங்களுக்கு முன்னாலே கந்தசாமிக் கோவில்ல என் கண் முன்னாலே தாலி கட்டினான். அவங்க கல்யாணம் கோவில் ரிஜிஸ்டர்ல கூடப் பதிவாகியிருக்கு.'

'என் கல்யாணமும் பதிவாகியிருக்கு சார்!' என்ற வடிவேலு, 'தனம் ஏன் இப்படிச் செய்தான்னு எனக்குப் புரியலே' என்றான்.

'சட்டப்படி அவ ஒரு பெரிய குத்தம் செய்திருக்கா வடிவேலு. ஆனா அவ ஜெயிலுக்குப் போகணும்னு நான் கருவலே. என் சிநேகிதன் ரங்கனுக்கு அவகிட்டேர்ந்து விடுதலை கிடைக்கணும் அவ்வளவுதான்.'

வடிவேலு சிந்தனையில் ஆழ்ந்தவனைப்போலத் தலை குனிந்து நின்றான்.

ரமணி தொடர்ந்தான்.

'நீ ஏன் தனத்தைவிட்டுப் பிரிஞ்சு வாழறே.'

'காரணத்தைக் கேட்காதீங்க சார்!'

'ஏன்?'

'அசிங்கம்.'

'தெரியும்!'

'என்ன சார் தெரியும்?'

'இந்த எட்டு மாசத்துக்குள்ளே பிராட்வேயில் இருக்கிற ஒரு லேடி டாக்டர் ரெண்டு தடவை அவ வயத்தைச் சுத்தம் செய்திருக்கா.'

'இதே காரணம்தான் சார் என்னை அவகிட்டமிருந்து பிரித்தது. அவ கையில் ஐயாயிரம் ரூபாய் பணத்தைக் கொடுத்துட்டு வந்துட்டேன்.'

'அவ செய்ஞ்ச தப்புக்கு நீ அபராதம் கட்டினியா? விசித்திரமா இருக்கு.'

'உங்களுக்கு அவ அப்பனைப்பத்தித் தெரியாது.'

'மயில்சாமியை எனக்குத் தெரிஞ்ச அளவு உனக்குத் தெரிய நியாயமில்லை. அவன் நான் வேலை செய்யற ஆபீஸ்லே வாட்ச்மேனா இருந்தவன்' என்ற ரமணி 'ஆமாம், தனத்தை நீ எப்படித் தேர்ந்தெடுக்க நேரிட்டது?' என்று கேட்டான்.

MithraVintha

'என்னோட அம்மாவின் ஒன்னுவிட்ட தாய் மாமன் மயில்சாமி. ராணுவத்தில் இருந்தவன். தனம் பன்னிரண்டு வயசுப்பொண்ணா இருக்கறப்ப, அவ அம்மா காலமானா. தாயில்லாத பொண்ணுன்னு என் அம்மா இறங்கினா. ஆனா அவ எப்படிப்பட்ட பொண்ணுன்னு அப்புறமாத்தான் தெரிஞ்சுது.'

'சட்டப்படி இப்பவும் தனம்தான் உன் மனைவி. சட்ட ரீதியா நீ ஏன் விடுதலை வாங்கிக்கொள்ளக்கூடாது?'

'செய்யலாம் சார்... ஆனா கோர்ட்டு, வக்கீல்னு ஒரே ரோதனையாப் போயிடும். நான் ஃபாக்டரிக்குப் போவேனா, இல்லே கோர்ட் படி ஏறி இறங்குவேனா? அதுவுமில்லாம இதுக்கெல்லாம் பணம் வேண்டாமா?'

'வேலையை விட்டுடு!'

'விட்டுட்டு?'

'உன் கையில் தொழில் இருக்கு. உன் மனசிலே சுத்தம் இருக்கு. உன் உடம்பில் தெம்பு இருக்கு. சொந்தத் தொழில் ஆரம்பி!'

'என்ன சார் விளையாடறீங்களா? பாங்க்லே கடன் கேட்கப் போனா, ஆயிரம் கேள்வி கேட்கறான். நூறு தடவை நடக்க வைக்கிறான். கடைசியிலே கையை விரிக்கிறான்... கோர்ட்டு செலவுக்கே பணம் இல்லேன்னு சொல்றேன், நீங்க என்னடான்னா...'

'அவசரப்படாதே வடிவேலு! பாங்க் தராத கடனை நான் வாங்கித் தர்றேன். இன்னியிலிருந்து சொந்தத் தொழில்பத்தியே சிந்தனையா இரு... நீ 'ஓகே'ன்னு சொன்ன மறுநாள், முதல் தவணையா முப்பதாயிரம் ரூபா கொண்டு வர்றேன். நீ, உன் மெக்கானிக் ஷாப் ஆரம்பிக்கிற அன்னிக்கு ரெண்டாவது தவணை இருபதாயிரம். ஒரு வருஷத்துக்கு அப்புறம் மாசா மாசம் உன் சக்திக்குத் தகுந்தாப்ல கடனைத் திருப்பிக் கொடு! நயா பைசா வட்டி வேண்டாம்.'

வடிவேலு மூச்சடைத்துப்போய் நின்றான். பிறகு மெல்லச் சமாளித்துக்கொண்டு, 'நீங்க இவ்வளவு தூரம் உதவி செய்ய முன்வர்றத்துக்கு ஒரே காரணம் உங்க சிநேகிதனுக்கு விடுதலை வேணும்ங்கறதுதான் இல்லியா?' என்றான்.

'தப்பு வடிவேலு. என் சிநேகிதன் நாளைக்குப் போலீஸ்லே புகார் கொடுத்தாலோ அல்லது நேராக் கோர்ட்டுக்கே போனாலோ, மூனு நாள்ளே என் ரங்கனுக்குத் தனத்துக்கிட்டேந்து விடுதலை கிடைச்சுடும். ஆனா நான் அப்படிச் செய்ஞ்சா, போலீசும் கோர்ட்டும் முதல் சாட்சியா யாரைக் கூப்பிடுவாங்க தெரியுமா? உன்னைத்தான் வடிவேலு! உன்னாலே அங்கே வந்து பொய் சொல்ல முடியுமா?'

'அப்ப எதுக்கு இந்த உதவி?'

'உன்னைப்பத்தி நான் விசாரிச்சேன் வடிவேலு! உன் தாத்தா அவரோட அப்பா எல்லோரும் ரொம்ப வசதியோட வாழ்ந்தவங்கன்னு தெரிஞ்சுது. உன் அப்பா சின்ன வயசில ரொம்ப ரொம்ப விளையாடி எல்லா சொத்துக்களையும் அழிச்சார்ன்னு தெரிஞ்சுது. இப்ப நீ இருக்கிற வீடு உன் அம்மாபேர்ல இருக்கு. அது அவளுக்குச் சீதனமா வந்த சொத்து. அதை உன் அப்பாவாலே விக்கவும் முடியாது! அடமானமா வைச்சுப் பணம் புரட்டவும் முடியாது. இப்படிப்பட்ட குடும்பத்தில் வந்தவன் ஒருத்தன் தன்னோட அப்பா செய்ஞ்ச தவறுகளுக்காகக் கஷ்டப்படறான். இதைத் தவிர்க்க முடியாது. ஆனா ஒரு நல்லவனோட வாழ்க்கை ஏன் ஒரு தறுதலைப் பெண்ணாலே நாசமாகணும்?' யோசிச்சுப் பாரு. உன் பரம்பரைப் பேரைக் காப்பாத்த இப்ப உனக்கு வழி இல்லே. அந்த வழியை நான் ஏற்பாடு செய்யறேன் அவ்வளவுதான். ரங்கனை மாதிரி நீயும் ஒரு பெண்ணாலே பாதிக்கப்பட்டவன். இதுவும் ஒரு காரணம்!'

'இப்ப நீங்க சொன்ன அம்பதாயிரத்தை இந்த ரங்கன் தானே கொடுக்கப்போறான்?'

MithraVintha

'ஆமாம்' என்ற ரமணி 'ஆனா இதெல்லாம் அவனுக்கு ஒண்ணும் தெரியாது! அவன் ஒரு அப்பாவி. சாது. அவனும் அவனோட லாட்டரி பரிசுப் பணமும் இப்ப என் பொறுப்பிலே இருக்கு. யார் கண்டா, அவன் மேலும் சில லட்சங்களை மூலதனமாப் போட்டா உன் மெக்கானிக் ஷாப் ஒரு ஃபாக்டரியாகவேகூட மாறிடலாம். நீ ரங்கனோட கூட்டாளியா ஆயிடலாம்.'

'வேணாம் சார், அவன் லட்சாதிபதியாகவே இருக்கட்டும். நான் என் ஸ்நேகிதன் கபாலிகிட்ட கலந்தாலோசிச்சு முடிவு சொல்றேன்!'

'அப்ப விவாகரத்து?'

'சொல்றேன்!'

டாக்டர் திருமலை தினந்தோறும் இரண்டு தடவை வந்து ரங்கனைப் பார்த்துவிட்டுப் போனார். உள்ளுக்குள்ளே நீண்டகாலமாக ஒளிந்திருந்து அவ்வப்போது நிழலை மட்டும் காட்டிக்கொண்டிருந்த பூதம் இப்போது தலை நீட்டிவிட்டது.

ரங்கன் சிரமமில்லாமல் சுவாசிக்கப் பிராணவாயு அடங்கிய சிலிண்டரை வைத்தார்கள். ரங்கன் பயந்து போனான்!

'ரமணி சார் எனக்குப் பயமா இருக்கு...நான் செத்துப் போயிடுவேனா ரமணி சார்?'

'பயப்படாதே ரங்கா...இத்தனை நாளா நீ பியூனா இருந்தப்ப இந்த வியாதி தலை தூக்கித்தா? நீ எப்ப லட்சாதிபதியாவேன்னு அது காத்துட்டிருந்த மாதிரி இப்ப வந்திருக்கு. உன் பணத்திலே கொஞ்சம் செலவழிய வேண்டாம்? அதான் கடவுள் ஒரு பக்கம் கொடுத்து இன்னொரு பக்கம் தன் காணிக்கையை வாங்கிக்கிறார்.'

'சார் என் பணம் பாங்க்குக்கு வந்துட்டுதா?'

'முந்தா நாள் சனிக்கிழமை உன் கணக்குக்கு எல்லாப் பணமும் வந்தாச்சு.'

'இருபத்தஞ்சு லட்சமுமா?'

'இல்லே, வருமான வரி ஏஜெண்ட் கமிஷன்னு கழிவுகள் போக பதிமூனு லட்சத்து அம்பதாயிரம் ரூபா' என்ற ரமணி, 'ஸிஸ்டர் நீங்க டியூபை ஃபிக்ஸ் பண்ணுங்க!' என்றான் நின்றுகொண்டிருந்த நர்ஸைப் பார்த்து.

'ஒரு நிமிஷம் ரமணி சார்!'

'என்ன ரங்கா?'

'நான் சொன்னா நீங்க என்னைத் திட்டக்கூடாது!'

'என்ன, சொல்லு!'

'நம்ப முதலாளி சொன்னார், நான் உங்களுக்கு ஒரு லட்சம் ருபாயாவது கொடுக்கணும்னு.'

'தெரியும்! எங்கிட்டேயும் சொன்னார்.'

'மொதல்ல நீங்க அதை வாங்கிக்கணும்.'

'நீ நம்ப ஸ்நேகிதத்துக்கு விலை பேசறியா ரங்கா?'

இல்லே ரமணி சார். உங்க இடத்தில வேறே யாரானும் இருந்திருந்தால் எனக்குப் பைசா கெடைச்சிருக்காது!'

'அப்படீன்னா, நான் உன்னை ஏமாத்தாம இருந்ததுக்கு எனக்குப் பரிசு கொடுக்கிறே இல்லே?'

'சார் சார்...' திடீரென்று இருமல் தாக்க, மூச்சு அடைக்க ரங்கன் திணறிப் போனான்.

அவன் மீண்டும் சமாளித்து ஒரு நிலைக்கு வரும் வரை காத்திருந்த ரமணி, 'இந்தா ஸிஸ்டர் இப்ப உனக்கு ஆக்ஸிஜன் கொடுக்கப் போறா...அதுக்கு முன்னாடி ஒண்ணே ஒண்ணு சொல்லிடறேன் ரங்கா. நான் லட்சம் ருபா வாங்கிக்கிறேன். ஆனா அதுக்கு அப்புறம் நீ யாரோ நான்

MithraVintha

யாரோ! தனம், மயில்சாமி உன் அண்ணன் லிங்கம் எல்லாரையும் நீயே சமாளிச்சுக்கணும்! என்ன புரியறதா? சிஸ்டர்! ப்ளீஸ் கோ ஆன் வித் யுவர் ஜாப்' என்றான்.

தனக்குள் பொங்கி வந்த உணர்ச்சிகளை ரங்கனால் கொட்ட முடியவில்லை.

குழாயைப் பொருத்திய பிறகு, பிராணவாயு உள்ளே செல்லுகையில், தன் உடல்நிலை முழுதுமே குணமாகிவிட்டதான பிரமை பிறந்தது. கண்களை மூடிக்கொண்டிருந்தவன்,

'ரமணி சார்!' என்று மெல்லிய குரலில் அழைத்தான்.

பதில் வராமற் போகவே கண்களைத் திறந்தான்.

ரமணி அங்கே இல்லை.

நர்ஸும் போயாகிவிட்டது.

ரங்கன் தனக்குள் அழ ஆரம்பித்தான். கண்முன் யார் யாரெல்லாமோ வந்து போனார்கள்.

மயில்சாமி உறுமினான்.

தனம் கழுத்தை நெரித்தாள்.

அண்ணன் சிவலிங்கமும் அண்ணியுமாக அவனுடைய இரு கைகளையும் ஒடித்தார்கள்.

நாட்கள் நகர்ந்தன!

ரங்கன் மீண்டும் பழையபடி நடமாடலானான். தனக்கு எப்பேர்ப்பட்ட வியாதி வந்திருக்கிறது என்று அவனுக்கு இன்னும் தெரியவில்லை. முன்பெல்லாம் வெயிலில் நீண்ட நேரம் நடந்து வியர்த்தாலோ, அல்லது குளிர்காலத்தில் அதிகாலை நேரத்தில் கண் விழித்தாலோ திடீரென்று மூச்சுத் திணறும். இது அவனுடைய பதினாறாவது வயதில் ஆரம்பித்தது. கும்பகோணம் டாக்டர் ஒரு சில மாத்திரைகளை எழுதிக் கொடுத்தார். மூச்சுத்திணறல் வரும்போ

தெல்லாம் பயமில்லாமல் மாத்திரையை விழுங்குவான். திணறல் பத்துப் பதினைந்து நிமிடங்களில் நின்றுவிடும். சென்னை வந்தபிறகும் அதே மாத்திரைகள் உதவி செய்தன. ஆனால் இப்போது பிராணவாயு செலுத்தும் அளவுக்கு சுவாசக் குழாய் பலவீனமாகிவிட்டது. என்ன செய்ய?

இப்போது ரங்கன் பயப்படவில்லை. கைநிறையப் பணம் இருக்கிறது. கூப்பிட்ட குரலுக்கு டாக்டரும் நர்சும் இருக்கிறார்கள். மூச்சுவிடக் கொஞ்சம் சிரமம் இருந்தாலும் பிராணவாயு வந்துவிடும். எல்லாவற்றிற்கும் மேலாக ரமணி இருக்கிறான்.

அன்று மாலு அவனைப் பார்க்க வந்தாள். ரங்கனுக்குப் பெருமையாக இருந்தது.

'வாங்க மாலு அம்மா... வாங்க.'

'எப்படி இருக்கே ரங்கா? ரமணி சொன்னார் நீ ஒரு வாரமா படுக்கையில் கிடந்துட்டேன்னு. ஆக்ஸிஜன் கூடக் கொடுத்தாங்களாம்!'

'எல்லாம் ரமணி சார் செய்த ஏற்பாடு மாலு அம்மா.

மாலு பையிலிருந்து ஆறு சாத்துக்குடிப் பழங்களை எடுத்து அவனருகே வைத்தாள்.

'இதெல்லாம் எதுக்கு, மாலு அம்மா?'

'உரிச்சு சுளை சுளையாத் திங்கத்தான்! நான் வரட்டுமா?'

'சரிம்மா! ரமணி சார் என்ன செய்யறார்?'

'நீ செக்புக்லே கையெழுத்து போட்டியே, நினைவு இருக்கா?'

'ஆமாம் டாக்டர் செலவு, அப்புறம் அந்தக் கழுதைக்குக் கொடுக்கன்னெல்லாம் சொன்னாரு. அதான் செக்கிலே கையெழுத்துப் போட்டேன். அவ்வப்போது பணம் எடுக்கத் தோதா இருக்க, ரமணி சார் பட்டணத்

MithraVintha

இலேயும் என் பேர்ல கணக்கு ஆரம்பிக்கச் சொன்னாரு. சேலம் பாங்க்லேர்ந்து இந்த பாங்க்குக்கு அப்பப்ப பணம் வந்துகிட்டேயிருக்கும் மாலு அம்மா!'

'இதெல்லாம் எனக்குத் தெரிஞ்சதுதான் ரங்கா... ஆனா உனக்குத் தெரியாத ஒரு விஷயத்தை நான் சொல்லட்டுமா?'

'சொல்லுங்க! மாலு அம்மா!'

'மாலு அம்மான்னு கூப்பிடறதை நிறுத்தினாத்தான் சொல்லுவேன்.'

'வேறே எப்படி அம்மா நான் உங்களை அழைப்பேன்.'

'மிஸ். மாலு... இல்லே மாலு மிஸ்.'

'சரிம்மா' என்ற ரங்கன் புன்முறுவலித்தான். பிறகு, "'இப்பச் சொல்லுங்க'' என்றான்.

'என் அம்மா அப்பா ரெண்டுபேரும் ரமணியோட அம்மா அப்பாவைப் பார்க்க வரப் போறாங்க... அதுவும் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை அன்னிக்கு!'

'எதுக்கும்மா?'

மாலுவுக்குக் கோபம் வந்தது.

'என்ன ரங்கா இதுகூடவாத் தெரியாது? எங்க வீட்டு மனுஷங்க எதுக்கு ரமணி வீட்டு மனுஷங்களைப் பார்க்க வருவாங்க? பொழுது போகாமயா?'

'இப்பப் புரியுது! மாலு மிஸ்... கல்யாண விஷயமாத் தானே?'

'கரெக்ட்.'

'என்னிக்கு முகூர்த்தம்?'

'எங்க வீட்ல அவசரப்படறாங்க! ஆனா ரமணி! நான் காத்திட்டிருக்கணும்னு சொல்றார்.'

'ஏன் ரமணி சார் அப்படிச் சொல்லணும்?'

'நீ நினைச்சா அவர் மனசை மாத்த முடியும்?'

'எப்படிம்மா?'

'கெஞ்சு! அழு. மனசு உடைஞ்சு போயிடும்னு சொல்லு. மாலு தற்கொலை பண்ணிப்பான்னு பயமுறுத்து.'

'இதுக்கெல்லாம் அவர் அசரமாட்டார். மாலு மிஸ். வேறே ஏதானும் ஒரு வழி சொல்லுங்களேன்.'

'இப்படிச் செய்யறியா?'

'எப்படி?'

'மறுபடியும் தனத்தோட வாழப்போறேன்னு சொல்லு. எல்லாப் பணத்தையும் அவபேருக்கும் சேர்த்து பாங்க் கணக்கிலே வைக்கக்க முடிவு செய்ஞ்சுட்டதாச் சொல்லு.'

'மாலு மிஸ். அது பொய் இல்லியா? நான் விவாகரத் துக்காகக் காத்துட்டிருக்கேன்னு அவருக்குத் தெரியுமே?'

'நீ உன் மனசை மாத்திக்கிட்டதாச் சொல்லு. நாங்க மாலை மாத்திக்கிறதை நீ கண் குளிரப் பார்க்க வேண் டாமா? ரமணி சார் உனக்காக உசிரையே கொடுக்கிறார். நீ எனக்காக இந்த உதவி செய்யமாட்டாயா?'

'நீங்க வேறே, ரமணி சார் வேறே இல்லேம்மா. நானும் என் உசிரையே கொடுத்தாவது உங்க கலியாணத்துக்கு ஏற் பாடு செய்யப் பார்க்கிறேன்!' என்றான் ரங்கன்.

மாலு அவனைப் புன்முறுவலுடன் பார்த்தாள்.

'ரொம்பத் தாங்க்ஸ் ரங்கா!' என்றாள்.

MithraVintha

21

அன்று காலை ரமணி தாத்தாவின் அறையினுள் பிரவேசித்தான்.

தாத்தா ஒரு நாற்காலியில் அமர்ந்து, கண்ணாடியின் உதவி இல்லாமலே முகத்தை பழைய ஜெர்மன் ரேஸரால் மழித்துக் கொண்டிருந்தார். அவர் வீட்டிலேயே அடைந்து இடப்பவர். யாரையும் பார்க்க எப்போதுமே வெளியே செல்லாதவர். இப்படி இருக்கையில் எதற்கு இந்தத் தினசரி கலியாணம்? ரமணி ஒரு தடவை கேட்டபோது, எதை எதை நிறுத்தினாலும் பழக்கத்தை நிறுத்தப்படாது. முகத் திலே தாடி அரும்பு விட்டாலே உடம்புக்கு ஏதோ வந்துட்டடதா மனசு கலங்க ஆரம்பிச்சுடும். எப்போதும் ஃப்ரெஷ்ஷா இருக்கணும் என்றார்.

'என்னடா, இன்னிக்கு இவ்வளவு லேட்டு?' என்ற தாத்தா. 'அந்த மாலு பொண்ணுவைத் தூக்கத்திலே நிறைய நேரம் ரசிக்கணும்னு தூங்கிட்டியா?' என்றார்.

'அதெல்லாம் ஒண்ணும் இல்லே தாத்தா' என்று சொன்ன ரமணி உட்கார்ந்தான்.

'பார்க்க லட்சணமா இருக்காடா. உன் அம்மா அப்பா கிட்டச் சொல்லிட்டேன், சீக்கிரம் முகூர்த்தத்தை வைக்கக் கணும்னு. மாலுவோட அப்பா நாளைக்கே ரெடின்னார்.'

'நான் இன்னும் ரெடி இல்லை தாத்தா?'

'ஏண்டா ஏன்...?'

'உங்களுக்கே தெரியும்.'

'என்ன தெரியும்?'

'இந்த வீட்லே இடம் இல்லேன்னு...'

'நான் இடம் பண்ண ஒரு திட்டம் போட்டிருக் கேண்டா ரமணி... அப்புறமாச் சொல்றேன்.'

'இன்னும் கொஞ்ச நாள் போகட்டும் தாத்தா...'

'நான் உசிரோட இருக்கறப்ப உன் கலியாணம் நடக் கணும். நீங்க ரெண்டுபேரும் ஊஞ்சல் ஆடறப்ப நான் பாடணும்!' என்றார் தாத்தா.

'என்ன தாத்தா இப்படியெல்லாம் வேறே ஆசை வைச்சிருக்கீங்க?'

'இதப் பாரு ரமணி! எனக்கு என்னதான் உடம்பு திடமா இருந்தாலும், இருமல் வர்றப்ப மார்பு ரொம்ப வலிக்கிறது. எப்பப் பெரிசா ஒரு இருமல் வரும். அதிலே நான் எப்பப் புறப்படுவேன்னு தெரியலே... ஆனா எனக்கு ஒரு ஆசை. உன் கலியாணம் என் கண் முன்னாடி நடக்கணும்.'

ரமணியால் பதில் சொல்ல முடியவில்லை.

'இன்னொரு ஆசையும் இருக்குடா ரமணி.'

'என்ன தாத்தா, எங்களுக்குப் பிறக்கப்போகும் குழந் தையின் ஆண்டு நிறைவையும் பார்க்கணுமா?'

'குறும்புப் பயலே. எங்கிட்டேயே உன் வாலை ஆட்டறியா? இந்த வீடு பழைய வீடு. இதை இடிச்சுட்டு, நாம ஒரு இருபது ஃப்ளாட் கட்டணும். இது தாண்டா நான் வைச்சுட்டிருக்கிற திட்டம்.

'தாத்தா...நீங்களா இப்படிப் பேசறீங்க?' ரமணி அயர்ந்து போனான்.

''ஆமாம்டா ... நான்தான் பேசறேன். நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன். என்னுடைய இந்த ஆசையை உன்னால்தான் திட்டம் போட்டுச் செய்ய முடியும்.'

MithraVintha

'இருபதுன்னா?'

'நானே என்ஜினியர்தான். ஆனா இப்பு கல்தான் காலத்து என்ஜினியர். ஒரு ஆர்க்கிடெக்ட்டைப் பாரு. பிளான் போடச் சொல்லு. அப்புறம் எம். எம். டி. ஏ. கார்ப்பரேஷனெல்லாம் இருக்கு!'

'தாத்தா, நாம முப்பது ஃப்ளாட் ரொம்ப சவுரியாக் கட்டலாம்.'

'சரி. இப்ப உன் காதிலேயே போட்டு வைச்சாச்சு. ஆனா மத்தவா யார் காதிலேயும் விழப்படாது.'

'சரி தாத்தா!'

'நான் என்னோட மூணு பிள்ளைகளுக்கு மூணு ஃப்ளாட் கொடுக்கப்போறேன். எனக்குன்னு தனியா ஒரு ஃப்ளாட். அது எனக்கு அப்புறம் உனக்கு வரும். மத்ததையெல்லாம் வித்துப் பணமாக்குவோம். என்ன சொல்றே?'

'எப்படித் தாத்தா, திடீர்னு இப்படி ஒரு ஐடியா தோணித்து உங்களுக்கு?'

'ரொம்ப நாளா இருக்குடா. ஆனா யார்ட்டே இதைச் சொல்றது? உன் அப்பன் ஒரு சோம்பேறி. பெரியப்பாவுக்கு [illegible]

[illegible]

'தாத்தா!'

'என்னடா?'

'கட்டி முடிக்கிற பொறுப்பையும் என்கிட்டேயே விட்டுடறீங்களா?'

'ஆமாம்... உன்னால் முடியும். ஆனா ரொம்பக் கவனமா இருக்கணும்.'

'சரி தாத்தா!'

'ஆமாம். நாலஞ்சு லட்சம் மூலதனமாப் போட வேண்டியிருக்குமே. என்ன செய்வே?'

'தம்பி ரங்கன் இருக்கான் தாத்தா!'

'அவனோட லாட்டரிப் பணத்திலே கை வைக்கப் போறியா? கொன்னுப்புடுவேன்!'

'என்ன தாத்தா, நீங்க! நான் ரங்கனைப் போய் ஏமாத்துவேனா? நான் கடன் கேட்டா அவன் இல்லைன்னு சொல்லமாட்டான்.'

[illegible]

MithraVintha

பத்துப் பதினஞ்சு லட்சத்தில் இவனுக்கு இந்த வியாதியும் வந்திருக்கு. ஹங். பேர் என்ன சொன்னே?'

'எம்ப்பிஸியான்னு ... லங்க்ஸ்லே கோளாறு. சுருண்டு கிடக்கிற வலைப் பாயா விரிச்சா, அது ஒரு டென்னிஸ் கோர்ட் அளவுக்குப் பரவுமாம். ஆனா ரங்கனோட நுரையீரல் ரொம்பக் குறுகி, மடிப்புக்களெல்லாம் சுருங்கிக் கிடக்கிறதாம். இதனால் நுரையீரல் சக்தியே இல்லாமத் தவிக்கிறதாம்.'

'அப்படியா?'

'இந்தக் கோளாறு காரணமா பிராணவாயு உள்ளே எவ்வளவு போனாலும் கரியமிலவாயு முழுதும் வெளியே வர முடியறதில்லே.'

'அடப்பாவமே!'

'சின்ன வயசிலே ரங்கனுக்கு ஆஸ்துமா இருந்திருக்கு. காற்றுக் குழாய் சின்னதாப் போயிருக்கு.'

'எனக்கு அந்த வியாதி இல்லியே ரமணி?'

'உங்க வியாதிக்கும் ரங்கன் வியாதிக்கும் சம்பந்தமே இல்லே, தாத்தா!'

'அவனை என்ன செய்யப்போறே!'

'தெரியலே தாத்தா. ஆனா ரொம்ப நாள் ரங்கன் இருக்கமாட்டான். என்னோட ஒரு ஆசை. அவன் இருக்கிற வரை, பணத்தை அவன் சுகமா அனுபவிக்கணும் சுறதுதான்'.

'அவன்கிட்டயா கடன் வாங்கப்போறே?'

'ஆமாம்.'

'நீ திருப்பிக் கொடுக்கறதுக்குள்ளே அவன் போய்ச் சேர்ந்துட்டா?'

'அவனுக்கு அப்புறம், அவன் பணத்திலே யாருக்கு உரிமை இருக்கோ, அவங்ககிட்ட கொடுத்துடுவேன்.'

'சரி, நீ வேலையை ஆரம்பி!'

'இப்ப நீங்க சொன்ன வார்த்தையை நம்பி நான் முழு மூச்சா வேலையில் இறங்கலாமா, தாத்தா?'

'படவா, என்னை என்ன கற்பூரம் ஏத்திச் சத்தியம் பண்ணச் சொல்றியா?'

'அதுக்கில்லே தாத்தா. நான் என் வேலையிலிருந்து ராஜினாமா செய்யணும்.'

'இப்போதைக்கு லீவு எடுடா. அஸ்திவாரம் போட ஆரம்பிக்கறப்ப ராஜினாமா பத்தி யோசனை செய்யலாம்!'

மாலு சிரித்துக்கொண்டே அவனருகில் வந்தாள்.

'குட்மார்னிங்!'

'குட்மார்னிங் மாலு!'

'உங்க தாத்தாவை எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போயிடுத்து ரமணி.'

'ரொம்பச் சந்தோஷம். நான் இப்ப ரொம்பத் தீவிரமா யோசிச்சுட்டிருக்கேன் நீ டிஸ்டர்ப் பண்ணாதே!'

'கலியாண மண்டபம் பார்த்தாச்சு.'

ரமணிக்குக் கோபம் வந்தது.

'ஆக்கப் பொறுத்தவனுக்கு ஆறப் பொறுக்கலையாம்... ஏன் நீ கொஞ்சம் வெயிட் பண்ணப்படாது?'

'கொஞ்சம்னா...?'

'அஞ்சாறு மாசம்... இங்கே நீ உயிரை எடுக்கறே... அங்கே ரங்கன் உனக்காக லக்காலத்து வாங்கிட்டு காத்திருந்து அழறான்... இதெல்லாம் போறாதுன்னு தாத்தா வேறே அவசரப்படுத்தறார்!'

'அப்படியும் உங்க மண்டை, மரமண்டையா இருக்கு

MithraVintha

'ஓ.கே. மாது. நாம கூடிய சீக்கிரம் கலியாணம் பண்ணிக்கலாம். ஆனா ஒரு கண்டிஷன்!'

'தெரியும். அவ்வளவு பெரிய வீட்ல நம்ப ரெண்டு பேருக்கு இடமில்லை. இதுதானே?'

'இன்னும் கொஞ்ச நாள்ளே அந்த வீடே இருக்காது மாது.'

'வாட் டு யூ மீன். ரமணி?'

'அந்த இரெண்டு நிலத்திலே முப்பது ஃப்ளாட் கட்டறதா முடிவாயிருக்கு மாது. இப்ப நாங்களே வாடகைக்கு வீடு பார்த்துட்டிருக்கோம். அப்பா, பெரியப்பா, சித்தப்பா எல்லாருக்கும் ஒரே ஆத்திரம். ஆனா தாத்தாவை அவங்களாலே எதிர்த்துக்கவும் முடியலே... எல்லாரும் எங்கிட்டக் கத்தறா— நான்தான் இந்த ஐடியா வைத் தாத்தாவுக்குக் கொடுத்தேனாம்!'

[illegible]

'அண்ணா, நீங்க மத்தவங்களுக்கு உதவி செய்துதான் பழக்கப்பட்டிருக்கீங்க ...நீங்க யார் உதவியையும் நாடிப் போனதில்லே.'

'நீ என்ன சொல்ல வர்றே மாது?'

'நீங்க கட்டட வேலைகளைப் பாருங்க... நான் கணக்குகளைக் கவனிக்கிறேன்...மொத்தம் எத்தனை ஃப்ளாட்?'

'முப்பது.'

'அதிலே எத்தனை விக்கறதா உத்தேசம்?'

'இருபத்தைஞ்சு.'

'ஒவ்வொண்ணும் எத்தனை சதுர அடி...?'

'இன்னும் தீர்மானம் செய்யலே, ஆர்க்கிடெக்ட்தான் சொல்லணும். ஆனா ஆயிரம்னு வெச்சுக்கலாம்.'

'சதுர அடி நானூறுன்னா வாங்கறவன் நாலு லட்சம் [illegible]

MithraVintha

'அதுதான் கூடாது ரமணி. பணமா வாங்கினா வட்டியும் பணமாகத்தான் கொடுக்கணும். இன்னொரு ஹெல்ப்பும் கிடைக்கும்...'

'என்ன அது?'

'என் பெரிய மாமா போன மாசம் ரிடையரானார். என்ஜினியர். அவரை மேற்பார்வைக்கு வைச்சுப்போம். செஞ்ச வேலைக்கு இவ்வளவு ஊதியம்னு காண்ட்ராக்டர்களை ஏற்பாடு செய்வோம்!'

'பரவாயில்லையே மாது. ரொம்பத் தெரிஞ்சு வைச்சிட்டிருக்கே!'

'என் குடும்பத்திலே பாதிப்பேர் பெரிய காண்ட்ராக்டர்கள், ரமணி!'

'இப்ப இந்தத் திட்டத்தைக் கொஞ்சம் மறந்துட்டு, தம்பி ரங்கனைப்பத்தி நினைக்கணும். இப்ப அவன் உடம்பு பரவாயில்லை. மொதல்ல அவனுக்கு தனத்துக்கிட்டேர்ந்து விடுதலை வாங்கிக் கொடுக்க வழிசெய்யணும்!'

'அதான் வடிவேலுவை நீங்க பார்த்தாச்சே!'

'மறுபடியும் அவனையும் தனத்தையும் நான் சந்திக்கணும் மாது. கோர்ட் சென்று போனா எல்லாருக்கும் தலைவலிதான். மயில்சாமி, தனம் ரெண்டுபேருக்கும் வாய்க்கரிசி போட்டுத்தான் காரியத்தைச் சாதிக்கணும்.'

'இதிலேயும் நான் ஹெல்ப் பண்ண ரெடி!'

'தேவை இல்லை!' என்றான் ரமணி.

மாது சிரித்துக் கொண்டே எழுந்தாள்.

22

முதல் தேதி பிறக்க இன்னும் சில நாட்கள்தான் இருக்கின்றன. அதற்குள் கோமதி இன்னொரு ஆயிரம் ரூபாயுடன் வந்துவிடுவாள் என்று தனம் தனக்குள் கணக்குப் போட்-

டாள். அதேசமயம் மயில்சாமியின் உருவமும் கண்முன் நின்று பயமுறுத்தியது. எவ்வளவு பணம் வந்தாலும் அதில் பாதி தன்னைச் சேர வேண்டும் என்று அவளைப் பெற்ற தகப்பனாரே மிரட்டும்போது அவளால் என்ன செய்ய முடியும்? மயில்சாமியிடமிருந்து விடுதலை பெற ஒரே வழி, மீண்டும் ரங்கனுடன் வாழ்வதுதான். கோமதி சொல்லியிருக்கிறாள். மயிலாப்பூரிலேயே ஒரு பங்களா வாங்கி அவளையும் ரங்கனையும் குடியேற்றப் போவதாக கோமதி அம்மா நல்லவள். அவளுடைய மனத்தை அறிந்து செயல்படுகிறவள்.

திடீரென்று ஏன் இன்னும் லாட்டரிப் பணம் வரவில்லை என்ற கேள்வி எழுந்தது. ஒருவேளை அது வந்தபிறகு ரமணி ஏதாவது சூழ்ச்சி செய்கிறானோ? ரங்கன் சாது என்று அவளுக்கும் தெரியும். அவளுடைய மிரட்டலுக்கு நடுங்குபவன்! இப்படிப்பட்டவன் ரமணியின் கையில் சிக்கிக் கொண்டு படாதபாடெல்லாம் அனுபவிப்பான்.

ரங்கனை ரமணியிடமிருந்து மீட்க வேண்டும். எப்படி? ரங்கனுடைய முழுப் பணத்தையும் அவள் ஆட்சி செய்ய வேண்டும். எப்படி? எப்படி என்றுதான் புரியவில்லை. தந்தை மயில்சாமியைப் பகைத்துக்கொள்ளக் கூடாது. குடி வெறியில் எல்லா உண்மைகளையும் நடுத்தெருவில் நின்று ஓலமிடுவான். அதன்பிறகு அவ்வளவுதான். ரமணியையும் விரோதித்துக் கொள்ளக்கூடாது. அவன் நடுத்தெருவில் கத்தமாட்டான்! ஆனால் மூளையை உபயோகித்து அவளை மடக்குவான்.

காலையில் சாப்பிட்ட இடியாப்பம் இன்னும் ஜீரணமாகவில்லை. அரைமணி நேரம் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் கடிகாரத்தைப் பார்த்தாள். ஒன்பது காட்டியது. திடீரென்று வாசலில் நிழலாட்டம் தெரிந்தது.

கோமதி அம்மாதானோ?

கதவைத் திறந்தாள்.

MithraVintha

'குட்மார்னிங் தனம்!' ரமணி புன்முறுவலித்தான்.

'மிஸஸ் ரங்கனை எனக்கு அறிமுகம் செய்து வையுங்க ரமணி!' என்றாள் அருகே நின்ற மாது.

தனத்தின் வரவேற்பு இல்லாமலே ரமணி படி ஏறி வீட்டினுள் பிரவேசித்தான். தனம் தன்னையும் அறியாமல் வழி விட்டாள்!

'தனம் இவதான் மணிமாலா! மாலுன்னுதான் நான் கூப்பிடறது. இவளும் நானும் கொஞ்சநாள்ளே கலியாணம் பண்ணிக்கப்போறோம்! மாலு இவ யார்னு நான் சொல்ல வேண்டியதில்லே...ரங்கனுக்கும் இவளுக்கும்தான் கந்தசாமி கோவில்லே சில மாசங்கள் முன்னாலே கலியாணமாச்சு. இவ வேறு யாருமில்லே! நம்ப ஆபீஸ் வாட்ச்மேன் மயில்சாமி இருக்கானே அவனுடைய பெண்!'

'வணக்கம் தனம்!' என்ற மாது, 'ரமணி நமக்குச் சீக்கிரம் போகணும். கொடுக்க வேண்டியதைக் கொடுத்துட்டுச் சொல்லவேண்டியதைச் சொல்லிட்டுப் புறப்படுங்க!' என்றாள்.

'இந்தா தனம்! இந்தக் கவர்லே ஆயிரம் ரூபாய்க்கு செக் இருக்கு! ரங்கன்தான் கையெழுத்துப் போட்டிருக்கான். உனக்கு பிராட்வேயில் பாங்க் கணக்கு இருக்குன்னு அவன் சொன்னான்' என்றான்.

'இதை இன்னிக்குக் கட்டினா பணம் கிடைக்க ரெண்டு நாள் ஆகுமே! பணமாக் கொடுத்தா சௌகரியமா இருக்கும்' என்ற தனம், 'பரிசுப் பணம் வந்திட்டதா?' என்று கேட்டாள்!

'ஓ, வந்துட்டுதே...பதின்மூன்றரை லட்சம் வந்துட்டுது. ஆமாம் நீ ஏன் திருநீர்மலைக்கு வரலே? அபிஷேகம் ரொம்பப் பிரமாதமா நடந்தது.'

'பதின்மூன்றரை லட்சத்தை அவர் என்ன செய்யப் போறார்?'

'உன் பெயரில் பத்து லட்சத்தை மூணு நாலு வருஷத்துக்கு, உன்னைத் தவிர வேறு யாரும் தொடமுடியாதபடி பாங்க்லே போடுடா ரங்கான்னு புத்திமதி சொன்னேன்! ஆனா அவன் கேட்கலே! திடீர்னு ரத்தபாசம் பந்தபாசம் ஏன் சிநேகித பாசம் எல்லாம் வந்துட்டுது அவனுக்கு.'

தனத்துக்கு ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வந்தது.

'முடியாதுன்னுட்டாரா?'

'நல்லவேளையா இன்னும் யாருக்கும் கொடுக்கலே தனம்! பயப்படாதே! நான் இப்ப உன் பக்கம்!'

'என்ன செய்யப்போறாரு? உங்க அம்மா புச்சா வீடு வாங்கித் தரேன். நகை, அப்புறம் வைரக் கம்மலு. அப்புறம் புடைவை எல்லாம் வாங்கித் தரேன்னு சொன்னாங்களே?'

'ஏன் மாருதி காரை மறந்துட்டே?'

'ஹாங்...கார் வாங்கித் தாரேன்னு சொன்னாங்க...' என்ற தனம், 'அவர் உங்க சிநேகிதரு. உங்க வார்த்தையைத் தட்டமாட்டாரு. நீங்க உறுதியாச் சொன்னீங்கன்னா கேட்பாரு.'

'உஹூம்...அதெல்லாம் அப்போ தனம்! பணம் வந்த உடனே ஆளே மாறிட்டான். இன்னும் கொஞ்சநாள்ளே அவனை வேற எங்காலும் போயிடுன்னு சொல்லப் போறேன்.'

'ஏன் என்னாச்சு?'

'என் பணம், என் இஷ்டம்னு எங்கிட்டேயே பேச ஆரம்பிச்சுட்டான்.'

'மெய்யாலுமா?'

'ஆமாம் தனம்! நான் ஆபீஸ்லே ரங்கனை பியூனாகத் தான் பார்த்திருக்கேன். ரொம்ப நல்லவன், சாது, பயந்த சுபாவம். இப்ப எல்லாம் மாறிட்டுது. பணத்தைத் தாம் தூம்னு தெரிஞ்சவங்க தெரியாதவங்களுக்கெல்லாம் வாரி வழங்கறதிலே குறியாயிருக்கான்.'

Mithra Vintha

'இங்கே அனுப்பிச்சுடுங்க. நான் அவர் பெண்டை எடுத்துச் சரியாக்கிடறேன்' என்றாள் தனம்.

'ரங்கன் இனிமே இந்த வீட்டுப் படி ஏறமாட்டான் தனம்!' என்றான் ரமணி.

'ஏன்...ஏன்...ஏனாம்?'

'கும்பகோணத்துக்குப் பக்கத்திலே பட்டீசுவரம்னு ஒரு ஊர் இருக்கு. அங்கே ரங்கனுடைய மாமா இருக்காரு. விவசாயம் பண்ணிட்டிருக்காரு.'

'இவரும் விவசாயம் பண்ண அங்கே போகப்போறாரா?'

'விவசாயம் பண்ணப்போனால் பரவாயில்லையே...அது நாட்டுக்கு நல்லதாச்சே...மாமா பொண்ணு முறைப் பெண்ணாம். அவளை...'

'கட்டிக்கப் போறாரா?'

'நாங்க என்ன சொல்லியும் ரங்கன் கேட்கலே தனம்!' என்ற மாலு, 'இன்னும் நாலஞ்சு நாள்ளே அவன் ஊருக்குப் போறான்!' என்றாள்.

'அதெப்படி அவரு இன்னொரு கலியாணம் கட்டிக்கலாம்? நான் ஒருத்தி இருக்கறப்ப?'

'கேட்டேனே தனம்! நான் பலவாட்டி கேட்டேன். அதுக்கு அவன் என்ன பதில் சொல்றான் தெரியுமா? சொல்றதுக்கே நா கூசறது!' என்றான் ரமணி.

'என்ன சொல்றாரு?'

'என் வாயாலே எப்படிச் சொல்றதுன்னு தெரியலே தனம். மனசு கஷ்டப்படறது!'

'அந்த ஆளு என்ன சொன்னாரு?' தனம் உறுமினாள்.

'பழைய வாட்சு, சைக்கிள், ரேடியோ இதையெல்லாம் வாங்கினா, செகண்ட் ஹாண்ட்னு சொல்லுவாங்க, இல்லியா?'

'ஆமாம் அதுக்கென்ன இப்ப?'

'நீ ஒரு செகண்ட் ஹாண்ட் பெண்ணாம். நீயும் உன் அப்பாவும் சூழ்ச்சி செய்து, கந்தசாமி கோவில்ல தாலி கட்ட வைச்சீங்களாம்!'

அடுத்த வினாடி தனம் காற்று இழந்த பந்துபோலச் சுருங்கிப்போனாள். அவளால் ரமணியின் கண்களைச் சந்திக்க முடிந்தாலும் வாய் திறந்து பேசமுடியவில்லை.

ரமணியே அவளுடைய உதவிக்கு வந்தான்.

'நீ எதுக்கும் கவலைப்படாதே தனம்! அவன் மாமா பெண்ணைக் கலியாணம் பண்ணிக்காம இருக்க நான் முயற்சி செய்கிறேன்.'

தனம் இதற்கும் பதில் சொல்லவில்லை.

ரமணி தொடர்ந்தான்.

'நான் கேட்டேன் ரங்கன்கிட்டே. ஏன்டா ஆம்பிளைங்க ஒரு பெண்டாட்டி உசிரோட இருக்கறப்ப இன்னொருத்தி கழுத்திலே தாலி கட்டறது நியாயம்னா, ஒரு பெண் தன் புருஷன் உசிரோட இருக்கறப்ப இன்னொருத்தன் நீட்டற தாலிக்குக் கழுத்தைக் காட்டக்கூடாதா, இதிலே என்னடா பொல்லாத தப்பு இருக்கு'ன்னு.'

மாலு இடைமறித்தாள்.

'ரமணி ரங்கன் சொன்னதையெல்லாம் இவகிட்டச் சொன்னா, பாவம் தனம் மனசு உடைஞ்சு போயிடுவா. வாங்க, நாம போகலாம். பணத்தைத்தான் கொடுத்தாச்சே!'

தனம் திடீரென்று சீறி எழுந்தாள்.

'யோவ்! புரியுதுய்யா...அல்லாமே புரியுது! நீ ஒரு ஆளா நின்னுக்கிட்டு என்னைத் தீர்க்கப் பார்க்கறே!'

'இல்லே தனம், நீ நினைக்கிறது தப்பு! நான் ஒரு ஆளா நின்னு எதையும் செய்யலே...எனக்குத் துணையா முருகன், ஆறுமுகம், செந்தில்வேலன் இருக்காங்க!'

MithraVintha

'இவங்கெல்லாம் யாருய்யா?'

'இவங்களுக்கெல்லாம் இன்னொரு பேரும் இருக்கு தனம்! அதுதான் வடிவேலு. தான வரட்டுமா?'

'யோவ்...யோவ்...'

'வால்டாக்ஸ் தெருவழியாப் போனா, வடிவேலு இருக்கிற கோவில் எங்கேன்னு தெரியும்! நான் வரேன்!'

'அந்த ஆயிரம் ரூபாய்ச் செக்கை இன்னிக்கே பாங்க்லே கட்டிடு தனம். எதுக்கும் சரியாயிருக்கான்னு ஒருவாட்டிப் பார்த்துடு!' என்றாள் மாலு, ஏற்கெனவே நகர்ந்துவிட்ட ரமணியைப் பின்தொடர்ந்தவளாய்!

தனத்தால் கத்த முடியவில்லை. அவர்கள்மீது சீற முடியவில்லை. இடிந்துபோய் உட்கார்ந்தாள்.

திடீரென்று இதுவரை அவள் உணர்ந்தறியாத பயமும் அவளைத் தாக்கியது.

போலீசே வந்துவிடுமோ?

அவள் ரங்கனைச் சபிக்கவில்லை.

ரமணியை மனமாரத் திட்டித் தீர்த்தாள்.

இது நடந்த பத்தாம்நாள் அவளுக்கும் மயில்சாமிக்கும் வக்கீல் நோட்டீசுகள் வந்தன.

அன்று மொட்டை மாடியில் ஈர அரிசியை உலர வைக்கப்போன கோமதி திரும்பி வரும்போது, ரங்கனுடைய அறைக்குள் தலை நீட்டினாள்.

கட்டிலில் உட்கார்ந்திருந்த ரங்கன் திடுக்கிட்டு எழுந்து நின்றான்.

'ஏம்பா நிக்கறே உட்காரு!' என்றாள் கோமதி. பிறகு 'என்ன அது பெரிசா கட்டில்லே கிடக்கு ஒ. ரமணி கட்டப் போற கட்டடத்தோட பிளானா?' என்றாள்.

'ஆமாம்மா...ரமணி சார் சொன்னாரு. இந்தப் பழைய வீட்டை இடிச்சுத் தள்ளிட்டு முப்பது ஃப்ளாட் கட்டப் போறதா.'

'நீ கூட மூனு ஃப்ளாட் வாங்கப் போறியாமே...ஆமாம் எதுக்கு உனக்கு மூனு ஃப்ளாட்?'

'சொன்னாத் தப்பா எடுத்துக்கமாட்டீங்களேம்மா?'

'உனக்குத் தப்பாப் பேசவே வராதே ரங்கா!'

'அன்னிக்குப் பேசிக்கிட்டிருந்தப்ப கட்டடத்தை இடிக் கறதுக்கு அப்புறம் ஆரம்ப வேலைகளுக்கெல்லாம் ரொம்பப் பணம் தேவைப்படும். அதுக்கு வெளியிலே கடன் வாங்கறதைத் தவிர வேறு வழி இல்லைன்னு ரமணி சார் சொன்னாரு.'

'தெரியும்.'

'வெளியிலே கடன் வாங்க வேணாம். வட்டி குடுக்க வேணாம், என் பணத்தை எடுத்துக்குங்கன்னு நான் ரமணி சார்கிட்டச் சொன்னேன். அதுக்கு அவரு சம்மதிக்கலே!'

'இதுவும் தெரியும்.'

'ரெண்டு நாள் முன்னாடி மாலு அம்மா வந்தாங்க இல்லியா?'

'ஆமாம் வந்தா அதுக்கென்ன?'

'கடனாக் கொடுத்தா ரமணி வாங்கிக்கமாட்டார். ஆனா நீதான் ஒரு ஃப்ளாட் வாங்கப் போறியே, அதனோட விலையை இப்பவே அட்வான்சாக் கொடுத்துடுன்னு மாலு அம்மா சொன்னாங்க!'

'அப்படியா இது எனக்குத் தெரியாது.'

'ஆமாம்மா...மாலு போனப்புறம் யோசிச்சேன். ரமணி சாருக்கு உடனடியா எவ்வளவு பணம் தேவைன்னு எனக்குத் தெரியாது. அதான் மூனு ஃப்ளாட் வாங்கறது. அதுக்கு உண்டான முழுப் பணத்தையும் கொடுக்கிறதுன்னு முடிவு செய்ஞ்சேன்... தப்பா அம்மா?'

MithraVintha

'ரங்கா உன் பேச்சைக் கேட்கக் கேட்க என் மனசு புல்லரிச்சுப் போறதுடா. நீ சாது; பித்துக்குளி; சாமர்த்தியம் போதாதவன்—என் ஒரு மந்தன்னு எல்லாரும் சொல்றாங்க! ஆனா நீ மந்தன் இல்லேடா! பணம் வந்த வேளையோ என்னவோ உனக்குச் சுயமாச் சிந்திக்கிற சாமர்த்தியம் வந்துட்டுது. நீ நன்னா இருக்கணும்!'

'அம்மா, எனக்கு ஒரு சின்ன ஆசை!'

'என்னடா ரங்கா!'

'இன்னும் ஒரு வருஷத்துக்குள்ளே கட்டடம் வந்துடணும். முப்பது வீட்லேயும் ஒரே சமயத்தில விழா எடுக்கணும். வீட்டுப் பெரியவர் மொதல்ல உள்ளே வரணும். அவருக்குப் பின்னாடி நீங்களும் ஐயாவும் ரமணி சாரும் மாலு அம்மாவும் விளக்கு, பூ பழமெல்லாம் எடுத்துட்டு வரணும். இதையெல்லாம் பார்த்து நான் சந்தோஷப் படணும்!'

'உன் நல்ல மனசுக்கு, நீ நினைக்கிறபடியே நடக்கும்டா, ரங்கா...சரி சாப்பிட்டியா? நீதான் ஓட்டல்லதான் சாப்பிடுவேன்னு பிடிவாதமா இருக்கியே!'

'ஒரு மணிக்கு மாலு அம்மாவும் ரமணி சாரும் வரேன்னாங்க. அவங்க வந்தப்புறம்தான் சாப்பாடு.'

'ரமணி ஓட்டல்லே சாப்பிடமாட்டான்.'

'இல்லேம்மா. இன்னிக்கு ஓட்டல்லே சாப்பிடப் போறாரு.'

'என்னடா விசேஷம்?'

'என்னோட பொறந்த நாளு!'

'அட மடையா இதை ஏண்டா முன்னாடியே சொல்லலே...வீட்லே வடை பாயசத்தோட உனக்கு நான் விருந்து வைச்சிருப்பேனே?' என்றாள் கோமதி.

'நான் இதுவரையிலே என் பொறந்த நாளையே கொண்டாடினதில்லே அம்மா... இந்த வருஷம்தான் மொதல் மொதலாக் கொண்டாடறேன்!'

'அதை வீட்லே கொண்டாடலாம் இல்லியா? சரி சரி. இப்ப மாலுவும் ரமணியும் எங்கே போயிருக்காங்க?'

'நீங்க கோபிச்சுக்கக்கூடாது.'

'எங்கே சொல்லு.'

'மாம்பலத்துக்கு! அம்மாவுக்குப் பட்டுப்புடவை, ஐயாவுக்கு ஒரு ஜோடி ஜரிகை வேட்டி இதெல்லாம் எடுக்கப் போயிருக்காங்க. ரமணிசார் கோபிச்சுப்பார்னு மாலு அம்மாகிட்ட வாங்கியாரச் சொன்னேன். ஆனா அவங்க ரமணிசாரைச் சமாதானப்படுத்தி அழைச்சுக்கிட்டுப் போயிருக்காங்க.'

கோமதி வாயடைத்துப்போய் நின்றாள். கண்கள் கனத்தன.

'ரங்கா! நீ ஆயிரம் காலம் நன்னா ஒரு குறைவும் இல்லாம வாழணும்டா, நான் மனசார உன்னை வாழ்த்தறேன்!' என்றாள் கோமதி.

அவள் அவனுடைய பதிலுக்கும் காத்திராமல் வெளியேறினாள்.

ரங்கனுக்கும் கண்கள் கனத்தன. கண்களை மூடிக் கொண்டான். திடீரென்று மூச்சு அடைத்துக்கொண்டு விட்டதுபோலத் தோன்றியது.

ஏற்கெனவே டாக்டர் திருமலை கொடுத்திருந்த மாத்திரைகளை அவசர அவசரமாக எடுத்து வாயில் போட்டுக்கொண்டான்.

தனக்கு என்ன வியாதி வந்திருக்கிறது என்று அவனுக்குத் தெரியவில்லை.

சிறிது நேரத்தில் மூச்சு சிரமமின்றி உள்ளே புகுந்து வெளியேறலாயிற்று.

அவன் ரமணி—மாலுவின் வருகைக்காகக் காத்திருந்தான்.

MithraVintha

23

ஆறு மாதங்கள் ஜெட் விமானம் போல பறந்தன. இந்தக் கால இடைவேளையில் முக்கியமான பிரச்னைகள் ஒவ்வொன்றாகத் தீர்ந்தன.

வடிவேலு தாக்கல் செய்த புகாரின்மீது போலீஸ் நடவடிக்கை எடுக்க தனமும் அவளுடைய தந்தை மயில்சாமியும் மாட்டிக்கொண்டு குற்றத்தை ஒப்புக்கொண்டார்கள். ரங்கனுக்கும் தனத்துக்கும் இனிமேல் எந்த சம்பந்தமும் இல்லை என்பதைக் கோர்ட்டே ஆணை இட உதவி செய்தார் வக்கீல்.

ரமணி தாத்தாவுடன் ரங்கனையும் உடன் வைத்துக் கொண்டு ஒரு குடியிருப்பில் இருக்க, பெற்றோர்களும் பெரியப்பா சித்தப்பாக்களும் தனித் தனியாக வாழ ஆரம்பித்தார்கள்.

ஈவு இரக்கமின்றிப் பழைய வீடு இடிக்கப்பட்டது. தொள்ளாயிரம் சதுர அடியில் இருபது ஃப்ளாட்டுக்கான பிளானை கட்டடக் கலைஞர் வரைய, ரமணி எம்.எம்.டி.ஏ. மற்றும் கார்ப்பரேஷன் அலுவலகங்களை முற்றுகை இட்டான்.

காண்ட்ராக்டர் குஞ்சிதபாதத்தை ரமணிக்குப் பல ஆண்டுகளாகத் தெரியும். நல்ல மனிதர். பிறரை ஏமாற்றினால் தம்மை இன்னொருவன் ஏமாற்றுவான் என்று பயப்படுகிறவர். ரமணி அவருடைய உதவியை நாடியபோது, அவர் மறுமொழி பேசாமல் ஒப்புக்கொண்டார்.

'ரமணி நீ சாமான்களை வாங்கிக் கொடு, நான் என் ஆட்கள் படையை அழைச்சுட்டு வந்துடறேன். அஸ்திவாரம்

போடற அன்னிக்கே மர வேலையும் ஆரம்பிச்சுடணும். என்னிக்கு நாள் பார்த்திருக்கே?' என்றார் குஞ்சிதபாதம்.

'குஞ்சு சார், மொத்தம் இருபது ஃப்ளாட்தான் கட்ட முடியும்னு எம்.எம்.டி.ஏ. சொல்லிட்டாங்க. இதிலே எங்க குடும்பத்துக்கே நாலு ரெண்டை என் சிநேகிதன் புக் பண்ணி அட்வான்சா முழுத்தொகையையும் கொடுத்துட்டான். பாக்கி பதினாறுதான் வெளியாருக்கு விக்க முடியும்.'

''இப்ப நாம 1987லே இருக்கோம் ரமணி... நாளுக்கு நாள் எல்லாத்துக்கும் விலை ஏறிட்டே போறது. உலகத்திலே முளைக்க முடியாதது நிலம் ஒண்ணுதான். அதனாலே நான் என்ன சொல்றேன். ஒரு சதுர அடிக்கு நானூத்தம்பது ரூபான்னு விலையை நிர்ணயம் செய். பதினாறு ஃப்ளாட்டுக்குக் கிட்டத்தட்ட அறுபத்தஞ்சு லட்சம் வரும். இப்ப சதுர அடிக்கு இருநூறு இருநூத்துப் பத்துன்னு வாங்கறேன். மத்தவங்களை விட சீப்தான். பதினெட்டாயிரம் சதுர அடிக் கட்டடத்துக்கு இன்னிக்கெல்லாம் ஆனா எவ்வளவு ஆகும்? எல்லாச் செலவுமாகச் சேர்த்து நாப்பது லட்சம். உன் தாத்தாவுக்கு ரொக்கமாகக் குறைஞ்சது இருபது இருபத்திரண்டு லட்சம் கிடைக்கும். என்ன? சொல்றது புரியறதா?''

''நல்லாவே புரியறது குஞ்சு சார்! ஆனா யாரு வீடு வாங்க முன்வருவாங்கன்னுதான் யோசனையா இருக்கு!''

'பூ இதுக்காக் கவலைப்படறே? என் ரெண்டு பெண்களுக்கே ரெண்டு தேவைப்படறது. பாக்கிக்கு நானே நல்ல மனுஷங்களா ஏற்பாடு பண்றேன். வீட்டின் மொத்த கிரயத்திலே முப்பது சதவீதம் உடனடியாக் கொடுக்கணும்னு நிபந்தனை போடு. அப்பத்தான் திடீர் திடீர்னு பணக் கஷ்டம் வராது.''

'சரி சார்!'

ரமணி நிம்மதியுடன் செயல்பட ஆரம்பித்தான்.

MithraVintha

பல வேளைகள் அவனை நெருக்கியும்கூட. அவன் தன் வேலையை ராஜினாமா செய்யவில்லை. ரமேஷ் சாண்டில்யா அவன்மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக் கிறான். எத்தனையோ வேளைகளில் விதம் விதமான சிக்கல்கள் பிறந்திருக்கின்றன. அப்போதெல்லாம் ரமேஷும் ரமணியும்தான் கலந்தாலோசித்து பிரச்னைக்கு முடிவு காண்பார்கள். திடீரென்று அவன் வேலையை உதறி விட்டால், ரமேஷ் சிறிது காலம் திண்டாடிப் போவான். இருப்பினும் தொடர்ந்து நீடிக்கவும் அவனால் இயலாது என்று தோன்றியது. ஏன் ரமேஷிடமே இதுபற்றிப் பேசக் கூடாது?

அவன் முதலாளியின் அறையினுள் பிரவேசித்தபோது ரமேஷ் டெலிபோனில் பேசிக்கொண்டிருந்தான். சைகை யால் அவனை உட்காரச் சொல்லிவிட்டு ரமேஷ் பேசிக் கொண்டே போனான்.

ரமணி யோசனை செய்தான். எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது? எப்படி முதலாளியின் மனம் நோகாமல் காரியத்தை முடித்துக்கொள்ளுவது?

திடீரென்று ரமேஷின் குரல் கேட்டது.

'என்ன ரமணி பெரிசா யோசனையில் மூழ்கியிருக்கே? என்ன விஷயம்?'

'கொஞ்சநாளா உங்ககிட்ட என்னுடைய குழப்பத்தைச் சொல்லி அதுக்கு ஒரு தீர்வு காணனும்னு நினைச்சுட்டிருந் தேன்.'

'இன்னிக்குத்தான் வேளை வந்ததாக்கும்? அது சரி, உன் மனசு எப்பவும் கிளியரா இருக்குமே... அது எப்படிக் குழம்பலாச்சு...? ரங்கனோட ப்ராப்ளம் ஓவர். மாலுவோட ப்ராப்ளம் ஓவர்.'

'அது இன்னும் ஓவராகலே சார்! அவ கழுத்திலே நான் தாலி கட்டினாத்தான் அவ ப்ராப்ளம் தீரும்.''

''கட்டாமலா இருக்கப்போறே! நானும் உங்க கலியாணத்துக்கு வராமலா இருக்கப் போறேன்!''

'நான் சொல்ல வந்தது...'

'சொல்லு...'

''நான் திடீர்னு சொல்லாம கொள்ளாம வேலையை விடறது தப்புன்னு படறது.''

''என்ன வேலையை விடப்போறியா? இப்படி ஓர் எண்ணம் வேறே உன் மனசிலே இருக்கா?''

'இப்பவே இல்லை சார்!'

''எப்பவா இருந்தா என்ன ரமணி? நினைச்சுப் பார்த்ததே சரி இல்லே... ஆமாம், என்ன காரணம்? அதை யாவது சொல்லு.''

ரமணி தன் நிலைமையை விவரமாகக் கூறினான்.

''ஸில்லி! இது ஒரு காரணமா? காண்ட்ராக்டர் குஞ்சித பாதம் கட்டடம் கட்டிக்கிட்டிருக்கறப்ப நீ என்ன குடை யைப் பிடிச்சுக்கிட்டு மேற்பார்வை செய்யப்போறியா... பேத்தல்!''

'இல்லே சார்...மணல், சிமெண்ட், ஜல்லி...'

'தெரியும்ப்பா...இதெல்லாம் நீதான் வாங்கிக்கொடுக்கப் போறே...அதுக்காக ராஜினாமாவா? நீ எப்ப வேணும் னாலும் வா, எப்ப வேணும்னாலும் போ...இல்லே நடுவிலே போய் வர வேண்டியிருந்தாலும் பரவாயில்லே.'

'என்னாலே யாருக்கும் சிரமம் இருக்கக்கூடாது சார்... சம்பளத்தை வாங்கிக்கிட்டா அது ஜீரணமாக வேண்டாமா?'

'நீ இப்பப் போகலாம் ரமணி. உன் ராஜினாமாவை நான் ஏத்துக்கமாட்டேன். அதுக்கு இன்னொரு காரணமும் இருக்கு.''

'என்ன சார்...'

MithraVintha

'நான் இன்னொரு ஏஜென்சிக்காகக் காத்துக்கிட்டிருக்கேன். அது கிடைக்க மூணு நாலு மாசம் ஆகும். அதுக்கு அப்புறம் என் முழு மூச்சும் அதிலே போயிடும். ஏன் தெரியுமா? ஆல் இண்டியாவுக்கு நான்தான் ஒரு அமெரிக்கக் கம்பெனிக்கு ஏகபோக விற்பனையாளன். நான் அதிலே மூழ்கிட்டா, இதை யார் பார்த்துப்பா?''

ரமணியால் பதில் சொல்ல முடியவில்லை.

'நீ வெறும் குமாஸ்தாவா இருக்கமாட்டே... இதே ரூம்லே, இப்ப நான் உட்கார்ந்திட்டிருக்கிற நாற்காலியிலே நீ உட்கார்ந்திருப்பே... லாபத்திலே உனக்கு மூணுலே ஒரு பங்கும் வரும்...'

ரமணி அயர்ந்துபோனான்.

ரமேஷ் பேச்சின் திசையைத் திருப்பினான்.

'உன் கட்டடம் எப்ப முடியும்?'

'இன்னும் எட்டு மாசத்துக்குள்ளே.'

'அதுக்கு அப்புறம் என்ன செய்வே?'

'அதுபத்தி நான் இன்னும் யோசனை செய்யலே!'

'எல்லாருக்கும் வழிகாட்டற நீ, உனக்கே ஒரு வழியை வகுத்துக்க யோசனை பண்ணலையாக்கும்! ரொம்ப நல்லாத் தான் இருக்கு... அது சரி, எல்லா ஃப்ளாட்டும் வித்துப் போயாச்சா?'

'ரெண்டு பாக்கி இருக்கு சார்!'

'என்னுடைய புது ஏஜென்சி வந்துடும். எனக்கும் ரெண்டு ஃப்ளாட் தேவைப்படும்.''

'சரி சார்!'

'இன்னும் ஒரு வாரத்திலே அட்வான்ஸ் தர்றேன். வேறே யாருக்கும் அலாட் பண்ணிடாதே!'

'சரி, சார்!'

''மாதுவையும் ரிஸைன் பண்ணக்கூடாதுன்னு சொல்லிடு.'

அன்று மாலை ரமணிக்கு டெலிபோன் வந்தது. அம்மா விஷயத்தைக் கூறினாள். ரமணி பதறிப் போக வில்லை என்றாலும், கவலையில் முகம் வாடியது.

'என்ன ரமணி, யார் பேசினாங்க?' என்று கேட்டான், மாது!'

'அம்மா. ரங்கனுக்கு உடம்பு சரியில்லையாம். நான் இப்பவே போகணும் மாது.'

'நானும் வரேன்.'

'நோ...நீ உன் வேலையைக் கவனி. நான் பாஸ்கிட்டச் சொல்லிட்டுப் போறேன்.'

நாலரை மணிக்கு அவன் தன் வீட்டில் இருந்தான்.

அம்மா அவனுக்காகக் காத்திருந்தாள்.

'என்னம்மா ஆச்சு?'

'புதுசா ஒண்ணும் ஆகலேடா. டாக்டர் படிச்சுப் படிச்சுச் சொல்லியிருந்தார், தூசி நிறைய இருக்கிற இடத்தில ஒரு நிமிஷம்கூட நிக்கப்படாதுன்னு. இவன் ரெண்டுநாளா கட்டட வேலை நடக்கிற இடத்தில் ஆணி அடிச்ச மாதிரி நின்னிருக்கான்.'

'அப்புறம்?'

'அப்புறம் என்ன அப்புறம்? டாக்டர் திருமலைக்கு போன் பண்ணினேன். அவர் வந்தார். ரங்கனைத் தன்னோட கார்லேயே அழைச்சுட்டுப் போனார்.'

'இஸபல் ஆஸ்பத்திரிதானே?'

'ஆமாம்... இந்த ஆறு மாசத்திலே இது மூணாவது வாட்டி.'

MithraVintha

இரண்டு நாட்கள் தொடர்ந்து பிராணவாயுவைச் செலுத்தினார்கள். மூன்று மணி நேரத்துக்கு ஒரு தடவை ஊசி போட்டார்கள். ரங்கன் கண் திறவாமல் படுத்திருந்தான்.

மூன்றாம் நாள் தெளிவு பிறந்தது. பிராணவாயுக் குழாயை அகற்றியாகிவிட்டது.

'ரமணி சார்...' ரங்கனுடைய குரல் கேவியது.

'உணர்ச்சிவசப்படாம இரு ரங்கா!'

'இன்னிக்கு என்ன கிழமை ரமணி சார்?'

'வெள்ளி' என்ற அவன், 'இனிமே நீ வேலை நடக்கற இடத்துக்குப் போகக்கூடாது ரங்கா!'

'சரி சார்... நான் ஒண்ணு கேட்டா திட்டாம பதில் சொல்லுவீங்களா?'

'நீ எது கேட்டாலும் நான் திட்டுவேன்னு உனக்கு நினைப்பா?

'நீங்க என்னைக் கோவிச்சுக்க மாட்டீங்கன்னு தெரியும் ரமணி சார்! ஆனா என் கேள்வி முட்டாள்தனம்னு படறப்ப உங்களுக்கு எரிச்சல் வருது.'

'சரி, சொல்லு!'

'நான் ரெண்டு வீட்டுக்குப் பணம் கட்டிட்டேன் இல்லியா ரமணி சார்?'

'ஆமாம். கட்டிட்டே... அக்ரிமெண்ட்லேயும் கையெழுத்துப் போட்டுட்டே... அதுக்கு இப்ப என்ன?'

'பணமும் பாங்க்ல என்பேர்ல இருக்கு இல்லே?'

'ஆமாம். அதுக்கென்ன?''

'எனக்கு ஏதானும் ஆயிடுச்சுன்னா!'

'சும்மாப் பேத்தாதே ரங்கா! நீ ரொம்ப நாளைக்கு உசிரோட இருப்பே!'

'அப்படி இருக்கணும்னுதான் எனக்கும் ஆசை ரமணி சார். ஆனா என்னோட ஆசை எதுவுமே இதுவரையிலே நிறைவேறினதில்லே!'

'ஏன் லாட்டரியிலே பணம் வரலையா?'

'நான் எதுக்காக நிறையப் பணம் கிடைக்கணும்னு ஆசைப்பட்டேன் ரமணி சார்! அது கிடைக்கலியே...இப்ப என் உடம்பிலே வலுவில்லே...ஆனா மனசு எதுக்கெல்லாமோ ஆசைப்படுது. எதுவும் நிறைவேறாமலே நான் போயிடுவேன்... ஆனா கடைசி ஆசைன்னு சொல்லுவாங்களே...அது இப்ப வந்துடுத்து.'

'நீ இந்த ரீதியிலேயே பேசிட்டிருந்தா நான் இங்கிருந்து போயிடுவேன் ரங்கா... உன் கடைசி ஆசை என்னவா இருந்தாலும் அது என் காதிலே விழவேண்டாம்!'

'சரி, ரமணி சார்!'

'இப்ப தூங்கு.'

'தூக்கம் போயிடுத்து சார்...படுத்துப் படுத்து முதுகெல்லாம் வலிக்குது.'

'உட்கார்ந்து தலைகாணியிலே சாய்ஞ்சுக்கோ! இதமா இருக்கும்.

ரங்கன் அவன் சொன்னபடி உட்கார்ந்துகொண்டான்.

'ரமணி சார், உயில் உயில்னு சொல்றாங்களே... சினிமாவிலே பார்த்திருக்கேன். பணக்காரக் கிழவன் எழுதுவான். சுற்றிலும் பெண்டாட்டி பிள்ளைங்க நிப்பாங்க. இல்லாமப்போனா ஒரு வக்கீல் மட்டும் இருப்பாரு... அவரு எழுதுவாரு. பணக்காரன் கையெழுத்து மட்டும் போடுவான்.'

'உனக்குத்தான் பெண்டாட்டி பிள்ளைங்க யாரும் இல்லையே... பேசாம இரு!'

'இல்லே ரமணி சார்! நான் செத்துப்போயிட்டா, எ
அண்ணன் வந்துடுவான்...ஓடிப்போன தம்பி வந்துடுவான்

MithraVintha

'நியாயமா அவங்கதான் வரணும்.'

'நான் உயில் எழுதிட்டா அவங்களுக்கு ஒரு பைசா கிடைக்காம வழி செய்துடலாம் இல்லியா?' என்றான் ரங்கன்.

ரமணி எழுந்தான். மெதுவாக நகர்ந்தான்.

'என்ன சார் கோவமா?'

'ஆமாம்!'

'இனிமே நான் உயிலைப்பத்தி உங்ககிட்டப் பேச மாட்டேன் சார்! இது சத்தியம்.'

நான்கு நாட்களுக்குப் பிறகு ரங்கன் வீடு திரும்பினான்.

24

தாத்தாவுக்கு அன்றைய தினசரியில் வெளியாகியிருந்த செய்திகளைப் படித்துக்கொண்டிருந்தான் ரமணி. திடீரென்று அவருக்கு அலுப்பு உண்டாயிருக்க வேண்டும்.

'போதும்டா...' என்றார்.

'அப்ப நான் கிளம்பறேன், தாத்தா!'

'ரெண்டு காலும் வலிக்கறதுடா ரத்தம் கட்டிப் போனாப்பல இருக்கு...'

'ஏன் தாத்தா சுத்தி வளைக்கறீங்க? பிடிச்சு விடுன்னு சொல்லுங்களேன்.'

'இதெல்லாம் நான் சொல்லித்தான் உனக்குத் தெரியணுமா...?'

'காலை நீட்டி ஸ்டூல்லே வைச்சுக்குங்கோ தாத்தா!'

அவர் கால்களை அவன் சொன்னதுபோல வைக்கவும், [ரங்]கன் அறையினுள் பிரவேசிக்கவும் சரியாக இருந்தது.

'என்ன ரங்கா?' என்று ரமணி விசாரிக்க தாத்தா, 'யார்டா, முதலாளி ரங்கனா... வா உட்காரு. அப்பப்ப ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு வந்துட்டிருக்கியா?' என்றார்.

'ரமணிசார்...நீங்க நகருங்க. தாத்தாவுக்கு நான் கால் பிடிச்சு விடறேன்' என்றான்.

'நீ இப்ப நாப்பது ரூபாய் வேலைக்காரன் இல்லேடா ரங்கா...லட்சாதிபதி. ரெண்டு வீட்டுக்குச் சொந்தக்காரன். கம்பீரமா அந்தச் சேர்ல உட்காரு' என்றார் தாத்தா.

ரமணி சிரித்தான்.

'எதுக்குடா சிரிக்கிறே?'

'நீங்க பேசினவிதம் என்னைச் சிரிக்க வைச்சது...அது எப்படி ரங்கனாலே கம்பீரமா உட்கார முடியும்...ஏழாவது தடவையா அவன் இலைபல் ஹாஸ்பிடல்லேர்ந்து முந்தா நான்தான் திரும்பி வந்தான். அமைதியாப் படுத்துக்கிட்டு ரெஸ்ட் எடுத்துக்கன்னு சொன்னாலும் கேக்கறதில்லே. நேத்திக்கு மட்டும் அவன் ரெண்டுவாட்டி பில்டிங்கைப் போய்ப் பார்த்து வந்தாச்சு.'

'நீ பேசிண்டே இரு...காலைப் பிடிச்சு விடாதே...'

'ஓ! அதை மறந்துட்டேன் இல்லே!'

'ஹாஹா...ரமணி...ரொம்ப சுகமா இருக்குடா...உன் அப்பன் பெரியப்பன் யாரும் இதுவரை இப்படி சிசுருஷை செய்ஞ்சதில்லே...'

'காரணம் என்ன தெரியுமா தாத்தா?'

'என்னடா...?'

'அவங்க கால்களையே இப்ப யாராவது பிடிச்சு விடணும். அவ்வளவு வயசாயிடுத்து.'

'சரி பில்டிங்கிலே இன்னும் என்னென்ன வேலை பாக்கி இருக்கு?'

MithraVintha

'முக்காலே மூணு வீசமும் முடிஞ்சுட்டுது தாத்தா. மொஸாய்க்குக்கு ஆஸிட் பாலிஷ் போட்டுட்டிருக்காங்க. லைட் கனெக்ஷன் வந்தாச்சு எல்லா வீட்டுக்கும்.'

'அப்ப சீக்கிரமே குடிபோயிடலாம்னு சொல்லு.'

ஆனா காண்ட்ராக்டர் குஞ்சு சொன்னபடி எட்டு மாசத்துக்குள்ளே முடிக்கலே! 87 முடிஞ்சு 88 பிறந்துட்டுது.

'பொங்கல் முடிஞ்சு ஒரு நல்ல நாள் பார்த்துக் கிரகப் பிரவேசம் செய்யலாமாடா?'

'செய்யலாம் தாத்தா.'

'பில்டிங்குக்கு என்ன பேர் வைக்கலாம்? ஒரு நல்ல பேராச் சொல்லு!

'வேங்கடரமணி அபார்ட்மென்ட்ஸ்னு பேர் வைக்கலாம்னு நினைச்சுட்டிருக்கேன்.''

'என்னடா என் பேரா... எனக்கு என்ன நினைவுச் சின்னமா கட்டியிருக்கே?'

'இது உங்க ஐடியாதானே தாதா?

'என் ஐடியா எப்படியடா வந்தது? எல்லாம் உன் நச்சரிப்பு... முன்னெல்லாம் அடிக்கடி ஃப்ளாட் கட்டலாம், ஃப்ளாட் கட்டலாம்னு எங்கிட்ட வந்து தொண தொணப்பே...நான் கண்ணை மூடின மறுநாளே அதுக்காகப் பிரயத்தனம் செய்வேன்னு எனக்குப் புரிஞ்சுது. இவன் யார் நான் செத்தப்புறம் கட்டறதுக்கு, நான் உசிரோட இருக்கறப்பவே இவனுடைய ஆசை நிறைவேறட்டுமே அப்படீன்னு தோணித்து. ஆமாம், நிகரமா எவ்வளவு மிஞ்சும்?'

''கணக்கெல்லாம் சரியா எழுத மூணுபேரைப் போட்டிருக்கேன் தாத்தா... நான் தினசரி எல்லாத்தையும் சரி பார்த்துட்டுத்தான் தூங்கப் போறேன்!'

'நீ என்ன செய்யறேன்னா இப்பக் கேட்டேன்? நன்னாப் பிடி...முழங்காலுக்குக் கீழே, ஆடு சதையில் கை வை!'

'குஞ்சு சொன்னார், குறைஞ்சது இருபது இருபத்திரண்டு லட்சமாவது உங்களுக்கு லாபமா வரும்னு. எனக்கு என்னமோ அது குறைவாப் பட்டது.'

'என்னடா சொல்லே, இருபது இருபத்திரண்டு லட்சம் குறைவாப் பட்டதா...'

'ஆமாம் தாத்தா... இருபத்தஞ்சாவது தேற வேண்டாம்? அதுக்கு ஒரு வழி செய்ஞ்சேன்.'

'என்னடா செய்ஞ்சே?'

'எம். எம். டி. ஏ., கார்ப்பரேஷன், அப்புறம் செக்ரடேரியட்னு எல்லா இடங்களுக்கும் நடையா நடந்து ஒரு ஸ்பெஷல் பர்மிட் வாங்கினேன்.'

'எதுக்கு?'

'வாசப் பக்கத்திலே கேட்டுக்கு ரெண்டு பக்கத்திலேயும் நாலு நாலு கடைகள். மாடியிலே ஒண்ணு, கீழே ஒண்ணுன்னு. ஒவ்வொண்ணும் நாத்தம்பது சதுர அடி. ஒரு டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர்ஸ் வைக்க, ஒருத்தர் ஒரு பக்கத்து நாலு கடைகளையும் வாங்கிக்கிட்டார். இன்னொரு பக்கத்திலே ஒரு வீடியோக் கடை, ஒரு ஐஸ்க்ரீம் பார்லர். ரெண்டு பேரும் சேர்ந்து நாலு கடைகள். அப்புறம் என்ன?'

'மாடியிலே இன்னும் நாலு கடைகள் இருக்கேடா?'

சித்தப்பா பிள்ளை ரங்கு இந்த வருஷம் சி.ஏ. எழுதறான். அவன் சொந்தமாத் தொழிலை ஆரம்பிக்கிறதானா நல்ல இடம் வேண்டாமா? அவனுக்கு ரெண்டு கொடுத்துடலாம் நீங்க சரின்னு சொன்னா.'

'சரி...'

'மீதி ரெண்டு இருக்கு இல்லியா? பெரியப்பாவோட பேரன் பேத்தி ரெண்டு பேரும் இன்னும் ஒண்ணு ரெண்டு வருஷத்திலே டாக்டர்களா திரும்பி வருவாங்க...அவங்க

MithraVintha

ரெண்டுபேருக்கும் என்னதா கன்சல்டிங் ரூம் அமைச்சுக்கச் சௌகரியமா இருக்கும். இதுக்கும் நீங்கதான் தாத்தா அனுமதி கொடுக்கணும்.'

'எழுதியே கொடுத்துடறேன் போறுமா' என்ற தாத்தா, 'ஏண்டா உனக்குன்னு எதுவும் தனியா நீ வைச்சுக்கலையா?' என்றார்.

'நான் எப்படி தாத்தா உங்க பணத்திலே கை வைக்க முடியும்? ஒன்னரை வருஷமா உழைச்சிருக்கேன். அதுக்கு நீங்க சரியா ஏதாலும் கொடுத்தா சந்தோஷமா வாங்கிக்கறேன்!'

'ரங்கா, நீ கொஞ்சம் வெளியே போய் இரு!' என்றார் தாத்தா.

'வேண்டாம் தாத்தா! அவன் இங்கேயே இருக்கட்டும்.'

'நான் போயிடறேன் ரமணி சார்!'

'போயிடு' என்ற தாத்தா ரங்கன் வெளியே செல்லும் வரை காத்திருந்தார்.

'நான் சொல்லப்போறது உன் அம்மா அப்பாவுக்குக் கூட இப்பத் தெரியப்படாதுடா ரமணி... விஷயம் அப்படி இருக்கிறப்ப, ரங்கன் மட்டும் இருக்கலாமா... அது ஓர் அசத்து. அசமஞ்சம்...தத்துப்பித்துன்னு வெளியே சொல்லி வைச்சா?'

'சரி சொல்லுங்க தாத்தா!'

'இப்ப எவ்வளவு லாபம் வர்றது? சுமாராச் சொல்லு போறும்!'

'நாலு கடைகளையும் பத்து லட்சத்துக்கு வித்தேன் தாத்தா! ஆனா எட்டு கடைகளையும் கட்டி முடிக்க எனக்கு லட்சம் ரூபாய்கூட ஆகலே. நிறைய மணல், சிமெண்ட், மரம், கம்பி எல்லாம் மிஞ்சியிருந்தது. நம்ப பழைய வீட்டோட தேக்கு மரமெல்லாம் உபயோகமாச்சு.'

'மொத்த லாபத்தைச் சொல்லுடா படவா!'

'கிட்டத்தட்ட முப்பது லட்சம்!'

'இதை வைச்சுட்டு என்ன செய்யலாம்டா?'

'எனக்கு என்ன தெரியும் தாத்தா.'

'மூணு பெண்களுக்கு, ஆளுக்கு லட்சம்னு கொடுக்கறேன்! அம்பதாயிரம்னு மொதல்லே நினைச்சுட்டிருந்தேன்! பாக்கியை நம்ப ரெண்டுபேர் பேர்லேயும், ஜாயின்ட் அகௌண்ட்லே பாங்க்லே போட்டுடுவோம். நான் ஒருநாள் இல்லாட்டா ஒரு நாள் கண்ணை மூடாம இருக்கமாட்டேன். அப்ப ஜாயின்ட் அகௌண்ட் சிங்கிள் அகௌண்ட்டா உன் பேர்ல வந்துடும். இதுக்கு நான் என்ன எழுதித் தரணுமோ அதை எழுதிக் கொடுத்துடறேன்.'

'தாத்தா, உங்களுக்கு நிறைய பேரன் பேத்திகள் இருக்கிறப்ப எனக்கு மட்டும் இப்படிச் செய்தா...'

'மூடுடா வாயை...எனக்கு இருக்கிறது ஒரு பேரன் தான்டா... அது நீதான். நீ ஏமாத்தமாட்டே! பொய் சொல்லமாட்டே! வாயாலே எல்லாருடைய வயத்தெரிச்சலையும் நீ கொட்டிக்கிறவன்தான். ஆனா உன் மனசு சுத்தம்டா. இனிமேல் இதைப்பத்தி என்கிட்டப் பேசாதே, ஆமாம்!'

ரமணி நீண்ட நேரம் பதில் பேசவில்லை! சிறு வயதிலிருந்து அவன் ஒருவன்தான் தாத்தாவுடன் நெருங்கிப் பழகியிருக்கிறான். ஆனால் இத்தனை ஆண்டு காலமாகத் தாத்தா தன் மனத்தில் அவனுக்காக ஒரு பிரத்யேக இடத்தை வைத்திருக்கிறார். அதில் என்னென்ன வைரங்களையும் முத்துக்களையும் கொட்டி மூடவேண்டும் என்று யோசித்து வந்திருக்கிறார். அகஸ்மாத்தாக பல குடியிருப்புகளைக் கொண்ட கட்டடம் கட்டினால் நன்றாக இருக்கும் என்று ஒரு தடவை அவன் அவரிடம் கூறியிருக்கிறான்.

MithraVintha

அப்போது அவர் அலட்சியமாக இருந்தார். ஆனால் எண்ணம் உள்ளே பதிந்துபோயிருக்கிறது. எண்ணத்தை அவர் பிரத்தியேகமான இடத்தில் பூட்டி வைத்து, போன வருடம்தான் வெளியே கொட்டியிருக்கிறார்!

ஏன் போன வருடம்?

திடீரென்று 'தாத்தா!' என்றான்.

பாதிக் கண் அயர்ந்துபோயிருந்த தாத்தா, கண் திறவாமலே, 'என்னடா?' என்றார்.

'நான் யாரையும் ஏமாத்தமாட்டேன்! என் மனசு சுத்தம்னு எப்படித் தாத்தா நீங்க கண்டுபிடிச்சீங்க? நான் வேஷம் போட்டுட்டே வாழ்ந்துகொண்டிருக்கலாம் இல்லியா?'

'ராஸ்கல் என்னைக் கேள்வியா கேட்கிறே?'

'ஆமாம் தாத்தா!'

'சரி நான் கேக்கறேன், பதில் சொல்லுடா!'

'கேளுங்க!'

'இந்தச் சோனிப் பயல் யாரு?'

'ரங்கன்தானே... அவன் என் சிநேகிதன்.'

'சரி, இதுக்குப் பதில் சொல்லு!'

'நீங்க யக்ஷன்... நான் தர்மபுத்திரர்னு எண்ணமா தாத்தா?'

'ஆமாம்டா படவா...சொல்லு...அவனோட லாட்டரி டிக்கட்டையெல்லாம் நீதானே பத்திரப்படுத்தி வைச்சிருந்தே?'

'ஆமாம்!'

'டிக்கெட் கடைக்காரன் உன் பேரைத்தானே எழுதி வைச்சிருந்தான்?'

'ஆமாம்!'

'நீ நினைச்சிருந்தா அது என் டிக்கெட், நான் வாங்கின டிக்கட்டுன்னு சாதிச்சிருக்கலாம் இல்லியா?'

'ஆமாம்.'

'பணம்னு வர்றப்ப சொந்தம் பந்தம் சிநேகம் எல்லாம் காத்தாப் பறந்துடும்டா படவா! உனக்கு நிறையப் பணம் சம்பாதிக்கணும்னு பேராசையா இருக்கு! ஆனா அந்தப் பணத்தைக் குறுக்கு வழியிலோ, இன்னொருத்தரை ஏமாத்தியோ சம்பாதிக்க உன் மனசு சம்மதிக்கலே! இப்பச் சொல்லு உன் மனசு சுத்தம்தானே?'

'தெரியாது தாத்தா! என்னைப்பத்தி நானே இன்னும் தெரிஞ்சுக்கலே!'

'இன்னொரு விஷயம்!'

'என்ன தாத்தா?'

'தை பொறந்ததும் கிரகப்பிரவேசம். அது முடிஞ்சதும் கலியாணம். மாதுவுக்கும் உனக்கும் என் கண் முன்னாடி நடக்கணும். நீங்க ரெண்டுபேரும் ஊஞ்சல்லே உட்கார்ந்ததும் நான் பாட ஆரம்பிப்பேன்.'

'அதான் பல தடவை சொல்லியாச்சே தாத்தா... சகிச்சுக்கறேன்.'

''படவா... நான் நன்னாப் பாடுவேன்டா! மாதுவுக்கு அவா என்ன போடறாளோ போடட்டும். நான் வைர நெக்லஸ் போடப்போறேன். அவகிட்ட இப்பவே சொல்லித் தொலைக்காதே!'

'நான் வரேன் தாத்தா, எனக்கு நிறைய வேலையிருக்கு!'

'மறுபடியும் வர்றப்ப, பாங்க் டெபாசிட் ஃபாரத்தோட வரணும். இல்லாமப்போனா தொலைச்சுப்புடுவேன்!'

'சரி தாத்தா.'

ரமணி நகர்ந்தான்.

MithraVintha

'நம்ப கட்டடத்துக்கு என்ன பேர் வைக்கிறதுன்னு கேட்டேனே...'

'நான் சொன்ன பேர்தான் வேண்டாம்னு சொல்லிட் டீங்களே தாத்தா!'

'அதிர்ஷ்ட தேவதை'ன்னு வைச்சுடு. அதான் பொருத்த மான பெயர்!'

'என்ன தாத்தா, இப்படி ஒரு பெயரா?'

'ரங்கனுக்கு ஓர் அதிர்ஷ்டம் அடிச்சது. எனக்கும் போற வயசிலே ஓர் அதிர்ஷ்டம் அடிச்சு முப்பது லட்சமும் வீடும் கிடைக்கிறது. என் மூணு பிள்ளைகளும் இப்படித் தனித் தனி வீடு கிடைக்கும்னு எதிர்பார்க்கலே! அவங்களுக்கும் அதிர்ஷ்டம்.'

'எனக்கும் அதிர்ஷ்டம்னு சொல்லுங்களேன்!'

'எனக்கும் அதிர்ஷ்டம்னு சொல்லுங்களேன்!' 'எனக்கும் அதிர்ஷ்டம்னு ஒரு சான்ஸ் கிடைச்சது.

'அதான் மாட்டேன். உனக்கு ஒரு லாட்டரி டிக்கெட் மூலமா ராட்சசன் அதிர்ஷ்டத்தை ஒரு லாட்டரி டிக்கெட் மூலமா உன் மடியிலே போட்டான். நீ? அதைத் தூக்கி எறிஞ்சே, உனக்குக் கிடைக்கறதெல்லாம் உன் உடம்போட உழைப் புக்கு ஊதியம்! மனசோட சுத்தத்துக்குப் பரிசு! சரி சரி, நடையைக் கட்டு. எனக்குத் தூங்கணும்.'

ரமணி வெளியே வந்தான்.

அறைக்குச் சற்று அப்பால் சுவரோடு சுவராய் ஒட்டிக் கொண்டு ரங்கன் நின்றுகொண்டிருந்தான்.

'என்னடா ரங்கா இங்கே நிக்கறே!'

'உங்களுக்காகத்தான் ரமணி சார்!'

'என்ன வேணும்?'

'சொன்னாக் கோவிச்சுக்கமாட்டீங்களே?'

'கோபம் வர்ற நிலையிலே நான் இல்லே ரங்கா! சொல்லு.

ரங்கன் சொன்னான்.

கோபம் வராத நிலையில் இருந்த ரமணிக்குக் கோபம் வரவில்லை. ஆத்திரமும் ஆக்ரோஷமும் பீறிட்டு வந்தன.

'ராஸ்கல்! உனக்கு என்னடா புத்தி மழுங்கியா போச்சு?' என்றான்.

ரங்கன் பதில் கூறவில்லை.

25

ரங்கன் ரமணியின் முகத்தைப் பார்த்தான். ரமணியின் முகத்தில் கோபம் மின்னியது.

'ரமணி சார்! நான் விரும்பி கேட்டது தப்புன்னு படுதா? எனக்கு இது நியாயமாப் படுது. தனம் இப்ப என் பொண் சாதி இல்லைதான். நான் அவ புருசன் இல்லதான்... ஆனா அவகூட கொஞ்சகாலம் வாழ்ந்துட்டேன்... அவ என்னைப் பணம் காசுக்கு ஏமாத்தியிருக்கலாம். ஆனா அவ எனக்குச் சோறு ஆக்கியும் போட்டிருக்கா!'

'அப்ப அவளைப் போய்ப் பார்த்து கையிலே பத்தாயிரத் தைக் கொடுத்துக் கொஞ்ச நேரம் அவகூட ஜாலியா...'

'இல்லே ரமணி சார்... நிச்சயமா அவகூட ஜாலியா இருக்கணும்னு நான் போகலே! அந்த எண்ணமே வரலே!'

'எதுக்கு அவளுக்குப் போய் நீ பணம் கொடுக்கணும்?'

'வடிவேலுகூடச் சொன்னாரு, அவரு தனத்தைவிட்டுப் போறப்ப அஞ்சாயிரம் கொடுத்தேன்னு...'

'அவனே அஞ்சாயிரம் கொடுத்தான்னா, நீ பத்தா யிரமா கொடுக்கிறது? உன் அந்தஸ்துக்குக் கொறஞ்சது ரெண்டு லட்சமாவது கொடுக்கணும். கொடுக்கறியா?'

MithraVintha

'கோபிச்சுக்காதீங்க ரமணி சார்... ஆண்டவன் புண்ணியத்திலே எனக்கு லட்சம் லட்சமாப் பணம் வந்திருக்கு. உங்க தயவிலே ரெண்டு வீடு கெடைச்சிருக்கு. நான் நல்லா இருக்க வேணாமா?'

'அதுக்கு?'

'தனம் மனசாலேகூட என்னை என்னிக்கும் இட்டக் கூடாது ரமணி சார்...அவ கோபம் நிச்சயமாத் தணியாது.'

'இந்தப் பணம் என்ன தண்ணியா, அவமேலே கொட்டி அணைக்கறதுக்கு? பேசாம இரு.'

'ரமணி சார்...ரமணி சார்... நீங்க எனக்குச் செஞ்சுட்டிருக்கிற உதவிக்கு நான் உங்களுக்குக் கோவில் கட்டினாக் கூடப் பத்தாது. என்னோட எல்லா ஆசைங்களையும் நீங்க நிறைவேத்திபிருக்கீங்க...ஆஸ்பத்திரியிலே ராத்திரி பூராக் கண் முழிச்சுப் பார்த்திருக்கீங்க...இந்தச் சின்ன ஆசையையும் நிறைவேத்தினீங்கன்னா...'

'சரி சரி... நிறுத்து.'

ரமணி யோசித்தான்.

இனிமேல் ரங்கன் தனத்தைச் சந்திப்பதோ அந்தச் சந்திப்பு தொடருவதோ ரங்கனை மீண்டும் பாதிக்கக்கூடும். மயில்சாமியும் தனமுமாகச் சேர்ந்துகொண்டு அவனைப் படாதபாடு படுத்துவார்கள்.

'ரங்கா!'

'சார்!'

'நீ தனத்துக்குப் பத்தாயிரம் கொடுக்கணும்னு ஆசைப் படறே... ஓகே! கொடு. அவ விடற கோபக் கண்ணீர் உன்னைச் சுட்டுச் சாம்பலாக்கக்கூடாதுங்கறே! ஓகே... உன்னைச் சாம்பலாக்க வேண்டாம்... உன்கூட கொஞ்ச காலம் அவ குப்பை கொட்டியிருக்கா! ஓகே. பத்தாயிரம் ரூபாயை அவ மூஞ்சியிலே தூக்கி எறியலாம். ஆனா அப்படி எறியப் போறது நீ இல்லே! நான்! நான்தான்!'

ரமணி இத்தமாதிரி கடுப்புடன் பேசி ரங்கன் கேட்ட தில்லை. திடீரென்று அவனுக்கும் இதுவரை முளைத்திராத சினம் மென்மையாக முளைத்தது.

'ஏன் ரமணி சார், நான் போகக்கூடாது? ஏன் போகக் கூடாது?'

'ஏன்னா அவளும் மயில்சாமியுமா உன் முதுகுத் தோலைப் பிய்ச்சுடுவாங்க!'

'மயில்சாமி இன்னும் ஜெயிலில்தான் இருக்கான் ரமணி சார்!'

'அப்ப தனம் ஒருத்தி போதும் உன்னை நார் நாராக் கிழிக்க, அவ பேர்ல, உன்னாலே போலீஸ்ல கேஸ் போட்டிருக்காங்க. அவளைக் கோர்ட்லே ஏத்தி வக்கீல் கோர்ட்டே சிரிக்கும்படியா கேள்வியெல்லாம் கேட்டிருக்காங்க. நீ இப்ப அவளைப்பத்தி கரிசனமா நினைக்கிறமாதிரி, நிச்சயமா அவ உன்னைப்பத்தி நினைச்சுட்டிருக்கமாட்டா! நான் இவ்வளவு சொன்னதுக்கு அப்புறமும் நீ பிடிவாதமாப் போறதுன்னு முடிவு பண்ணினா எனக்கு ஆட்சேபணை இல்லை, தாராளமாப் போ! ஆனா ஒண்ணே ஒண்ணு மட்டும் நினைவிலே வைச்சுட்டுப் போ! இனிமே என் வீட்டு வாசப்படியை நீ மிதிக்கக் கூடாது. உனக்கும் எனக்கும் பேச்சுவார்த்தை இல்லை!'

ரங்கன் நீண்டநேரம் ரமணியையே பார்த்து நின்றான். ரமணியின் கண்கள் நீர் கட்டிக் கனத்திருப்பதாகத் தோன்றியது. ஏன் ரமணி இவ்வளவு தூரம் இந்த விஷயத்தில் பேச வேண்டும்? கடுமையாக இருக்க வேண்டும்? தனம் என்கிற ஒரு பெண்ணால் அவனுக்கு எந்தவிதமான ஆபத்தும் வரக் கூடாது என்றுதானே?

ரமணியின் மிரட்டல் அவனுக்கு எதிர்பார்த்த பதிலை அளித்தது.

MithraVintha

'சரி சார். நீங்க சொல்றதிலேயும் அர்த்தம் இருக்கு. நீங்களே போய்க் கொடுத்துட்டு வாங்க. இனிமே நான் அவனைப் பார்க்கணுங்கற எண்ணத்தைக்கூட உங்ககிட்டச் சொல்லமாட்டேன்.'

'எனக்குத் தெரியாமலும் போகக்கூடாது.'

'போகமாட்டேன், ரமணி சார்!'

தனம் திடுக்கிட்டுப் பார்த்தாள். ரமணி புன்முறுவலுடன் வாயிலில் நின்று, 'உள்ளே வரலாமா?' என்று கேட்டான்.

'வாங்க, உட்காருங்க. அவரோட ஒடம்பு இப்ப எப்படி இருக்குங்க?'

ரமணி அயர்ந்துபோனான். தனத்தின் ஆத்திரமும் கோபமும் எங்கே போயின?

'இப்ப செளக்கியமா இருக்கான். ஆமாம், உனக்கு எப்படித் தெரியும் ரங்கனுக்கு உடம்பு சரியில்லாம இருந்ததுன்னு?'

'சுகந்தி அம்மா சொன்னாங்க.'

சுகந்தி அம்மா சொன்னாங்க.' சுகந்தி காதில் மாலு ஆபீஸில் சொல்லியிருக்க வேண்டும். சுகந்தி காதில் விழுந்திருக்க வேண்டும். தனத்தை எங்காவது சந்தித்திருக்க வேண்டும்.

'அப்படியா? அது சரி, நீ எப்படி இருக்கே?'

'ஜெயில்லேர்ந்து வந்தவ எப்படி இருப்பா? அப்படி இருக்கேன்.'

'ரங்கன் என்னை அனுப்பியிருக்கான்.'

'எதுக்கு? அவரோட பொருள் ஏதானும் இங்கேயே இருக்குதா? சொல்லுங்க, தேடித்தரேன்.'

'இல்லே தனம், இந்தப் பொருளை உங்கிட்டக் கொடுக்க அவன் என்னை அனுப்பினான்.'

ஒரு நீண்ட தோல் பையை அவன் அவளிடம் நீட்டினான்.

'என்னங்க இது?'

'பணம்.'

'பணமா?'

'ஆமாம், பத்தாயிரம் ரூபா.'

'பத்தாயிரம் ரூபாயா? எனக்கா?'

'ஆமாம் தனம்! உன்கூட ரங்கன் கொஞ்ச நாள் வாழ்ந்திருக்கான் இல்லியா? உன் நினைவு அவனுக்கு இன்னும் மறையலே. உனக்கு ஏதானும் உதவி செய்யணும்னு அவன் விரும்பறான்.'

'அவர் என்கூட இந்த ரூமில இருந்தாருங்க... அது நெசம்தான். ஆனா ஒருநாள்கூட அவர் என்கூட வாழலே! சத்தியமா வாழலே... வாழணும்னு அவர் ஆசைப்பட்டார்... ஆனா அதுக்கு நான் இடம் கொடுக்கலே. என் விசயத்திலே அவர் மொதல்லேந்து கடைசிவரை சுத்தமாத்தான் இருந்தார். நான்தான் அவரை ஏமாத்திக்கிட்டிருந்தேன். அதுக்கான தண்டனையையும் வாங்கிக்கிட்டேன்.'

தோல் பை இன்னும் ரமணி நீட்டிய கையிலேயே இருந்தது.

'எல்லாத்தையும் சொப்பனம்னு நெனைச்சு மறந்துடு. தனம். இந்தா இதை வாங்கிக்க...'

'எனக்கு வேணாம் சார்... எனக்கு யார் பணமும் வேணாம். இந்தப் பத்தாயிரம் என் ஆயுசு பூரா வருமா? நான் ஊதாரி. தாம்தூம்னு செலவளிச்சுக்குவேன்...அப்புறம் இன்னிக்கு இருக்கிற நெலமைதானே. நான் நன்றி கெட்ட பொண்ணு. ஒரு ஆளைக் கட்டிக்கிட்டு அவனை ஏமாத்தின பஜாரி! அந்த ஆள் போனப்புறம் இன்னொரு ஆளை வளைச்சுப் போட்டவ. எனக்கு அந்த நல்ல ஆளோட பணம்

MithraVintha

நான் வாங்கிக்கிட்டா பாவம்.
தேவை இல்லே சார். தர்மம் பண்ணிடுங்க.
ஜரிக்காது. எதனாச்சியும் கோவிலுக்கு வாங்கியாரேன்.'
சோடா கலர் குடிக்கிறீங்களா? ஓடிப்போய் வாங்கியாரேன்.'

ஒரு கணம் யோசித்தான் ரமணி. தான் வேறு ஏதோ ஒரு புதுமையான உலகத்தினுள் பிரவேசித்துவிட்டதான பிரமை உண்டாயிற்று.

தனமா இப்படி மாறியிருக்கிறாள்? பத்து ரூபாய் நோட்டைக் கண்டால் பாய்ந்து பறிக்கிற தனமா இப்போது பத்தாயிரத்தைத் துச்சமாக மதிக்கிறாள்? இவளுடைய இந்த மனமாற்றத்துக்குப் பத்தாயிரம் ரூபாய் அற்பமான தொகை. பல லட்சங்கள் கொடுக்கலாமே.

மௌனமாய், தலைகுனிந்து நிற்கும் தனத்தைப் பார்த்தான்.

'சரி, தனம்! ஒரு கோலி சோடா வாங்கி வா. எனக்கும் தாகமா இருக்கு.'

'இதோ வரேன் சார்!'

அவள் தலை மறைந்ததும் தோல் பையை சிறு சுவர் அலமாரியின் அகலமில்லாத தட்டின்மீது வைத்தான். மறு வினாடி கதவைச் சாத்திவிட்டு வெளியேறி, பிடாரி அம்மன் தெருவுக்கு வந்தான்.

ஓர் ஓரமாய் அவன் நிற்கையில், தனம் கையில் ஒரு சோடா பாட்டிலுடன் விரைவாக நடந்து, தன் வீடு இருக்கும் சந்தினுள் பிரவேசித்தாள். அவள் தன் வீட்டுக்குள் நுழையும் வரை காத்திருந்த ரமணி, அவளுடைய தலை மறைந்ததும் விருட்டென்று நடந்து ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் ஏறிக்கொண்டான்.

'தம்புச் செட்டித் தெருவுக்குப் போப்பா! கொஞ்சம் வேகமாகப் போ!'

ரிக்ஷாவில் செல்லுகையில் மனித மனத்தின் விசித்திரங் களை ரமணி நினைத்துப் பார்த்தான்.

இப்படியும் ஒரு பெண்ணா?

பண்பும் நெறியும் வெறும் படிப்பிலும் அறிவிலுமா இருக்கிறது? அது மண்ணோடு பிறந்தது அல்லவா? அந்த மண்ணில் பிறந்த கோடானு கோடிப் பேர்களில் இந்த தனமும் ஒருத்திதானே?

ரமணி இதுவரை அனுபவித்திராத மகிழ்ச்சியில் திளைத்துப் போனான். அதே சமயத்தில் உள் மனத்தில் ஓர் எச்சரிக்கை மணியும் ஒலித்தது.

தனம் பாவமன்னிப்பைத் தேடும் பெண்ணாக மாறி விட்டாள் எனும் விஷயத்தை ரங்களிடம் சொல்லக்கூடாது. அப்படிப்பட்ட தனத்தை மீண்டும் பார்க்க அவன் துடிப்பான். யார் கண்டார்கள், துண்டிக்கப்பட்ட தொடர்பு மீண்டும் தழைக்காது என்று?

அந்த வருடம் தை மாதத்தில் கிரகப்பிரவேசம் நடத்துவது என்று முடிவு செய்தார்கள்.

தாத்தாவுக்கு அன்றைய தினசரியை ரமணி படித்துக் கொண்டிருக்கையில் அம்மா கோமதி ஒரு பாத்திரம் நிறைய இட்லியும் எண்ணெய் மற்றும் சட்னி சகிதமாகப் பிரவே சித்தாள்.

'என்ன கோமதி, இவனோட அப்பன் என்ன செய்ய றான்? நான் ஒருத்தன் இங்கே இருக்கேன்னு அவனுக்கு ஞாபகம் இருக்கா?'

'ஏன் இப்படிக் கேட்கறீங்க அப்பா? உங்களை ரமணி நன்னாக் கவனிச்சுக்கிறானேன்னு அவர் திருப்தியா இருக்கார். இல்லாமப்போனா அவர் தினமும் ரெண்டு வேளை பார்த்துட்டுப் போக மாட்டாரா?'

'நம்ப பழைய வீட்டை இடிச்சு புது அஸ்திவாரம் போட்டு ஒரு வருஷமாயிட்டுது. இந்த அடுக்கு வீடும் ரெடியாயிடுத்து. இந்த ஒரு வருஷத்திலே எண்ணிப்

MithraVintha

பார்த்தா அஞ்சாறு தடவைகூட உன் புருஷன் வந்ததில்லே. சாமியார்ப் புள்ளையை நான் இன்னும் பார்க்கலே... மூத்தவளை நான் போய்ப் பார்க்க வேண்டியிருக்கு!'

'ஏன் தாத்தா அலுத்துக்கறீங்க? அவங்க வந்தா நீங்க சும்மாவா இருக்கீங்க? குதர்க்கமாப் பேசி, குத்தலாப் பேசி அவங்க மனசை நோக அடிக்கறீங்க. இப்பப் பேசாம இட்லியை ஒரு கை பாருங்க.'

தாத்தா ஒரு துண்டு இட்லியைச் சாப்பிட்டார். பிறகு, 'அந்த நோஞ்சான் எப்படி இருக்கான்?' என்று கேட்டார்.

'இப்ப நான் இஸபல் ஆஸ்பத்திரிக்குப் போகப் போறேன்.'

'என்னிக்கு அட்மிட் ஆச்சு?'

'நேத்து ராத்திரி.'

'ஏன் முன்னாலேயே சொல்லலே?'

'நீங்க சனிக்கிழமை சனிக்கிழமை எண்ணெய் தேய்ச்சுக் குளிக்கிறமாதிரி ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு வர்றான்.'

'சிவனேன்னு ஆஸ்பத்திரியிலே அவன் ஒரு ரூமையே வாங்கியிருக்கலாம்.'

'பாவம் ரங்கன் இந்த வியாதியிலே ரொம்ப அவஸ்தைப் படறான்.'

'ஒருவாட்டி போயிட்டு வந்தா மூவாயிரம் நாலாயிரம்னு ஆறது.'

'எல்லாம் பகவானோட திருவிளையாடல்டா...ஒரு பக்கம் கொட்டறான்; இன்னொரு பக்கத்திலேர்ந்து வாரி எடுத்துக்கறான். என்ன வியாதின்னு சொன்னே... பேரு மனசிலே பதியமாட்டேங்கறது.'

'எம்பிசீமா.'

'பிழைப்பானாடா...'

'இழுத்துண்டே போகும்னு டாக்டர் சொல்றார்.'

'இப்படி அவஸ்தைப்படறதுக்குப் போய்ச் சேர்ந்துட்டாத் தொல்லை விட்டது. அவனுக்கு ஒரு விடுதலை கிடைச்சிடும்.'

'ஏன் அப்பா இப்படிப் பேசறீங்க? ரங்கன் நல்ல புள்ளை. சின்ன வயசு. புதுப் பணத்தைக் கண்டவன். பூரணமாக் குணமாகி அவனோட ரெண்டு வீட்டை வாடகைக்கு விட்டுட்டு, இன்னொன்லே குடியும் குடித்தனமுமா இருக்கட்டுமே!'

'பணம், வயசு இதுக்கும் வரப்போற சாவுக்கும் சம்பந்தமே இல்லே கோமதி. என்னைப் பாரேன்! ஏ பி ஸி டி எதுவுமே இல்லே. ஆனா இது சாசுவதமா? ஏதானும் ஒரு காரணம் வரும். பொட்டுன்னு போயிடுவேன்!'

'அதென்ன ஏ பி ஸி டி?' என்றாள் கோமதி.

'A—ஆர்த்ரைட்டீஸ், B—ப்ளட் ப்ரஷர், C—கார்டியாக். அதான் ஹார்ட் சம்பந்தப்பட்டது. அப்புறம் D—டயாபடீஸ்' என்றான் ரமணி.

கோமதி சிரித்தாள்.

பிறகு, 'கிரகப்பிரவேசத்தின்போது பசுமாடு வரணும்னு சாஸ்திரம் இருக்குடா ரமணி!' என்றாள்.

'ஜிம் ஃப்ளோர் வீட்டுக்குள்ளே பசுமாடு தலை நீட்ட ஏற்பாடு செய்யறேன் அம்மா! ஆனா முதல் மாடி ரெண்டாவது மாடியெல்லாம் அது ஏறி இறங்காது!'

'பசுமாடுன்னு நீ சொன்னப்ப எனக்கு மாலு ஞாபகம் வந்தது. கூறை, திருமாங்கல்யம் இதெல்லாம் நம்ப செலவு. கோமதி நீயும் ரமணியும் அவளை அழைச்சுட்டுப்போய் வாங்கிக் கொடுங்கோ. ரமணி, வேணும்ங்கற பணத்தை பாங்க்லேர்ந்து ட்ரா பண்ணு.'

'சரி தாத்தா!'

MithraVintha

'தை மாசம் பத்தாம் தேதி கிரகப்பிரவேசம். பதினேழாம் தேதி கலியாணம். ரெண்டு நல்ல காரியங்கள்' என்றார்.

கிரகப்பிரவேசம் அமோகமாக நடந்தேறியது.

ஒரே ஒரு குறை என்றாலும் அது மாபெரும் குறையாகப் பட்டது ரமணிக்கு.

ரங்கன் இன்னும் ஆஸ்பத்திரியிலேயே இருந்தான்.

26

கட்டடக் கலைஞரின் திட்டத்துக்கு ஏற்ப இஞ்ஜினியர் குஞ்சிதபாதம் கட்டடத்தைக் கட்டினார். ஓய்வுபெற்ற நிபுணர்—மாலுவின் மாமா அவ்வப்போது ஆலோசனைகள் அளித்து, மேற்பார்வையும் செய்தார். சிறியதும் பெரியதுமாக மொத்தம் பதினெட்டுக் குடியிருப்புகளே கடைசியில் உருவாகி ஒரே சமயத்தில் கிரகப்பிரவேசமும் கோலாகலத்துடன் நடந்து முடிந்தது. தன்னுடைய நீண்ட நாளைய ஆசை நிறைவேறியும்கூட ரமணியால் மனமார மகிழ்ச்சியுடன் கொண்டாட முடியவில்லை. தாத்தா அவனுக்கு ஆசை விதைகளை அள்ளிக் கொடுத்திருந்தாலும், அவை முளைவிட்டு வளரக் காரணமாக இருந்தவன் ரங்கன். அந்த ரங்கன் விழாவில் கலந்துகொள்ளாமல் ஆஸ்பத்திரியில் விழ்ந்து கிடந்தான்.

அவன் மீண்டும் வெளிவந்தபோது, ரமணி அவனை ஒரு புது மாருதியில் புது வீட்டுக்கு அழைத்து வந்தான்.

'ரங்கா இப்ப எப்படி இருக்கே?'

'அமாவாசை முடிஞ்சு சந்திரன் வளர்றமாதிரி சுகமா இருக்கேன் ரமணிசார் ஆனா இது எத்தனை நாளைக்கு? மறுபடியும் எப்ப மூச்சுத் திணறுமோ எப்ப டாக்டர் இதே ஆஸ்பத்திரியில் வந்து வைத்தியம் பார்ப்பாரோ யார் கண்டது?'

'எல்லாம் காலப்போக்கிலே சரியாப்போயிடும் ரங்கா.'

'ஏன் ரமணி சார்! உங்களுக்குள்ளேயே பொய் சொல்லிக்கிட்டு என்னைச் சமாதானப்படுத்தப் பாக்கறீங்க? இது நான் உசிரோட இருக்கிறவரை குணமாக முடியாத வியாதி. அப்பப்ப டாக்டர் கடிகாரத்துக்குச் சாவி கொடுத்திட்டிருக்கார். அப்பவெல்லாம் அது ஓடுது ஒருநாள் அவர் சாவி கொடுத்துட்டே இருப்பார். ஆனா ஸ்பிரிங் ஒடிஞ்சுடும். இதை விடுங்க ரமணி சார். எல்லாரும் புது வீட்டுக்கு வந்துட்டாங்களா? தாத்தா சௌகரியமா இருக்காரா? அம்மாவுக்குப் பிடிச்சிருக்கா?'

'எல்லாரும் வந்துட்டாங்க. ரங்கா! உன் மூனு வீடு தான் இப்ப காலியாயிருக்கு. மொதல்ல ரெண்டு வீடுன்னு சொல்லி முடிவிலே மூணா வாங்கிட்டே!'

'எனக்கு வேண்டியதெல்லாம் ஒரே ஒரு வீட்ல ஒரே ஒரு ரூம்தான். அதிலே பாயும் தலைகாணியும் இருந்தாப் போதும்!' ரங்கன் சிரிக்க முயன்றான்.

அவனுடைய அவலமான மனநிலையை மாற்றும் எண்ணத்தில்—

'இந்த மாருதி ஏதுன்னு நீ கேட்கலையே?' என்றான் ரமணி.

'உங்க தாத்தா உங்களுக்குப் பரிசா வாங்கிக் கொடுத்த கார். மாலு அம்மா முந்தாநாளே ஆஸ்பத்திரியில் சொல்லிட்டாங்க... ஆமாம் என்னிக்கு முகூர்த்தம்... மாலு ஏதோ சொன்னாங்க... ஆனா அந்தச் சமயம் பார்த்து நான் அசதியிலே கண்ணை மூடிட்டேன்.

MithraVintha

'இதே தை மாசக் கடைசியிலே ரங்கா! மீனாட்சி கல்யாண மண்டபத்திலே.'

'இங்லீஷ் தேதி சொல்லுங்க ரமணி சார்!'

'பிப்ரவரி பத்து—வெள்ளிக்கிழமை.'

'நான் இப்பக் கடவுளை வேண்டிக்கறதெல்லாம் ஒண்ணே ஒண்ணுதான்.'

'அது என்னன்னு எனக்குத் தெரியும் ரங்கா!'

'அப்ப சொல்லுங்க.'

'அன்னிக்கு உடம்பு திடமா இருக்கணும். ஆஸ்பத்திரியிலே இருக்கக்கூடாது.'

'கரெக்டா சொல்லிட்டீங்க ரமணிசார்... அந்த வடிவேலு சொந்தத் தொழில் ஆரம்பிச்சுட்டானா?'

'முந்தாநாள் உன்னையும் அழைச்சுட்டு வரச்சொல்லியிருந்தான். ஆனா நீ...'

'சரி விடுங்க... நான் எப்பவும் புத்தியிலே ரெண்டுங் கெட்டான். இப்ப உடல் நலத்திலேயும் ரெண்டுங் கெட்டான்' என்ற ரங்கன் விரக்தியுடன்—

'எங்க நான் இருந்து யாருக்கு என்ன புண்ணியம்? என்னாலே உங்களுக்கு மாலு அம்மாவுக்கு ஏன் நம்ம அம்மாவுக்கு—எல்லாருக்கும் சிரமம்தானே?' என்றான்.

'பேசாம வா ரங்கா. உன்னை அமெரிக்காவுக்கு அனுப்பினா பூரணமாக் குணமாகுமான்னு யோசிச்சிட்டிருக்கேன்.'

இப்போது ரங்கன் சிரித்தான்.

'அமெரிக்காவானாலும் போகிற உடம்பு இதேதான் ரமணிசார். பணம் இன்னும் எவ்வளவு பாக்கி இருக்கு?'

'கவலைப்படாதே... அஞ்சு லட்சத்துக்குக் குறைவு இல்லாம இருக்கு.'

'அதை வெளிநாட்டிலே கொட்ட வேணாம் சார்!'

ரமணி பதில் பேசவில்லை.

கீழே ஓர் இரண்டு அறை வீடும், முதல் மாடியில் ஒன்றும் இரண்டாம் மாடியில் ஒன்றுமாக மொத்தம் மூன்று வீடுகள் ரங்கனுக்குச் சொந்தமாயின. உடல் அசதியையும் பொருட்படுத்தாமல் அவன் மூன்று வீடுகளுக்கும் போய் வந்து கொண்டிருந்தான். மாடி ஏறும்போதெல்லாம் மார்பு வலித்தது. மூச்சு இரைத்தது. ஆனால் அவன் லட்சியம் செய்யவில்லை.

நாட்கள் ஓடின.

மெல்ல மெல்ல அவனுக்குத் தன் உடல்நிலை முற்றிலும் தேறிவிட்டதாகத் தோன்றியது. ஒரு தனி குஷியும் பிறந்தது.

ரமணியின் தாத்தாவைப் பார்த்து வரலாம் என்று ஓடினான்.

தாத்தா ரமணியுடன் பேசிக்கொண்டிருந்தார்.

'ஏண்டா படவா! கிரகப்பிரவேசம் நடந்தன்னிக்கு நீ உன் மூணு அத்தைகள் மூஞ்சியையும் பார்த்தாயோ?'

'ஏன் தாத்தா கேட்கறீங்க?'

'எரிச்சலும் அசூயையும் தாண்டவமாடித்து. கிழவன் போற கிழவன்தானே, போனாப் போகட்டும்னு என்னை நமஸ்காரம் பண்ணித்துகள்.'

'இதெல்லாம் உங்க கற்பனை தாத்தா.'

'ஆளுக்கு அம்பதாயிரம்னு சொன்னேன் இல்லியா? மூணுபேருக்கும் எரிச்சல். வயத்தெரிச்சல் பிள்ளைகளுக்கு ரெண்டு லட்சத்துக்கு மேலே பெறுமானமுள்ள வீடு; எங்களுக்கு அம்பதாயிரமான்னு பொருமறா... ஏன் அம்பதாயிரம்னு கத்தணும்? அரை லட்சம்னு சொல்லப்படாதோ!'

Mithra Vintha

ரமணி சிரித்தான்.

'அத்தைகளுக்கு நீங்க செஞ்ச காரியம் ஓரவஞ்சனையாப் படறது... நீங்க ஒண்ணு செய்யலாம் தாத்தா.'

'படவா நீ எனக்குப் புத்தி சொல்லப்போறியா?'

'அதெப்படி முடியும் தாத்தா? யோசனைதானே சொல்ல வர்றேன்.'

'என்னடா பெரிய யோசனை?'

'அரையை ஒண்ணாப் பண்ணிடுங்களேன்!'

'அப்பவும் அதுகளுக்குத் திருப்தி வராதுடா...என்றார் தாத்தா.

பிறகு, 'அதோ ஷெல்பிலே ஒரு நீளக்கவர் இருக்கு. அதை எடு!' என்றார்.

ரமணி எடுத்தான்.

'பிரிச்சுப் படி...உரக்கப் படிச்சுத் தொலைக்காதே...உன் சித்தப்பன் பெரியப்பன் வீட்டு மனுஷா வந்து தொலையப் போறா... மனசுக்குள்ளே படிச்சுக்கோ!'

ரமணி அவசர அவசரமாகப் படித்தான்.

'என்ன தாத்தா இது...'

'நான் எப்பப் புறப்பட்டுப் போவேன்னு யார்டா கண்டா... பொறந்த அன்னிக்கே போற தேதிக்கு ரிஸர் வேஷனும் ஆயாச்சு. உன் கலியாணம் முடியறவரை இருக்க ணும்னு ஓர் ஆசை.'

'உங்க வீட்டையும் எல்லாப் பணத்தையும் என்பேர்ல எழுதி வைச்சிருக்கீங்களே தாத்தா.'

'என் இஷ்டம்.'

'பெரியப்பா, சித்தப்பா, பெரியமம்மா, சித்தி அவங்க பிள்ளை, பெண்கள் எல்லாரும் என்னைக் கரிச்சுக் கொட்டு வாங்க தாத்தா!'

'எல்லாத்தையும் ஒரு மூட்டையிலே போட்டுக் கட்டி சமுத்திரத்திலே எறி. நான் எழுதினா எழுதினதுதான். நீ படிச்சது நகல்தான். ஒரிஜனலை ரிஜிஸ்தர் பண்ணி, ரிஜிஸ்தார்ட்டயே டெபாசிட் பண்ணிட்டேன்' என்று சொன்ன அவர், 'இப்ப எவ்வளவுடா நம்ப ஜாயின்ட் அகௌண்ட்லே பணம் இருக்கு?'

'பன்னண்டு லட்சம்!

'கன்னா பின்னான்னு செலவழிச்சுத் தொலைக்காதே...'

'தாத்தா...இந்த உயிலை...'

'கை வைக்க மாட்டேன்! எழுதினா எழுதினதுதான்!'

'பூரா எல்லாத்தையும் அனுபவிக்க எனக்கு என்ன அருகதை இருக்கு தாத்தா?'

'நீ சின்ன வயசிலேர்ந்தே எங்கிட்டேர்ந்து எதையும் எதிர்பார்க்காம, தாத்தா தாத்தான்னு உசிரை விட்டிருக் கேடா படவா... பிறத்தியார் காசுக்கு நீ என்னிக்குமே ஆசைப்படலேடா ராஸ்கல்!'

ரமணியின் கண்கள் கனத்தன. தாத்தா தம் உணர்ச்சி களை உள்ளடக்கிக்கொண்டு கத்துகிறார் என்பதை மட்டும் அவன் புரிந்துகொண்டான்.

'ரமணி சார் இங்கேதான் இருக்கீங்களா?'

ரங்கன் பிரவேசித்தான்.

'யார்டா ரங்கனா... நீ எப்படா புகுந்த வீடு போய்த் திரும்பினே?' என்றார் தாத்தா.

'ஆஸ்பத்திரியைச் சொல்றார்' என்றான் ரமணி, ரங்கன் விழிப்பதைக் கண்டு!

'தாலு நாள் முன்னாடி ஐயா!'

'உன் தலைவிதி... லட்சம் லட்சமாப் பணம் இருந்தும் அனுபவிக்க முடியலே பார்த்தியா...'

MithraVintha

'நாம ஆசைப்பட்டதைக் கொடுத்த கடவுள், நாம ஆசையே படாததையும் கொடுக்கிறார்னு இப்பத்தான் புரிஞ்சுக்கிட்டேன் ஐயா!' என்றான் ரங்கன்.

'அப்ப உனக்கும் ஞானம் பிறந்தாச்சுன்னு சொல்லு!'

'ஐயா சௌகரியமா இருக்கீங்களான்னு விசாரிக்க வந்தேன்.'

'உன் சௌக்கியத்தை விசாரிக்க எட்டுப்பேர் ஆஸ்பத்திரிக்கு வரவேண்டியிருக்கு. நீ என்னை விசாரிக்க வந்திருக்கியாக்கும்.'

'இப்ப நான் திடமா இருக்கேன் ஐயா... உங்க காலைப் பிடிச்சு விடட்டுமா?'

'உன் புத்தி போகாதே... இப்ப நீ ஒரு லட்சாதிபதிடா! மூணு வீட்டுக்குச் சொந்தக்காரன்டா!'

'அது வேறே, இது வேறே!' என்றான் ரங்கன், பிறகு, 'அடடா ரமணி சார் எங்கே? சொல்லிக்காமப் போயிட்டாரே' என்றான்.

'அம்மாவைப் பார்க்கப் போயிருப்பான்!'

'ஐயா!'

'என்னடா!'

'ரமணி சாருக்குக் கலியாணம் நடக்கப் பாவுது. அவர் எனக்கு மனுஷ தெய்வமா இருக்கார். நான் எதனாச்சும் செய்யணும்!'

'செய்யேன்.'

'நீங்க உதவி செய்யணும்!'

'என்ன உதவி?'

'டாக்டர் திருமலை வூடு தெரியும்! ஆனா நல்ல வக்கீல் வூடு எங்கேயிருக்குன்னு தெரியாது!'

'எதுக்குடா உனக்கு வக்கீல்?'

'தேவைப்படுது!'

'அனந்தராமன்னு பக்கத்திலே இருக்கார். நம்ப பாம் பூத் இருக்கு இல்லியா? அதுக்கு நேர் எதிர்த்தாப்ல இருக்கு. நான் அனுப்பினேன்னு சொல்லு. உனக்கு வேண்டியதைச் செய்து தருவார்.'

'சரி ஐயா! நான் வரேன் ஐயா!' என்ற ரங்கன், 'நான் வக்கீல்பத்தி விசாரிச்சது ரமணி சாருக்கு இப்பத் தெரிய வேணாம்!' என்றான்.

'எனக்கு இதான் தொழில்னு நினைச்சியா கழுதே!' என்றார் தாத்தா.

முகூர்த்தம் நல்லபடியாக நடந்தேறியது. தாத்தா, அப்பா, அம்மா இன்னும் மற்ற பெரியவர்களிடமெல்லாம் ஆசீர்வாதம் வாங்கிக்கொண்டபின், 'இப்ப நீயும் நானும் இதே மாலையும் கழுத்துமா ரங்கனைப் பார்க்கப் போகிறோம்!' என்றான் ரமணி.

'நானும் இதையேதான் நினைச்சேன்!'

'சரி வா...'

'படவா! எங்கேடா போறே?' என்று தாத்தா கேட்டார்.

'ரங்கனைப் பார்த்துட்டு வர்றோம் தாத்தா!'

'சீக்கிரம் வந்து சேரு. நீ வந்தப்புறம்தான் எனக்குச் சாப்பாடு.'

ஆஸ்பத்திரியை அடைந்தபோது காலை மணி பதினொன்று.

ரங்கன் கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்திருந்தான்.

'ரங்கா!'

'ரமணிசார்... ரமணி சார்.'

'அழாதே ரங்கா!'

MithraVintha

'நீங்க தாலி கட்டறப்ப நான் இல்லாமப் போயிட்டேனே ரமணி சார்!'

'இதுக்காக என்னக் குழந்தைமாதிரி அழலாமா... இப்ப எங்க ரெண்டுபேரையும் பாரு. மாலையும் கழுத்துமா ஸ்பெஷலா உன்னைப் பார்க்கணும்னு வந்திருக்கோம். மத்தவங்க எங்களை வேடிக்கை பார்க்கறதையும் லட்சியம் செய்யாம வந்திருக்கோம்... எங்க ரெண்டுபேரையும் நீ இப்ப வாழ்த்தணும்!'

பொலபொலவென்று கண்களிலிருந்து நீர் கொட்ட, ரங்கன் 'எனக்கு என்ன சொல்றதுன்னு புரியலே சார்... ஆனா ஒண்ணு, நான் என்னென்னிக்கும் உங்க ரெண்டுபேர் மனசிலேயும் இருக்கணும்!' என்றான்.

'இருப்பே!'

'நிச்சயமா இருப்பே!'—மாலு.

'உங்க கலியாணப்பரிசை நான் என்னிக்கோ தயார் பண்ணிட்டேன்!'—சொன்ன ரங்கன் தலையணைக்கடியி லிருந்து, ஒரு நீண்ட உறையை எடுத்தான். இருவரிடமும் நீட்ட அவர்கள் வாங்கிக்கொண்டார்கள்.

'என்ன இது ரங்கா!'

'மாலு அம்மாகிட்டக் கேளுங்க. அவங்களுக்குத் தெரியும்.'

திடீரென்று டாக்டர் திருமலை பிரவேசித்தார்.

'ரமணி சாயங்காலம் ரிசப்ஷனுக்கு வரேன்... ஏன் ரங்கா உட்கார்ந்துட்டே... படுத்துக்கணும் பேசப்படாது.'

'சரி டாக்டர்.'

எல்லோரும் வெளியே வந்தார்கள்.

'என்ன டாக்டர், இப்படியாயிடுத்தே!'

'அப்படித்தான் ஆகும்... விடு. ஆஸ்பத்திரின்னு மாத்தி மாத்திப் போய் வந்துட்டிருப்பான்' என்றார் டாக்டர்.

'இது மாதிரி எவ்வளவு காலத்துக்கு?'

'உயிர் போறவரைக்கும்!'

'என்ன டாக்டர்.'

'ஒரு வருஷம். மிஞ்சினா பதினெட்டு மாசம்...'

'கவலையா இருக்கு டாக்டர்.'

'இப்பத்தான் தாலியைக் கட்டியிருக்கே... ஃபர்ஸ்ட் நைட்டை நெனைச்சுட்டு ஓடு... யார்தான் சாகாம சாகவதமா இருக்கா? போனா இவனுக்குத்தான் விடுதலை.'

இருவரும் கலியாண மண்டபத்துக்குத் திரும்பினார்கள்.

'மாலு... இதுக்குள்ளே என்ன இருக்குன்னு எனக்குத் தெரியும்!'

'என்ன?'

'உயில்!'

'கரெக்ட்!'

'எல்லாம் என் பெயருக்குத்தானே?'

'கரெக்ட்.'

'ரங்கன் உயிரோட இருக்கிறவரைக்கும் இருக்கட்டும். ஒரு நாள் அவன் போயிடுவான்... அந்த நாள் பொறக்கறப்ப நம்ப கண்லே கண்ணீர் வரப்படாது. மனசார அஞ்சலி செய்துட்டு, அவன் சொத்தை நல்லவழியில் அவன் பெயர் லேயே செலவு செய்வோம்...'

'அதைப்பத்தி இப்ப என்ன யோசனை ரமணி! அவனோட பணத்திலே நயாபைசா நீங்க கை வைச்ச தில்லே... அவன் போனாலும் உங்க குணம் மாறாது.'

MithraVintha

'மாறனும்னு சொல்றியா?'

'மாறிட்டா அப்புறம் நீங்களும் ஒரு சாதாரண மனுஷன் தானே... நான் இப்ப ஒரு சாதாரண மனுஷனுக்கா மனைவி யாயிருக்கேன்?' என்றாள் மாலு.

ரமணி மௌனமானான்.

கழுத்து மாலையைவிட மனத்தில் மாலையாக வீழ்ந்து விட்ட ரங்கன் கனமாகத் தோன்றினான்.

MithraVintha